# மனசெல்லாம் நீயே!

பிரேமா



# மனசெல்லாம் நீயே!

## 1

**'வத்தலகுண்டு உங்களை அன்புடன் வரவேற்கிறது'** என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்த காமாட்சி, தன் அருகில் தூங்கிக் கொண்டிருந்த கணவன் விஸ்வ நாதனை உலுக்கி எழுப்பினார்.

''என்னங்க ஊர் வந்திடுச்சு. பஸ் ஸ்டாண்ட் வந்திடப் போகுது. நாம இறங்கணும். முழிச்சுக்கோங்க'' என்றதும்,

''ஊர் வந்திடுச்சா காமாட்சி? கொஞ்சம் அசந்து தூங் கிட்டேன்'' என்று சொன்னவர் இறங்க ஆயத்தமானார்.

பேருந்து நிலையத்திற்குள் நுழைந்து அந்தப் பேருந்து நின்றதும் அதிலிருந்து இறங்கிய விஸ்வநாதனுக்கு

வயது ஐம்பத்தி ஏழு. அவரைப் பார்ப்பவர்கள் அவரது ஆஜானுபாகான தோற்றத்தையும், முரட்டு மீசையையும் கண்டு பயந்து தான் போவார்கள்.

அவர் அரசாங்க உத்யோகத்தில் இருப்பவர். இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெறப் போகிறவர். அவரது மனைவி காமாட்சி, ஓர் இல்லத்தரசி.

காமாட்சி பேருந்தில் இருந்து இறங்கி நடந்து கொண்டே, ''ஏங்க உங்க சொந்தக்காரர் பரமன் வீட்டிலே இருப்பாரா? முதல்ல ஊரிலே இருப்பாரா? நடு வீதியிலே சந்திச்சவர் உருப்படியா அவரோட விலாசத்தையோ, போன் நம்பரையோ வாங்க வேண்டாமா? அவர் குத்து மதிப்பா வீட்டு விலாசம் சொன்னாராம். இவரும் கேட்டுகிட்டு அதோட வந்திட்டாராம்'' என்று நொடித்துக் கொண்டதும்,

''நான் என்னத்தைக் கண்டேன் காமாட்சி. நம்ம பையன் முரளிக்கு இந்த ஊரிலே பொண்ணு ஒண்ணு வரும். அவங்க வீட்டைப் பத்தி விசாரிக்க பரமன் வீட்டு விலாசம் தேவைப்படும் என்று அப்ப எனக்குத் தெரியலையே காமாட்சி. நாம என்ன சின்னப் பிள்ளைகளா... தொலைஞ்சு போக. எப்படியாச்சும் விசாரிச்சு கண்டு பிடிப்போம்.

பக்கத்திலே திண்டுக்கல்லில் எனக்குத் தெரிஞ்சவங்க நிறைய பேர் இருக்காங்க. நாம வந்த வேலை முடியலைன்னா வந்ததுக்கு அவங்களைப் பார்த்திட்டு ஊருக்குப் போவோம். அவ்வளவுதான்'' என்றார்.

''மார்கழி மாசமா இருக்கிறதால வெயில் தெரியலை. இல்லாட்டி கொளுத்துற வெயிலில் நடக்க முடியாது.



ஏங்க வத்தலகுண்டுல பொண்ணு பார்த்திருக்கீங்களே... பொண்ணு வத்தல் மாதிரி காரமா இருக்குமா? இல்ல வடிவுக்கரசி மாதிரி குண்டா இருக்குமா?''

''அது யாரு வடிவுக்கரசி?''

''நான் பேசினா சினிமா பத்தி தான் பேசுவேன் என்று உங்களுக்குத் தெரியாதா? சினிமா நடிகை வடிவுக்கரசிய தான் சொல்லுறேன்.''

''ஏன் காமாட்சி இப்படி அபசகுனமா பேசுறே?''

''பொண்ணு குண்டா இருக்குமான்னு தானே கேட்டேன். அதிலே எங்கே இருந்து அபசகுனம் வந்துச்சு?''

''பொண்ணு குண்டா இருந்தால் எப்படி கல்யாணம் நடக்கும்? அது அபசகுனம் இல்லையா?''

''அப்ப குண்டு பொண்ணை உங்க பையனுக்குக் கட்டி வைக்க மாட்டீங்களா? பொண்ணு குண்டா, ஒல்லியான்னு பார்க்காதீங்க. நல்ல குணவதியா இருக்காளான்னு மட்டும் பாருங்க. அவளால தான் ஒரு குடும்பம் கடைசி வரைக்கும் நிலைச்சு நிற்கும்.''

''நீ சொல்லுறது சரி தான் காமாட்சி. ஆனால் நம்ம முரளி நல்லா அழகா இருப்பானே!''

''என் பையன் 'ரோஜா' பட அரவிந்த்சாமி மாதிரி அழகா தான் இருப்பான்'' என்று அவர் பெருமையாகச் சொல்ல,

''அப்புறம் அவனுக்கு குண்டான பொண்ணை ஏன் கட்டி வைக்கணும். என் பையனுக்கு என்ன பொண்ணா கிடைக்காது?! பொண்ணு வீட்டுக்காரங்க வரிசையில

நிப்பாங்க'' என்று விஸ்வநாதன் பெருமையாகச் சொல்லவும்,

''விட்டா 'கரகாட்டக்காரன்' படத்திலே கோவை சரளா சொன்னது போல அமெரிக்காவிலே ஒபாமா தன் பொண்ணைக் கட்டித் தரேன் என்று சொன்னாரு... இந்தியால அம்பானி தன் பொண்ணைக் கட்டித் தரேன் என்று சொன்னதா சொல்லுவீங்க போல?''

மனைவியின் கேள்விக்கு பதில் சொல்லாமல், ''நான் கூட உன்னை என்னமோன்னு நினைச்சேன் காமாட்சி. சினிமா படம் தவிர்த்து உலக விஷயம் கூடத் தெரிஞ்சு வைச்சிருக்க?!'' என்று அவர் வியக்க,

''சே! சே! இதையும் கூட சினிமா படத்திலே இருந்து தான் கத்துக்கிட்டேன்'' என்று கூறி கணவரது வியப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

பரமன் தன்னிடம் சொல்லி இருந்த அடையாளங்களைக் கண்டு விஸ்வநாதன் குத்துமதிப்பா நடந்து கொண்டிருந்தார். அவர் எல்லா திசைகளிலும் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்க... அவர் பின்னால் சைக்கிளில் வந்த பெண் அவர் அருகே சைக்கிளை நிறுத்தி,

''யாரைப் பார்க்க வந்து இருக்கீங்க?'' என்று வினவினாள்.

''பரமன் வீட்டுக்கு வந்தோம். அரிசி கடை வைச்சிருக்கான். உனக்கு அவன் வீடு தெரியுமாம்மா?'' என்று கேட்டார்.



''அரிசிக்கார அண்ணாச்சி வீட்டுக்கா போறீங்க? வாங்க நான் வழி காட்டுறேன். நீங்க அவருக்கு சொந்தமா? ரொம்ப தூரத்திலே இருந்து வரீங்களா?'' என்று கேட்டபடியே சைக்கிளை உருட்டிக் கொண்டே அவர்களுடன் நடந்து வந்தாள்.

''எங்க ஊரு கோயம்புத்தூரிலே உள்ள சிங்காநல்லூர், எங்களால நீயும் நடந்து வர மாதிரி ஆகிடுச்சு'' என்று அவர் வருத்தம் தெரிவிக்கவும்,

''அதெல்லாம் பெரிய விஷயம் இல்லைங்க. ரெண்டு தெரு தானே! நடந்தா நல்லது தான். நீங்க கவலைப் படாதீங்க'' என்று பதில் உரைத்தாள்.

'யாரென்று தெரியலைன்னாலும் தானா வந்து உதவி செய்வது நகரத்தில் நடக்காத விஷயம். ஆனால் வலிய வந்து உதவி செய்யும் பழக்கம் இந்த மாதிரி சின்ன ஊர்களில் இன்னமும் மறையவில்லை' என்று நினைத்து விஸ்வநாதன் மகிழ்ச்சி அடைந்தார்.

''உன்னை எங்கயோ பார்த்த மாதிரியே இருக்கு. ஆனா எங்கேன்னு தான் தெரியலை.''

''நான் கோயம்புத்தூர் பக்கம் வந்ததில்லைங்க. நீங்க வத்தலகுண்டுக்கு இதுக்கு முன்னாடி வந்து இருக்கீங்களா?'' என்று அவள் கேட்டாள்.

காமாட்சி சுற்றி உள்ளவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டும் இவர்களது பேச்சை காதில் வாங்கிக் கொண்டும் நடந்தார்.

''வத்தலகுண்டுக்கு வந்ததில்லை. ஆனால் நான் ரொம்ப வருஷம் திண்டுக்கல்லில் தான் இருந்தேன்.

அங்க தான் ஸ்கூல் படிப்பெல்லாம்...'' என்று விஸ்வ நாதன் சொன்னதும்,

''எங்க அப்பாக்கும் திண்டுக்கல் தான். ஸ்கூல் படிப் பெல்லாம் அங்கதான்'' என்றாள்.

''அப்படியா?! அப்ப உங்க அப்பா பேரு என்ன?''

''எங்க அப்பா பேரு கருப்பசாமி.''

''எங்கூட ஒரு கருப்பசாமி படிச்சான். ஆனா அவன் தான் உங்க அப்பாவான்னு தெரியலையே.''

''நீங்க எங்க வீட்டைத் தாண்டி தான் அரிசிக்கார அண்ணாச்சி வீட்டுக்குப் போகணும். அதனால எங்க வீட்டுக்கு வந்து மோர் குடிச்சிட்டு எங்க அப்பா தான் உங்க சிநேகிதரான்னு பார்த்திட்டு அப்புறமா போங்க'' என்று தன் வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தாள்.

அவர் ஒன்றும் சொல்லாமல் அவளுடன் சேர்ந்து நடக்க... அவள் ஓரிடத்தில் நின்று விட்டாள்.

''ஐயா, நீங்க பார்க்க வந்தவர் வீடு இந்தத் தெருவிலே கடைசியா... பச்சைப் பெயிண்ட் அடிச்சிருக்குப் பாருங்க. அந்த வீடுதான். இது தான் எங்க வீடு. உங்களுக்கு ஏனோ எங்க வீட்டுக்கு வர விருப்பமில்லை. நானும் கட்டாயப்படுத்த விரும்பலை'' என்றதும்,

''அப்படி இல்லம்மா...'' என்று அவர் மறுத்துக் கொண்டிருக்கும் போதே கருப்பசாமி வீட்டில் இருந்து வெளியே வந்தார்.

''வந்துட்டியா தாயி. உன் அம்மா உனக்காக காத்துக்கிட்டு இருக்காள்'' என்று மகளைப் பார்த்துச்



சொன்னவர், அப்பொழுதுதான் அருகில் இருப்பவர் களைப் பார்த்தார்.

''நீ விஸ்வநாதன் தானே?!'' ''நீ கருப்பசாமி தானே?!'' என்று நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டு தோளோடு அணைத்துக் கொண்டனர்.

காமாட்சி அருகில் நின்றவளிடம், ''அப்படியே மேஜர் சுந்தரராஜனும், சிவாஜி கணேசனும் அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே அப்படின்னு பாட்டுப் பாடுற மாதிரி உனக்குத் தோணலை?'' என்று கிசுகிசுப் பாகக் கேட்டார்.

அவள் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அவரைப் பார்த்து முறுவலித்தாள்.

''வேலம்மா கொஞ்சம் வெளியே வா'' என்று கருப்ப சாமி உள் நோக்கிக் குரல் கொடுத்து தன் மனைவியை அழைத்தார்.

அவர் வெளியே வந்ததும் ஒரு சிறு அறிமுகப்படலம் நடைபெற்றது.

''உன் பொண்ணைப் பார்த்த உடனே நான் சொன் னேன் டா. எங்கயோ பார்த்த மாதிரி இருக்குன்னு. உங்க அம்மா சாயல் இருக்கு இல்ல?'' என்று விஸ்வநாதன் கேட்டதும்,

''ஆமாடா. கரெக்டா சொல்லிட்டே. வாடா வீட்டுக் குள்ளே. வாசலில் நின்னுக்கிட்டே பேசிக்கிட்டு இருக்கே. வாம்மா தங்கச்சி'' என்று காமாட்சியைப் பார்த்து வர வேற்றார்.

''இல்லடா நான் ஒரு வேலை விஷயமா என் சொந்தக்கார பரமனைப் பார்க்க வந்தேன். அவன் வீட்டிலே இருக்கானான்னு தெரியலை. முதல்ல வந்த வேலையை முடிச்சிட்டு அதுக்கு அப்புறம் உன் வீட்டுக்கு வரேன். முதல்ல உன் போன் நம்பரைக் கொடு'' என்று கேட்டு வாங்கிக் கொண்டார்.

'இந்த முறை போன் நம்பரைக் கேட்டு வாங்கிச் சரியா நடந்துகிட்டேனா?' என்று விஸ்வநாதன் மனைவியைப் பார்த்துக் கண்களாலேயே கேள்வியும் கேட்டுக் கொண்டார்.

'நான் சொன்னதுக்கு அப்புறம் செஞ்சுட்டு ரொம்பத் தான் பெருமை பட்டுக்கிறார்' என்று காமாட்சியோ மனதில் பழிப்புக் காட்டினார்.

''சரிடா நீ வந்த வேலையைப் பாரு. நான் கடை வரைக்கும் கொஞ்சம் போக வேண்டி இருக்கு. நீ வேலை முடிஞ்சதும் போன் பண்ணு. நான் வீட்டுக்கு வந்துடுறேன்'' என்று சொல்லி கருப்பசாமி தன் நண்பனுக்கு விடை கொடுத்தார்.

## 2

அவர்கள் இருவரும் பரமன் வீட்டை நோக்கி நகர்ந்தார்கள். அவர்களது நல்ல நேரம் அவர் வீட்டில்தான் இருந்தார்.



''அண்ணே! வாங்க வாங்க. வாங்க அண்ணி!'' என்று வரவேற்ற பரமன்,

''அன்னைக்கு உங்க போன் நம்பரை வாங்காமப் போயிட்டோமேன்னு வருத்தப்பட்டுக்கிட்டே இருந்தேன். நீங்களே எப்படியோ என் வீட்டைக் கண்டுபிடிச்சு வந்துட்டீங்க'' என்று வரவேற்ற பரமனையும், அவரது குடும்பத்தினரையும் பார்த்து காமாட்சியும், விஸ்வநாதனும் நலன் விசாரித்து முடித்தார்கள்.

''தம்பி உன்கிட்டே ஒரு குடும்பத்தைப் பத்தி விசாரிக்கலாம் என்று தான் உன் வீடு தேடி வந்தேன். போன் நம்பர் இருந்திருந்தால் போனிலேயே வேலையை முடிச்சிருப்பேன்'' என்று விஸ்வநாதன் சொன்னதும்,

''அப்ப நம்பர் கொடுக்காம வந்தது கூட நல்லதுக்கு தான் போல! இல்லைன்னா நீங்க என் வீடு தேடி வர மாட்டீங்களே'' என்று சொல்லி பரமன் சிரித்தார்.

பரமனின் மனைவி அவர்கள் குடிப்பதற்கு மோர் கொண்டு வந்து கொடுத்தாள்.

''என் பையன் முரளிக்கு தரகர் மூலமா இந்த ஊரில் இருந்து ஒரு ஜாதகம் வந்திருக்கு. பொண்ணு ஜாதகம் என் பையனோட ஜாதகத்தோட பொருந்திப் போகுது. அதான் பொண்ணு எப்படி, என்னன்னு விசாரிக்கலாமேன்னு வந்தேன்'' என்று விஸ்வநாதன் சொன்னதும்,

''ரொம்ப நல்ல விஷயம் அண்ணே! பொண்ணு பேரும், அவங்க அப்பா, அம்மா பேரும் சொல்லுவாங்க''

என்றார் பரமன். விஸ்வநாதன் பெண் வீட்டினரைப் பற்றி விவரிக்கவும் அதைக் கேட்ட பரமன் அமைதியானார்.

''என்னப்பா உனக்குத் தெரியாத குடும்பமா? ஒண்ணும் சொல்லாமல் அமைதியா இருக்கே.''

''தெரிஞ்ச குடும்பம் தான் அண்ணே. ஒரு பொண்ணைப் பத்தி எப்படித் தப்பா சொல்லுறதுன்னு தான் அண்ணே யோசிக்குறேன். அந்தப் பொண்ணு நம்ம முரளிக்கு வேண்டாம் அண்ணே.''

''நமக்குள்ளே தானே பேசுறோம். சும்மா நேரடியா சொல்லு பரமா'' என்று விஸ்வநாதன் ஊக்கவும்,

''அந்தப் பொண்ணு பள்ளிக்கூடம் படிக்குற வயசிலேயே காதல்ன்னு ஓடிப் போச்சு. அவங்க வீட்ட சேர்ந்தவங்க பின்னாடியே போய் இழுத்துக்கிட்டு வந்தாங்க. இப்ப கூட...'' என்று அதற்கு மேல் சொல்லாமல் பரமன் தயங்க,

''சரி விடு பரமா. நான் தரகரிடம் எங்களுக்கு ஜாதகம் சரியா ஒத்து வரலைன்னு சொல்லி சமாளிச்சுக்கிறேன்'' என்றார்.

''ஏம்பா விசுவநாதா! உன் பையன் என்ன செய்யுறான்?'' என்று பரமனின் தாயார் விசாரிக்க,

''ஆத்தா, அவன் இஞ்சினியருக்கு படிச்சிருக்கான். சென்னையிலே வேலை செய்யுறான். இப்ப வேலை விஷயமா அமெரிக்கா போயிருக்கான்'' என்று சொன்னார்.

''முதல்ல உன் போன் நம்பரைக் கொடு பரமா'' என்று கேட்டு வாங்கிக் கொண்டதோடு தனது கைப்பேசி



எண்ணையும், முகவரியையும் பரமனுக்குக் கொடுத்தார்.

அந்த சம்பந்தம் நல்லவித முடிவிற்கு செல்லவில்லை என்றதும் விஸ்வநாதன் ஊருக்குச் செல்ல முடிவெடுத்தார்.

''அப்ப நாங்க கிளம்புறோம்'' என்று விஸ்வநாதன் சொன்னதும்,

''என்னது அதுக்குள்ளே கிளம்புறீங்களா? அதுவும் சாப்பிடாமல்?'' என்று மறுத்த பரமனிடம்,

''இல்லப்பா. நாங்க வழியிலேயே சாப்பிட்டோம். வரும் போது இதே தெருவிலே என் கூடப் படிச்ச கருப்பசாமியைப் பார்த்தேன். அவனையும் பார்த்திட்டு அப்படியே கிளம்ப வேண்டியது தான். உன் வீட்டைக் கண்டு பிடிக்க அவன் பொண்ணு தான் எனக்கு வழி காட்டுச்சு'' என்றார்.

''நீ யாரச் சொல்லுற விசுவநாதா? சொர்ணாத்தா பேத்தியவா?'' என்று பரமனின் தாயார் விசாரிக்க,

விஸ்வநாதனிற்கு கருப்பசாமியின் தாயார் பேர் தெரியாததால் விழித்தார்.

பரமன், ''ஆமா ஆத்தா, அண்ணன் அவளைத் தான் சொல்லுறார்'' என்று விளக்கமளித்தார்.

''சின்ன சொர்ணத்தைப் பார்த்தியா அய்யா. பொண்ணுன்னா அது பொண்ணு. குடும்பத்துக்கு ஏத்த குத்து விளக்கு. அவுகளும் நம்ம சாதி தான். அவனும் அவன் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கறான். அவன் உன்

கூட்டாளிதான்னா அவன் பொண்ணை உன் மகனுக்குக் கட்டி வையேன்'' என்று அந்த மூதாட்டி ஒரு புது சொந்தத்திற்கு வழி சொல்லிக் கொடுத்தார்.

விஸ்வநாதன் மனக் கண்ணில் அந்தப் பெண்ணின் தோற்றத்தைக் கொண்டு வந்து பார்த்தார். சற்று முன் அவரது மனைவி சொன்ன குணம் அவரது நினைவிற்கு வந்தது. அவள் குண்டாக இருக்கவில்லை என்றாலும் அவருக்குத் திருப்திகரமாக இருந்தது.

மனைவியைத் திரும்பிப் பார்த்தார். அவரது சம்மதமும் அவரது முகத்தில் தெரியவும்,

''பொண்ணு எப்படி பரமா? நீ என்ன சொல்லுறே?'' என்று தன் தம்பியை விசாரித்தார்.

''ஒரே வரியில் சொல்லணும் என்றால் அந்தப் பொண்ணைக் கட்டிக்கப் போறவன் கொடுத்து வைச்சவன்'' என்று பரமன் சொன்னதும் விஸ்வநாதனும், காமாட்சியும் முகம் மலர்ந்தனர்.

பரமன், ''அவரும், அவர் அண்ணன் குடும்பமும் ரொம்ப ஒத்துமையா இருக்காங்க. இவர் இங்க காய்கறி மொத்த வியாபாரம் பார்க்கிறார். ஒரே பொண்ணு தான். அவரோட அண்ணன் திண்டுக்கல்லில் இருக்கார். அவர் மர வியாபாரம் செய்யுறார். அவருக்கு ஒரே பையன் சுதாகரன். அவன் பிளைவுட், மைகா ஷீட் வியாபாரம் பண்ணுறான். ரெண்டு குடும்பத்துக்கு ஒரே பொண்ணு அப்படிங்கிறதால சீர் வரிசை எல்லாம் நல்லா செய் வாங்க'' என்று அவர்களது குடும்பம் பற்றி விவரித் தார்.



''சீர் என்னப்பா சீர். குடும்பம் நல்லா இருக்கணும். அதை விட பொண்ணு நல்லவளா இருக்கணும்.''

''அப்படின்னா கண்ணை மூடிட்டு செய்யுங்க அண்ணே'' என்று பரமன் முடித்துக் கொண்டார்.

''இப்ப நேரா போய் பொண்ணு கேட்போமா? இல்லை...'' என்று காமாட்சி இழுக்கவும்,

''இல்ல காமாட்சி. நானும் பரமனும் கருப்பசாமியோட கடைக்குப் போறோம். அவன்கிட்டே முதல்ல பேசுறோம். அவனுக்கு சம்மதம் என்றால் ஜாதகத்தை வாங்குவோம். இங்கேயே பொருத்தம் பார்ப்போம். அப்புறமா அவங்க வீட்டுக்குப் போவோம். இப்பவே வீட்டுக்குப் போனால் அந்த பொண்ணோட மனசை சலனப்படுத்தின மாதிரி ஆகிடும். ஜாதகம் பொருந்தட்டும்... அதுக்குப் பின்னாடி தான் மிச்ச விஷயமெல்லாம். என்ன நான் சொல்லறது?'' என்று கேட்டதும்,

அனைவருமே அவர் கருத்துக்கு உடன்பட்டனர். அதன் பின் பரமனும், விஸ்வநாதனும் கருப்பசாமியின் கடைக்குச் சென்று பேசி என்று காரியங்கள் மளமள வென்று நடந்தேறின.

இருவரது ஜாதகமும் அமோகமாய் பொருந்திப் போக அன்று மாலையே முறைபடி பெண் பார்க்கும் படலமும் நடந்தேறியது. கருப்பசாமியின் அண்ணன் குடும்பமும் வந்திருந்தனர்.

''டேய் கருப்பசாமி! எங்களுக்கு பொண்ணைப் பிடிச் சிருக்கு. இது என் பையன் முரளிதரனோட போட்டோ. இப்ப அவனால வர முடியாது. அமெரிக்காவிலே

இருக்கான். வேலை என்னவோ சென்னையில தான். நீங்களும் பையனப் பத்தி விசாரிங்க. உங்களுக்குப் பிடிச்சுப் போச்சுன்னா பையன் ஊரில் இருந்து வந்ததும் கல்யாணத்தை நடத்திடலாம்'' என்று சொன்னார்.

போட்டோவில் இருந்த முரளிதரனை அவர்கள் அனைவருக்குமே பிடித்து இருந்தது.

கருப்பசாமியின் அண்ணன் மகன் சுதாகரன் தங்கையை தனியே அழைத்துச் சென்று, ''என்னடா குட்டி, உனக்கு மாப்பிள்ளையை பிடிச்சிருக்கா?'' என்று கேட்டான்.

''உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று அவள் எதிர் கேள்வி கேட்க,

''எனக்குப் பிடிச்சிருக்குடா குட்டி. பையனைப் பத்தி விசாரிச்சிட்டு நம்ம முடிவைச் சொல்லுவோம்'' என்றான்.

அவளும் அதற்கு ஒத்துக் கொண்டாள். அந்த வாரக் கடைசியிலேயே பெண் வீட்டினர் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர்.

சுதாகரன் தங்கையிடம் வந்து, ''குட்டி, உனக்கு மாப்பிள்ளை போட்டோ வேணுமா?'' என்று கேட்டான்.

''அவர் போட்டோ எனக்கு எதுக்குண்ணா?'' என்று ஒன்றும் அறியாதவள் போல் வினவினாள்.

''ஹேய்! இதானே வேண்டாங்கிறது. அன்னைக்கு அப்பா உன்கிட்டே பேருக்கு போட்டோவைக் காட்டிட்டு எடுத்து உள்ளே வைச்சுக்கிட்டார். இந்த ஒரு வாரத்திலே உனக்கு மாப்பிள்ளை போட்டோவை இன்னொரு



தடவை பார்க்கணும் போல இருந்துச்சா இல்லையா?'' என்று அவன் கேட்டதும்,

அவள், முறுவலித்துக் கொண்டே தனது வலது கையை நீட்டி முரளியின் புகைப்படத்தை தா என்பது போல் பார்த்தாள்.

''நீ கண்ணை மூடு. நான் உன் கையிலே தரேன்'' என்றதும்,

''நான் தான் ஏற்கனவே பார்த்திருக்கேனே! அப்புறம் எதுக்கு கண்ணை மூடணும்?'' என்று கேட்டாள்.

''அன்னைக்கு அப்பா உன்னிடம் காட்டியது சின்ன போட்டோ. ஆனா இப்ப என்னிடம் இருப்பது பெரிய சைஸ் போட்டோ. இதிலே மாப்பிள்ளை இன்னும் சூப்பரா இருக்கார்.'' என்று அவன் அவளுக்கு ஆசை காட்டினான்.

அவளும் அண்ணனின் பேச்சைக் கேட்டுக் கண்களை மூடிக் கொண்டு கையை முன் நீட்ட, சுதாகரன் அவள் கையில் போட்டோவை வைக்க... ஆனால் அதை எடுத்துப் பார்த்ததோ அவர்களது பாட்டி.

பேத்திக்குப் பதிலாக பாட்டி சொர்ணத்தம்மாள் முரளியின் புகைப்படத்தை கையில் எடுத்து வைத்துக் கொண்டு முன்னும், பின்னும், இடதும், வலதும் என்று எல்லா திசைகளிலும் தள்ளி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுதாகரன் அவரிடம், ''பாட்டி கண்ணு தெரியலையா? டாக்டர்கிட்டே காண்பிச்சு கண்ணாடி போடலாம்

என்று சொன்னா கேட்டாதானே?'' என்று அலுத்துக் கொள்ள,

''எவளுக்குடா கண்ணு தெரியலை? எப்படி வைச்சுப் பார்த்தாலும் மாப்பிள்ளை அழகா தெரியுறாரான்னு பார்த்தேன்'' என்றார்.

''கண்ணு நொள்ளைன்னு ஒத்துக்க மனசு வராதே. என்னமோ பி.சி.ஸ்ரீராம் கேமரா வைக்க ஆங்கிள் பார்க்கிற மாதிரி பார்க்கிறதைப் பாரு!'' என்று முணுமுணுத்தான்.

''என் பேத்தி என்னளவுக்கு அழகில்லையே... எப்படிப்பட்ட மாப்பிள்ளை அமைய போகுதோன்னு நினைச்சேன். உங்க தாத்தனை விட நல்ல அழகான மாப்பிள்ளை தான் கிடைச்சிருக்கார்'' என்றார்.

சுதாகரன் தங்கையிடம் குனிந்து, ''குட்டி, இந்த அப்பத்தாக்கு லொள்ளு கூடிப் போச்சு. பார்த்தியா?'' என்றதும்,

''என்னைக்கு அண்ணே குறையா இருந்துச்சு?'' என்று அவளும் சேர்ந்து கொண்டு பாட்டியை நக்கல் பண்ண,

''ஆத்தா, இந்தா இதைப் புடி'' என்று முரளியின் புகைப்படத்தைப் பேத்தியிடம் தந்தவர்,

''ஆனா ஒண்ணு. இந்த போனில் பேசுறது கடுதாசி போடுறதுன்னு எதுவும் வைச்சுக்கக் கூடாது சொல்லிட்டேன்'' என்று கட்டளை இட்ட பின்பே நகர்ந்தார்.

சுதாகரன் வேலை இருப்பதாகச் சென்று விட்டான்.



பேசக்கூடாதா என்று அதிலேயே அவள் உறைந்து போய் சில நொடிகள் நின்றாள். அதன் பின்பே கையில் இருந்த புகைப்படத்தைப் பார்வையிட்டாள்.

'தக்காளி மாதிரி சிவந்து போய் இருக்கார்! அச்சோ நான் அவருக்கு இணையாக மாட்டேனோ?!' என்று குனிந்து தன் நிறத்தைப் பார்த்துக் கொண்டாள்.

அவனது புகைப்படத்தைப் பார்க்கப் பார்க்க அவனை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. அவனிடம் பேச வேண்டும் போல் மனம் வெகுவாக ஆசைப்பட்டது.

**உன் கைகள் கோர்த்து உன்னோடு போக**

**என் நெஞ்சம் தான் ஏங்குதே**

**தினம் உயிர் வாங்குதே**

**உன் தோளில் சாய்ந்து கண்மூடி வாழ**

**என் உள்ளம் அலைபாயுதே ஐயோ தடுமாறுதே**

**உன் கன்னம் மேலே மழை நீரைப் போலே**

**முத்த கோலம் போட ஆசை அல்லாடுதே**

**நீ பேசும் பேச்சு நாள்தோறும் கேட்டு**

**எந்தன் ஜென்மம் தீர ஏக்கம் தள்ளாடுதே**

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளையும் நெட்டித் தள்ளப் போராடினாள். அடிக்கடி அவனது புகைப்படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

இங்கே இவள் இப்படி. அங்கே அவன் எப்படியோ?

விஸ்வநாதன் தை மாதக் கடைசி முஹூர்த்தத்தில் திருமணத் தேதியை குறித்து பத்திரிகையையும் அடிக்கக் கொடுத்தார். ஆனால் இது பற்றி எந்தத் தகவலையும் மகனிடம் தெரிவிக்கவில்லை.

முரளிதரன் அமெரிக்கா கிளம்பும் முன்பே அவனது திருமணத்தை முடித்துவிட்டுச் செல்லும்படி அவனது பெற்றோர் வற்புறுத்தினர்.

முரளியோ, ''நான் எந்த வெள்ளைக்காரப் பொண்ணையும் கல்யாணம் முடிச்சிக்கிட்டு வந்துடமாட்டேன். நீங்க கவலைப்படாமல் இருங்க. நீங்க பார்க்கிற பொண்ணைத் தான் நான் கட்டிக்குவேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அதனால் அவன் தந்தை அவனது சம்மதம் இல்லாமலேயே அவனது திருமணத்தைப் பேசி முடித்துவிட்டார்.

பெண் வீட்டிலும் மாப்பிள்ளையின் குடும்பம் தெரிந்த குடும்பம் என்பதால் மாப்பிள்ளை நேரில் வராததைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

## 3

அமெரிக்காவில்... முரளிதரன் தன் வேலையை முடித்துக் கொண்டு அவன் தங்கி இருந்த ஹோட்டல்



அறைக்குத் திரும்பினான். சற்று நேரம் ஓய்வாக அமர்ந்தான்.

அவன் தன் கைப்பேசியை இயக்கி பார்வையிட... அதில் அவனது வீட்டிலிருந்து ஏகப்பட்ட அழைப்புகள் வந்ததாகப் பதிவாகியிருந்தது.

குழப்பத்துடனும், சற்றே பயத்துடனும் தன் வீட்டிற்கு அழைத்தான்.

அந்தப் பக்கம் அவன் அம்மா, ''ஹலோ!'' என்று சொன்னவுடன்,

''அம்மா, எதுக்கும்மா இத்தனை தடவை போன் பண்ணியிருக்கீங்க? யாருக்காச்சும் ஏதாச்சும் பிரச்சனையா? ரெண்டு பேரும் நல்லா தானே இருக்கீங்க?'' என்று பதைப்புடன் முரளிதரன் கேட்க,

அந்தப் பக்கம் அவனது பேச்சை... பதட்டத்தைப் பார்த்து காமாட்சிக்கு உள்ளம் உருகியது. அவனது பதட்டம் அவன் அவர்கள் மேல் வைத்திருக்கும் பாசத்தை அல்லவா காட்டுகிறது!

''முரளி, ஒண்ணும் கவலைப்படாதே. எல்லாம் சந்தோஷமான விஷயம் தான். உனக்கு கல்யாணம் பேசி முடிச்சிருக்கோம்.''

''என்னது கல்யாணமா? யாரைக் கேட்டு முடிவு பண்ணுனீங்க? என்னமோ உங்களுக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கப் போற மாதிரி சர்வ சாதாரணமாச் சொல்லுறீங்க.''

''எங்களுக்கு அறுபதாம் கல்யாணம் பண்ணனும் தான். அதுக்கு நீ முதல்ல கல்யாணம் பண்ணி

எங்களுக்கு பேரன், பேத்தி பிறக்கணுமே. அதுக்கு தான் இந்த ஏற்பாடு.''

''அச்சோ அம்மா... இப்போ எதுக்கும்மா திடீர்னு இப்படி பண்ணுறீங்க. நான் இந்தியா வருவதற்கு இன்னமும் நாற்பது நாள் கூட இல்லை. நான் வந்த உடனே பொண்ணைப் பார்த்துப் பேசி முடிச்சிக்கலாம்.''

''என்னது பேசி முடிக்கணுமா? நல்லா சிரிப்பு மூட்டுற போ. நாங்க கல்யாணத் தேதியை முடிவு பண்ணிட்டோம். பத்திரிகை கூட அடிச்சு வந்திடுச்சு.''

''என்னது பத்திரிகை அடிச்சு வந்திடுச்சா? என்னம்மா விளையாடுறீங்களா? ஏன்மா நான் பொண்ணைப் பார்க்க வேண்டாமா?''

''நீ அமெரிக்கா போகும் முன்னாடி என்ன சொன்னே? நீங்க பார்க்கிற பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று சொன்ன தானே?''

''இப்பவும் அதைத் தான்மா சொல்லுறேன். அதுக்காக நான் பொண்ணைப் பார்க்காமல் எப்படிம்மா? திடீர்னு எங்கேயிருந்து பிடிச்சீங்க?''

''அப்பாவோட சினேகிதர் பொண்ணுடா. நீ கூட சின்ன வயசிலே... உனக்கு ஒரு அஞ்சு வயசா இருக்கும் போது பார்த்திருப்பே.''

''அஞ்சு வயசிலே?! அப்ப அந்தப் பொண்ணு பிறந்திருந்தாளா இல்லையா? ஏன்மா கடுப்பேத்துறீங்க. நம்ம அப்பா அவர் பிரண்டுக்கு ஏதாச்சும் நன்றி கடன்பட்டு இருக்காரா? அதுக்காக அந்தப் பொண்ணை என் தலையிலே கட்டப் பார்க்கிறாரா?''



''முரளி, இதுக்கு நான் 'சிங்கார வேலன்' படத்திலே சுமித்ரா கமலஹாசனைப் பார்த்துச் சொல்லுற 'நீ நிறைய தமிழ் சினிமா பார்த்து ரொம்ப கெட்டுப் போயிட்டே!' அப்படிங்கிற வசனத்தைத் தான் சொல்லணும். அந்த மாதிரி எல்லாம் கிடையாது போனோம். பார்த்தோம். பிடிச்சு இருந்தது. சம்மதிச்சு தேதி குறிச்சிட்டோம். நீ ஊருக்கு வந்த பத்து நாளிலே கல்யாணம்.''

''என்னது நான் வந்த உடனே கல்யாணமா? நான் ஒத்துக்க மாட்டேன் மா. நான் இந்தியா வராமல் இங்கேயே இருந்துட்டா என்ன பண்ணுவீங்க?''

இதற்கு தன் தாய் பதற்றம் அடைவார் என்று அவன் நினைத்ததிற்கு நேர் மாறாக அவனது தாயோ சிரித்துக் கொண்டே,

''அப்படியா? வர மாட்டியா? சரி அங்கேயே இருந்துக்கோ. உங்க அப்பாவை எதிர்த்துக்கிட்டு ஒரு வெள்ளைக்காரப் பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ. அதுக்கு உனக்கு தைரியம் இருக்கா?'' என்று கேட்டார்.

''அவர் என்ன பூச்சாண்டியா? அவர் பேரைச் சொல்லி என்னை பயமுறுத்தப் பார்க்கிறீங்க!''

''அப்ப உனக்கு அவரைப் பார்த்து பயமில்லையா? நான் போனை அவர்கிட்டேயே தரேன். நீ நாட்டாமை தீர்ப்பை மாத்துன்னு சொல்லு. அவரும் நாட்டாமை விஜயகுமாரா மாறி உன்னைத் துப்பாக்கி எடுத்து சுடட்டும்.''

சே என்று அவன் சலித்துக் கொள்ளவும்...

''என்னடா? முடியாது இல்ல... பொண்ணு நல்லா மூக்கும் முழியுமா நல்லா இருக்காடா. கிளி மாதிரி மூக்கு, மீன் மாதிரி கண்ணு... அவளைக் கட்டிக்க உனக்குக் கசக்குதாக்கும். டேய்! நான் சொன்னதை வைச்சு 'முதல்வன்' படத்திலே அர்ஜுனோட அப்பா வரைஞ்ச மாதிரி படம் வரைஞ்சிடாதே.''

''ஐயோ அம்மா! உங்களுக்கு எல்லாத்துக்குமே உதாரணம் சொல்ல சினிமா தானா கிடைக்கும்?''

''என்ன செய்யுறதுடா. என் புருஷனும், புள்ளையும் சம்பாதிக்கிறாங்க. எனக்கு சம்பாதிக்க வேண்டிய தேவை இல்லை. வீட்டிலே சும்மா இருக்கேன். பொழுது போகாமல் டி.வி.யைப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்து இருப்பேன். எனக்கு சீரியல் பார்க்கிற பொறுமை கிடையாது. அதனால வளைச்சு வளைச்சுப் படமா பார்த்துத் தள்ளுறேன். அதை விடு. நம்ம விஷயத்துக்கு வருவோம். பொண்ணோட அப்பா காய்கறி மொத்த வியாபாரம் பண்ணுறார். அதனால காய்களை வைச்சு அவர் பொண்ணை வர்ணிக்கட்டுமா?''

'காய்கறி வியாபாரமா? கிழிஞ்சது என் நிலைமை' என்று மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டே, ''எனக்கு பொண்ணைக் காட்டவாச்சும் செய்வீங்களா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் உன் மயிலுக்கு அனுப்பியாச்சு?''

''என்னது மயிலா?''

''மயிலோ குயிலோ... அதெல்லாம் எனக்குத் தெரியாது முரளி. நீ ஊருக்குப் போகும் முன்னாடி



எழுதிக் கொடுத்திட்டுப் போனியே. அதுக்கு தான் நம்ம பக்கத்து வீட்டு சேகர் மூலமா அப்பா அனுப்பி வைச்சார்.''

''என் இ-மெயிலை சொல்லுறீங்களா?''

''அது தான்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

அவன் அந்தப் பக்கம் பரபரப்பாக இ-மெயிலைப் பார்ப்பதற்காக அவனது மடி கணினியை இயக்கிக் கொண்டிருக்க...

இந்தப் பக்கம் விஸ்வநாதன் தன் மனைவியைப் பார்த்து, ''ஏன் காமாட்சி அதுக்கு பேரு மெயில் என்று உனக்குத் தெரியாதா?'' என்று சந்தேகமாய் கேட்டார்.

''ஏன் தெரியாது? ஊர்பட்ட சினிமா பார்க்கிறேன். அந்த பேர் கூடத் தெரியாதா என்ன? நானும் ஸ்கூல் படிப்பெல்லாம் படிச்சிருக்கேன் இல்ல...'' என்று தனது பெருமையை பாடியவர், ''சும்மா அந்த பயலை வெறுப் பேத்தினேன்'' என்று சொல்லிச் சிரித்தார்.

அமெரிக்காவில் ஆவலும், பரபரப்புமாக முரளிதரன் தனது இ-மெயிலைத் திறந்து பார்க்க...

பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தவன் யாரோ நடு மண்டையில் ஆணி அடித்தது போல் அப்படியே தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

அந்தப் பெண் சற்றே கருமையாக இருந்தாள். தலை நிறைய எண்ணெய் வைத்துப் படிய வாரி இருந்தாள்.

எண்ணெய் தலையில் மட்டுமல்ல. முகத்திலும் வடிந்து இருந்தது. தலையில் கலர் பூ வைத்திருந்தாள். (பய புள்ளைக்கு அது கனகாம்பரம் என்று தெரியவில்லை) அதை தொங்கும்படி கூட வைக்கவில்லை. பழைய காலத்து நடிகைகள் போல மொத்தமாகச் சுருட்டி வைத்திருந்தாள்.

'ஒருவேளை கோபுரங்கள் சாய்வதில்லை சுஹாசினி மாதிரி பின்னாடி ஜடை சுருண்டு இருக்குமோ?' என்று நினைத்தவன்,

'சே! இந்த அம்மா கூட பேசிப் பேசி நமக்கும் உதாரணம் சொல்ல சினிமா படம் தான் வருது' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

'கடவுளே! இவளையா எனக்குக் கட்டி வைக்கப் போறாங்க?! இவளைக் கட்டிக்கிறதுக்கு பதிலா நான் வாழ்க்கை முழுசும் பிரம்மச்சாரியாவே இருந்து விடுவேன். இவளை நாளைக்கு எனது நண்பர்கள் மத்தியில் எப்படிக் கூட்டிச் செல்வேன்?' என்று நினைத்தவன் உடனே தன் தாயை திரும்பவும் அழைத்தான்.

"அம்மா என்னம்மா பொண்ணு இது? எந்த ஊரிலே இருந்தும்மா பிடிச்சீங்க?"

"பொண்ணுக்கு என்னடா குறைச்சல். அவங்க ஊரு வத்தலகுண்டு."

'வத்தலகுண்டுஆஆஆ? அதான் பட்டிக்காடு மாதிரி இருக்காள்' என்று ஒரு மனது சொன்னது.

இன்னொரு மனதோ 'பொண்ணு வத்தல் மாதிரி இருப்பாளா இல்லை குண்டா இருப்பாளா?' என்ற



கேள்விகளை எழுப்பியது. அவனுக்கு அனுப்பப்பட்டிருந்த புகைப்படத்தில் பெண்ணின் முகம் மட்டும்தான் தெளிவாகத் தெரிந்தது.

"அம்மா..." என்று அவன் ஆரம்பிக்கவும்... அவர் ஒன்றும் சொல்லாமல் கைப்பேசியை தன் கணவரின் கைக்கு இடமாற்றினார்.

"என்னப்பா விஷயம்?" என்று விஸ்வநாதன் கேட்டார்.

தந்தையின் குரலைக் கேட்டதும் அவனுக்கு சர்வமும் ஒடுங்கியது. இருப்பினும் இது தன்னோட வாழ்க்கைப் பிரச்சனை என்று தனது தைரியத்தைத் திரட்டிக் கொண்டு, "அப்பா, பொண்ணு..." என்று இழுத்ததும்,

"என் மருமகள் சொர்ணம்... நம்ம வீட்டுக்கு வரப் போற மகாலஷ்மிடா." என்றார்.

'என்னது சொர்ணமா? என்ன பேருடா இது! (இந்தப் பேருடையவர்கள் என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்) பட்டிக்காட்டிலே இப்படித்தானே பேர் வைப்பாங்க. நல்லவேளை சொர்ணாக்கா என்று வைக்காமல் போனாங்களே! ஆனால் இப்போகூட அவளை விட வயசிலே சின்னவங்க அப்படித் தானே அவளைக் கூப்பிடுவாங்க. அய்யய்யோ சொர்ணாக்காவா!' என்று முரளிதரன் மனதுக்குள்ளே அலறிக் கொண்டிருக்க...

அந்தப் பக்கம் விஸ்வநாதன் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். இவன் கவனிக்க ஆரம்பித்த பொழுது,

"தம்பி பத்திரிகை எல்லாம் அடிச்சாச்சு. இனிமேல் எதுவும் செய்ய முடியாது. அதனால கண்டதையும் நினைச்சு குழப்பிக்காதே. மனசை அலைபாய விடாதே. சரியான நேரத்துக்கு ஊர் வந்து சேர்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

அவர் போனை வைத்ததும் முரளிதரன் தன் நிலைமையை எண்ணிப் பார்த்தான்.

அவன் தந்தையை எதிர்த்து இதுவரை எதுவும் செய்ததில்லை. செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை.

விஸ்வநாதன் பார்ப்பதற்கு முரட்டுத் தோற்றம் உடையவராய் இருப்பினும் உண்மையில் மென்மையும், பாசமும் நிறைந்தவரே. அவரது எண்ணம் செயல் அனைத்துமே முரளியை சார்ந்தே இருக்கும். அவர் எந்த ஒரு காரியம் செய்வதாய் இருந்தாலும் அதில் மகனது நன்மையை மட்டுமே யோசிப்பார்.

அவரது வேலையில் அவருக்கு இட மாற்றத்துடன் பதவி உயர்வு கிடைத்தபோது மகனுக்காக அதை மறுத்தார்.

பதவி உயர்வை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் சொல்லும் அந்த சிறிய ஊருக்குப் போக வேண்டும். இங்கே மகன் கோவையில் நல்ல பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான். அதனால் அவன் படிப்பிற்கு இடைஞ்சல் வரக்கூடாது என்று கருதி பதவி உயர்வை துச்சமென மதித்துத் தூக்கி எறிந்தார்.



அவன் உயர் படிப்பு (எம்.எஸ்) படிக்க வெளிநாடு செல்ல லட்ச லட்சமாக பணம் தேவைப்பட்ட பொழுது பலரின் எதிர்ப்பான ஆலோசனைகளையும் மீறி அவரது பரம்பரைச் சொத்தை விற்று மகனை வெளிநாடு அனுப்பி படிக்க வைத்தார்.

அவர் இதுநாள் வரை தனக்காக என்று எதையுமே செய்து கொண்டதில்லை. மகனுக்காகத் தான் பார்த்துப் பார்த்துச் செய்வார்.

அதனால் அவரை எதிர்க்கும் துணிவு முரளிக்கு வரவில்லை. அதற்குக் காரணம் அவர் மீதான பயம் அல்ல. மரியாதை... பாசம் கலந்த மரியாதை.

இதுநாள் வரை மகன் நலன் பேணியவர் திருமண விஷயத்திலும் தன் மகனது நலத்தை மட்டுமே பார்த்திருப்பார் என்ற நம்பிக்கை.

அதனால் முரளி தன்னுடைய திருமணத்தை நிறுத்தும் முயற்சி எதையும் செய்ய வேண்டாம் என்று தீர்மானித்தான். ஆனால் இந்த பெண்... என்று அவளை நினைத்த போதே அவனுக்கு எரிச்சலாக வந்தது.

முக அலங்காரத்தை வேண்டுமானால் பியுட்டி பார்லருக்குச் சென்று எளிதாக மாற்றி விடலாம். ஆனால் பிறந்தது முதல் இன்று வரை பழகிய பழக்க வழக்கங்களை? அதை மாற்றுவது அத்தனை எளிதா என்ன?

அடுத்தது பேர்... இந்தப் பேரை நான் எப்படிச் சுருக்கிக் கூப்பிடுவது? சொர்...சொரி... "ஐயோ! எனக்கு இப்பவே சொரியணும் போல இருக்கு'' என்று வாய் விட்டு அலறியவன்,

அதன் பின் வந்த நாட்களில் தனது திருமணத்தை மறந்தே போனான் எனலாம்.

அதை மறக்க முடியாது. வாழ்க்கையில் அதீத சந்தோஷமும், அதீத துக்கமும் அவ்வளவு சுலபத்தில் நம் மனதை விட்டு மறையாது. அதனால் அவன் தன் திருமண நினைவுகளை ஒதுக்கி வைத்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

திருமணத்தைப் பற்றி முதல் நாள் தோன்றிய எரிச்சல் அடுத்து வந்த நாட்களில் மறைந்து தான் போனது. தன் தந்தை தனக்குக் கெடுதல் செய்ய மாட்டார் என்று அவன் தீவிரமாக நம்பியதால் தன் மனதை ஒரு விதமாய் தேற்றிக் கொண்டான்.

இருப்பினும் ஒரு சராசரி மனிதனாய் அவனுடைய வருங்காலத் துணைவியைப் பற்றிய எதிர்பார்ப்பு பொய்யாய் போனதில் சிறு மனச் சுணக்கம் இருக்கவே செய்தது.

## 4

முரளிதரன் தனக்கு வரப் போகும் மனைவியிடம் போனில் பேச முயற்சிக்கவில்லை. அவன் தந்தை மணப்பெண்ணின் தொலைபேசி எண்ணைத் தரவும் இல்லை.



பெண் வீட்டிலும் இப்பொழுதெல்லாம் நிச்சய தார்த்தம் முடிந்த பல திருமணங்கள் பாதியிலே நின்று போய்விடுவதால் மாப்பிள்ளையிடம் கடிதத் தொடர்போ, போனில் பேசுவதோ கூடவே கூடாது என்று மணப் பெண்ணுக்கு தடை உத்தரவு போட்டிருந்தார்கள்.

அதனால் மணமக்கள் இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை.

பிராஜெக்ட் வேலை இழுத்துக் கொண்டு போனதால் அவன் அமெரிக்காவில் இருந்து கிளம்ப வேண்டிய நாளில் அவனால் கிளம்ப முடியாமல் போனது.

விஸ்வநாதன் தைய தக்கா என்று குதித்தார். மகன் மீது கோபம் அடைந்தார்.

''என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? நீ மட்டும் முஹூர்த்தத்துக்குள்ளே இங்கே வரலைன்னா நான் அமெரிக்காவுக்கே வந்து உன்னை வெட்டுவேன். உன்னை மட்டுமில்லை. உன்னை அனுப்ப மாட்டேன் என்று சொல்லுற வெள்ளைக்காரனையும் சேர்த்து வெட்டுவேன்'' என்று முரளிதரனை அலற வைத்துக் கொண்டிருந்தார்.

''என்னைக் கேட்காமல் தேதி குறிச்சிட்டு இப்போ வெட்டுவேன், குத்துவேன் என்று சொன்னால் எப்படிம்மா? வேலைன்னு வந்தால் கொஞ்சம் முன்னே பின்னே ஆகாதா?'' என்று அவன் பதிலுக்கு தன் தாயிடம் பொரிந்தான்.

''சீக்கிரமா வரப் பாரு முரளி. இது ஒரு பெண்ணோட வாழ்க்கைப் பிரச்சனை'' என்று காமாட்சி அவர் பங்கிற்கு

தன்மையாக என்றாலும் வார்த்தைகளால் பயமுறுத்திக் கொண்டிருந்தார்.

''அம்மா, நான் அப்படியே ஊருக்கு வந்தாலும் உடனடியா சென்னைக்குப் போய் வேலையிலே சேரும்படி இருக்கும். நம்ம வீட்டிலே இருக்க முடியாது. நான் இப்பவே சொல்லிட்டேன். அப்புறமா அதுக்கு ஒரு தடவை உங்க வீட்டுக்காரர் அருவாளைத் தூக்கிடப் போறார். பார்த்துக்கோங்க'' என்று அவன் எச்சரித்து வைத்தான்.

''நீ சீக்கிரமா வந்து சேரும் வழியைப் பாரு'' என்று சொல்லி காமாட்சி அழைப்பைத் துண்டித்தார்.

அவன் ஊருக்குச் செல்வதற்காக இரவும், பகலும் கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது.

'எங்கேயாவது பலி ஆடு வெட்டு வாங்குவதற்கு இவ்வளவு முனைப்பா வேலை செய்யுமா?' என்று தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான்.

'என் பொழப்பு இப்படிச் சிரிப்பா சிரிக்குதே!' என்று நொந்து கொண்டே அவன் வேலைகளை முடித்துக் கொண்டு கோயம்புத்தூர் வந்து சேரும் பொழுது முஹூர்த்தத்திற்கு முதல் நாள் இரவாகிப் போனது.

திருமணம் மாப்பிள்ளை ஊரில் என்பதால் பெண் வீட்டினர் அனைவரும் முதல் நாளே கோவை வந்து இறங்கி இருந்தனர்.

காரில் வந்து கொண்டிருந்தவன் தூரத்தில் இருந்து பார்த்த போதே அவர்கள் வீட்டின் முன் பந்தல் போடப்பட்டு இருந்தது தெரிந்தது. ஒலிபெருக்கியில் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. வாடகைக் காரில் சென்று அவன் வீட்டின் முன்பு இறங்கியதும்,



''இதோ முரளி வந்துட்டான்...''

''மாப்பிள்ளை வந்தாச்சு...''

''காமாட்சி உன் புள்ள வந்துட்டான்...'' என்பது போன்ற குரல்கள் பல திசைகளில் இருந்து ஒலிக்க ஆரம்பித்தன.

அவனை நேரில் கண்டவுடன் விஸ்வநாதன் தன் மீசையை முறுக்கிக் கொண்டு தன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டார். முரளிதரனை உறவினர்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது.

''முரளி, அமெரிக்காக்குப் போனதும் நல்லா செவ செவன்னு கலரா போயிட்டியா?'' என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு,

''அவன் என்னைக்கு நிறம் கம்மியா இருந்தான்'' என்று இன்னொருவர் பதில் சொன்னார்.

''வந்த புள்ளையை வாசலிலே நிக்க வைச்சுக்கிட்டு ஏன் வெட்டியா பேசி நேரத்தைக் கடத்துறீக.. புள்ள களைச்சுப் போய் வந்திருக்கு. யாராச்சும் ஆரத்தி எடுத்து உள்ளே கூட்டிட்டுப் போற வழியைப் பாருங்க...'' என்று ஒரு உறவுப் பெண்மணி சொல்ல,

''இந்த நேரம் பார்த்து காமாட்சி எங்க போனாள்?'' என்று இன்னொருவர் கேட்க,

ஆரத்தி தட்டுடன் வந்த ஒரு உறவுப் பெண்மணி அவனுக்கு ஆலம் சுற்றிப் பொட்டு வைத்து உள்ளே அனுப்பி வைத்தார்.

அவன் உறவுக்கார இளைஞர்கள் இருவர் அவன் கொண்டு வந்திருந்த பெட்டியைத் தூக்கி வந்து அவனது அறையில் வைத்துவிட்டுச் சென்றனர்.

அவன் அருகே வந்த விஸ்வநாதன் அவனது கையைப் பிடித்து அழுத்திக் கொடுத்தார். அவரது கைகள் நடுங்கிக் கொண்டிருந்தது.

'எதற்கு இந்த நடுக்கம்?!' என்று குழம்பியவனாய் அவரைப் பார்த்து, ''என்னப்பா... உடம்பு எதுவும் சரியில்லையா?'' என்று அவன் கேட்டதற்கு,

அவர் ஒன்றுமில்லை என்னும் விதமாய் தலை யாட்டிவிட்டு அவனது கன்னத்தைத் தட்டிவிட்டுச் சென்றார்.

விஸ்வநாதன் எளிதில் உணர்ச்சி வசப்பட மாட்டார் என்ற போதிலும் வெகு சில சமயங்களில் அவர் இது மாதிரி கலங்கி இருப்பதை முரளிதரன் பார்த்து இருக் கிறான்.

'இப்போது எதற்காக இவர் இவ்வளவு கலங்கி இருக் கிறார்?' என்று நினைத்தவன் தன் தாயிடம் கேட்போம் என்று நினைத்து காமாட்சியைத் தேடினான்.

'நான் வந்து அஞ்சு நிமிஷம் ஆகப் போகுது. இன்னமும் என் கண் முன்னே அம்மா வரலை என்றால் ஒரு வேளை வீட்டில் இல்லையோ?' என நினைத்துக் கொண்டே சமையலறைக்குச் சென்றான்.



சமையலறையில் இருந்த உறவுக்காரப் பெண் மணியிடம், ''அத்தை, எங்கம்மா எங்கே?'' என்று கேட் டான்.

''அவ ரூமிலே தான் இருந்தாள்'' என்று அவர் பதி லளித்ததும், அவன் பெற்றோர்களின் அறை நோக்கிச் சென்றான்.

அங்கே கட்டிலில் உட்கார்ந்திருந்த தாயை நெருங்கி அவரது தோள் தொட... அவர் திரும்பி மகன் முகத்தை ஏறிட்டார். அவரது கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடியது.

''என்னம்மா ஆச்சு? இப்போ எதுக்கு இப்படி அழறீங்க?'' என்று அவன் பதட்டத்துடன் வினவ,

காமாட்சி பதில் ஒன்றும் சொல்லாமல் அவரது அழுகையைத் தொடர,

''ஏதாவது பிரச்சனையா? சொல்லுங்கம்மா... சொன்னால் தானே தெரியும்'' என்று அவன் பரிதவிக்க,

காமாட்சி தனது அழுகையை நிறுத்திவிட்டு தனது முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டு மகனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

''நீ வரத் தாமதமானதும் ஆளாளுக்குப் பேச ஆரம்பிச்சுட்டாங்கடா. அப்பா பூச்சி மருந்து வாங்கிட்டு வந்து, காமாட்சி உன் புள்ள வரலைன்னால் நாம ரெண்டு பேரும் இதைக் குடிச்சிருவோம் என்று சொன்னார்'' என்றதும் கேட்டுக் கொண்டிருந்த முரளிதரனுக்கு திக் என்றானது.

''என்னம்மா? என்னம்மா சொல்லுறீங்க?'' என்று அவன் பதைப்புடன் கேட்க,

''ஆமாடா முரளி. உங்க அப்பா பார்க்கத் தான் முரட்டுத்தனமான ஆள். ஆனால் ரொம்ப இளகின மனசு அந்தப் பொண்ணுக்கு நம்ம பயலால் தலை குனிவு ஏற்பட்டுச்சுன்னா அதுக்கு அப்புறம் நாம ரெண்டு பேரும் உயிரோடு இருந்து பிரயோஜனம் இல்லைன்னு சொன்னார்.

எனக்கு செத்துப் போறதைப் பத்தி ஒண்ணுமில் லைப்பா. ஆனால் பிள்ளையை பெத்த நாங்களே தற்கொலை செய்யணும் என்று முடிவு எடுக்கும்போது அந்தப் பொண்ணு வீட்டில் என்ன செய்வாங்களோ? அநியாயமா இத்தனை உயிர் போறதுக்கு என் பிள்ளை காரணமாகிடக் கூடாதேன்னு தான் மனசு கிடந்து தவியா தவிச்சது. என் பெத்த வயிறை குளிர வைச்சிட் டப்பா. இது போதும்'' என்று தழுதழுத்தார்.

''அம்மா, நிஜமாவே வேலை முடியலைம்மா. அமெரிக்காவிலே கிறிஸ்துமஸும் புத்தாண்டும் தானேம்மா பண்டிகை. அதனால வேலை முடிக்க லேட் ஆகிடுச்சு. நான் தான் உங்களுக்கு போன் பண்ணி பிளைட் ஏறிட்டேன் என்று சொன்னேன் தானே! அப்புறம் ஏன்மா இப்படியெல்லாம் யோசிச்சீங்க?'' என்று கேட்ட பொழுது அவனது குரலில் வருத்தம் தென்பட்டது.

''நாங்க எங்க பிள்ளையை நம்பினோம் முரளி. ஆனா ஊர் வாயை மூட முடியலை. அதான்...'' என்று இழுத் தவர்,



அவனிடம் மேலும், ''அந்த பொண்ணு நல்ல வப்பா... உனக்கு ஏத்தவளாத் தெரிஞ்சதால தான் உனக்கு அவளைக் கட்டி வைக்க முடிவு செஞ்சோம்'' என்றார்.

''இப்போ எதுக்கும்மா இப்படிப் பேசுறீங்க?''

''இல்லைப்பா. நீ ஒரு தடவை கூட அவங்க வீட்டில் உள்ள யார்கிட்டவும் பேசலையா... நாளைக்குக் காலையில கல்யாணத்தை வைச்சுக்கிட்டு நீ இப்ப வரைக்கும் வரலையா... பொண்ணு வீட்டுக்காரங்க கொஞ்சம் பயந்து போயிட்டாங்க. அது அவங்க முகத் திலே நல்லாத் தெரிஞ்சது. ஆனா அந்தப் பொண்ணோ, பொண்ணைப் பெத்தவரோ எங்களை ஒரு வார்த்தை கேட்கலை தெரியுமா. எங்களை விடவும் அவங்க தான்டா உன்னை நம்பினாங்க. அவங்க நம்பிக்கையை உடைச்சிடாதே'' என்று சொன்னவர் சில நொடிகள் அமைதியானார்.

''முகம் கை கால் கழுவிட்டு வாப்பா. நான் மண்டபத்திலே இருந்து உனக்கு சாப்பாடு எடுத்துட்டு வந்து தரச் சொல்லுறேன்'' என்று காமாட்சி சொல்லிக் கொண்டிருக்கும்போதே விஸ்வநாதன் உள்ளே நுழைந்தார்.

''சாப்பாடு எடுத்துட்டு வந்திருக்கேன் காமாட்சி. புள்ளையைச் சாப்பிட வைச்சு நீயும் சாப்பிடு'' என்றார்.

''நீங்களும் ஒண்ணும் சாப்பிடாமல் தானேங்க இருக்கீங்க. நீங்களும் வாங்க. சாப்பிட்டுவிட்டுப் போய் வேலையைப் பாருங்க'' என்று சொன்னார்.

அவர்கள் மூவரும் சாப்பிட்டு முடித்ததும், ''முரளி...'' என்று அவனது தந்தை தயங்கி நிறுத்த,

''என்னப்பா விஷயம்? என்கிட்டே சொல்லுறதுக்கு எதுக்குத் தயங்குறீங்க?'' என்று முரளிதரன் கேட்டதும்,

''உனக்கு பிரயாணம் பண்ணியது அலுப்பா இருக்கா?'' என்று கேட்டார்.

''அப்படி ஒண்ணும் இல்லைப்பா. நான் என்ன செய்யணும். சொல்லுங்க. செய்யுறேன்.''

''இல்ல... பொண்ணு வீட்டுக்காரங்க எல்லோரும் மண்டபத்துல தங்கி இருக்காங்க. நீ அங்க வந்து கொஞ்சம் தலையைக் காட்டினால், பொண்ணோட அப்பாக்கு கொஞ்சம் மனசு நிறைவா இருக்கும். அதான்...''

சற்று முன்பு தாயார் சொல்லியதைக் கேட்டிருந்த முரளிதரன் மறு பேச்சுப் பேசாமல் மண்டபத்திற்கு வர ஒத்துக் கொண்டான்.

தகப்பனுடன் கிளம்பியவன் மனதுக்குள் இறைவனிடம், 'அப்பா முருகா! என் கண்ணிலே இன்னைக்கு அந்தப் பொண்ணைக் காட்டிவிடாதே!' என்று தீவிரமாக வேண்டிக் கொண்டான்.

இன்றைய அவனுடைய வேண்டுதலுக்கு முருகன் செவி சாய்த்தார் என்றே வைத்துக் கொண்டாலும், நாளையில் இருந்து என்ன செய்ய முடியும்? எப்படியும் அவள் முகத்தில் விழித்துத் தானே ஆக வேண்டும்?

இது புரியாமல் இப்போதைக்கு பிரச்சனையைத் தள்ளி வைப்போம் என்ற மனோபாவத்தில் அவன் கடவுளிடம் தீவிரமாக வேண்டிக் கொண்டு வந்தான்.



அவன் மண்டபத்தின் வாசலில் கால் வைத்ததும் அந்த மண்டபமே அல்லோல கல்லோலப்பட்டது.

''மாப்பிள்ளை வந்தாச்சு...''

''சும்மா செவ செவன்னு சினிமாக்காரன் மாதிரி இல்ல இருக்காரு.''

''நம்ம கருப்பசாமி யோகக்காரன் தான்...''

''சீமையில் இல்லாத மாப்பிள்ளையைப் புடிச்சுட்டு வந்துட்டான். அதான் இந்த கருப்பசாமி கல்யாணத்துக்கு முதல் நாள் வரைக்கும் கூட மாப்பிள்ளையை கண்ணி லேயே காட்ட மாட்டேங்கிறான் போலன்னு பேசுனது நிசமால்ல போச்சு... மாப்பிள்ளை சீமைத் துரை மாதிரி தான் இருக்காரு...'' என்று பலரும் பல கருத்துக்களை அள்ளி விட... அங்கிருந்த சொர்ணத்தம்மாள் முரளியின் அருகே வந்து கொண்டே கூட்டத்தினரைப் பார்த்து, ''எங்க வீட்டு மாப்பிள்ளை வந்துட்டாரு இல்ல... இனிமே நாக்கு மேல பல்லு போட்டு ஒரு பயலும் பேசப்புடாது சொல்லிப்புட்டேன்'' என்று மிரட்டினார்.

பின் முரளிதரனை பார்த்து, ''என் பேரனை வெள்ளக்காரன் விடலைன்னா அவர் என்ன செய்வாரு? அன்னைக்கு நம்ம நாட்டுக்குள்ள வந்த வெள்ளக்காரன் ஊரை விட்டுப் போக மாட்டேன்னு அடம் புடிச்சான். இப்போ அங்க போற நம்ம ஊரு பயலுகளை போக விடாம புடிச்சு வைச்சுக்கிறான். இந்த வெள்ளைக் காரனோட ஒரே தொல்லையாப் போச்சு. இன்னொரு காந்தி தான் வரணும் போல!'' என்று அவர் கூறிய விளக்கத்தைக் கேட்டு,

முரளிதரனுக்கு சிரிப்பு வந்தது. அவன் கஷ்டப்பட்டு தன் சிரிப்பை அடக்க...

அதைக் கண்ட முதியவர், ''அய்யா ராசா! சிரிப்பு வந்தா சிரிய்யா. நான், நீ கட்டிக்கப் போற பொண்ணோட அப்பத்தா. உனக்கு பாட்டி தான். பாட்டி உன்னைய தப்பா நினைச்சுக்க மாட்டேன். சும்மா சிரி!'' என்று உத்தரவு கொடுத்ததும்,

அவன் அவரின் வயதை முன் நிறுத்தி சிரிக்கவில்லை என்றாலும் பெரிதாக புன்னகைத்தான்.

''சொர்ணாத்தா உன் பேத்தி சொர்ணம் விக்கிரகம் மாதிரி இருக்காள். அவளைக் கட்டிக்கப் போறவரும் அதுக்கு ஏத்த மாதிரியே இருக்கார்'' என்று உறவுப் பெண்மணி சொன்னார்.

'ஆகா! பாட்டி பேரைத் தான் பேத்திக்கு வைச்சிருக் காங்களா? என் வாழ்க்கையோட நீங்க தான் விளையாடி விட்டீங்களா பாட்டி!'' என்று மனதுக்குள் அவரைக் கேள்வி கேட்டுக் கொண்டான்.

சொர்ணம் முரளிதரனுக்கு தன் கைகளால் நெட்டி முறித்து விட்டு விஸ்வநாதன் காதில், ''அய்யா விஸ்வ நாதா! வீட்டுக்குப் போனதும் உன் பொண்டாட்டியை என் பேரனுக்கு திருஷ்டி சுத்தி போடச் சொல்லு. ஒரு கண்ணப் போல ஒரு கண்ணு இருக்காதுய்யா'' என்று தாழ்ந்த குரலில் கூறவும்,

அதைக் கேட்டுக் கொண்டிருந்த முரளிக்கு மனம் இளகவே செய்தது. அப்பொழுது ஒரு பெரியவர்



தோளில் போட்டிருந்த துண்டைச் சரி செய்தபடியே மண்டப வாசலுக்கு ஓட்டமும் நடையுமாய் ஓடி வந்தார்.

'அவர் தான் பெண்ணோட தகப்பனாக... இன்னமும் என்ன பெண்ணோட தகப்பன்... நம்ம வருங்கால மாம னாராய் இருப்பாரோ?' என்று முரளிதரன் நினைத்துக் கொண்டிருக்க... அவன் தந்தை அவன் நினைப்பு சரியே என்பதை உறுதி செய்தார்.

''டேய் கருப்பசாமி! உன் மாப்பிள்ளையைக் கூட்டி வந்துட்டேன். நல்லா பார்த்துக்கோ. உன் பொண்ணு கிட்ட சொல்லி முந்தானையில் முடிஞ்சு வைச்சுக்கச் சொல்லு'' என்று சொல்லி விஸ்வநாதன் சிரிக்கவும்,

கருப்பசாமி முகம் மலர தன் நண்பனைப் பார்த்து புன் முறுவல் செய்தபடியே வருங்கால மருமகனைப் பார்த்து, ''வாங்க மாப்பிள்ளை. பிரயாணமெல்லாம் நல்லபடியா இருந்துச்சா? உள்ளே வாங்க'' என்று அழைத்துச் சென்று நாற்காலி ஒன்றில் அமர வைத்தார்.

பெண் வீட்டு உறவினர்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். தான் ஏதோ காட்சிப் பொருளாக நிற்பது போல் அவனுக்கு சங்கடமாக இருந்தது.

''இவர் தான் உன் பெரிய மாமனார், இவர் அவரோட பையன் சுதாகரன்'' என்று விஸ்வநாதன் அறிமுகப் படுத்த... முரளிதரன் எழுந்து நின்று அவர்களைப் பார்த்து இரு கை கூப்பி வணங்கினான்.

'மாப்பிள்ளை மரியாதை தெரிஞ்சவராத் தான் இருக்கார்' என்று அவர்கள் மனதுக்குள் அவனுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்கள்.

ஐந்து நிமிடதிற்கு மேல் அந்தக் கும்பலின் மத்தியில் இருக்க அவனுக்கு சங்கடமாக இருந்தது. அவன் தன் தந்தையைப் பார்த்துப் போகலாமா என்று சைகை செய்ய... விஸ்வநாதன் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் கருப்பசாமி கவனித்து விட்டார்.

அவர் தன் நண்பரிடம், ''விஸ்வநாதா, மாப்பிள்ளை ஓய்வு எடுக்கட்டும். வீட்டுக்கு அழைச்சிட்டுப் போ. காலையிலே வேற சீக்கிரமா எழுந்துக்கணுமே!'' என்று சொன்னதும்,

முரளிதரன் அவரைப் பார்த்து நன்றி தெரிவிக்கும் வகையில் புன்முறுவல் புரிந்தான்.

'மாமனார் பரவாயில்லை. புரிஞ்சு நடந்துக்கிறார்' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டான். நல்லவேளை சின்ன சொர்ணம் நம்ம கண்ணிலே படலை என்று அவன் நிம்மதி பட்டுக் கொண்டான்.

ஆனால் அவனுக்கு மனைவியாகப் போகிறவளோ அவன் மண்டபத்தின் உள்ளே நுழைந்ததில் இருந்து அவனைத் தான் ஒளிந்து நின்று ரசித்துக் கொண்டிருந்தாள்.

## 5

வீட்டிற்கு வந்தவன், 'அவளை எப்படிக் கூப்பிடுவது? அவ பேரைச் சுருக்கலாம் என்று அமெரிக்காவில் அன்றொரு நாள் தொடங்கிய ஆராய்ச்சியை மீண்டும் இன்று தொடங்கி வைத்தான்.



'சொர்ணம்... ஐயோ இந்தப் பேரை எப்படியும் சுருக்க முடியாதே! சில பேர் கல்யாண சமயத்திலே பேர் மாத்துவாங்களே அது மாதிரி இவ பேரையும் நாகரிகமா மாத்திடுவோமா? அவ ஒத்துப்பாளா? இல்லைன்னா வேற எப்படிக் கூப்பிடுவது பாப்பு என்று கூப்பிடுவோமா? ஏன்டா அந்தப் போட்டோவைப் பார்த்த பிறகும் உனக்கு அவளைப் பாப்பு என்று கூப்பிட்டு கொஞ்சத் தோணுதா?' என்று மனசாட்சி எள்ளி நகையாடியது.

'சொர்ணம் என்றால் தங்கம். தங்கத்துக்கு வேற பேர் என்ன? தங்கம்ன்னா கோல்ட்... கோல்டின்னு கூப்பிடுவோமா? சே நல்லா இல்லை. தங்கம் என்றால் செல்வம்... செல்வம் என்றால் லக்ஷ்மி... லக்ஷ்மின்னு கூப்பிடுவோமா? லக்ஷ்மி மட்டும் புது பேராடான்னு கேட்டு வீட்டிலே உள்ள எல்லோரும் சேர்ந்து உதைப்பாங்களோ?

அப்படின்னா லக்ஷ்மியை எப்படி மாத்துறது? ஸ்ரீ... ஹேய்! இது நல்லா இருக்கு. அப்படியே கூப்பிடலாம்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

நடக்கும் எதையும் மாற்ற முடியாது என்பது தெரிந்ததினால் வீட்டிற்கு வந்தவன் வேறு எது பற்றியும் அலட்டிக் கொள்ளாமல் நிம்மதியாகத் தூங்கினான்.

பொதுவாக அமெரிக்காவில் இருந்து இந்தியா வருபவர்கள் இந்தப் பகல், இரவு மாற்றங்களினால் இரண்டு நாட்களாவது தூக்கம் வராமல் தவிப்பார்கள்.

ஆனால் கடந்த பத்து நாட்களாக இரவு, பகல் பாராது வேலை பார்த்ததினால் ஏற்பட்ட சோர்வினால் அவனுக்கு விரைவிலேயே தூக்கம் வந்தது.

கல்யாண நாளும் பரபரப்புடன் விடிந்தது. காலை ஐந்து மணிக்கே மைக் செட்காரன் சாமி பாடலை அலற விட, அனைவரையும் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

முரளிதரன் மனதில் துக்கமோ, சந்தோஷமோ இல்லாத மனநிலையில் ஒரு அமைதியுடனே திருமண மண்டபத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

மண்டபத்திற்குள் நுழைந்து திருமண மேடையில் அமர்ந்ததில் இருந்து தாலி கட்டி முடிக்கும் வரைக்கும் அய்யர் அல்லது உறவுக்காரர்களின் பேச்சைக் கேட்டு அதன் படி நடந்தான்.

அவன் மறந்தும் தன் மனையாளின் புறம் பார்வையைத் திருப்பவில்லை. அவள் புறம் திரும்பும்போது எங்கே அவளது ஸ்பிரிங் முடி கண்ணில் பட்டு விடுமோ என்று பயந்தான்.

மணப் பெண்ணோ அவனைத் தான் ஓரக் கண்ணால் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் தன் புறம் திரும்பாததால் 'மகனே உனக்கு இருக்குடா' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டிருந்தாள்.

திருமணம் முடிந்ததும் பெற்றவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள்.

முரளிதரன் தன் புத்தம் புது மனைவியுடன் சேர்ந்து தன் பெற்றோர்களின் காலில் விழ,



விஸ்வநாதன், ''எல்லா வளங்களும் பெற்று நீண்ட ஆயுளோடு நல்லா இருக்கணும்'' என்று வாழ்த்தினார்.

காமாட்சியோ வாயைத் திறப்பதும், மூடுவதுமாக இருந்தார்.

''என்ன காமாட்சி, இப்பவும் சினிமா வசனம் தான் வருதா? பரவாயில்லை. அதைச் சொல்லியே ஆசிர் வாதம் பண்ணு'' என்று விஸ்வநாதன் கூறவும்,

''படையப்பா படத்திலே வரும் ரஜினிகாந்த் சௌந்தர்யா மாதிரி இணை பிரியாம வாழணும்'' என்று காமாட்சி வாழ்த்தினார்.

அவரது மகன் தன் மனதிற்குள், 'நான் படித்தவன். என் மனைவி படிக்காதவள் என்பதால் படையப்பா படத்தை உதாரணமா சொல்லுறாங்க. இந்த அம்மா எங்கே இருந்து தான் டக்கு டக்குன்னு பிடிப்பாங்களோ?!' என்று தாயைப் பாராட்டிக் கொண்டான்.

அவரது மருமகளோ மாமியாரின் பேச்சைக் கேட்டு 'ஓஹோ! அத்தை எதுக்கெடுத்தாலும் சினிமா வசனம் சொல்லுவாங்களோ?' என்று நினைத்து சிரித்துக் கொண்டாள்.

பின்பு அவர்கள் இருவரும் மணமகளின் பெற்றோர் மற்றும் பெரியப்பா, பெரியம்மா காலிலும் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டார்கள்.

கருப்பசாமி தன் அண்ணனிடம், ''அண்ணே, அம்மா எங்க காணோம். அப்புறம் அது காலில விழலைன்னு கோவிச்சுக்கப் போகுது'' என்றார்.

அவரது அண்ணன், ''நான் போய் கூட்டி வரேன்'' என்று சொல்லிச் சென்றவர் கையோடு தாயை அழைத்துக் கொண்டு வந்தார்.

''எங்க ஆத்தா போனே? தாலி கட்டுற வரைக்கும் இங்கன தானே இருந்தே. அதுக்குள்ள மாயமா மறைஞ்சுட்டே...'' என்று கருப்பசாமி கேட்டவுடன்,

''இங்கனதேன் ஓரமா உக்காந்து பேசிக்கிட்டு இருந்தேன்'' என்று சொர்ணத்தம்மாள் பதில் கூற, மணமக்கள் அவர் பாதம் பணிந்து எழுந்தார்கள்.

''நல்லா இருக்கணும் அய்யா'' என்று பேரனை வாழ்த்தியவர்,

''விரசா (சீக்கிரமே) ஒரு புள்ளயப் பெத்து எங்கையிலே குடுத்திரு. நான் வளக்குறேன்'' என்று பேத்தியைப் பார்த்துச் சொன்னதும்,

சுற்றி உள்ள அனைவருமே 'கிழிஞ்சிடும்!' என்ற முகபாவனையோடு நின்றனர் என்றால்,

சுதாகரன் தன் தங்கையின் காதில் குனிந்து, ''எதுக்கும் பிள்ளையைக் கொஞ்சம் லேட்டாவே பெத்துக்கோடா குட்டி'' என்று அறிவுரையே சொல்ல ஆரம்பித்து விட்டான்.

''கல்யாணமான சின்னக் கழுத தான் வெக்கப்பட்டு பேசாம நிக்குதுன்னா மத்தவங்க யாராச்சும் புள்ளைய நீ வளத்துக் குடுன்னு ஒரு வார்த்தை சொல்லுறீங்களா?'' என்று சொர்ணத்தம்மாள் நொடிக்கவும்,

சுதாகரன் தன் பாட்டியை நோக்கி நடந்தவாறே, ''அப்பத்தா, எங்க அம்மாக்கள் ரெண்டு பேரும் நீங்க



புள்ளையை வளர்த்த லட்சணம் எங்களுக்கு தெரியாதாக்கும் அப்படின்னு மனசுக்குள்ள நொடிச்சிக்கிட்டு இருப்பாங்க.

எங்க அப்பாக்களோ, ஏன் ஆத்தா நாங்க ரெண்டு பேரும் வளர்ந்த முறைக்கு தினமும் எங்க பொண்டாட்டிகிட்டே திட்டு வாங்குறது பத்தாதா? நாளைக்கு என் மகளும், மருமகனும் கஷ்டப்படணுமான்னு நினைச்சிருப்பாங்க.

அப்பத்தா, உன்னால சின்ன பிள்ளை பின்னாடி ஓட முடியுமா? பேசாமல் ஓரமா உட்கார்ந்தமா... நாலு பேர் கூட பேசினோமான்னு இருக்கிறதை விட்டுட்டு...'' என்று அவன் இழுக்கவும்,

''அப்ப நான் புரணி பேசத் தான் லாயக்குன்னு சொல்லுறியா?'' என்று சொர்ணத்தம்மாள் நொடிக்க,

''பார்த்தியா அப்பத்தா. படிக்காட்டிலும் நீ அறிவாளி. டக்குன்னு பாயிண்டை பிடிச்சிட்டே!'' என்று கேலி செய்து கொண்டே மேடையில் இருந்து நகர்த்திச் சென்றான்.

திருமணம் முடிந்து சடங்குகள் அனைத்தும் முடிந்ததும் விஸ்வநாதன் மணமக்களை வேனில் ஏறச் சொன்னார்.

''எங்கேப்பா போறோம்?'' என்று முரளிதரன் கேட்டதற்கு,

''நீ நாளைக்கே வேலையிலே சேரணும் என்று சொன்னியே. அதன் இன்னைக்கே நம்ம குல தெய்வம்

கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டு வந்திடலாம் என்று ஏற்பாடு பண்ணியிருக்கோம்'' என்று சொன்னார்.

கருப்பசாமியும், தன் மனைவி வேலம்மாளுடன் வேனில் ஏறினார். அவரது அண்ணனும், அண்ணியும் மண்டப வேலைகளைப் பார்த்துக் கொள்வதாகக் கூறி விட்டார்கள்.

விஸ்வநாதனும் தன் பக்கத்து உறவுகளை கவனித்துக் கொள்ளும்படி தன் ஒன்று விட்ட தம்பியிடம் ஒப்படைத்து விட்டு மனைவியுடன் பயணப்பட்டார். மேலும் சில உறவினர்கள் ஏற வண்டி கிளம்பியது.

வேனில் மணமக்களின் எதிரே அமர்ந்திருந்த கருப்பசாமி, ''மாப்பிள்ளை, உங்களுக்கு என்ன கார் பிடிக்கும் என்று சொன்னீங்கன்னா நான் அதையே வாங்கிடுவேன். உங்களை கேட்டுட்டு வாங்கணும் என்று தான் இத்தனை நாளா காத்திருந்தோம்'' என்றதும்,

''நீங்க எதுக்கு மாமா எனக்கு கார் வாங்கித் தரணும்? இது நாள் வரைக்கும் நான் தனி ஆள். சென்னையிலே பைக்கிலே போறது தான் வசதி. பார்க்கிங் பிரச்சனை வராது. அதனால தான் நான் இத்தனை நாளா கார் வாங்கிறதைப் பத்தி யோசிச்சுப் பார்க்கலை. எனக்குத் தேவைப்படும்போது நானே வாங்கிக்கிறேன். தயவு செய்து நீங்க என்னைத் தப்பா நினைக்காதீங்க'' என்றான்.

கருப்பசாமி என்ன சொல்வதென்று புரியாமல் சங்கடமாகப் பார்த்துக் கொண்டிருக்க,

சொர்ணத்தம்மாளோ, ''எதுக்குடா இப்படி முழிக்கிறே. அதான் என் பேரன் சொல்லிட்டாரு இல்ல...



வரதட்சணை வேணாம்ன்னு. சேர்த்து வைச்சு நாளைக்கு உன் பேரப் புள்ளைகளுக்கு குடுத்துட்டுப் போவியா... அத விட்டுட்டு திருவிழால்ல காணாமப் போன புள்ளயாட்டம் முழிக்கிறான்...'' என்று நொடித்துக் கொண்டார்.

தங்கையின் அருகில் இருந்த சுதாகரன், ''குட்டி, இந்த அப்பத்தா ரவுசு தாங்கலை. நேத்திலே இருந்து நானும் பார்க்கிறேன். ஓவரா மாப்பிள்ளை கூட ஒட்டிக்கப் பார்க்குது. இது நல்லதுக்கில்லை. ஆரம்பத்திலேயே கட் பண்ணிடு'' என்று கிண்டல் பண்ணினான். அவள் சிரித்துக் கொண்டாள்.

அருகில் இருந்த முரளிதரனுக்கும் அவனது பேச்சு கேட்டது. 'ஆகா! என் பெண்டாட்டிக்கும், அவ அண்ணனுக்கும் பாட்டியைப் பிடிக்காதா? அப்படின்னா நான் அவங்க கூட உடனே கூட்டணி வைச்சுக்கிறேன்' என்று நினைத்தவன்,

''நீங்க தான் பாட்டி என்னைச் சரியா புரிஞ்சு வைச்சிருக்கீங்க. ஆனால் ஏன் பாட்டி எனக்கு போய் மரியாதை கொடுத்துப் பேசுறீங்க? சும்மா என்னை நீ வா போன்னு சொல்லுங்க'' என்று அவரிடம் நட்புக் கரம் நீட்டினான்.

''ம்ஹூம் குட்டி, இனி ஒண்ணும் பண்ண முடியாது. மாப்பிள்ளை சொந்த செலவிலே சூனியம் வைச்சுக்கிட்டார். சிக்கிட்டான்டா அடிமைன்னு நம்ம அப்பத்தா குஷியா ஆகிடும் பாரு'' என்று சுதாகரன் முணுமுணுத்தான்.

முரளிதரன் கார் வேண்டாம் என்று சொன்னதைக் கேட்டு அவனைப் பெற்றவர் என்ற முறையில் அவன் தந்தையும், கட்டியவள் என்ற முறையில் அவனது மனைவியும் மகிழ்ந்தனர்.

பயணம் முழுவதும் பாட்டி தனக்கு நட்பாகக் கிடைத்த புதுப் பேரனை அறுத்துத் தள்ள... முரளிதரன் சொல்லவும் முடியாமல், அவர் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கவும் முடியாமல் நொந்து போனான்.

அவன் முகம் போன போக்கை வைத்து முதல் நாள் போல் அவன் மாமனார் தான் அவனைத் தன் தாயிடம் இருந்து காப்பாற்றி, மருமகன் முகத்தில் புன்முறுவல் பூக்கச் செய்தார்.

அவர்கள் குலதெய்வம் கோவிலில் சாமி கும்பிட்டு மீண்டும் மண்டபம் வந்து சேர்ந்து, அங்கிருந்த பொருட்களை எல்லாம் திரட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்த பொழுது மாலை ஆனது.

வீட்டிற்கு வந்ததும் முரளிதரன் தன் தந்தையை அழைத்து, ''அப்பா, நான் கிளம்பட்டுமா? இப்போ கிளம்பினால்தான் காலையிலே சென்னைக்குப் போய்ச் சேர முடியும். வேலையிலே சேர டைம் சரியா இருக்கும்'' என்றான்.

''என்ன தம்பி விளையாடுறியா? கல்யாணம் ஆன உடனே நீ மட்டும் எப்படிப் போக முடியும்? அதுவும் இன்னைக்கு ராத்திரி நீ நம்ம வீட்டிலே இருந்தாகணும்'' என்றார்.



''டைம் இல்லையேப்பா...'' என்று அவன் மறுக்கத் தொடங்கியவுடன்,

''நீ அமெரிக்காவிலே இருந்தப்பவே ஊருக்கு வந்த உடனே வேலையில சேரணும் என்று சொன்னியாமே! அம்மா சொன்னாள். அதான் உனக்கும், மருமகளுக்கும் காலையில் கிளம்ப விமானத்திலே டிக்கெட் போட்டாச்சு. ஒரு மணி நேரத்திலே போய் சேர்ந்து விடலாம். அதனால காலையில கிளம்பிப் போ'' என்று முடித்து விட்டார்.

'ஆகா! கொஞ்ச நாளாச்சும் அவளைப் பார்க்கிற கொடுமையில இருந்து தப்பிச்சுக்கலாம் என்று பார்த்தால் விட மாட்டாங்க போலவே!' என்று நொந்து கொண்டான்.

அவனது மனசாட்சியோ 'முரளி, தாலி கட்டி முடிச்ச பின்னும் நீ இப்படி யோசிப்பது தப்பு' என்று எடுத்துக் கூறியது.

''நீங்க ரெண்டு பேரும் நாளைக்குக் கிளம்பிப் போங்க. நாங்க ரெண்டு மூணு நாள் கழிச்சு வரோம். கல்யாண வீடில்லையா... போட்டது போட்டபடி அப்படியே வர முடியாதே! உனக்கு இந்த வெள்ளிக் கிழமை லீவு தானே! அதனால் தொடர்ந்து மூணு நாள் லீவு வருது இல்ல...'' என்று விஸ்வநாதன் சொல்லிக் கொண்டிருக்கும்போது,

கருப்பசாமி இடை புகுந்து, ''அந்த சமயத்திலே மறுவீட்டு விருந்துக்கு வரீங்களா மாப்பிள்ளை?'' என்று கேட்டார்.

'அச்சோ! இவங்க வீட்டுக்குப் போகணுமா? நான் முதல்ல உங்க பொண்ணை மட்டும் சமாளிக்கிறேன். அப்புறமா உங்களை எல்லாம் சமாளிக்க வரேன்' என்று எண்ணியவன்,

சட்டென்று அந்த நேரத்துக்குத் தோன்றிய ஒரு பொய்யை, ''இல்லை மாமா. அப்போ ஹனிமூன் போகலாம் என்று நினைச்சேன்'' என்றான்.

''அப்படியா மாப்பிள்ளை?'' என்று கேட்டுக் கொண்டே அவர் தலை அசைக்க,

'அப்பாடா தப்பிச்சுட்டடா முரளி' என்று நினைக்கும் பொழுதே,

''எந்த ஊருக்கு மாபபிள்ளை?'' என்று கேட்டு வைத்தார்.

'மூன்று நாளைக்குள்ளே போய் திரும்புற மாதிரி ஒரு ஊரை யோசிடா!' என்று மனதுக்குள் புலம்பியவன் சட்டென்று, ''மூணாறு மாமா!'' என்றான்.

''டிக்கெட் எடுத்துட்டீங்களா மாப்பிள்ளை?''

''இல்லை மாமா. இனிமேல் தான் பார்க்கணும்'' என்றான். இந்த ஒரு கேள்விக்கு மட்டும் தான் உண்மையைச் சொன்னான்.

''சரிங்க மாப்பிள்ளை. நீங்க போய் ரெஸ்ட் எடுங்க'' என்றதும்,

ஆளை விட்டால் போதும் என்று எண்ணிக் கொண்டே தன் அறைக்குள் சென்று முடங்கினான்.



# 6

முதல் இரவும் வந்தது. புதுப் பெண்ணும் பால் சொம்புடன் உள்ளே நுழைந்தாள். வந்தவள் கட்டில் அருகே உள்ள மேஜையில் பால் சொம்பை வைத்தாள்.

முரளிதரன் ஜன்னல் பக்கம் நின்று கொண்டு தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன இவர் திரும்பாமல் இருக்கார்' என்று நினைத்தவள் 'க்கும்' என்று கனைத்து அவனது கவனத்தைத் தன் புறம் திருப்ப முயன்றாள்.

அவளது வருகையை உணர்ந்தவன் பெருமூச்சை வெளியேற்றினான். அவளிடம் பேசுவதற்குத் தயாரானான்.

அவன் கனகாரியமாக ஜன்னலைச் சாற்றிவிட்டு, அறையைத் தாளிட்டுவிட்டு ஏ.சி.யை இயக்கினான். தாங்கள் பேசுவது வெளியில் இருப்பவர்களுக்கு கேட்டுவிடக் கூடாது என்று நினைத்தான்.

கட்டிலின் ஓரமாக அமர்ந்தவன் அவள் புறம் திரும்பாமலே, ''உட்காரு!'' என்று அவளை உட்காரச் சொன்னான்.

அவள் கட்டிலின் மறுமுனையில் அமர்ந்ததும், ''நான் உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' என்றான்.

'என்கிட்டவா? இல்லை சுவத்துகிட்டவா? பார்வை அந்தப் பக்கமா இல்ல இருக்கு' என்று நினைத்துக் கொண்டாள்.

சம்மதத்திற்கு அறிகுறியாக 'ம்ம்' என்று மட்டும் ஒலி எழுப்பினாள். அவள் புறம் திரும்பாமலே அவன் பேச ஆரம்பித்தான்.

''நான் என் கல்யாணத்தைப் பத்தியும், எனக்கு வரப் போற மனைவி பத்தியும் நிறைய கனவு வச்சிருந்தேன். அதிலே ஒண்ணு கூட உனக்கு ஒத்து வரலை'' என்று அவன் சொன்னதும் அதிர்ச்சி அடைந்தாள்.

அவனது புகைப்படத்தைப் பார்த்ததில் இருந்து அவனைப் பற்றி மட்டுமே அவள் கனவு கண்டு கொண்டு இருந்தாள்.

அவனது சிவந்த நிறமும், அலை அலையான கேசமும், கருமையான அடர்ந்த மீசையும் எந்தப் பெண்ணையும் ஈர்க்கும். விஷயம் அப்படி இருக்க... அவளுக்கே உரியவன் என்று சொன்ன பிறகு அவனைப் பற்றியே அவள் கனவு கண்டதில் என்ன தவறு இருக்கிறது?

'நீ எனக்கு இணையானவள் இல்லை' என்று கணவனின் வாய்மொழியாக... அதுவும் முதல் மொழியாக கேட்பதை விடக் கொடுமை ஒரு பெண்ணிற்கு வேறு இருக்குமா என்ன?

அவள் அதிர்ந்து போய் நிற்க... அவன் தயக்கத்துடன் தன் பேச்சினைத் தொடர்ந்தான்.

''எனக்கு வரப் போற மனைவி ரொம்ப நாகரீகமா இருக்கணும் என்று நினைச்சேன்...'' என்று சொல்லிக் கொண்டிருந்தவனை இடைமறித்து,



''நாகரீகம்னா எப்படி?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டதின் மூலம் முதல் முறையாக அவன் முன் பேசினாள்.

அவளது குரல் இனிமையாக இருந்தது. அந்த மட்டுக்கு தப்பிச்சுட்டடா முரளி என்று மனதுக்குள் அவன் தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான்.

'குரல் நல்லா இருப்பது இருக்கட்டும்... நாகரீகம்ன்னா என்னவென்று கேட்கிறாளே! அதுக்கு முதல்ல பதிலைச் சொல்லு. அதுக்கே அர்த்தம் தெரியாதவளை எப்படிடா மாத்தப் போறே?' என்று மனம் கேள்வி கேட்டது.

ஒரு பெருமூச்சை வெளியேற்றிக் கொண்டே, ''நாகரீகம்ன்னா எப்படிச் சொல்லுறது... நல்ல மாடர்னா டிரஸ் பண்ணணும். என் அளவுக்கு படிச்சிருக்கணும். அதாவது என்னை மாதிரி இஞ்சினீயருக்கு படிக்கலை என்றாலும் காலேஜ் போய் ஏதாச்சும் ஒரு டிகிரி படிச்சிருக்கணும். எனக்கு சரிக்கு சமமா பேசுற அளவுக்கு உலக விஷயங்கள் தெரிஞ்சு இருக்கணும்.

இன்னும் சொல்லிக்கிட்டே போகலாம். என்னளவுக்கு உன்னை என்னால படிக்க வைக்க முடியலைன்னாலும் ஓரளவுக்கு என் ரசனைக்கு ஒத்து வர மாதிரி நீ உன்னை மாத்திக்கணும். நானும் உனக்கு உதவி செய்யுறேன். அதுக்கு அப்புறமா நாம நம்ம வாழ்க்கையைத் தொடங்கலாம். என்ன சொல்லுற?'' என்று கேட்டான்.

'அட இவ்வளவு தானா விஷயம்! நான் கூட வேற பெண்ணை எனக்குப் பிடிச்சிருக்கு. அவளைத் தான்

நான் உசுரா நினைக்கிறேன் என்று சொல்லுவாரோன்னு பயந்தே போனேன்' என்று அவள் நிம்மதி அடைந்தாள்.

அவள் அதிர்ந்ததையும் அவன் பார்க்கவில்லை. அவள் நிம்மதி அடைந்ததையும் கவனிக்கவில்லை.

அவள் முகம் பாராமல் பேசிக்கொண்டே வந்தவன் அவளிடம் இருந்து பதில் வராது போகவும் என்னவென்று அறிவதற்காக அவள் புறம் திரும்பினான்.

முதல் முறையாக நேரில் அவள் முகத்தைப் பார்த்தவன் அதிர்ந்தான்! இனிதாக அதிர்ந்தான்!

அவன் அம்மா அன்று போனில் சொன்னது போல் மூக்கும் முழியுமாக லட்சணமாக இருந்தாள். நிறம் கூட கருப்பு கிடையாது. அவன் அளவுக்கு கலர் இல்லை என்றாலும் அவள் நிறத்தைக் கண்டிப்பாகக் கருமையில் சேர்க்க முடியாது.

'ஒரு வேளை இப்போ மேக்-அப் போட்டிருப்பாளோ?' என்று கேள்வியும் மனதினுள் பிறக்கவே செய்தது.

'இல்லை நமக்கு அனுப்பி இருந்தது வேற யாரோட போட்டோவாக இருக்குமோ? ஆனால் ஜாடை ஒத்துப் போகுதே' என்று குழம்பிக் கொண்டே,

அவளைப் பார்த்து, ''உனக்கு அக்கா, தங்கச்சி யாரும் இருக்காங்களா? கொஞ்சம் கருப்பா...'' என்று கேட்டான்.

அவள் விழித்துக் கொண்டே, ''இல்லை'' என்றாள்.



''அப்படின்னா மேக் அப்பே போடத் தெரியாத மட்டமான பியூட்டிஷன் யாரும் உனக்கு ஃப்ரண்டா இருக்காங்களா? அதாவது இந்தக் கல்யாணப் பொண்ணுக்கு எல்லாம் மேக்-அப்... அதாவது அழகு படுத்துவாங்களே...'' என்று தனக்குத் தெரிந்த வரை பியூட்டிஷியன் என்ற வார்த்தைக்கு அவன் தமிழில் விளக்கம் சொல்ல,

அவள் முன்பை விட அதிகமாக விழித்துக் கொண்டே, ''அப்படி யாரும் இல்லையே!'' என்றாள்.

'அப்புறம் எப்படி அப்படி ஒரு மட்டமான போட்டோ எடுத்தாங்க?' என்று மனதுக்குள் நினைத்துக் குழம்பினான்.

'அதை விட்டுத் தள்ளிட்டு உன் பொண்டாட்டி பார்க்கிறதுக்கு லட்சணமா தான் இருக்கான்னு சந்தோஷப் படுவியா? அதை விட்டுட்டு பழசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு...' என்று மனசாட்சி எடுத்துரைத்தது.

'சே! இப்படின்னு தெரிஞ்சிருந்தால் காலையில் இருந்து இவளை ஓரக் கண்ணால் பல முறை பார்த்து இருக்கலாமே' என்று நினைக்கும் பொழுது தான் அவனுக்கு அவளது ஸ்பிரிங் முடி ஞாபகத்துக்கு வந்தது.

ஆகா! அதை இன்னமும் நாம பார்க்கலையே என்று நினைத்துக் கொண்டே அவன் சற்றே பின் பக்கமாக சாய்ந்து அவள் தலை முடியை ஆராய... அங்கே அப்படி ஒன்றும் இல்லாமல் போனதால் அவன் மனதுக்குள் நிம்மதி பரவியது.

அவன் மனைவியோ 'என்ன இவர் திடீர்ன்னு பின்னாடி சாயுறார்? குரங்கு சேட்டை எல்லாம் நல்லா

செய்வார் போல!' என்று மனதுக்குள் கேலி பண்ணிக் கொண்டிருந்தாள்.

இருவரும் அடுத்தவர் பற்றிய ஆராய்ச்சியை மனதுக்குள் தொடர்ந்து கொண்டிருக்க... திடீரென நினைவு வந்தவனாக தான் நேற்று ஆராய்ந்து அவளுக்கு சூட்டிய பேரை அவளிடம் தெரிவிக்க விரும்பி,

''நான் உன்னை ஸ்ரீ ன்னு கூப்பிடலாமா?'' என்று கேட்டான்.

அவள் வழக்கம் போல விழித்துக் கொண்டே, ''ம்ம் சரி. ஆனால் ஏன்...'' என்று தொடங்கியவள், என்ன நினைத்தாளோ ''உங்க இஷ்டம்'' என்று மட்டும் சொன்னாள்.

'அவர் இஷ்டப்படி எப்படி வேணா கூப்பிட வேண் டியது தானே? எதுக்கு கேட்கிறார்? உன்னை மதிக் கிறேன் பாருன்னு சொல்லுறாரோ? ரொம்ப படிச் சிருக்காருன்னு காட்டுறதுக்காக எல்லாத்தையுமே நம்மளை கேட்டு தான் செய்வாரோ?' என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க,

'இவள் என்னை எப்படிக் கூப்பிடுவாள்? ஏய் மாமோய் என்றா? மச்சான் என்றா? இல்லை அயித்தான் என்றா? அய்ய... ஒண்ணு கூட நல்லாவே இல்லை' என்று நினைத்துக் கொண்டிருந்தவன்,

''ஆமா நீ என்ன படிச்சிருக்க?'' என்று கேட்டான்.

அவள் தயங்கிக் கொண்டே, ''எனக்கு படிப்பு சரியா வரலைன்னு எட்டாங் கிளாஸோட நிறுத்திட்டாங்க'' என்று பதிலளித்தாள்.



'ப்ளஸ் டூ கூடப் படிக்கலையா? படிப்பிலே ஆர்வம் இருந்தாலும் மேல படிக்க வைக்கலாம். அவளே படிப்பு வரலைன்னு சொல்லும் போது என்ன செய்ய முடியும்?' என்று நொந்தவன்,

''உனக்கு நல்லா சமைக்கத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஓரளவுக்கு நல்லாவே சமைப்பேன்'' என்றதும் சந்தோஷப்பட்டுக்கொண்டான்.

கணவனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்து தருவதே அவனது இதயத்திற்குள் நுழைவதற்கு சுலபமான வழி என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

'அதன்படி இவள் சீக்கிரமே என் இதயத்துக்குள் நுழைய நீ தான் அருள் புரிய வேண்டும் முருகா!' என்று வேண்டிக் கொண்டான்.

அவன் வருங்காலத்திற்காக இறைவனை வேண்டிக் கொண்டிருக்க அவனது மனைவியோ நிகழ்காலத்தில் இருந்தாள்.

''சரி இப்போ தூங்கலாமா? எனக்கு தூக்கம் வருது. நான் எங்கே படுக்கணும்? அதையும் சொல்லிடுங்க'' என்றாள்.

'நாம எதிர்கால வாழ்க்கையை பற்றி எவ்வளவு தீவிரமா யோசித்துக் கொண்டிருக்கிறோம். இவள் என்னடான்னா தூங்கட்டுமான்னு கேட்கிறாள்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே,

''இந்தக் கட்டிலிலேயே ஒரு ஓரமா படுத்துக்கோ'' என்றதும்,

சரி என்று சொல்லி அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்து விட்டாள்.

'அடிப்பாவி! என்ன பொண்ணு இவள்! நான் பேசினதைக் கேட்டு ஏமாந்து போவாள். அதற்காக அழுது ஆர்ப்பாட்டம் பண்ணலை என்றாலும் பரவாயில்லை எதிர்த்தாவது கேள்வி கேட்பாள் என்று பார்த்தால் அவ பாட்டுக்குத் தூங்கிட்டாள்.

இந்தக் கல்யாணம் பற்றியும், முதலிரவு பற்றியும் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இவளுக்கு இல்லையா? இப்போ ஏமாற்றம் அடைஞ்சது அவளா இல்லை நானா?' என்று எண்ணியவன் நொந்து போனான்.

மறுநாள் காலை குளித்து முடித்து அனைவரிடமும் அவர்கள் பிரியா விடைபெறும் போது கருப்பசாமி ஒரு கவரை அவன் கையில் கொடுத்தார்.

''என்ன மாமா இது?'' என்று கேட்ட முரளியிடம்,

''இது வந்து மாப்பிள்ளை... நீங்க மூணாறு போக டிக்கெட். ஹோட்டலில் தங்க ஏற்பாடு செஞ்ச ரசீது எல்லாம் இதிலே இருக்கு. நேத்து ராத்திரி இந்த கம்ப்யூட்டரிலே நம்ம சுதாகரன் முன்பதிவு பண்ணினான். இந்தாங்க வைச்சுக்கோங்க'' என்றதும்,

அதை அவன் கை நீட்டி வாங்காமல் அவரைப் பார்த்து, ''நான் நேத்தே சொன்னேன் இல்ல... எனக்கு வேண்டியதை நானே வாங்கிக்குவேன். எல்லாத்தையும் நீங்களே ஏன் எனக்கு வாங்கிக் கொடுக்கணும் என்று நினைக்கிறீங்க. எனக்கு ரொம்ப சங்கோஜமா இருக்கு. ப்ளீஸ்...'' என்றதும்,



''இந்த ஒரு தடவை மட்டும் வாங்கிக்கோங்க மாப்பிள்ளை. இனிமேல் உங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்ய மாட்டேன்'' என்றார்.

''இது தான் முதலும் கடைசியும்'' என்று சொன்னவன் அந்தக் கவரை நன்றி சொல்லி வாங்கிக் கொண்டே தனது தந்தையைப் பார்த்து,

''இப்போ சென்னை போறதுக்கான ஃபிளைட் டிக்கெட் எங்கே?'' என்று கேட்டான்.

''அது என் மருமகள் கிட்டே தான்டா இருக்கு'' என்று விஸ்வநாதன் சொன்னதும்,

''இந்தா இதையும் நீயே பத்திரமா வைச்சுக்கோ'' என்று சொல்லி அவள் தந்தை தந்த கவரை அவளிடம் கொடுத்தான்.

## 7

காத்திருந்த வாடகைக் காரில் ஏறிக் கிளம்பினார்கள். கோவை விமான நிலையத்தை அடைந்து முரளி பெட்டிகளைத் தள்ளிக் கொண்டு வர கையில் சிறிய பையுடன் அவன் மனைவி அவனைப் பின் தொடர்ந்தாள்.

உள்ளே நுழையும் பொழுது டிக்கெட் கேட்கவும் அவள் தனது கைப்பையில் இருந்து எடுத்துக் கொடுத்தாள்.

முரளி அவளைப் பார்த்து, 'பரவாயில்லை. இவளுக்கு கைப்பை உபயோகிக்கத் தெரிந்து இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டான்.

அவளது புடவையை பார்த்தவன் மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டான். நல்ல ஆரஞ்சு நிறத்தில் புடவை அணிந்திருந்தாள். அதில் பச்சை நிறத்தில் பெரிய பெரிய பூக்கள் வரையப்பட்டு இருந்தது.

'அவளும் அவ டேஸ்ட்டும்!' என்று மனதுக்குள் வசை பாடிக் கொண்டான்.

அவன் தன்னை ஆராய்ந்ததையும், முகம் சுளித்ததையும் கண்டவள், ''என்னங்க, நான் நாகரீகமா உடை உடுத்தலையோ?'' என்று சந்தேகமாகக் கேட்டாள்.

''நிச்சயமா. உனக்கு டிரஸிங் சென்ஸே இல்லை'' என்று உறுதி நிறைந்த குரலில் சொன்னான்.

அவர்கள் தங்களுடைய பெரிய பெட்டிகளை ஒப்படைத்து விட்டு போர்டிங் பாஸ் வாங்கிவிட்டு காத்திருப்போர் நாற்காலியில் சென்று அமர்ந்தார்கள்.

அப்பொழுது எதிர் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு பெண் ஜீன்ஸ் அணிந்து மேலே டாப்ஸ் ஒன்றை அணிந்து இருந்தாள்.

முரளியின் காதருகில் குனிந்த ஸ்ரீ, ''என்னங்க அங்க எதிர்த்தாப்புல ஒரு பொண்ணு பேன்ட் போட்டு இருக்கு இல்ல... அது மாதிரி உடை போட்டா நாகரீகமா இருக்குமா?'' என்று கேட்டாள்.



மெல்ல நிமிர்ந்து அவள் சுட்டிக் காட்டிய பெண்ணைப் பார்த்தவன், ''ஆமாம்'' என்றான். அவன் அழுத்திச் சொன்ன விதத்தில் சர்வ நிச்சயமாய் என்ற அர்த்தமே மறைந்திருந்தது.

அவர்களுக்கான கேட் திறக்கப்பட்டு விமானத்தில் ஏறி அவர்களது இடம் தேடி அமர்ந்தார்கள். ஜன்னல் புறத்தில் அவளும் அதற்கடுத்து அவனும் அமர்ந்தார்கள்.

அப்பொழுது சற்று முன் இவர்கள் பார்த்த பெண் இவர்களின் முன் வரிசையில் அமர்வதற்காக வந்தாள். தன் கையில் உள்ள சிறிய பெட்டியை தலைக்கு மேல் உள்ள இடத்தில் வைப்பதற்காக அவள் சற்றே எம்பி வைக்க முனைய...

அவள் அணிந்திருந்த ஜீன்ஸ் இறங்கியும், அவளது டாப்ஸ் மேலே ஏறியும் அவளது இடுப்பு பிரதேசத்தை துல்லியமாகக் காட்டியது. முரளி சரேலென்று தன் பார்வையை திருப்பிக் கொண்டான்.

எம்பியதால் தான் அவளது இடுப்பு பிரதேசம் தெரிகிறது என்பதற்கில்லாமல் அவள் சாதாரணமாக நிற்கும் போதும் அவளது இடுப்பு அப்பட்டமாய் தெரியவே செய்தது.

அவன் மனைவி மீண்டும் அவனது காதில் குனிந்து, ''இது தான் உங்க ஊருல நாகரீகமா உடுப்பு போடுறதா?'' என்று கேட்டாள்.

'ஆகா! சூப்பர் ஸ்டார் ரேஞ்சுக்கு பஞ்ச் டயலாக் பேசுறாளே' என்று முரளி வெறுத்துப் போனான்.

''அப்ப நான் சரியாப் பார்க்கலை'' என்று முரளி அசடு வழிய,

''இதைத் தான் எங்க அப்பத்தா க'னான்னா கருப்பட்டி, வ'னான்னா வாயிலே போடுன்னு சொல்லும்'' என்று சொல்லவும்,

'என்ன சொல்ல வருகிறாள்?' என்று அவன் புரியாமல் விழிக்க,

''ஒருத்தன் க'ங்கிற எழுத்தைப் பார்த்த உடனே கருப்பட்டின்னு வாசிச்சானாம். அடுத்த வார்த்தையில உள்ள வ'ங்கிற எழுத்தைப் பார்த்ததும் வாயில போடுன்னு வாசிச்சானாம்.''

''இதை எதுக்கு என்கிட்டே சொல்லுறே?''

''எதையும் சரியாக் கவனிக்கணும் அப்படிங்கிறது தான் நான் சொன்ன பழமொழிக்கு அர்த்தம்'' என்று அவள் சொன்னதும்,

முரளிக்கு பின்னணியில் வடிவேலு அய்யோ அய்யோ என்று தன்னைப் பார்த்து நகைப்பது போலவே இருந்தது.

'வாயைத் திறந்தான்னா அப்படியே அவங்க அப்பத்தா மாதிரியே இருக்காள்' என்று நினைத்துக் கொண்டான்.

விமானம் பறக்க ஆரம்பித்த உடன் மனைவிக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு, ''ஸ்ரீ, பாத்ரூம் போகணும் என்றால் அங்க இருக்கு. போயிட்டு வா'' என்று கூறி அனுப்பி வைத்தான்.



சரி என்று தலையாட்டிவிட்டுச் சென்றவள் வழியில் ஏர் ஹோஸ்டஸிடம் ஏதோ பேசினாள். திரும்பி வந்து இருக்கையில் அமர்ந்தவளிடம்,

''ஏர் ஹோஸ்டஸ்கிட்டே என்ன கேட்டே?'' என்று வினவினான்.

''பாத்ரூம் எங்கே இருக்குன்னு கேட்டேன். அவங்க ரெச்ட் ரூமு...'' என்று அவள் தொடங்கியதுமே,

''அது ரெச்ட் ரூமு இல்ல. ரெஸ்ட் ரூம்'' என்று திருத்தினான்.

''என்ன எழவு ரூமோ... இப்ப பிரச்சனை அது இல்ல. நான் ரெஸ்ட் ரூமுன்னு சொன்னாங்களே அங்க சேர் எல்லாம் இருக்கும்ன்னு நினைச்சுப் போனேன். அங்க ஒண்ணையும் காணலை'' என்றாள்.

கேட்டுக் கொண்டிருந்த முரளிதரன் நொந்து போனான்.

''அது பாத்ரூம். அங்க எதுக்கு சேர் போடணும்?'' என்று அழுதுவிடும் குரலில் கேட்டான்.

''நீங்க மதுரை ரெயில்வே ஸ்டேசன் போனதில்லையா? அங்கெல்லாம் ரெச்ட்... ரெஸ்ட் ரூமிலே சேர் போட்டு இருப்பாங்க'' என்று அவள் விளக்கவும்,

'இவளுக்கு 'ஷ்', 'ஸ்' இதெல்லாம் உச்சரிக்க வரவில்லை. ஆனால் சொல்லிக் கொடுத்த உடன் திருத்திக்கிறாள். பரவாயில்லை' என்று நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

தன் பதிலுக்காய் ஆவலாய் தன் முகம் பார்த்து காத்திருப்பவளிடம், ''ஸ்ரீ, நீ மதுரை ரெயில்வே

ஸ்டேஷனில் பார்த்தது ஓய்வெடுக்கும் அறை. அதனால அங்க சேர் இருந்திருக்கும். இது வெறும் பாத் ரூம். வெளிநாட்டிலே பாத் ரூமை ரெஸ்ட் ரூம் என்று தான் சொல்லுவாங்க. அதான்...'' என்று அவன் விளக்கிக் கொண்டு இருக்கும் போதே,

''இது லோக்கல் வண்டி தானே. இங்க என்னத்துக்கு அசலூர்காரன் பாஷை பேசணும்? என்னைப் பார்த்தா வெளிநாட்டுக்காரி மாதிரியா இருக்கு? என்கிட்டே ஏன் அப்படிப் பேசணும்? இது தான் நாகரீகமோ?'' என்று கேட்டவள் ஜன்னல் புறம் திரும்பி மேகக் கூட்டத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

'உன் சேலையைப் பார்த்தாளே பட்டிக்காட்டுப் பைங்கிளின்னு தெரியாதா என்ன?' என்று நினைத்துக் கொண்டவன் அதை வெளியே சொல்லாது விடுத்து,

''என்னது வண்டியா?! ஃப்ளைட்டை பார்த்தா ஏதோ ரெண்டு சக்கர வண்டி போல தெரியுதா உனக்கு?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டான்.

மனதுக்குள் 'அவள் கேட்ட கேள்வியில் தப்பு ஒண்ணும் இல்லையே! இது உள்ளூர் விமானம் தானே. இங்கே நம் நாட்டு பாஷையிலே பேசலாமே! அதுவும் இந்தியர் என்று நன்கு தெரியும் நபரிடம் ஏன் அயல்நாட்டு பாஷை? அது அவர்களை அவமானப் படுத்துவது போல் ஆகாதா?' என்று நினைத்துக் கொண்டான்.

'பரவாயில்லை இவளுக்கு புத்திசாலித்தனம் கொஞ்சமாச்சும் இருக்கு' என்று மனைவியை மெச்சிக் கொண்டான்.



சென்னையில் இறங்கி, தங்களது பெட்டிகளைச் சேகரித்துக் கொண்டு வெளியே வந்து கால் டாக்ஸி பிடித்து அவனது வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

''ரொம்ப நாளா பூட்டி இருந்ததால் வீடு ரொம்ப தூசியா இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே சாவி போட்டுத் திறந்து உள்ளே நுழைந்தவன் குழப்பத்துடன் நின்றுவிட்டான்.

பின்னால் நடந்து வந்தவள் அவன் திடீரென நடக்காமல் நின்று விட்டதால் அவன் முதுகில் முட்டிக் கொண்டு நின்றாள்.

''என்னங்க ஆச்சு?'' என்று அவன் முகம் பார்த்துக் குழம்பிக் கொண்டே கேட்டவளிடம்,

''இது என்... நம் வீடு தானா என்று எனக்கு சந்தேகமா இருக்கு. அதான்...'' என்று இழுக்க,

''எதனால சந்தேகப்படுறீங்க?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''வீடு சுத்தமா இருக்கு. டைனிங் டேபிள், பிரிஜ் எல்லாம் புதுசா குடி வந்திருக்கு...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன் சமையலறை வரவும்,

''இங்க பாரு. எனக்கு தெரிஞ்சு இதிலே ஒரு சாமான் கூட இருக்காது. இப்போ பாரு... கிச்சன் நிறைஞ்சு வழியுது. திருடன் திருடிட்டு தானே போவான். இப்படி கொண்டு வந்து வச்சிட்டுப் போவானா?'' என்றதும்,

அவள் தன் இடுப்பில் கை வைத்து அவனை முறைத்துக் கொண்டு நின்றாள்.

''எங்க அப்பாவையும், அண்ணனையும் பார்த்தால் உங்களுக்கு திருடங்க மாதிரி இருக்கா? நீங்க கல்யாணம் முடிஞ்ச உடனே சென்னைக்கு வரணும் என்று சொல்லிட்டீங்கன்னு போன வாரமே இங்க வந்து இதையெல்லாம் வாங்கிப் போட்டு இருக்காங்க. இந்த வீட்டு சாவி உங்க அப்பாகிட்ட ஒண்ணு இருக்குது இல்ல... அதை வைச்சு தான்'' என்று அவள் விளக்கம் சொல்லவும்,

''ஏன் உன் அப்பா எனக்கு செலவு பண்ணுறதிலேயே குறியா இருக்கார்?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் அதான் காலையிலே சொல்லிட்டாரில்ல... இனிமேல் உங்களுக்கு செலவளிக்கறதா இல்லைன்னு. தீபாவளி, பொங்கல் சீர் கூட கிடையாது. நீங்களா கேட்டாக் கூட நாங்க தர மாட்டோம். அம்புட்டுத் தான்'' என்றவள் மடமடவென்று சமையலறையில் புகுந்து கொண்டாள்.

தனது பெட்டிகளைத் தள்ளிக் கொண்டு படுக்கை அறைக்குள் நுழைந்தவன் அதைத் திறந்து ஆபிஸிற்கு எடுத்துச் செல்ல வேண்டியவைகளை தனது அலுவலகப் பையில் அடுக்க ஆரம்பித்தான்.

முகம், கை, கால் கழுவிவிட்டு அவன் அலுவலகம் செல்லத் தயாராகி வெளியே வரவும், அவள் ஒரு கிண்ணத்தை நீட்டிக் கொண்டு அவன் முன்னே வரவும் சரியாக இருந்தது.

''இது என்னது?''



''கேசரிங்க. முதல் முதலா உங்க வீட்டிலே சமைக்கிறேனா... அதான் கேசரி பண்ணினேன்'' என்று சொல்லிக் கொண்டே நீட்டினாள்.

''இது என் வீடு இல்லை. நம்ம வீடு'' என்று அவளைத் திருத்தியவன்,

''ஓ! கேசரி மணம் நம்ம வீட்டில் இருந்து தான் வந்துச்சா? நான் பக்கத்து வீட்டில் இருந்துன்னு நினைச்சேன்'' என்று சொல்லிக் கொண்டே வாங்கிக் கொண்டவன் டைனிங் டேபிளில் தனது அலுவலக பையை வைத்துவிட்டு ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

ஒரு கரண்டி கேசரியை எடுத்து தன் வாயருகே கொண்டு போகாமல் அவள் வாயருகே கொண்டு போக சந்தோசமாக வாய் திறந்து வாங்கிக் கொண்டாள். அவள் முகத்தில் தெரிந்த மலர்ச்சியை பார்த்துக் கொண்டே கேசரியை சாப்பிட ஆரம்பித்தான்.

சாப்பிட்டு முடித்தவன், ''நான் உனக்கு கேசரியை ஆசையா ஊட்டினேன் என்று நினைக்காதே. கேசரி நல்லா இருக்கா இல்லையான்னு உன்னை வைச்சு... உன் முக மாறுதலை வைச்சு டெஸ்ட் பண்ணலாம் என்று பார்த்தேன். நீ சாப்பிட்டு சந்தோசமா சிரிச்ச உடனே... நான் கூட கேசரி பிரமாதம் போலன்னு நம்பி சாப்பிட்டேன். பட் கேசரி சுமார் தான். நான் உனக்கு ஊட்டினேன் என்று நினைச்சு தான் உன் முகம் சந்தோஷமா இருந்துச்சு போல!'' என்று கண் சிமிட்டிச் சொன்னதும் அவள் முகம் வாடியது.

அவனிடம் இருந்து கிண்ணத்தை வாங்கியவள் ஒன்றும் பேசாமல் அந்த இடம் விட்டு நகரப் போக... அவள் கை பிடித்துத் தடுத்தவன் அவளது கையை விடாமல் போனில் தனது தாய்க்கு அழைப்பு விடுத்தான். அவர் அந்தப் பக்கம் எடுத்துப் பேச ஆரம்பித்ததும் ஸ்பீக்கர் ஃபோனில் போட்டான்.

''அம்மா, நாங்க நல்லபடியா வந்து சேர்ந்துட்டோம்.''

''கரெக்ட் டைம்க்கு போயிட்டீங்களா? ஆபிஸ்க்கு ஒண்ணும் லேட் ஆகிடலையே?'' என்று காமாட்சி விசாரிக்க,

''இன்னும் நேரம் இருக்கும்மா. ஒண்ணும் பிரச்சனை இல்லை. வீட்டிலே முதன் முதலா சமைக்கிறேன் என்று சொல்லி உங்க மருமகள் கேசரி பண்ணி இருக்காள் மா.''

''என்னது கேசரியா? உனக்கு தான் இனிப்பே பிடிக்காதே. தொடவே மாட்டியே! உங்க அப்பா அங்க இருந்தாலாவது 'சம்சாரம் அது மின்சாரம்' பட விசு மாதிரி மருமகளே கேசரி போடும்மான்னு தட்டைத் தூக்கிட்டு அவ பின்னாடியே போயிருப்பார்'' என்று சொல்லி காமாட்சி சிரித்தார்.

''ஆரம்பிச்சுட்டீங்களா உங்க சினிமா டயலாக்கை. சரி நான் போனை வைக்கிறேன். அப்புறமா பேசலாம்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

'இப்ப என்ன சொல்லுறே?' என்பது போல் அவளைப் பார்த்து புருவம் உயர்த்தியவன், ''நீ ஆசையாக் கொடுத்தியேன்னு மட்டும் இல்ல... டேஸ்ட் நல்லா



இருக்க போய் தான் சாப்பிட்டேன். நான் சொல்லுற எல்லாத்தையும் நம்பக் கூடாது. சரியா? அதுக்குள்ளே முகத்தைத் தொங்கப் போட்டுட்டு பிடில் வாசிக்கக் கிளம்பிட்டே'' என்று கேலி செய்து கொண்டே அவளது தலையில் செல்லமாகத் தட்டினான்.

தனது பையை எடுத்துக் கொண்டு அலுவலகம் செல்லக் கிளம்பியவன், ''என் செல்போன் நம்பர் உன்கிட்ட இருக்கா? முதல்ல உன்கிட்ட செல்போன் இருக்கா?'' என்று கேட்டான்.

''என்கிட்ட செல்லும் இருக்கு உங்க நம்பரும் இருக்கு. உங்க நம்பரை மாமா கொடுத்தார்'' என்றதும்,

''ஏதாச்சும் தேவைன்னா கூப்பிடு. நான் மதியம் சாப்பிட வர மாட்டேன். சாயங்காலமும் எத்தனை மணிக்கு வருவேன் என்று தெரியலை. கதவிலே இந்தக் கண்ணாடி வழியா பாரு. வெளியே யார் நிற்கிறாங் கன்னு தெரியும். என் முகத்தை பார்த்திட்டு அதுக்கு அப்புறம் கதவைத் திற! இல்லைன்னா கதவைத் திறக்காதே'' என்று பாடம் எடுத்தவன்,

அவள் சரி என்று தலை ஆட்டியதும் அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவனாக, ''உனக்கு சாப்பாடு? நீ எங்கே போய் சாப்பிடுவ? வாங்கிக் கொடுத்திட்டுப் போகும் அளவுக்கு எனக்கு நேரம் இல்லையே!'' என்றான்.

''அரிசி, பருப்பு, ரவை, கோதுமை, இவ்வளவு ஏன் உருளைக் கிழங்கு கூட வீட்டிலே இருக்குங்க. என் சாப்பாட்டை நான் பார்த்துப்பேன்'' என்றதும்,

"அப்ப சரி. ஏதாச்சும் செஞ்சு சாப்பிடு" என்றான்.

"உங்களோட இன்னொரு சாவி இப்ப என்கிட்ட தான் இருக்கு. அதனால நீங்க உங்க சாவியை எடுத்திட்டுப் போங்க" என்று சொன்னாள்.

"வெளியே போகப் போறியா என்ன? இது ஒண்ணும் வத்தலகுண்டு இல்லம்மா. நீ பாட்டுக்குக் கிளம்பிப் போய் வழி தெரியாமல் முழிக்காதே" என்று எச்சரித்தான்.

அவள் தலையாட்டாமல் நின்ற தினுசே 'நீ சொல்வதை நான் கேட்கப் போவதில்லை' என்பது போல் இருந்தது.

அதற்கு மேல் நின்று அவளுக்கு பாடம் எடுக்க நேரம் இல்லாத காரணத்தால் அவன் கிளம்பினான்.

"என்னங்க பைக் சாவி எடுக்காமல் போறீங்க?" என்றதும்,

"இல்லம்மா ரெண்டு மாசமா பைக் மூலையிலே கிட..." என்று ஆரம்பித்தவன்,

"அதையும் உங்க அண்ணன் சரி பண்ணி வைச்சாரா?" என்று சந்தேகமாக அவன் இழுக்க,

முகம் கொள்ளா பெருமையுடன் அவள் ஆம் என்று தலை அசைத்துவிட்டு அவனது வண்டி சாவியை கொண்டு வந்து கொடுத்தாள்.

"மாமனாரும், மச்சானும் அலாவுதீனின் அற்புத விளக்கில் இருந்து வெளியேறும் பூதமா? இது தெரியாமல் போச்சே!" என்று அவன் சொன்னதும்,



அவள் முறைக்க... அவன் நில்லாமல் படி இறங்கி ஓடினான்.

# 8

அவன் அலுவலகம் சென்றதும் இரு கிண்ணங்களில் கேசரியை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டு கதவைத் தட்டி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கேசரியைக் கொடுத்துவிட்டு அவர்களிடம் அருகில் இருக்கும் கடைகளைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டாள்.

அலுவலகம் சென்றவனை அவனது நண்பர்கள் குழு உற்சாகமாக வரவேற்றது. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பொறுமையாய் பதில் அளித்தான். அவர்கள் அனைவரும் கலைய... ரவியும், தாமஸும் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

அவர்கள் இருவருமே முரளிக்கு நல்ல நண்பர்கள். வாடா போடா என்று தான் மூவருமே பேசிக் கொள்வார்கள்.

"மச்சான், எனக்கு ஏதாச்சும் வாங்கிட்டு வந்தியா?" என்று தாமஸ் கேட்கவும்,

அவர்கள் டீமைச் சேர்ந்த அனு அங்கே வந்து, "முரளி ஃபாரின் சாக்லெட் வாங்கிட்டு வந்தீங்களா?" என்று கேட்டாள்.

''ஒண்ணுமே வாங்கலை. நானே டென்ஷனா ஓடி வந்தேன். சினிமாவிலே சேஸிங் சீன் மாதிரி இதைப் பிடிச்சு அதைப் பிடிச்சுன்னு கரெக்ட் டைம்க்கு ஃபிளைட்டை பிடிக்கும் முன்னாடி... அப்பா.. நான் பட்ட பாடு இருக்கே!'' என்று முரளி சொன்னதும்,

''உன்னை யாருடா அவ்வளவு அவசரமா ஓடி வரச் சொன்னது? என்னமோ இவன் கல்யாண மாப்பிள்ளை போலவும், இவன் சரியான நேரத்துக்கு வரலைன்னால் கல்யாணம் நின்னுடப் போற மாதிரியும்... எதுக்கு காலிலே வெந்நீரைக் கொட்டின மாதிரி கிளம்பினே?'' என்று தாமஸ் சலித்துக் கொள்ள,

'கல்யாணம் நின்னு தான்டா போயிருக்கும்' என்று மனதில் நினைத்ததை வெளியே சொல்ல முடியாத முரளி, ''டிக்கெட் எடுத்தாச்சேன்னு கிளம்பி வந்துட் டேன்'' என்று வாய்க்கு வந்த பொய்யைச் சொல்லி சமாளித்தான்.

அன்று இரவு அவன் எட்டரை மணிக்கு மேல் தான் வீட்டிற்கு வந்தான். மிகவும் சோர்வாக இருந்தான். வீட்டின் உள்ளே நுழையவும் நல்ல மணம் வீசியது.

''என்ன சமைச்ச ஸ்ரீ? சூப்பரா ஸ்மெல் வருது'' என்று மோப்பம் பிடித்துக் கொண்டே கேட்க,

''மதியம் கோழி குருமா செஞ்சு சாப்பிட்டேங்க. நீங்க தான் வரலை. அதான் நானே கஷ்டப்பட்டு சாப்பிட் டேன்.''

'அடிப்பாவி எனக்கு கொஞ்சம் வைச்சிருக்கணும் என்று இல்லாமல் எல்லாத்தையும் சாப்பிட்டுட்டு



கஷ்டப்பட்டு சாப்பிட்டேன் என்று வெறுப்பேத்த வேற செய்யுறே!' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே தனது அறைக்குள் சென்று உடை மாற்றி வந்தான்.

மனைவியிடம் வந்து, ''நைட்டுக்கு எதாச்சும் சமைச் சியா? இல்ல கடையிலே போய் வாங்கி வரணுமா?'' என்று கேட்டான்.

''இல்லைங்க. ஒண்ணும் சமைக்கலை. இட்லி மாவு இல்லையே! அதனால் வெளியே போய் வாங்கிட்டு தான் வரணும்.''

''என்னது வெளியே போய் வாங்கணுமா? அதை வந்த உடனே சொல்ல மாட்டியா? நான் டிரஸ் மாத்தின துக்கு அப்புறமா வந்து சொல்லுறே!'' என்று எரிச்சல் பட்டான்.

''பார்த்து மெதுவாங்க... இப்படி தான் உங்க ஆபிசிலேயும் பொரிவீங்களா? உங்க கூட வேலை செய்யுறவங்க எல்லாம் ரொம்ப பாவம் பண்ணின வங்களா?'' என்று கேட்டதும், அவளை நன்றாக முறைத் தான்.

''ஜோக்கு சொன்னா சிரிக்கணும். எங்க ஊரில் ஜோக் சொன்னா சிரிப்போம்.''

''எது ஜோக்? என்னிடம் வேலை செய்யுறவங்க பாவப்பட்டவங்கன்னு நீ சொன்னது ஜோக். அதுக்கு நான் சிரிக்க வேற செய்யணுமா?'' என்று அவன் கடுப் பாகக் கேட்க,

''அதை விடுங்க. சாப்பிட வாங்க. நான் சமைக் கலைன்னு சும்மா சொன்னேன். மதியம் சமைச்சு

சாப்பிட்டதா இப்ப வரைக்கும் வாடை வரும்? உங்களுக்கு இது கூட தெரியலையே! என்ன தான் படிச்சீங்களோ? இதிலே உங்க அளவுக்கு என்னை அறிவாளியா மாத்தணும்ன்னு வேற சொல்லி இருக்கீங்க!" என்று சொல்லிக் கொண்டே அவள் சாப்பாட்டு மேஜை அருகே சென்று சமைத்ததை தட்டில் பரிமாற ஆரம்பித்தாள்.

அவன் அமைதியாக வந்து சாப்பிட ஆரம்பித்தான். மெத் மெத்தென்று இருந்த இட்லிகளும், கோழி குருமாவும் மிகவும் ருசியாக இருக்க அவனது எரிச்சல் போன இடம் தெரியவில்லை.

''இட்லி மாவு இல்லைன்னு சொன்னே.''

''காலையில் வந்ததும் ஊறப் போட்டேன். இந்த ஊரிலே அடிக்கிற வெயிலுக்கு மாவு சீக்கிரமே புளிச்சு போச்சு.''

சாப்பாட்டை ருசித்துச் சாப்பிட்டவன், ''ஸ்ரீ, வெரி குட். கீப் இட் அப்'' என்று அவளைப் பாராட்டினான்.

''என்ன சொன்னீங்க? எனக்குப் புரியலை'' என்று அவள் சந்தேகம் கேட்கவும்.

"நீ சூப்பரா சமைச்சிருக்கேன்னு சொன்னேன்" என்று அவன் விளக்கம் அளிக்கவும் அவள் மனதுக்குள் எதையோ உருப்போட ஆரம்பித்தாள்.

''என்ன செய்யுறே? என்ன முணுமுணுக்கிறே? சத்தமா சொல்லு. நானும் கேட்கிறேன்.''



"இல்லைங்க. இப்ப நீங்க சொன்னீங்களே... குட். கீப் இட் அப். அதை மனப்பாடம் பண்ணுறேன். யாராவது நல்லா சமைச்சால் நானும் சொல்லலாம் இல்ல. அதான்...'' என்று விளக்கம் அளித்ததும் அவன் தன் இடது கையால் தன் தலையில் அடித்துக் கொண்டான்.

''அதுக்கு அர்த்தம் அப்படியே எடுத்துக்கக் கூடாதும்மா. ஒரு வாரம் எனக்கு ஆபிஸில் வேலை அதிகமா இருக்கும். அதுக்கு அப்புறமா நான் உனக்கு கிளாஸ் எடுக்கிறேன். இப்போதைக்கு ஆளை விடு'' என்றவன் கை கழுவிவிட்டு வந்து தொலைக்காட்சியை இயக்கி அதில் மூழ்கிப் போனான்.

மறுநாள் காலையில் அவன் எழுந்து பார்த்த பொழுது அவள் சமையலறையில் எதையோ சமைத்துக் கொண்டிருந்தாள்.

காலையில் சாப்பிட்டு முடித்து அவன் அலுவலகம் செல்லத் தயாரான போது அவன் முன்னே அவள் சாப்பாடு பையைக் கொண்டு வந்து நீட்டினாள்.

"ஹேய்! எங்கே இருந்து டப்பர் வேர் டிபன் பாக்ஸ் வாங்கினே?'' என்று அவன் ஆச்சரியமாகக் கேட்க,

"நேத்து பாத்திரக் கடைக்கு போனேன். அந்த ஆள் கிட்டே ஆபிஸ் கொண்டு போறதுக்கு சாப்பாடு டப்பா தாங்கன்னு கேட்டு வாங்கிட்டு வந்தேன். இந்தாங்க'' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டே அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்க கை நீட்டியவன் அடுத்த நொடியே வேண்டாம் என்று மறுத்தான்.

''ஏன் வேண்டாம் என்று சொல்லுறீங்க?'' என்று அவள் வருத்தத்துடன் கேட்க,

''இல்லைம்மா. எனக்கு சாப்பாடு கொண்டு போய் பழக்கமில்லை'' என்று காரணம் சொன்னான்.

''இனிமேல் பழகிக்கோங்க.''

''எனக்கு இதைத் தூக்கிட்டுப் போக ஒரு மாதிரி சங்கடமா இருக்கு. எங்க ஆபிஸ் கேன்டீனில் சாப்பாடு நல்லா இருக்கும். அப்பறம் எதுக்கு இதை வெட்டியா சுமக்கணும்?!'' என்று சொல்லிவிட்டான்.

அவள் மறுத்து ஒன்றும் சொல்லாத போதும் அவளது முகம் வாடி இருந்தது.

அவளது சமையலை நேற்று இரவும், இன்று காலையும் சாப்பிட்டவனுக்கு அவளது நளபாகம் பிடித்துத் தான் இருந்தது. ஆனால் அவன் சாப்பாட்டை எடுத்துச் செல்லாததற்கு முக்கிய காரணம் அவனது திருமண விஷயம் ஆபிஸில் உள்ள யாருக்கும் தெரியாது என்பதால்தான்.

அவனுடன் பள்ளியில் படித்த நண்பர்களையெல்லாம் விஸ்வநாதனே பத்திரிக்கை வைத்து அழைத்திருந்தார். ஆனால் அலுவலகத்தில் உள்ளவர்களை அவன் தான் அழைத்திருக்க வேண்டும்.

மணமகளின் ஃபோட்டோவைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுக்கு அவனது அலுவலகத்தாரை திருமணத்திற்கு அழைக்க வேண்டும் என்ற ஆசையே அற்றுப் போயிற்று.



இப்பொழுது திடீரென்று அலுவலகத்திற்கு சாப்பாடு கேரியரைத் தூக்கிக் கொண்டு போனால்... என்னவென்று கேட்பவர்களுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?

உண்மைக் காரணத்தை மனைவியிடம் சொன்னால் அவள் வருந்தக் கூடும் என்று நினைத்து அவன் உண்மையை அவளிடம் இருந்து மறைத்தான்.

அன்று இரவு அலுவலகத்தில் இருந்து வந்தவன் தன் மனைவியை எப்படி மாற்றுவது? எதில் இருந்து தொடங்குவது? என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

முதலில் உடையில் இருந்து ஆரம்பிப்போம் என்று முடிவெடுத்தான்.

''ஸ்ரீ, நாம நாளைக்கு கடைக்கு போய் உனக்கு டிரஸ் வாங்குவோமா?''

''எனக்கா? எனக்கு எதுக்குங்க? எனக்கு நிறைய இருக்கு. உங்களுக்கு வேணா வாங்குவோம். நீங்க தான் சாயம் போன துணியா போட்டுக்கிட்டு இருக்கீங்க.''

''சாயம் போனதா? எதைச் சொல்லுறே?'' என்று கேட்டதும் அவனது ஜீன்ஸ் பேண்ட்டை அவள் கொண்டு வந்து நீட்ட,

''இது சாயமெல்லாம் போகலை. இது தான் பாஷன்'' என்று நொந்து போன குரலில் சொல்ல,

''அப்ப சாயம் போட வேண்டாமா?'' என்று அவள் சந்தேகமாய் கேட்க,

''என்னது சாயம் போடப் போறியா?'' என்று அதிர்ந்தான்.

'அதை மட்டும் நீ போட்டுகிட்டு போனால்... அகில உலகத்திலும் ஜீன்ஸ் பேன்ட்டுக்கு சாயம் போட்டு அணிந்த ஒரே ஆள் நீ தான் என்று அவார்டு கொடுத்தாலும் கொடுப்பாங்கடா முரளி' என்று உள்ளிருந்து ஒரு குரல் கேலி பண்ணிச் சிரித்தது.

''எங்க ஊரிலே சேலைக்கு சாயம் போட்டுத் தரு வாங்க. நான் நேத்து போனிலே எங்க அம்மாகிட்டே பேசும் போது உங்க உடுப்புக்கும் சாயம் போட்டுத் தருவாங்களான்னு கேட்கச் சொல்லி இருக்கேன்.''

''என்ன கலரிலே சாயம் போடச் சொல்லிக் கேட்டே?''

''பச்சை, ஆரஞ்சு...'' என்று அவள் அலட்டாமல் சொல்ல,

''என்னதுது?'' என்று அவன் அதிர,

''நீங்க எம்.ஜி.ஆர் படமெல்லாம் பார்த்ததில்லையா? அவரெல்லாம் சும்மா ஸ்டைலா அப்படித்தான் வருவாரு.''

'எம்.ஜி.ஆர் போட்டால் எல்லோரும் விசில் அடிச்சு பாராப்பாங்கம்மா. நான் போட்டா அவங்க வீட்டு நாயை விட்டு என்னைத் தெருவிலே ஓட ஓட விரட்டுவாங்க. நாய் இல்லாதவன் கூட என்னை ஓட ஓட விரட்டணும்கிறதுக்காகவே நாய் வளர்ப்பான். இதெல்லாம் எனக்கு தேவையா சொல்லு?'' என்று பரிதாபக் குரலில் கேட்டவன்,



சில நிமிடங்கள் அமைதியில் கழித்தான். நாம சொல்ல வந்ததைச் சொல்வோம் என நினைத்தவன்,

''ஸ்ரீ, நீ சுரிதார் போட்டு இருக்கியா? அதை உனக்கு வாங்குவோமா?'' என்றதும் அவள் குழப்ப முகத்துடன் இருக்கவும்,

''அதான்ம்மா இந்தக் குழாய் மாட்டிக்கிட்டு மேலே ஒண்ணு...'' என்று தொடங்கியவன் எப்படி விளக்குவது என்று புரியாமல் முழிக்க,

''குழாயா? அப்படின்னா?''

''பேன்ட்டை வேற எப்படி சொல்லுறதுன்னு தெரியலையே?'' என்று அவன் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே விழிக்க,

''பேன்ட்டையா சொல்லுறீங்க? அப்படித் தமிழ்ல சொல்லிட்டுப் போக வேண்டியது தானே?'' என்று போட்டாளே ஒரு போடு.

'அடக்கடவுளே!' என்று தலையில் அடித்துக் கொண்டவன், 'பேன்ட் தமிழ் வார்த்தையா? உனக்கு வேணும்டா முரளி. என்னமோ தமிழறிஞர் மாதிரி மொழி பெயர்ப்பில் இறங்கினே தானே?' என்று மனம் கேலி செய்தது.

''ஸ்கூல் பிள்ளைங்க போடுற உடுப்பைச் சொல்லு றீங்களா?''

''அட ஸ்கூல் யூனிபார்ம் என்று சிம்பிளா சொல்லி இருக்கலாமோ? உங்க ஊரிலே கூட சுரிதாரா போடு றாங்க? பரவாயில்லையே'' என்று பாராட்டினான்.

''ஏங்க அது மாதிரி உடுப்பு போட்டா நான் நாகரீகமா மாறிடுவேனா?'' என்றதும்,

அவளை சுரிதாரில் கற்பனை செய்து பார்க்க முயன் றான். தான் வாங்கிக் கொடுக்கப் போகும் நாகரீகமான சுரிதாரை அணிந்து என்று கற்பனை செய்து பார்க்கும் போது நன்றாகத் தான் காட்சி அளித்தாள்.

கூடவே அவளுடைய அலங்காரத்தில் அவளைக் கற்பனை செய்து பார்க்க... வழிச்சு தலை சீவி, கலர் பூவைச் சுருட்டி வைச்சு...

''அம்மாடியோவ்!'' என்று வாய்விட்டுப் புலம்பி யவன்,

'முதலில் இவளை பியூட்டி பார்லருக்கு அழைத்துச் சென்று அலங்கரிப்பது எப்படின்னு கத்துக் கொடுக்கச் சொல்லணும். லிப்ஸ்டிக், ரோஸ் பவுடர் போட வேண் டாம். சாதாரணமாக பண்ணிக்க கூடிய அலங்காரத்தை கத்து கொடுக்கச் சொல்வோம்' என்று முடிவு கட்டி னான்.

ஆனால் அடுத்து வந்த இரு தினங்களும் வேலைப் பளு காரணமாக அவன் தாமதமாகத் தான் வீடு திரும்பினான்.

நான்கு நாட்கள் பரபரப்பாக கழிந்தது.

வெள்ளிக் கிழமை காலை அவர்கள் மூணாறு செல் வதற்காக கொச்சின் செல்ல விமானத்தில் கிளம்பி னார்கள்.

''உங்க அப்பாக்கு காய்கறி வியாபாரத்திலே நல்ல லாபமோ?'' என்று கேட்டான்.



''சுமாரா வரும். ஏன் கேட்கிறீங்க?''

''நீயும் உன் குடும்பத்து ஆளுங்களும் எங்க போனாலும் ஃபிளைட்டிலே தான் போவீங்களோ?''

''ஏரோ-பிளைனையா கேட்கிறீங்க?''

''ஆமா'' என்று சொல்லித் தலையாட்டி ஆமோதித் ததும்,

''நான் அன்னைக்கு உங்க கூட வந்தேன் இல்ல... அப்பத்தான் முதல்ல ஏரோ-பிளைனை பார்த்தேன். மீதி உள்ள எங்க வீட்டு ஆளுங்க யாரும் பார்த்திருக்க மாட்டாங்க.''

''அப்புறம் எதுக்கு உங்க அப்பா நமக்கு மட்டும் ஃபிளைட்டிலே டிக்கெட்டை எடுத்திருக்கார்.''

''ஓ! அதுக்காக கேட்கிறீங்களா? கல்யாணத்தப்போ நேரம் இல்லைன்னு அதிலே எடுத்தாங்க. இப்போ கொச்சிக்கு ஏன் எடுத்தாங்கன்னா... ரயில்ல டிக்கெட் கிடைக்கலையாம். அதான்...'' என்று விளக்கம் சொன் னதும்,

''இப்படி வீணா செலவு பண்ண வேண்டாம் என்று உன் அப்பாகிட்டே சொல்லிடு'' என்று முரளி சொன் னதும் அவள் தலையாட்டிச் சம்மதித்தாள்.

கொச்சினில் இருந்து வாடகைக் காரில் மூணாறு மலை மேல் ஏற ஆரம்பித்தார்கள். மலை ஏற்றம் அவர் களுக்கு சோர்வைக் கொடுத்த போதும் அங்கு சென்று சேர்ந்தவுடன் அங்குள்ள குளுமையும், பசுமையும் அவர்களுக்கு புத்துணர்வை அளித்தது.

அறைக்குச் சென்று முகம் கழுவி, மெல்லியதாய் அலங்கரித்துக் கொண்டு புத்துணர்வோடு வெளியே சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

அங்கே ஒரு குடும்பத்தை சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தவள் தன் கணவனிடம் திரும்பி, ''ஏங்க அவங்க நாகரிகமா இருக்காங்களா?'' என்று கேட்டாள்.

அவன் அவர்களைத் திரும்பிப் பார்க்க அங்கே ஒரு இளம் வயது கணவன் மனைவியும், ஒரு வயதான ஜோடியும் இருந்தார்கள்.

மனைவி தன்னை பார்த்து அப்படிக் கேட்டவுடன் முரளிதரன் அந்த பெண்ணின் உடையைத் தான் முதலில் நோட்டம் விட்டான். அந்தப் பெண் சுரிதார் அணிந்திருந்தாள்.

ஹப்பாடா என்று அவன் நிம்மதியாக உணர்ந்த போதும், ''ஆமாம்'' என்று ஒருவித பயத்துடனே பதி லளித்தான்.

'அன்னைக்கு இதே கேள்வியைக் கேட்டுவிட்டு தான் சூப்பர் ஸ்டார் மாதிரி பஞ்ச் டயலாக் சொன்னாள். இன் னைக்கு என்ன வரக் காத்திருக்கு என்று தெரியலையே!' என்று அவன் பயத்துடன் பார்த்திருக்க...

அவள் ஒன்றும் சொல்லாததால் ஆசுவாசப் பெரு மூச்சு விட்டுக் கொண்டான். பாவம். அவனுக்குத் தெரிய வில்லை, அவனது மனைவி என்னும் பெண் புலி பாயக் காத்திருக்கிறது என்று.



அவர்கள் அறைக்குத் திரும்பியவுடன் அவள் தனது கைப்பேசியை எடுத்து நோண்ட ஆரம்பித்தாள்.

அவன் குளியலறைக்குள் சென்று முகம் கழுவிவிட்டு வெளியே வந்தவன் தண்ணீர் கூஜாவில் இருந்து தண்ணீரை டம்ளரில் சாய்த்துக் குடிக்க ஆரம்பித்தான்.

அவள் யாரிடமோ 'ம்ம்ம், சரி' என்று போனில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

திடீரென அவனைப் பார்த்து, ''டேய் முரளி! உங்க அம்மா உன்கிட்ட பேசணுமாம்'' என்றாள்.

அவனுக்கு குடித்துக் கொண்டிருந்த தண்ணீர் புரை ஏறியது.

'என்னது டேய் முரளியா? அதுவும் எங்க அம்மா அந்தப் பக்கம் கேட்டுக் கொண்டிருக்கும் போதா?' என்று விழித்தான்.

'ஐயோ! என்ன செய்யப் போகிறேன்? எப்படிச் சமாளிக்கப் போகிறேன்?!' என்று பயந்து போனான்.

அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டே அடுத்த வார்த்தை பேசாதே என்பது போல் வாயில் விரல் வைத்து காண்பித்தவாறே அவளிடம் இருந்து கைப்பேசியை வாங்கிக் காதில் வைத்தான்.

அது செயல் இழந்து போய் இருந்ததால், அவன் தனது இழந்த சக்தியை மீட்டெடுத்தான்.

இவள் 'டேய் முரளி!' என்று என்னைக் கூப்பிட்டதை அம்மா கேட்ட பிறகு அழைப்புத் துண்டிக்கப்பட்டதா? இல்லை... என்று நினைத்துக் கொண்டே அந்தக் கைப்பேசியை அவன் ஆராய்ந்து பார்த்தான்.

அவள் தான் அவளது தந்தையை அழைத்துப் பேசி இருந்தாள். அவன் தாயிடம் இருந்து எந்த அழைப்பும் வரவும் இல்லை. தாயின் கைப்பேசி எண்ணிற்கு எந்த அழைப்பும் போகவும் இல்லை என்று ஆராய்ந்து அறிந்தவன்,

அவள் முன் சென்று நின்று முறைத்தவாறே, ''எதுக்கு இந்த விளையாட்டு?'' என்று கேட்டான்.

அவனைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே, ''நீங்க தானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பார்க்கிலே பார்த்த பொண்ணு நாகரீகமானவளா இருக்காள் என்று சொன்னீங்க. அவள் அவ புருசனை அப்படித் தான் கூப்பிட்டாள்'' என்று விளக்கம் சொன்னாள்.

''அதுக்கு எங்க அம்மா முன்னாடி கூப்பிடுவியா?''

''அந்த பொண்ணு அந்தப் பெரியவங்க முன்னாடி தான் கூப்பிட்டாள். அது அவங்க அம்மா, அப்பாவோ இல்லை மாமனார் மாமியாரோ. அது எனக்கு தெரியாது'' என்று அவள் எதிர்வாதம் செய்ய,

''அம்மா தாயே! பரதேவதை. நான் தெரியாமல் சொல்லிட்டேன். என் வார்த்தையை நானே வாபஸ் வாங்கிக்குறேன்'' என்று அவன் கை எடுத்துக் கும்பிடாத குறையாகச் சொன்னதைக் காதில் வாங்காதவளாய்,

''அப்ப உங்களுக்கு உங்க பேர் சொல்லிக் கூப் பிடுறதிலே பிரச்சனை இல்லையா? உங்க அம்மா முன்னாடி தான் கூப்பிடக் கூடாதா?'' என்று தனது அதி முக்கிய சந்தேகத்தைக் கேட்டாள்.



அவள் அப்படிக் கேட்டதும் அன்றொரு நாள் தன் மனைவி தன்னை எப்படிக் கூப்பிடுவாள் என்று கற்பனை பண்ணியது முரளிதரனுக்கு இப்போது நினைவிற்கு வந்தது.

அதை அவளிடம் பகிரும் நோக்கத்துடன், ''அடிப் பாவி! நீ என்னை எப்படிக் கூப்பிடப் போறே... மாமா என்றா? மச்சான் என்றா? அயித்தான் என்றா? அப் படின்னு நான் ஊரிலே உள்ள உறவு முறைப் பேரை யெல்லாம் யோசிச்சுப் பார்த்துக்கிட்டு இருந்தேன். நீ என்னடான்னா என்னை முரளின்னா கூப்பிடுறே! அதுவும் டேய் சேர்த்து'' என்று அவளைப் போலியாக மிரட்டினான்.

அவனது மிரட்டலில் கோபம் இல்லை என்பதை உணர்ந்தவள் குறும்புடன், ''பின்னே அதானே உங்க பேரு. கூப்பிடத் தானே பேர் வைக்கிறாங்க'' என்று கண்ணடித்துச் சொன்னதும்,

''அடிடா அவளை!'' என்று சொல்லிக் கொண்டு அவளை செல்லமாக அடிக்கக் கை ஓங்க... அவள் அவனிடமிருந்து தப்பி ஓடினாள்.

அவனும் அவள் பின்னே ஓட... அவனது கையில் அவளது பின்னல் அகப்பட்டது. அவன் அதைப் பிடித்து இழுக்கவும், அவள் தன் பின்னலைப் பிடித்துக் கொண்டே நின்று விட்டாள்.

அவனைத் திரும்பிப் பார்க்க, ''இந்த வாய் தானே என் பேரைச் சொன்னது'' என்று சொல்லிக் கொண்டே அவளது வாயை அடிக்க வருவது போல் கையை ஓங்கிக்

கொண்டு வந்தவன் அவளது செவ்விதழ்களைப் பார்த்ததும் அடிக்க ஓங்கிய கையால் அவளது உதடுகளை வருட ஆரம்பித்தான்.

அவளது உடலில் மின்சாரம் பாய்ந்தது. கணவனின் செயலால் கண்களை மூடிக் கொண்டு கிறங்கிப் போய் நின்றாள்.

அவளது கிறங்கிய தோற்றத்தைப் பார்த்து முறுவலித்தவன் அவளது உதடுகளில் மென்மையாக ஒரு முத்தத்தைப் பதித்தான்.

அவளை அவன் இறுக்கி அணைத்தான். அதில் கட்டுண்டவளாக அவளும் சில நொடிகள் அமைதியாக இருந்தாள்.

அவன், ''ஸ்ரீ...'' என்று தாபத்துடன் இழுக்கவும்,

தன்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனிடமிருந்து விலகியவள், ''எனக்கு நாகரீகம் கத்துத் தரேன் என்று சொன்னீங்க தானே!'' என்று நினைவூட்டினாள்.

சட்டென்று அவனது உணர்ச்சிகள் வடிந்தன. கண்களையும், கைகளையும் இறுக மூடிக் கொண்டான்.

'நானே மறந்தாலும் இவள் அதைப் பிடிச்சுத் தொங்குறாள். நாங்க ரெண்டு பேரும் கணவனும் மனைவியும் தானே? இப்ப எதுக்கு என்னிடமிருந்து விலகினாள்?' என்று மனதிற்குள் திட்டினான்.

மறுக்கப்பட்ட ஆத்திரத்தில் இருந்தவன் அங்கேயே இருந்தால் ஏதாவது பேசிவிடுவோம் என்று பயந்தான்.



அது இருக்கும் சிக்கலை மேலும் பெரியதாக்கிவிடும் என நினைத்தவன்,

''நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வரேன்'' என்று கோபமாய் கூறி விட்டு வெளியேறிச் சென்று விட்டான்.

செல்லும் அவனையே ஏக்கத்துடனும், கவலையுடனும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'தாலி கட்டிய கடமைக்காக இவர் என்னுடன் குடும்பம் நடத்தினால் அது ஒரு வகை. அது எனக்கு சந்தோசம் தரலைன்னாலும் பெரிய அளவிலே துக்கத்தைத் தராது. ஏனென்றால் பாதி திருமணங்களில் அப்படித்தான் நடக்கிறது.

என் மீதுள்ள அன்பால், பாசத்தால் காதலால் குடும்பம் நடத்தினால் அது இன்னொரு வகை. அது எனக்கு சந்தோஷத்தைத் தரும். அதைத் தான் ஒவ்வொரு பெண்ணும் விரும்புவாள்.

ஆனால் நொடியில் ஏற்பட்ட சலனத்தினால் என் வாழ்க்கை தொடங்கக் கூடாது. அதற்கு பின்பு அதை நினைத்து வருந்தும் நிலை கூட ஏற்படலாம். அதை விடப் பெரிய அவமானம் ஒரு பெண்ணிற்கு இருக்க முடியாது' என்று எண்ணிக் கொண்டாள்.

வெளியே சென்றவன் தனக்குள் யோசனையில் மூழ்கினான்.

'இப்ப எதுக்கு தேவையில்லாமல் நாம கோபப்படுறோம்? ஏமாற்றம் நமக்கு மட்டுமா? அவளுக்கும்

தானே? அவள் மீது என்ன தவறு இருக்கிறது?' என்று அவனது நியாய புத்தி விழித்துக் கொண்டு கேள்வி கேட்டதில் அவனது கோபம் மட்டுப்பட்டது.

திரும்பி வந்தவனிடம் அவள் சகஜமாக பேச அவனும் எதையும் காட்டிக் கொள்ளாமல் பேசினான்.

அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் முதலில் அவள் சென்று படுத்துக் கொண்டாள். சிறிது நேரத்திற்கு பின் அவனும் சென்று படுத்துக் கொண்டான்.

அவள் அவனுக்கு முதுகு காட்டி தனது வலது கையை தலைக்கு அண்டைக் கொடுத்து தூங்கிக் கொண்டு இருந்தாள்.

அவன் தனது இடது கையை அவள் இடுப்பின் மீது போட்டான். அவள் மேனி கூசிச் சிலிர்த்ததை அவனால் உணர முடிந்தது. அதில் இருந்தே அவள் விழித்திருப்பது அவனுக்கு புரிந்தது.

கையைத் தள்ளிவிடுவாளோ என்று அவன் காத் திருக்க... அவள் ஒன்றும் செய்யாமல் அமைதி காத் தாள்.

அது சற்று முன் அவள் தன்னிடமிருந்து விலகிய போது உண்டான ஆத்திரத்தை முற்றிலுமாக குறைத்தது. அவளுமே அதை நினைத்துத் தான் பேசாமல் இருந்தாள்.

முரளி நிம்மதியாக உணர்ந்தான். அவள் பாதுகாப்பாக உணர்ந்தாள். இருவருமே விரைவில் தூங்க ஆரம்பித் தனர்.



மறுநாள் குளித்து சாப்பிட்டு வெளியே கிளம்பி னார்கள்.

மூணாறில் மட்டும் காணப்படும் வரஆடு என்று சொல்லப்படும் ஆட்டினை விலங்கியல் பூங்காவிற்கு சென்று பார்த்து வந்தார்கள். படகு சவாரியையும் முடித்துக் கொண்டு வந்தார்கள்.

மாலையில் அருகே உள்ள பூங்கா வரை சும்மா நடந்துவிட்டு வரலாம் என்று கிளம்பினார்கள்.

அப்படி நடக்கும் போது பாதையில் கவனம் இல் லாமல் சாலையில் இருந்த கல் மீது மோத இருந்த மனைவியை வேகமாக இழுத்துப் பிடித்த அவள் தடுக்கி விழாதவாறு பார்த்துக் கொண்டான்.

''பாதையில் கவனம் இல்லாம இவ்வளவு தீவிரமா எதை யோசிக்கிறே?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லை. அதை விடுங்க. நீங்க எதுக்கு அவ்வளவு அவசரமா என்னை.. அதாவது பிடிக்காத பொண்டாட்டியை அடிபடாமல் இழுத்துவிட்டீங்க?'' என்று கேட்டாள்.

அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அவன் அமைதியாக நடந்து வரவும்,

''என்ன பதிலையே காணோம்?'' என்றாள்.

''அதான் நீயே சொல்லிட்டியே... பொண்டாட் டின்னு...''

''பிடிக்காத பொண்டாட்டின்னு ஒரு வார்த்தையை சேர்த்துத் தான் சொன்னேன்.''

''நீயா எப்படி அப்படிச் சொல்லலாம்?''

''நீங்க அன்னைக்கு அப்படித்தானே சொன்னீங்க.''

''நான் ஒண்ணும் உன்னைப் பிடிக்கலைன்னு சொல்லலையே.''

''பிடிச்சிருக்குன்னும் சொல்லலை தானே!'' என்று அவள் எதிர் கேள்வி கேட்டாள்.

அவன் அதற்கு பதில் சொல்லவில்லை. அவளை இழுக்கும் பொழுது பற்றிய அவளது உள்ளங்கையை விடவுமில்லை. கையைப் பிடித்தவாறே நடந்து கொண்டிருந்தவன் அவளது கையை அழுத்திக் கொடுக்க, அவள் அதற்கு மேல் அவனிடம் இருந்து எந்தப் பதிலையும் எதிர்பார்க்கவில்லை.

அந்தப் பூங்காவில் இருந்த கல் பெஞ்சில் அமர்ந்ததும், ''நான் உங்களை ஒண்ணு கேட்கட்டுமா?'' என்று கேட்டாள்.

'என்ன வில்லங்கம் வரக் காத்திருக்கோ?' என்று நினைத்துக் கொண்டே, ''கேளு'' என்றான்.

''நீங்க என்னை நாகரிகமா மாறணும் என்று சொன்னீங்க. அன்னைக்கு அந்த ஏரோ பிளைனிலும், நேத்து பூங்காவிலும் பார்த்த பொண்ணுங்களை முதலில் நாகரீகமானவங்கன்னு சொல்லிட்டு அப்புறம் இல்லைன்னு சொல்லிட்டீங்க. அப்படின்னா நான் எப்படித் தான் இருக்கணும் என்று நீங்க எதிர்பார்க்கிறீங்க?''

'நீ நீயா இருந்தால் போதும்!' என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது. அவன் எண்ணம் போகும்



போக்கு அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்படி நினைப்பது நான் தானா? என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அதை அப்படியே அவளிடம் சொன்னால்... அவள் நேற்று என்னை விலக்கியதால் தான், நான் அப்படி சொல்வதாக நினைத்துக் கொள்வாளோ?' என்று நினைத்தவன் அவள் கேட்ட கேள்விக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

''நான் உன்னை மார்டனா இருக்கணும் என்று தான் ஆசைப்படுறேனே ஒழிய அல்ட்ரா மார்டனா இல்லை. அதாவது அம்மாக்கள் காலம் மாதிரி புடவை மட்டும் அணியாமல் கொஞ்சம் மார்டனா டிரஸ் பண்ணனும் என்று நினைக்கிறேன். அன்னைக்கு ஃபிளைட்டிலே நீ காட்டின பொண்ணு... அல்ட்ரா மார்டன். சினிமா நடிகைங்க மாதிரி டிரஸ் பண்ணி இருந்தாள். அது மாதிரி நீ டிரஸ் பண்ண வேண்டாம்.

அப்புறம் அந்த பேர் சொல்லிக் கூப்பிடுவது... அந்தக் காலத்திலே புருஷன் பேரைச் சொல்ல வெட்கப் பட்டுகிட்டு நாணிக் கோணி நிற்பாங்க இல்ல. அது மாதிரி இருக்க வேண்டாம்.

தேவையான இடத்திலே என் பேரைச் சொல்லத் தயங்கக் கூடாது. நாம ரெண்டு பேர் மட்டும் இருக்கும் போது நீ என் பேர் சொல்லிக் கூப்பிடலாம். அது மார்டன். ஆனால் என் அம்மா அப்பா முன்னாடி என்னை டேய் முரளின்னு கூப்பிட்டால் அது அல்ட்ரா மாடர்ன்'' என்று விளக்கினான்.

புரிந்ததா என்பது போல் அவளைப் பார்க்க... அவள் தலையை ஆட்டினாள்.

'என்ன புரிஞ்சதோ? என்னத்தைப் பண்ணப் போறாளோ?' என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அவர்கள் ஞாயிறு இரவு வீடு வந்து சேர்ந்தார்கள்.

## 9

மறுநாள் வழக்கம் போல் முரளி ஏழு மணி வாக்கில் படுக்கையில் இருந்து எழுந்தான்.

வாரத்தின் முதல் நாள் திங்கட்கிழமை. அன்று அலுவலகம் செல்ல பெரும்பாலோருக்கு பிடிக்காது. முரளியும் அதற்கு விதிவிலக்கல்ல.

அதுவும் மூன்று நாட்கள் விடுமுறைக்கு பின் செல்ல வேண்டும். சோம்பலுடனே கிளம்பி அவன் அலுவலகம் சென்றான். அலுவலகத்தில் வேலையை இயந்திர கதியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

பதினொரு மணிக்கு மேல் அவன் அருகே இருந்த தாமஸ் முரளியின் காதைக் கடித்தான்.

''மச்சி யாருடா அது... நம்ம அனுகிட்டே பேசிக் கிட்டு இருப்பது?''

'யாரைச் சொல்கிறான்?' என்று முரளி நிமிர்ந்து பார்த்தான்.



அங்கே அனுவுடன் வந்து கொண்டிருந்தவளை முரளி வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

அவள் வெள்ளை நிறத்தில் சுரிதார் டாப்ஸும், மயில் கழுத்து நிறத்தில் பேன்ட்டும் அணிந்திருந்தாள். அதில் வெள்ளை பூக்கள் டிசைன் செய்யப்பட்டிருந்தது. அதே கலரில் துப்பட்டா அணிந்திருந்தாள். தலையை விரித்து விட்டு கிளிப் மட்டும் செய்திருந்தாள்.

அவள் அருகே வர வர முரளி குழம்பினான். ஏனென்றால் வந்தது அவனது மனைவி. அவளை அது மாதிரி ஒரு தோற்றத்தில் பார்த்திராததால் அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

'இவளுக்கு இப்படிக் கூட நல்ல ரசனையா டிரஸ் பண்ணிக்கத் தெரியுமா? இவள் எதுக்கு ஆபிஸ் வரைக்கும் என்னைத் தேடி வந்து இருக்காள்?' என்று நினைத்தவன் தனது இருக்கையில் இருந்து எழுந்து அவளை நோக்கிச் செல்லத் துவங்கும் முன் அவளும் அனுவும் நின்றுவிட்டார்கள்.

அவளிற்கும், அனுவிற்கும் சம வயது என்பதால் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் போது மரியாதை பன்மையை கை விட்டு விடலாம் என்ற ஒப்பந்தத்தை அவர்கள் இருவரும் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

முரளி அதே இடத்தில் அசையாது நிற்கவும் அவர்கள் இருவரும் பேசியபடியே அவனை நோக்கி நடந்து வந்தார்கள்.

அனு முரளிதரனிடம் வந்து, ''முரளி, இவங்க பேர் நித்யா. வேற பிரான்ஞ்சில் இருந்து இங்க டிரான்ஸ்பர்

ஆகி வந்து இருக்காங்க. இனிமேல் நம்ம டீமில் தான் வொர்க் பண்ணப் போறாங்க'' என்றதும்,

முரளிதரன் குழப்பத்தின் உச்சிக்கே சென்றான்.

'என் பொண்டாட்டி எனக்கு கீழே வேலை செய்யப் போறாளா? ஆனால் அவ படிக்காதவளாச்சே? முதல்ல அனு இவ பேரை என்னவென்று சொன்னாள். நித்யா என்று தானே? ஆனால் என் மனைவி பேர் சொர்ணம் அல்லவா!

அப்போ இது யாரு? அவ சாயலில் வேறொரு பெண்ணா? உலகத்திலே ஒரே மாதிரி ஏழு பேர் இருப்பாங்கன்னு சொல்லுவாங்களே... அந்த ஆறு பேரில் ஒருத்தியோ?!

என் மனைவியாக இருந்தால் என்னைப் பார்த்துச் சிரித்து இருப்பாளே! இந்தப் பெண் என்னைத் தெரியாத பாவனை அல்லவா காட்டுகிறாள்' என்று அவன் யோசித்துக் கொண்டிருக்க...

நித்யாவோ மெதுவான குரலில் அனுராதாவிடம், ''நான் இஞ்சி தின்ன குரங்கு முகத்தைக் கூடப் பார்த்திருக்கேன். ஆனால் அரை லிட்டர் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரியான ஒரு முகத்தை இன்னைக்கு தான் பார்க்கிறேன்'' என்றாள்.

அனு அதை விட மெதுவான குரலில், ''ஹேய்! வந்த உடனே நம்ம டீம் லீடரை ஓட்டுறியா? பார்த்து ஓட்டுமா? அவன் என் ஆளு!'' என்றாள்.

''ஓ! நீங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸா? அப்ப நான் அடக்கியே வாசிக்கிறேன்'' என்று நித்யா பம்மினாள்.



''லவ்வரா? நல்லா கேட்ட போ. இவன் சரியான சாமியார். இந்த கடிவாளம் போட்ட குதிரை நேரா பார்க்கும்ன்னு சொல்லுவாங்க தெரியுமா. அது மாதிரி தான் இவன். பொண்ணுங்களைப் பார்த்து ஜொள்ளு விட மாட்டான். அக்மார்க் நல்ல பையன். நான் சும்மா இவனை சைட் அடிக்கிறேன். அவனைக் கட்டிக்கப் போறவ கொடுத்து வைச்சவ'' என்றதும்,

''அப்ப சாருக்கு இன்னும் கல்யாணம் ஆகலையா?'' என்று நித்யா கேட்டாள்.

''இன்னும் இல்லை'' என்று பதில் அளித்த அனு முரளிதரன் ஏதோ யோசனையில் மூழ்கி இருப்பதைக் கண்டு ''முரளி முரளி'' என்று அவனது பேரை ஏலம் விட்டு அவனை நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தாள்.

முரளிதரன் நடப்பிற்கு வந்தவனாக அவளைப் பார்த்து, ''உங்க பேர் என்ன?'' என்று கேட்டான்.

''என் பேர் நித்யா'' என்று அவள் பதிலளிக்கவும்,

''உங்க அம்மா, அப்பா பேர் என்ன?'' என்று அவன் அடுத்த கேள்வியை முன் வைத்தான்.

''எங்க அப்பா பேர் சிவனேசன். அம்மா பேர் விசாலம்'' என்றாள்.

'அவ பேரும் வேறா இருக்கு. பெத்தவங்க பேரும் வேறா இருக்கு. இவள் நிஜமாவே வேற பொண்ணா? இல்லை நம்மளை ஏமாத்துறதுக்காக பேரை மாத்திச் சொல்லுறாளா?

'அப்பா, அம்மா பேரை மாத்தலாம். புருஷன் பேரை மாத்தி சொல்ல முடியாது இல்லை. அவளிடம் அதைக் கேட்டால் கண்டிப்பாக உண்மை வெளி வந்திடும்' என்று நினைத்து ஆனந்தப்பட்டான்.

ஒரு பெண்ணிடம் போய் உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சா என்று எப்படிக் கேட்பது என்று அந்தக் கேள்வியை அவளைப் பார்த்துக் கேட்க முடியாமல் அவன் தடுமாறினான்.

கல்யாணம் ஆனவளா இல்லையா என்று அவளது கழுத்தை ஆராய... அந்தக் க்ளோஸ் நெக் சுரிதாரில் அவளது கழுத்துப் பகுதி சுத்தமாக மறைக்கப்பட்டிருந்தது.

காலில் மெட்டி அணிந்திருக்கிறாளா என்று பார்ப்போம் என நினைத்து குனிந்து அவளது கால்களை ஆராய... அவள் தனது கால்களில் வெள்ளை நிறத்தில் சிலிப் ஆன்ஸ் (ஷூ) அணிந்திருந்தாள்.

சே! எப்படிப் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியலையே என நினைத்தவனாக, ''உங்க ரெஸ்யூமை (resume) கொடுங்க. நான் பார்க்கணும்'' என்றான்.

''இப்ப என்கிட்ட இல்லை. நாளைக்கு தரேன்'' என்றாள்.

'உங்க மெயிலில் வைச்சிருப்பீங்க தானே! இப்பவே எடுத்துக் காட்டுங்க' என்று கேட்க வாய் எடுத்தான். ஆனால் தன்னைச் சுற்றி உள்ளவர்கள் தான் அதிகபிரசங்கித்தனமா கேள்வி கேட்பதாக நினைத்து விடக்கூடாதே என்று நினைத்து அமைதி காத்தான்.



இவள் என் மனைவி என்பதற்கு ஏதாவது அடையாளம்... மச்சம் தழும்பு என்று ஏதாச்சும் தனக்குத் தெரியுமா என்று சிந்தித்துப் பார்த்தான். அது போல் எதையும் தன் மனைவியிடம் பார்த்ததாக அவனது நினைவிற்கு வரவில்லை.

அவளது ஃபோனுக்கு கூப்பிட்டால் தெரிஞ்சு போகப் போகுது. யுரேகா! முரளி சூப்பர் ஐடியா! என்று தன்னைத் தானே தட்டி கொடுத்துக் கொண்டே தனது போனை வேகமாக வெளியில் எடுத்தவன்... தேர்வில் எளிதான கேள்விக்கு பதில் தெரியாத மாணவனைப் போல் விழித்தான்.

அவனுக்கு அவனது மனைவியின் கைபேசி எண்ணே தெரியவில்லை. சரி அப்பாகிட்டே கேட்போம் என்று சிந்தித்த நொடி அவன் அப்பா கையில் அருவாளோடு காட்சி அளித்தார்.

பின்னே கல்யாணம் ஆகி இத்தனை நாள் கழித்து அவளது கைபேசி எண்ணை அவரிடம் கேட்டால்... அதுவே இவர்கள் இருவருக்கும் இடையில் பிரச்சனை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடாதா?

'மருமகளுக்கு மகனால் ஒரு பிச்சனை என்றால் அருவாளைத் தூக்க மாட்டாரா? பூச்சி மருந்து குடிக்க நினைச்சவர் தானே அவர்!' என்று மனதுக்குள் தனது தந்தையைத் திட்டிக் கொண்டான்.

தந்தையிடமே கேட்க முடியவில்லை என்றால்... மாமனார் வீட்டைச் சார்ந்தவர்களிடம்... மூச். அவங்க கிட்ட கேட்பதுக்கு பதிலா தலையைக் கொண்டு போய்

நேரா தண்டவாளத்தில் வைச்சிடலாம் என்று நினைத்தவுடன் அவனது உடல் சிலிர்த்தது. வேண்டாம் சாமி! என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

இவன் இங்கே கைப்பேசியை கையில் வைத்துக் கொண்டு மனதுக்குள் ஆராய்ச்சி நடத்திக் கொண் டிருக்க... நித்யாவோ தன் கைப்பையில் இருந்து தனது கைப்பேசியை எடுத்து யாருக்கோ பேசினாள்.

அவள் கையில் இருந்தது சேம்சாங் கேலக்ஸி கிராண்ட் செல்போன். தன் மனைவியிடம் இருப்பதோ ஒரு டப்பா செல்போன். ஆனால் இதை மட்டும் வைத்து இவள் என் மனைவி இல்லை என்று சொல்லிவிட முடியாதே! என்று அப்பொழுதும் அவன் மனம் வாதிட்டது.

இந்தக் கைப்பை ஸ்ரீயுடையதா என்று அவளது கைப்பையை ஆராய... அவனுக்கு அதைத் தன் மனைவியிடம் பார்த்திருக்கிறோமா இல்லையா என்று சொல்லத் தெரியவில்லை.

அவள் வலது கையில் அணிந்திருந்த வளையல், இடது கையில் அணிந்திருந்த வாட்ச் என்று எல்லாமே புதியதாய் இருந்தது. இவற்றை அவன் தன் மனைவி யிடம் பார்த்ததில்லை.

எப்படியும் இன்று மாலை வீட்டுக்குப் போனால் கண்டுபிடித்து விடலாம். ஆனால் அதற்கு முன்பே கண்டுபிடிப்பதில் தான் உன் திறமை இருக்குடா முரளி என்று உள்ளிருந்து ஒரு குரல் ஒலிக்க... முரளிதரன் படுதீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.



அவன் தன் நண்பனான தாமஸிடம், ''ஏன்டா தாமஸ் உன்னால இன்னைக்கே ஒரு கார்... அதுவும் காஸ்ட்லி கார் வாங்கணும் என்றால் வாங்க முடியுமா?'' என்று கேள்வி எழுப்பினான்.

''இன்னைக்கேன்னு சொன்னால் எப்படிடா முரளி முடியும்? அதுவும் காஸ்ட்லி கார்ன்னு வேற சொல்லுறே? என்னைக் கேட்கிறியே. உன்னால முடியுமாடா?'' என்று அவன் திருப்பிக் கேட்டதும்,

'இந்தக் கேள்விக்காகத் தான்டா காத்திருந்தேன்' என்று மனதுக்குள் குதூகலித்த முரளி, ''என்னால கண்டிப்பா வாங்க முடியும்டா தாமஸ்'' என்றான்.

''நிஜமாவாடா சொல்லுறே?''

நித்யாவின் மீது பார்வையைச் செலுத்திக் கொண்டே, ''என்கிட்ட கை வசம் ரெண்டு அலாவுதீன் பூதங்கள் இருக்குடா. அதனால என்னால முடியும்'' என்று முரளி சொன்னவுடன் நித்யா நிமிர்ந்து பார்த்து அவனை முறைத்தாள்.

'வாடி என் மாமனார் பெத்த மகளே! என்கிட்டவா டபாய்க்க பார்க்கிறே' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்ட முரளி அவளைப் பார்த்து பெருமையுடன் புன்னகைத்தான்.

'மனசுக்குள்ளே புன்னகை மன்னன் என்று நினைப்பு. ஒரு வாரமா கண்டுபிடிக்கத் துப்பில்லை. இப்பவும் இவ்வளவு நேரமா மேலேயும் கீழேயும் ஆராய்ச்சி பண்ணினார். இதிலே பல்பை கண்டுபிடிச்ச எடிசன்

கணக்கா பெருமை வேற பட்டுக்கிறார். ஹூம்!' என்று மனதுக்குள் பழித்துக் கொண்டாள் அவனது மனைவி நித்யா.

'எப்படி இப்படி இவளோட பேர் கூட தெரியாமல் இருந்தோம்? கல்யாணம் முடிந்த உடனே சென்னைக்கு வந்துவிட்டதாலே வேற யாரும் இவளை பேர் சொல்லிக் கூப்பிட்டு... அதை நான் கேட்க வழி இல்லாமல் போச்சு.

இவ அண்ணன் இவளை குட்டின்னு கூப்பிட்டான். எங்க அம்மாவும், அப்பாவும் இந்த ஒரு வாரத்தில் அதிகமா என்கிட்டே போனில் கூடப் பேசலை. புதுசா கல்யாணமானவங்க... தொந்தரவு பண்ண வேண்டாம் என்று கூட நினைச்சிருக்கலாம். ரெண்டு தடவை பேசும் போதும் மருமகள் என்றே சொன்னாங்க.

சே! இப்படி ஏமாந்துட்டேனே!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

அவள் தன் மனைவி தான் என்று தெரிந்ததும் முரளியின் மனசுக்குள் ஏகப்பட்ட கேள்விகள் வரிசை கட்டி நின்றன. அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை.

விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று விடுவோமா என்று கூட யோசித்தான். ஆனால் பதில் சொல்ல வேண்டியவளோ இப்பொழுது தான் வேலையில் சேர்ந்திருக்கிறாள். அதனால் உடனே அவளால் வெளியே வர முடியாதே என்று நினைத்துப் பார்த்தவன் தனது வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தான்.



இடையிடையே தன் மனைவியை நோட்டம் விடவும் மறக்கவில்லை. அவனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து அவனுக்கு போன வாரத்தில் அவன் கேட்ட கேள்விகளும், மனைவி அதற்குச் சொன்ன பதில்களும்... இல்லையில்லை அவள் சொன்ன பொய்களும் ஞாபகத்திற்கு வந்தன.

தன்னை எப்படியெல்லாம் முட்டாளாக்கி இருக்கிறாள் என்று நினைத்துப் பார்த்தான். முதலில் அவளது ஆடையை ஆராய்ந்தான்.

''என்னங்க, நான் நாகரீகமா உடை உடுத்தலையோ?'' என்று அவள் கேட்டதும்,

''நிச்சயமா. உனக்கு டிரஸிங் சென்ஸே இல்லை'' என்று தான் பதில் சொன்னதும் ஞாபகம் வந்தது.

கணினி முன்பு அமர்ந்து கொண்டு அவளது விரல்கள் நர்த்தனமாடிக் கொண்டிருந்ததைக் கண்டான்.

''எனக்கு படிப்பு சரியா வரலைன்னு எட்டாங் கிளாஸோட நிறுத்திட்டாங்க.''

'இன்ஞ்சினியரிங் படிச்சிட்டு எட்டாங் கிளாஸ்ன்னு புளுகி இருக்காள்' என்று நினைத்துக் கொண்டான்.

அருகே வந்த அலுவலக நண்பரிடம் அவள் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதைக் கண்டான்.

''இப்ப நீங்க சொன்னீங்களே... குட் கீப் இட் அப். அதை தான் மனப்பாடம் பண்ணுறேன். யாராவது நல்லா சமைச்சால் நானும் சொல்லலாம் இல்ல. அதான்...''

என்று அவள் அன்று ஏமாற்றியது நினைவிற்கு வந்தது.

மொத்தமாக அவளது உருவத்தை ரசித்துப் பார்க்கும் போது,

**'இவளை பியூட்டி பார்லருக்கு அழைத்துச் சென்று அலங்கரிப்பது எப்படின்னு கத்துக் கொடுக்கச் சொல்லணும்.'**

என்று அன்று முட்டாள்தனமாக தான் யோசித்ததை நினைவு கூர்ந்தான்.

'அது மட்டுமா மார்டனுக்கும் அல்ட்ரா மார்டனுக்கும் உள்ள வித்தியாசம் பத்தி பாடம் வேற எடுத்தோமே! மனசுக்குள்ளே எப்படிச் சிரிச்சு இருப்பாள்!' என்று நினைத்து நொந்து போனான்.

## 10

அனுவும் அவளும் நன்றாக பழகுவதைப் பார்த்த முரளிக்கு இரண்டு பேரும் ஏற்கனவே அறிமுக மானவர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகம் வந்தது.

அதை நிவர்த்தி செய்ய எண்ணி அனுவிடம், ''நீங்க ரெண்டு பேரும் ஏற்கனவே ஃபிரண்ட்ஸா?'' என்று கேட்டான்.

''இல்லை முரளி. நித்யா என் ஃபிரண்டோட ஃபிரண்டு'' என்றதும் முரளி யோசனையாய் பார்க்க,



''என் ஃபிரண்டு லதாவும் நானும் ஸ்கூல் மேட்ஸ். நித்யா அவளுக்கு காலேஜ் மேட். இப்ப புரியுதா? எனக்கு லதா போன் பண்ணி நித்யா இன்னைக்கு இங்கே வரப் போறதைச் சொன்னாள்'' என்று அனு விளக்கி னாள்.

புரிந்தது என்பதாக முரளிதரன் தலையாட்டினான்.

மதியச் சாப்பாட்டை நித்யா கையோடு எடுத்து வந்திருந்தாள். அவளும் அனுவும் சாப்பிட ஆரம்பித் தனர்.

அதன் வாசத்தில் முரளிக்கு மனைவியின் சமையலை ருசிக்க ஆசையாக இருந்தது.

அதனால் மனைவியின் அருகே வந்தவன், ''நித்யா, நீங்க சூப்பரா சமைப்பீங்களா? ஸ்மெல் சூப்பரா இருக்கே! கொடுங்க டேஸ்ட் பண்ணிப் பார்க்கிறேன்'' என்று கேட்டான்.

'அன்னைக்கு சாப்பாடு கட்டிக் கொடுத்தப்போ... எனக்கு சாப்பாடு வேண்டாம். எங்க கான்டீனில் சூப்பரா சாப்பாடு போடுவாங்கன்னு சொல்லிட்டுப் போனவர் தானே நீங்க... உங்களுக்கு எதுக்கு இப்போ நான் தரணும்?' என்று நினைத்தவள்,

''எனக்கு நல்லா சமைக்கத் தெரியாது சார். அதனால் நீங்க கேன்டீனிலேயே போய் சாப்பிடுங்க'' என்றாள்.

அவன் விடாக் கொண்டனாக, ''நல்லா இருக்கா இல்லையான்னு நான் சாப்பிட்டுப் பார்த்துட்டு சொல்லு றேன்'' என்றான்.

அப்பொழுதும் அவள் அவனுக்குத் தரும் எண்ணம் இல்லாமல் இருக்கவும்,

முரளி மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டே 'இப்போ வைக்கிறேன் பாரு உனக்கு ஆப்பு!' என்று நினைத்தவன்,

''உங்க ஊரு எது?'' என்று கேட்டான்.

'இப்போ எதுக்கு இந்தக் கேள்வி? அதுவும் எல்லாம் தெரிஞ்சும் இந்தக் கேள்வியை கேட்கிறார் என்றால்... நித்யா உஷாரா இரு!' என்று மனதிற்குள் கூறிக் கொண்டே,

''வத்தலகுண்டு'' என்று பதிலளித்தாள்.

''சிட்டி மக்கள் தான் ஒட்டாமல் பழகுவாங்க. இந்த மாதிரி ஊரில் இருந்து வரவங்களெல்லாம் ரொம்பவே நல்லா பழகுவாங்க இல்ல. உதவுற மனப்பான்மை அதிகம் உள்ளவங்களா இருப்பாங்க இல்ல...'' என்று கேள்வி எழுப்பியதும்,

'இந்த சாப்பாட்டைத் தர வைப்பதற்காக ஏதோ நம்மகிட்டே போட்டு வாங்குகிறார்' என்று புரிந்து கொண்டவள் ஆமாம், இல்லை என்று இரண்டிற்கும் மத்தியில் பொதுவாகத் தலை ஆட்டினாள்.

'முழிக்குற முழியைப் பாரு! எங்க அம்மா அன்னைக்கு பொண்ணு மூக்கும் முழியுமா லட்சணமா இருக்காள் என்று சொன்னது சரி தான். முழி நல்லா தான் இருக்கு' என்று அவளைப் பார்வையிட்டான்.



அவளோ, 'எல்லோரையும் வைச்சுக்கிட்டு என்ன பார்வை வேண்டிக்கிடக்கு' என்று திட்டிக் கொண்டிருந்தாள்.

''உங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சா?'' என்று அவன் அடுத்த கேள்வியை ஆரம்பிக்க,

'எங்கே இருந்து எங்கே தாவுறார்' என்று நினைத்துக் கொண்டவள், ''ஆமாம். கல்யாணம் ஆகிடுச்சு'' என்றாள்.

''உங்க ஹஸ்பண்டு நேரோ மைன்டட் ஆளா இல்லை பிராட் மைன்டட்டா?'' என்றதும்,

'இதற்கு என்ன பதில் சொன்னால் நாம இவர் விரிக்கும் வலையில் விழாமல் தப்பிக்க முடியும்' என்ற ஆராய்ச்சியில் அவள் இறங்க...

''அதாவது உங்க கணவர் குறுகிய மனம் படைச்ச வரா? இல்லை விசால மனம் படைச்சவரான்னு கேட்கிறேன்'' என்று சற்று முன் தான் கேட்ட கேள்வியையே அவன் தமிழில் மொழிபெயர்க்க,

நித்யா அவனைப் பார்த்து முறைத்தாள்.

அவள் இத்தனை நாள் தன்னிடம் அள்ளி விட்ட பொய்களுக்கு பழி வாங்கும் வகையில், ''இல்லைங்க ஒரு வேளை உங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதோன்னு நினைச்சேன்'' என்றான்.

'எப்படி இருந்தாலும் இத்தனை பேர் மத்தியில் என் கணவனைப் பற்றித் தரக் குறைவாக எப்படிச் சொல்ல முடியும்?' என்று எண்ணியவளாய், ''என் கணவர் நல்லவர். விசால மனம் படைச்சவர்'' என்றாள்.

முரளி தனக்கு வந்த சிரிப்பை மென்று கொண்டே, ''உங்க மாமனார், மாமியார் உங்க கூட இருக்காங்களா?'' என்ற அடுத்த கேள்வியை கேட்டதும்,

''இல்லை. அவங்க வேற ஊரில் இருக்காங்க'' என்றாள்.

''அப்படின்னா அடுத்த ஒரு மாசத்துக்கு எனக்கும் சேர்த்து மத்தியான சாப்பாடு கொண்டு வந்திடுங்க'' என்று சற்றும் அலட்டிக்காமல் சொன்னதும்,

நித்யா வாயைப் பிளந்து கொண்டு விழித்தாள்.

''ஆமாங்க நீங்களோ நல்ல மனசு படைச்சவங்க இருக்கிற ஊரிலே இருந்து வந்து இருக்கீங்க. உங்க ஊரில் விருந்தோம்பல் ரொம்ப சிறப்பா இருக்கும் தானே?! மாமனார், மாமியார் கூட இருந்தால் அவங்க ஏதாச்சும் ஆட்சேபணை தெரிவிப்பாங்களோன்னு நினைச்சேன். அவங்களும் உங்க கூட இல்லைன்னு சொல்லிட்டீங்க. உங்க கணவர் ஏதாச்சும் நினைச்சுக்கு வாரோன்னு பார்த்தேன். நீங்க தான் அவர் மனசு விசாலமானதுன்னு சொல்லிட்டீங்களே. அப்புறம் என்ன கஷ்டம். அதனால் ஒரு மாசத்துக்கு மட்டும் எனக்கு சாப்பாடு கொண்டு வாங்க'' என்றான்.

''இல்ல... அது சரி வராது'' என்று மறுக்கத் தொடங்கியவளை இடையிட்டு,

''நான் வேணுமின்னா உங்க ஹஸ்பண்ட் கிட்டே பேசட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே மேஜையில் அவள் வைத்திருந்த கைப்பேசியை பற்ற முயற்சிக்க...



அவள் வேகமாக அதை இழுத்துக் கொண்டாள்.

அவள் அதே வேகத்துடன், ''சரி ஒரு மாசம் கொண்டு வந்து தரேன்'' என்று கடித்த பற்களிடையே வார்த்தைகளைத் துப்பினாள்.

'வேகமாக தடுப்பதைப் பார்த்தாலே நம்ம பேரை விவகாரமா பதிஞ்சு வைச்சிருப்பாள் போலவே!' என்று நினைத்தவன் 'என்னவாக இருக்கும்?' என்று ஆராய முற்பட்டான்.

'இவருக்கு சமைச்சு கொடுக்கிறதே பெருசு. இதிலே நானே இவருக்கு அதைத் தூக்கிட்டு வேற வரணுமா?' என்று நொடித்துக் கொண்டவள்,

'என்ன என்னவோ கேட்டு மறுக்க முடியாமல் செஞ்சிட்டாரே. வெரி ஸ்மார்ட்' என்று பழித்துக் கொண்டாள்.

அவன் அங்கிருந்து நகர்ந்ததும் தாமஸ் அவனிடம், ''என்னடா மச்சான் பிரச்சனை?' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லைடா. ரெண்டு ஸ்பூன் டேஸ்ட் பண்ணக் கேட்டால் என்னமோ சொத்தை எழுதி கேட்கிற ரேஞ்சுக்கு பில்டப் கொடுத்தாள். அதான் ஒரு மாசத்துக்கு சாப்பாடு கொண்டு வர வைச்சுட்டேன். இந்த இத்துப் போன கேன்டீன் சாப்பாட்டில் இருந்து ஒரு மாசம் தப்பிச்சுக்கலாம் இல்ல'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

''அப்படின்னா நாளையில் இருந்து நமக்கு நல்ல சாப்பாடா?'' என்று தாமஸ் கேட்கவும்,

"நீ எதுக்கு இப்ப என் கூட ஒட்டிக்கப் பார்க்கிறே? அது எனக்கு மட்டும்தான்" என்று முரளி வேகமாக மறுக்க,

"நான் மட்டும் கேன்டீனில் சாப்பிடணும். நீ மட்டும் வீட்டுச் சாப்பாடு சாப்பிடுவியா? அதெல்லாம் முடியாது" என்று தாமஸ் ஆட்சேபித்தான்.

"தாமஸ் கண்ணா, உனக்கு வீட்டுச் சாப்பாடு சாப்பிடணும் போல இருந்தால் கல்யாணம் பண்ணிக்கோ" என்று முரளி அறிவுரை வழங்கவும்,

"அதை நீ செய்ய வேண்டியது தானே? அத விட்டுட்டு அந்தப் பொண்ணைக் கஷ்டப்படுத்துறே."

'அந்தப் பொண்ணு இல்லைடா. அவ என் பொண்டாட்டி. கல்யாணம் இனிமேல் பண்ணவா? ஏற்கனவே பண்ணிட்டுத் தான் முழிக்கிறேன். நித்யாக்காக பரிதாபப் படுறியே. அவ சாதாரணமான ஆள் இல்லைடா. ஜகஜாலக் கில்லாடி. என்னைக் காமெடி பீஸா அலைய விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்காள்.

என்னால் இப்ப எதையும் உன்னிடம் சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால் எனக்குமே எதுவும் முழுசாத் தெரியாது' என்று மனதுக்குள் புலம்பினான்.

மாலை அலுவலக வேலை முடிந்ததும் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று எண்ணி நண்பர்கள் அனைவரையும் அனுப்பிவிட்டு அவன் பின் தங்கினான்.



அவளும் அவனோடு பைக் நிறுத்தும் இடத்திற்கு வந்தவுடன், அவன் தன் பைக் அருகே சென்று வண்டியை இயக்கி அவளை உட்காரச் சொல்வதற்காக திரும்பிப் பார்த்தான். அவளோ சற்று தொலையில் உள்ள அவளது ஸ்கூட்டி பெப்பை உயிர்பித்துக் கொண்டிருந்தாள்.

'ஓ! மேடம் வண்டியில வந்து இருக்காங்களா? இன்னும் என்னென்ன ஆனந்த அதிர்ச்சி கொடுக்கக் காத்திருக்கிறாளோ தெரியலையே!' என்று நினைத்துக் கொண்டே அவள் பின்னே மெதுவாக வண்டியை ஓட்டினான். அவள் நூறடி போகும் முன்பே கீழே விழுந்தாள்.

அவன் தனது வண்டியை நிறுத்திவிட்டு ஓடிச் சென்று அவளது வண்டியைத் தூக்கி நிறுத்த,

"இப்ப எதுக்கு என் பின்னாடியே வரீங்க. நீங்க வரதால தான் என்னால வண்டியைச் சரியா ஓட்ட முடியலை" என்று எரிச்சலுடன் நித்யா சொல்லவும்,

அவனோ சற்றும் அலட்டிக் கொள்ளாமல், "சைட் ஸ்டாண்ட் எடுக்காமல் ஓட்டினால் யாரா இருந்தாலும் கீழ தான் விழுவாங்க. அதை எடுத்திட்டு ஓட்டு. இப்ப எல்லாம் ஸ்கூட்டி பெப்பில் சைட் ஸ்டாண்ட் எடுக்காமல் ஓட்ட ஆரம்பித்தால் பீப் பீப் என்று அலாரம் ஒலிக்குமே. உன் வண்டியில் அது இல்லையா? உன் வண்டி பழைய மாடலா?" என்று அவன் சாதாரணமாகக் கேட்ட கேள்விக்கு கூட முறைத்துவிட்டு வண்டியை எடுத்துக் கொண்டு சென்றாள்.

அவள் கிளம்பிச் சென்று ஐந்து நிமிடங்கள் கழித்தே அவன் அங்கிருந்து கிளம்பினான். அப்படி இருந்தும் அவன் முதலில் வீடு வந்து சேர்ந்துவிட்டான்.

அவன் தனது வண்டியை நிறுத்திவிட்டு வீட்டிற்குச் செல்லாமல் தரை தளத்திலேயே அவளுக்காக காத் திருக்க ஆரம்பித்தான்.

அவள் தனது வண்டியைக் கொண்டு வந்து அவன் வண்டிக்கருகே நிறுத்தியதும்,

''இத்தனை நாளா இந்த வண்டி எங்க இருந்தது?'' என்று கேட்டான்.

''இங்க வைச்சே பதில் சொல்லணுமா? இல்ல வீட் டிலே வைச்சு சொல்லட்டுமா?'' என்று அவள் எதிர் கேள்வி கேட்டதும்,

''வா. மேலே போகலாம்'' என்றவன் முன்னே சென்று வீட்டின் கதவைத் திறந்தான்.

## 11

இருவரும் வீட்டின் உள்ளே நுழைந்ததும் கதவை அடைத்துத் தாளிட்டவன், ''உன் பேர் என்ன?'' என்று கேட்டான்.

அவன் என்னவெல்லாம் தன்னிடம் கேள்வி கேட் பான் என்று அவள் மனதிற்குள் ஒரு பெரிய பட்டியலே



தயாரித்துக் காத்திருக்க... அவன் கேட்ட கேள்வியோ அவளது நீண்ட பட்டியலில் கூட இடம் பெறாத கேள்வியாக இருந்தது.

அவனை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே, ''என்ன இப்படிக் கேட்கிறீங்க? என் பேர் உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள்.

''எங்க அப்பா உன் பேர் சொர்ணம் என்று சொன் னார்.''

''என்னது சொர்ணமா? அது எங்க பாட்டி பேர்.''

''அது எனக்கும் தெரியும். ஆனால் அவர் அப்படித் தான் சொன்னார்.''

''நான் எங்க பாட்டி முகச் சாயலில் இருப்பதால் எங்க ஊரிலே சில பேர் என்னை சின்ன சொர்ணம் அப் படின்னு கூடச் சொல்லுவாங்க. ஆனால் மாமா ஏன் அப்படிச் சொன்னார்? அவர் உங்கிட்டே என்ன தான் சொன்னார். உங்களுக்கு ஞாபகம் இருக்கா?''

''நல்லா ஞாபகம் இருக்கு. என் மருமகள் சொர்ணம்... நம்ம வீட்டுக்கு வரப் போற மகாலஷ்மி அப்படின்னு சொன்னார்.''

''என்னை தங்கம்... அதாவது தங்கமான பொண்ணு அப்படின்னு சொல்லி இருப்பார்.''

''உன்கிட்ட நம்ம கல்யாணப் பத்திரிக்கை இருக்கா? இருந்தா கொண்டு வா. நான் பார்க்கிறேன்.''

''அதைக் கூட நீங்க பார்க்கலையா?'' என்று கேட்டவளின் குரலில் வியப்பை விட வருத்தமே மித மிஞ்சி இருந்தது.

ஆனால் அவன் அதை உணராது அவளது கேள்விக்கான பதிலாய், ''அதைப் பார்த்திருந்தால் தான் உன் பேர், படிப்பு இதெல்லாம் எனக்குத் தெரிஞ்சு போயிருக்குமே'' என்றான்.

''நம்ம பத்திரிக்கையிலே நம்ம ரெண்டு பேருக்குமே படிப்பு, வேலை பத்தி எதுவும் போடலை'' என்று சொல்லிக் கொண்டே தனது பெட்டியில் இருந்து திருமணப் பத்திரிக்கையையும், முஹூர்த்த புடவையையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''இப்ப எதுக்கு புடவைய்யை காட்டுறே?''

''இதிலே கூட நம்ம ரெண்டு பேர் பெயரும் நெய்யப் பட்டு இருக்கு.''

''பட்டுப் புடவையிலா?'' என்று அவன் ஆச்சரியமாகக் கேட்க,

''ஆமா போத்தீஸில் இப்பெல்லாம் பொண்ணு மாப்பிள்ளை பேரை போட்டு நெய்து தராங்க'' என்று சொல்லி அதை விரித்துக் காட்ட,

Murali ✱✱✱✱ NithyaSri என்று இருந்தது.

''உன் முழுப் பேர் நித்யஸ்ரீயா?'' என்று அவன் கேட்கவும்,

அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவளாக, ''அது கூடத் தெரியாமலா என்னை ஸ்ரீன்னு கூப்பிடட்டுமான்னு அன்னைக்குக் கேட்டீங்க?'' என்று அவள் சந்தேகமாய் கேட்டாள்.

அவன் அந்த ஸ்ரீ என்ற பெயரை தான் கண்டுபிடித்த விதத்தை அவளிடம் விவரித்தான்.



தங்களது திருமணப் பத்திரிக்கையை வாங்கிப் பார்வையிட்டான். முதலில் இருந்து கடைசி வரை அதைப் படித்து முடித்தவன் திரும்பி மனைவியைப் பார்த்தான்.

அவளோ தங்களது திருமணப் புடவையில் இருந்த கணவனின் பெயரை தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அதைக் கண்டவனின் முகத்தில் முறுவல் மலர்ந்தது. அவன் அவளது தோள் மீது தன் கையை போட்டு அவளை அருகில் இழுக்க முயற்சிக்க... அவள் அவனது கையைத் தட்டி விட்டுவிட்டு எதிர் சோபாவில் சென்று அமர்ந்தாள்.

'உன் பாடு கொஞ்சம் திண்டாட்டம் தான்டா முரளி!' என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

'மூணு தடவை ஃபிளைட்டிலே போனோமே! அப்ப அந்த டிக்கெட்டை வாங்கிப் பார்த்திருந்தால் கூட இவள் பேர் தெரிந்திருக்கும். இது தான் விதி போல' என்று நினைத்துப் பெருமூச்சுவிட்டான்.

சில நொடிகள் அங்கே அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்கும் விதமாய் அவளே பேசினாள்.

''உங்க அப்பா உங்களுக்கு பத்திரிக்கையை அனுப்பலையா?''

''இல்லை. இப்பெல்லாம் யாரு அப்பா, அம்மா பத்திரிக்கையை ஃபிரண்டுஸ்க்கு கொடுக்கிறாங்க. ஒண்ணு பொண்ணும், மாப்பிள்ளையும் சேர்ந்து

அழைப்பது போல் தனியா பத்திரிக்கை அடிக்கிறாங்க. இல்லைன்னா பொண்ணு தனியா ஒரு பத்திரிக்கை, மாப்பிள்ளை தனியா ஒரு பத்திரிக்கைன்னு அடிச்சுக் கிறாங்க. அதனால எங்கப்பா என்கிட்டே பத்திரிக்கையை காட்டவும் இல்லை. அது பத்தி பேசவும் இல்லை.''

''நீங்க தனியா பத்திரிக்கை அடிக்கலையா?'' என்று நித்யா கேட்டதும்,

''கல்யாணத்துக்கு ஃப்பிரண்ட்ஸை கூப்பிடணும் என்ற ஐடியா இருந்தால் தானே பத்திரிக்கை தேவைப்படும்'' என்று அமைதியான குரலில் சொன்னான்.

அவள் கண்மூடி அமைதியானாள்.

கடந்த இரண்டு மாதமாக... அதாவது கல்யாணம் முடிவான தேதியில் இருந்து இந்தக் கல்யாணம் குறித்து தான் எந்த அளவிற்கு பரபரப்பும், ஆனந்தமும் அடைந் தோமோ அதில் சிறு துளி அளவு கூட ஆர்வமில்லாமல் அவன் இருந்திருக்கிறான் என்ற உண்மை அவளுக்கு வருத்தம் அளித்தது.

அவன் கல்யாணத்திற்கு முன்பு தன்னிடம் பேசாமல் இருந்ததற்கு தன் வீட்டினரே காரணம் என்று இதுநாள் வரை நித்யா எண்ணியிருந்தாள்.

தன்னை மாப்பிள்ளையிடம் பேசக்கூடாது என்று சொன்னது போல் விஸ்வநாதனிடமும் உங்கள் பையனை என் பெண்ணிடம் பேச வேண்டாம் என்று சொல்லி விடுங்கள் என்று தன் வீட்டினர் சொல்லி இருப்பார்கள் என்று எண்ணி இருந்தாள்.



ஆனால் அவன் ஆர்வம் இல்லாமல் தான் இத் தனையும் செய்யவில்லை என்ற உண்மை புரிபட வருந்தினாள்.

முதலிரவு அன்று கூட தான் படிக்காதவள் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று மட்டும் தான் அவள் எண்ணி இருந்தாள். ஆனால் இப்படித் தன் பேரே தெரியாமல் அவன் இருந்திருப்பான் என்று அவள் சிறிதளவும் சந்தேகப்படவில்லை.

இம்முறை அங்கே நிலவிய மௌனத்தை அவன் கலைத்தான்.

''காலையில் ஆபிஸில் உங்க அம்மா, அப்பா பேரை ஏன் மாத்தி சொன்னே?''

''அது என்னோட பெரியம்மா, பெரியப்பா பேர். அவங்களையும் நான் அம்மா, அப்பான்னு தான் சொல்லுவேன். நீங்க குழம்பட்டும் என்று தான் மாத்தி சொன்னேன். காலையில நான் வேலைக்கு வந்ததைப் பார்த்து குழம்புவீங்கன்னு நினைச்சேன். ஆனால் நீங்க இப்படி நித்யா என்ற பேரைக் கேட்டே குழம்பி நிப்பீங்கன்னு நான் நினைக்கலை.''

அவன் பேச்சை மாற்றும் விதமாக, ''இந்த ஸ்கூட்டி இத்தனை நாளா எங்க இருந்துச்சுன்னு கேட்டேனே?'' என்று வினவினான்.

''நான் ஹாஸ்டலில் இருந்த வரைக்கும் அங்க இருந்துச்சு. நம்ம கல்யாணத்துக்கு நாலு நாளைக்கு முன்னாடி எங்க அப்பாவும், அண்ணனும் இங்கே... அதாவது சென்னைக்கு வந்திருந்தாங்க. இந்த வீட்டில்

பாத்திரம், பண்டம் எல்லாத்தையும் கொண்டு வந்து வைச்சிட்டு எனக்கு பிடிச்ச மாதிரி பிரிஜ், வாஷின் மெஷின் என்று எல்லாப் பொருட்களும் வாங்கி கொடுத்தாங்க. உங்க அப்பாவும் வந்திருந்தார். அப்ப மாமா தான் ஹாஸ்டலை காலி பண்ணிட்டு என்னோட சாமான்களை இங்கே கொண்டு வந்து வைக்கச் சொன்னார். நான் எல்லாத்தையும் உங்க ரூமிலே வைக்க சங்கடப்பட்டு பக்கத்து பெட் ரூமிலே வைச்சிட்டுப் போனேன். அப்பவே என் ஸ்கூட்டியும் இங்கே வந் திடுச்சு.''

''அப்ப முன்னாடியே நீ இங்கே வந்துட்டுப் போனியா? அப்ப தான் உருளைக் கிழங்கு வாங்கி வைச்சிட்டுப் போனியா? அதை இங்கே சென்னையிலே வாங்கினியா? இல்லை உங்க அப்பா வத்தலகுண்டில் இருந்து தூக்கிட்டு வந்தாரா? காய்கடை வியாபாரி பொண்ணைக் கல்யாணம் பண்ணினால் கல்யாணத் துக்கு முன்னாடியே காய் சப்ளை பண்ண ஆரம்பிச் சிடுவீங்களா?'' என்று அவன் போலி வியப்புக் காட்டி கேட்கவும்,

''உங்க மாமனார் காய்கறி வியாபாரம் பண்ணுறது உங்களுக்கு கௌரவ குறைச்சலா இருக்கா?''

''சே! சே! இதிலே எனக்கு என்ன கௌரவ குறைச்சல்? நான் அழகா இல்லாத பொண்ணு கழுத்திலேயே தாலி கட்ட சம்மதிச்சவனாக்கும்'' என்று தன்னைத் தானே பெருமை பேசுகிறேன் பேர்வழி என்று நினைத்து அவன் சொன்ன வார்த்தை அவனுக்கே ஆப்பாக மாறியது.



''ஓ! அதான் சார் தனக்கு கல்யாணம் ஆன விஷ யத்தை, கூட வேலை பார்க்கிற யார்கிட்டவும் சொல் லாமல் இருக்கீங்களோ?'' என்று அவள் எகத்தாளமாகக் கேட்க,

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அவன் அமைதி காத்தான். இதை என்னவென்று சொல்லி விளக்குவது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

'முரளி, இதுக்கு முன்னாடி தான் இவளைப் பற்றி எந்த விவரமும் தெரியாமல் உன் வாழ்க்கைக்கு நீயே ஆப்பு அடிச்சிக்கிட்டாய். இனியாவது யோசித்துப் பேசு. சிக் கலைத் தீர்க்கப் பாரு. இருக்கும் சிக்கலை அதிகமாக் காதே' என்று அவன் மனம் எடுத்துச் சொன்னது.

அவன் தனது மடி கணினியை இயக்கி தன்னுடைய மின்னஞ்சல் முகவரிக்கு வந்திருந்த அவளுடைய ஃபோட்டோவை திறந்து அவளிடம் காட்டினான்.

அசுவாரஸ்யமாய் அவன் காட்டியதைத் திரும்பிப் பார்த்தவள், ''ஹேய்! இந்த ஃபோட்டோ உங்ககிட்டே எப்படி வந்துச்சு?'' என்று ஆச்சரியமாகக் கேட்க,

''இது தான் எனக்கு எங்க அப்பா அனுப்பின பொண்ணு போட்டோ.''

''வாட்ட்ட் இதுவா? இதையா மாமா அனுப்பினார்? அவருக்கு எப்படி இந்த ஃபோட்டோ கிடைச்சது?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இதை அனுப் பிட்டு பின்னாடியே பொண்ணு சொர்ணம் என்று சொன்னதும் நான் உன்னைப் பத்தி எந்த விஷயத்

தையும் கேட்டுத் தெரிஞ்சிக்கலை. எங்கப்பா உன்னை சொர்ணம் என்று சொன்னதும் நான் உன் பேர் பத்தின ஆராய்ச்சியில் இருந்தேன். ஒருவேளை அப்போ உன்னைப் பத்தி எங்க அப்பா சொல்லி இருக்கலாம். ஆனால் நான் கவனிக்கலை. நீ எப்படி இந்த போட்டோ விலே இப்படிக் கருப்பா.. இது மாதிரி மேக் அப் போட்டு...'' என்று அவன் இழுக்கவும்,

''இந்த ஃபோட்டோவினால் தான் முதல் நாள் இரவில் எனக்கு அக்கா, தங்கச்சி, மட்டமான பியூட்டிசியன் ஃபிரண்டு இருக்காங்களான்னு விசாரிச்சீங்களா?'' என்று கேட்டு முறுவலித்தவள்,

''இது எங்க அப்பாவும், பெரியப்பாவும் ஆசைப்பட்டாங்கன்னு எடுத்தது. எனக்கு எங்க பாட்டி சாயல் இருக்கு இல்ல.. எங்க பாட்டி சின்ன வயசிலே எப்படி இருந்து இருப்பாங்கன்னு என்னை வைச்சு போட்டோ எடுக்க விரும்பினாங்க. எங்க பாட்டி என்னை விட நிறம் கம்மி என்பதால் எனக்கு கருப்பு மேக் அப் போட்டு எங்க ரெண்டு அப்பாக்களும் அதகளம் பண்ணினாங்க.''

''உங்க ரெண்டு அப்பாக்களும்... இல்லையில்லை எங்க அப்பாவும் சேர்ந்து என் வாழ்க்கையிலே இப்படி விளையாடி இருக்க வேண்டாம். நான் இந்த போட்டோவையும் உன் ஊரையும் வைச்சு நீ படிக்காதவள்... அதாவது காலேஜ் போயிருக்க மாட்டாய் என்று முடிவு பண்ணிட்டேன்'' என்று பெருமூச்சுவிட்டான்.

உண்மையில் விஸ்வநாதன் பக்கத்து வீட்டு சேகரிடம் இரண்டு போட்டோக்களைத் தான் கொடுத்து



அனுப்பினார். ஒன்று சாதாரணமாக எடுக்கப்பட்டது. இரண்டாவது அவளது பாட்டி சாயலில் எடுக்கப்பட்டது. அவன் தான் ஸ்கேன் சென்டரில் கொடுக்கும் போது மறதியாக ஒன்றை மட்டும் கொடுத்துவிட்டான்.

அதிலும் அவளது பாட்டி மாதிரி மேக்-அப் போட்டு எடுக்கப்பட்ட போட்டோ அனுப்பப்பட்டது விதியின் சதி அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

''நீ ஸ்கூல் படிப்பெல்லாம் எங்கே படிச்சே?'' என்று கேட்டான்.

ஆதியோடு அந்தமாக அவளைப் பற்றி அனைத் தையும் தெரிந்து கொள்வோம் என்று தீர்மானித்தான்.

''நான் முதலில் இருந்தே எங்க பெரியப்பா வீட்டில் இருந்து கொண்டு திண்டுக்கல் ஸ்கூலில் படிச்சேன். சனி, ஞாயிறுக்கு நானும், சுதா அண்ணனும் எங்க வீட்டுக்கு போவோம். நாங்க ரெண்டு பேரும் ஒரே வீட்டிலே தான் இருப்போம். லீவுன்னா வத்தலகுண்டு வந்திடுவோம்.''

அண்ணனைப் பற்றிப் பேசியவுடன் அவள் மனதில் எழுந்த உவகை முகத்திலும் பரவியது.

''உன் செல்லில் என் நம்பரை என்ன பேர் போட்டு பதிஞ்சு வைச்சிருக்கே?'' என்று கேட்டான்.

''அதைக் காட்ட முடியாமல் தானே ஒரு மாசத்துக்கு உங்களுக்கு சமைச்சுத் தரேன் என்று ஒத்துக்கிட்டு இருக்கேன். அப்புறம் எதுக்கு நான் அதை உங்ககிட்டே காட்டணும்?''

''அவ்வளவு மோசமா கிண்டல் பண்ணி இருந்தியா? கண்டிப்பா இந்நேரத்துக்கு அந்தப் பேரை மாத்தி இருப்பே! என்னன்னு பதிஞ்சு வைச்சிருந்தே? முட்டாள் முரளின்னா?'' என்று அவன் கேள்வி கேட்க,

அவள் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

''முரளி வேண்டாம். அவ தன் போனில் ஒரு பேரை தான் பதிஞ்சு வைச்சிருந்தாள். நீ கெஸ் பண்ணுறேன் பேர்வழின்னு பல பேர் சொல்லி உனக்கு நீயே குழி தோண்டிக்காதே!'' என்று சப்தமாக அவன் வாய்விட்டு கூறவும் அவள் நகைத்தாள்.

''நீ முதல்ல உன் செல்போன் நம்பர், உங்க வீட்டிலே உள்ளவங்க நம்பரெல்லாம் கொடு'' என்று கேட்டு வாங்கி அதைப் பதிவு செய்து கொண்டான்.

காலையில் தன் நம்பர் தெரியாமல் அவன் முழித்துக் கொண்டு நின்றதை மனக் கண்ணில் கொண்டு வந்து சிரித்தாள்.

''என்னைப் பார்த்தா காமெடி பீஸ் மாதிரி இருக்கா?''

''ஒழுங்கா எதையுமே விசாரிச்சு தெரிஞ்சுக்காமல் தப்பும் தவறுமா கெஸ் பண்ணிட்டு, பேர் வைக்கிறதிலே பெரிய ஸ்பெஷலிஸ்ட் மாதிரி தலையைச் சுத்தி மூக்கைத் தொடுற மாதிரி ஸ்ரீ என்று பேரைக் கண்டு பிடிச்ச உங்களைப் பார்த்தால் எனக்கு வேற எப்படித் தோணும்?'' என்று அவள் சிரித்துக் கொண்டே கேட்க,

''முரளி உன் இமேஜ் டோட்டல் டேமேஜ்'' என்று வாய்விட்டுப் புலம்பியவன் அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவனாக,



''இன்னைக்கு ஆபிஸ்க்கு வரும் போது எவ்வளவு நல்லா டிரஸ் பண்ணி இருந்தே. ஆனால் போன வாரம் முழுசும் ஏன் அப்படிக் கண்றாவியா டிரஸ் பண்ணினே?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்கவும்,

''அதுக்கு காரணம் உங்க மாமியாரும், என் மாமியாரும் தான்'' என்றாள்.

''அவங்களா? அப்படி என்ன சொன்னாங்க?''

''உங்க அம்மா மருமகள் மேல உள்ள பாசத்திலே எனக்கு சேலையா எடுத்துக் கொண்டு வந்து குவிச்சிட்டாங்க. போன வாரம் முழுசும் அதைத் தான் உடுத்தினேன்.''

''எங்க அம்மா செலக்ஷனா? சரி நல்லா இல்லைன்னா ஏன் அதை உடுத்தினே?''

''அதுக்கு காரணம் எங்க அம்மா. நித்யா உன் மாமியார் ஆசையா எடுத்திட்டு வந்து தந்திருக்காங்க. அதனால முதல் வாரம் முழுசும் நீ அதைத் தான் உடுத்தணும் என்று உத்தரவு போட்டுட்டாங்க. அதான்...''

''குடும்பம் மொத்தமும் சேர்ந்து நின்னு எனக்கு எதிரா செயல்பட்டு இருக்கீங்க. ம்ம்ம்...'' என்று பெருமூச்சு விட்டான்.

நித்யா இரு நிமிடங்கள் கண்மூடி அமைதியாக இருந்தாள்.

'இவ்வளவு நேரமும் அவருக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்ததால் ஏதோ ஒன்றை நாம் மனதின்

ஓரத்திற்கு தள்ளி வைத்தோம். அது எது?' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அது என்னவென்று நினைவிற்கு வந்த உடன் கண் திறந்தவள் கணவனின் கண்களை உற்று நோக்கியவாறு,

''என் போட்டோ பார்த்ததும் என்னை உங்களுக்கு பிடிக்காததால என்னைப் பத்தி எதையுமே விசாரிக்காமல் விட்டுட்டீங்கன்னா எப்படி இந்தக் கல்யாணத்துக்கு நீங்க சம்மதிச்சீங்க? உங்களை யாராச்சும் கட்டாயப்படுத்தினாங்களா?'' என்று கேட்டாள்.

அவன் ஏதோ மழுப்பலாக சொல்ல ஆரம்பிக்க...

''ப்ளீஸ் உண்மையை மட்டும் சொல்லுங்க. நீங்க என்னைப் பத்தி தப்பும் தவறுமா புரிஞ்சுக்கிட்டீங்க என்பது நம்ம முதல் ராத்திரியிலே எனக்கு தெரிஞ்சு போச்சு. நானும் ஒரு வாரம் உங்களை ஏமாத்தலாம் என்று முடிவு பண்ணி பொய்க்கு மேல பொய்யா சொன்னேன். அட்லீஸ்ட் இனிமேலாச்சும் உண்மையை மட்டும் பேசுவோம். உண்மையைச் சொல்லுங்க'' என்றவள்,

''நீங்க எப்படி என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சீங்க?'' என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள்.

''எங்க அப்பா, அம்மா என்னிடம் சம்மதம் கேட்கலை. நீங்க பார்க்கிற பொண்ணைத் தான் நான் கல்யாணம் பண்ணுவேன் என்று அவங்ககிட்டே சொல்லி இருந்தேன். அதனால அவங்க பத்திரிக்கை அடிச்சு வந்ததுக்கு



அப்புறம் தான் உன் போட்டோவை எனக்கு அனுப்பி வைச்சாங்க'' என்று மெதுவாகக் கூறவும்,

''அப்ப என்னைப் பிடிக்காமல் தான் தாலி கட்டினீங்களா?'' என்று வருத்தத்துடன் கேட்டாள்.

''அப்படின்னு சொல்ல முடியாது...'' என்று அவன் மழுப்பலாகத் தொடங்க,

''ஆனால் பிடிச்சுப் போயும் தாலி கட்டலை தானே?'' என்று கேட்டாள்.

இதற்கு என்ன பதில் சொல்ல என்று அவன் யோசிக்க எடுத்துக் கொண்ட சில நொடிகளில் அவள் அந்த இடத்தை விட்டு எழுந்து செல்லும் முடிவை எடுத்தாள்.

''ஸ்ரீ, நான் சொல்லுறதைக் கேட்டுவிட்டுப் போ'' என்று அவன் அழைக்க,

''எதுவா இருந்தாலும் ஒரு நாலு நாள் கழிச்சுச் சொல்லுங்க. ஏற்கனவே நிறைய கேட்டுட்டேன். ப்ளீஸ்...'' என்று சொல்லி அகன்றாள்.

அவனும் தன்னுடைய சமாதானத்தை சில நாட்கள் கழித்துச் சொல்வோம் என நினைத்தான். தான் சொல்லப் போகும் வார்த்தைகள் தங்கள் திருமண வாழ்க்கையை உறுதிப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும் என்று நினைத்தான். எக்காரணம் கொண்டும் சிக்கல் பெரிதாகி விடக்கூடாது என்று நினைத்தான்.

அன்றிரவு இருவரும் வழக்கம் போல் ஒரே படுக்கையில் தான் படுத்தார்கள். ஆனால் விலகியே படுத்திருந்தார்கள்.

நித்யாவிற்கோ தங்களது கூடல் பரஸ்பர அன்பினால், காதலால் நிகழ்ந்ததாக இருக்க வேண்டும் என்று ஆசை.

முரளியோ, 'இத்தனை நாள் இவளைத் தள்ளி வைத்து விட்டு இப்போது போய் வா குடும்பம் நடத்தலாம் என்று கூறினால் என்னை நானே இதை விடக் கேவலப் படுத்திக் கொள்ள முடியாது' என்று நினைத்து அமைதி காத்தான்.

# 12

மறுநாள் காலையில் அவள் சமையலறையில் வேலை களைப் பார்க்க ஆரம்பித்த போது அங்கே நுழைந்தவன்,

''இதுநாள் வரை நீ வீட்டில் தானே இருக்கே என்று உன்னைத் தனியாச் சமைக்க விட்டேன். இப்ப நீயும் என் கூட ஆபிஸ்க்கு கிளம்பணுமே. அதனால நானும் ஹெல்ப் பண்ணுறேன். எனக்கு சமைக்கத் தெரியாது. நீ பார்த்து இதைச் செய் அதைச் செய் என்று சொன்னால் செஞ்சு தரேன்'' என்றான்.

அவன் தன்னிடம் சமாதானப் புறாவைப் பறக்க விடுவதற்காகத் தான் இப்படி வந்து சொல்வதாக நினைத்தாள். ஆனால் அவனது முகத்தில் இருந்த தீவிரம் அவன் உணர்ந்து தான் சொல்கிறான் என்பதை நிரூபித்தது.



அடுத்து என்ன செய்யணும் என்று அவன் கேட்டுக் கொண்டே இருந்தது அவளுக்கு தொல்லையாக இருந்த போதும், அவன் தனக்கென்று உதவி செய்ய முனைவது அவளுக்கு ஒரு வித நிறைவைத் தந்ததால் அவள் அவனது குறுக்கீட்டை ஒன்றும் சொல்லாமல் அனுமதித் தாள்.

இருவரும் சரளமாகப் பேசிக் கொள்ளவில்லை என்றாலும் பேசாமலும் இருந்து விடவில்லை. அவள் சற்றே ஒதுங்கிப் போனாள். ஆனால் அவன் எப்போதும் போல் பேசி அவளை ஒதுங்க விடாமல் பார்த்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் அவரவர் வண்டியில் அலு வலகம் சென்று வந்தனர்.

சுதாகரன் இவர்களது திருமண போட்டாக்கள் அடங்கிய சி.டியை அனுப்பி வைத்தான்.

அதை முரளி ஆர்வத்தோடு பார்த்தான். அன்று மனைவியின் புறம் பார்வையைத் திருப்பாது இருந்தவன் இன்று மனைவியைத் தவிர வேறு யாரையும் பார்க்க வில்லை. சில போட்டோக்களை தனது கைப்பேசியில் ஏற்றிக் கொண்டான்.

அன்றிரவு தனது அலமாரியை அடுக்கிக் கொண் டிருந்தவன் தனது ஜீன்ஸ் பேண்ட்டைப் பார்த்ததும்,

''ஸ்ரீ, எதுக்கு அன்னைக்கு என்னைய நாயை விட்டுக் கடிக்க விட ப்ளான் பண்ணினே?'' என்று கேட்டான்.

'அவள் நாம எப்போடா அப்படிச் செய்தோம்?!' என்று விழித்துக் கொண்டு நிற்க,

''அதான்ம்மா அன்னைக்கு ஜீன்ஸ்க்கு ஆரன்ஞ் கலர் சாயம் போடச் சொன்னியே'' என்று அவன் நினைவு படுத்த,

அவள் அப்பொழுதும் அமைதியாக இருக்க, அவளைப் பேச வைத்தே தீர வேண்டும் என்ற முனைப்போடு இருந்தவன்,

''நாயை விட்டுக் கடிக்க விடுற அளவுக்கு உனக்கு என் மேல அப்படி என்ன காண்டு?'' என்று மீண்டும் கேட்க,

அவள் தன் வாய் திறந்து, ''என்னால கடிக்க முடியாது. அதான் நாயாச்சும் கடிக்கட்டும் என்று பார்த்தேன்'' என்றாள் கடுப்புடன்.

''உனக்கு என்னைக் கடிக்கணும். அவ்வளவு தானே! இந்தா கடிச்சிக்கோ'' என்று அவன் தன் உள்ளங்கையை அவள் வாயருகே கொண்டு போய் நீட்ட,

அவள் பேந்த பேந்த விழித்தாள். அவன் அது மாதிரி செய்வான் என்று எதிர்பார்க்காததால் செய்வதறியாது திகைத்தாள்.

பின் நிமிர்ந்து கணவனின் முகம் பார்க்க... அவனது கண்கள் சிரித்துக் கொண்டு இருந்தன. அவனது இதழ்களில் தவழ்ந்த மோகனப் புன்னகை அவளுக்கு அந்த மாயக் கண்ணனை நினைவூட்டியது.

இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந் தவள் தன் வாயருகே இருந்த அவனது கையை விலக்கிவிட்டு எம்பி அவனது சிவந்த கன்னத்தை



வலிக்காதவாறு கடித்தாள். அவனது மீசையின் முடி அவளது கன்னத்தில் உராய்ந்ததில் அவள் கிறங்கிப் போய் கண் மூடி நிற்க,

அவன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றான். சில நொடி களுக்கு பின் கண் திறந்து பார்த்தவள் கணவன் அசை யாது நிற்பதைக் கண்டு முகம் வாடினாள். அந்த இடம் விட்டு அகல ஆரம்பித்தாள்.

அவளது வாட்டத்தைப் பார்த்தவன் அவளைக் கைப்பிடித்து தடுத்து தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான். அவள் நெகிழ்ந்து கொண்டிருக்கும் போதே அவளை விடுவித்தவன் அவளது உச்சியில் அழுத்தமாக ஒரு முத்தம் கொடுத்துவிட்டு அந்த அறையை விட்டு வெளியே போனான்.

இருவருமே தங்கள் மனதை மறைக்க ஆரம்பித் தார்கள்.

இரு தினங்கள் எந்தப் பிரச்சனையுமின்றி கழிந்தது.

மூன்றாவது நாள் காலையில் அவள் தாமதமாக எழுந்தாள். அவன் அதை விடத் தாமதமாக எழுந்தான்.

இருக்கும் நேரத்தில் காலை மற்றும் மதிய உணவைச் செய்ய முடியாது என்பதால் அவளுக்கு கடுப்பாக இருந்தது. அந்தக் கடுப்பை அவள் முரளியின் மீது காட்டினாள்.

''உதவி செய்யுறேன் என்று சொல்லி ரெண்டு நாள் படம் காட்டுனீங்க. இன்னைக்கு கிச்சன் பக்கமே எட்டிக்

கூடப் பார்க்கலை. அவ்வளவு தானா? நானே தான் போராடணுமா? சும்மா பேச்சுக்குத் தான் சொன்னீங்களா?'' என்று கடுப்படிக்க,

தாமதமாக எழுந்துவிட்டோமே என்று அவன் வருந்திக் கொண்டிருந்த நிலையில் அவள் குத்திக் காட்டிப் பேசியதும், அவனுக்கு கோபம் வந்தது.

''மனுஷன் ஒரு நாள் கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன். அது ஒரு குற்றமா? இல்லை நீ எழுந்துக்கும் போது என்னை எழுப்பி விட்டிருக்க வேண்டியது தானே'' என்று கோபமாகக் கேட்டான்.

''ஆமா எனக்கு இருக்கிற வேலை பத்தாதுன்னு உங்களுக்கு திருப்பள்ளி எழுச்சி வேற நான் பாடுறேன்'' என்று அவள் அலுத்துக் கொள்ளவும்,

''நீ ஒண்ணும் என்னை எழுப்ப வேண்டாம். நாளையில் இருந்து நானே அலாரம் வைச்சி எழுந்துக்கிறேன். இன்னைக்கு மதியம் நாம கேன்டீனில் சாப்பிட்டுக் கலாம். இப்ப காலை சாப்பாட்டுக்கு முடிஞ்சா சட்னி அரைச்சு இட்லியோ தோசையோ பண்ணு. இல்லாட்டி அதையும் போற வழியிலே சாப்பிட்டுக்குவோம்'' என்றதும்,

'ஆமா இவர் ஒரு வண்டியிலே வருவார். நான் ஒரு வண்டியிலே போவேன். அந்த ஹோட்டலில் போய் ஒரே டேபிளில் உட்காருவாரா இல்லை பக்கத்து டேபிளில் உட்காருவாரோ யார் கண்டா' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே அவள் காலை உணவை மட்டும் தயாரித்தாள்.



அவன் அமைதியாகச் சாப்பிட்டு விட்டு அவளிடம் சொல்லிக்காமல் கூட அலுவலகம் கிளம்பினான்.

காலையில் தாமதமாக எழுந்ததும், கணவனின் கோபமும் அவளுக்கு தலைவலியை உண்டு பண்ணியது.

அன்று அலுவலகத்திலும் வேலை அதிகமாக இருந்ததால் அவளது தலைவலி அதிகமாகிக் கொண்டே போனது.

அதிகத் தலைவலியால் செய்த வேலையையும் அவள் தப்பும் தவறுமாகச் செய்ய அவளது மேலதிகாரியான முரளி அவளைத் திட்டித் தீர்த்துவிட்டான்.

''இதை முடிக்காமல் இன்னைக்கு நீங்க வீட்டுக்குப் போகக் கூடாது'' என்று அவன் கட்டளையிட அவளுக்கு கண்ணோரம் கரித்துக் கொண்டு வந்தது.

தனது இடத்திற்கு வந்தவள் அந்த மேஜையில் அப்படியே தலையைக் கவிழ்த்தாள்.

''என்னாச்சு நித்தி?'' என்று அனு அவளை விசாரிக்க,

தன்னை நிலைப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தவள், ''ஒண்ணுமில்லை. வேலையில் தப்புப் பண்ணிட்டேன். திட்டிட்டார்'' என்றாள்.

''யாரு? முரளியா?'' என்று அனு கேட்கவும்,

''அவர்தான்'' என்றவள் தனது வேலையில் மூழ்கினாள்.

அனைவரும் கிளம்ப அனுவும் அவளிடம் விடைபெற வந்தாள்.

''நித்தி நான் உனக்கு துணை இருக்கணுமா? இன்னைக்கு ஹாஸ்டலில் என் ரூம்-மேட்டை டாக்டரிடம் கூட்டிட்டுப் போக அப்பாயின்மென்ட் வாங்கி இருக்கேன். அதனால நான் போகணும். நீ சமாளிச்சுக்குவியா?'' என்று தயக்கத்துடன் கேட்கவும்,

''இல்லை அனு. நீ போ. நான் பார்த்துக்கிறேன்'' என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தாள்.

எவ்வளவோ போராடியும் அவளால் வேலையை முடிக்க முடியவில்லை. அலுவலகமே காலியாக ஆரம்பித்தது.

அவர்களது பிராஜெக்ட் மானேஜர் அவளிடம் ஏன் வீட்டிற்குச் செல்லவில்லை என்று கேட்டு அறிந்தார். பின் அவரும் தன் வழியில் சென்றுவிட்டார்.

தனியாக அமர்ந்து வேலை செய்வதால் அவளுக்கு கொஞ்சம் பயமாக இருந்தது. அதனால் வேலையில் கவனம் செலுத்த முடியாமல் போனது.

பிராஜெக்ட் மேனேஜர் சுந்தர் செல்லும் வழியில் முரளியைப் பார்த்து, ''என்னாச்சு முரளி? அந்தப் பொண்ணை வேலையை முடிச்சிட்டுத் தான் போகணும் என்று சொன்னீங்களாம். பாவம். புதுசா கல்யாணம் ஆன பொண்ணு. வீட்டுக்குப் போக விடுங்க. வீட்டிலே தேடப் போறாங்க'' என்றார்.

''அதுக்கு என்ன பண்ணுறது சுந்தர்?'' என்று முரளி அலட்சியமாகத் தோள் குலுக்கவும்,

''பார்த்துக்கிட்டே இருங்க முரளி. நித்யா உங்களுக்கு சாபம் கொடுக்கப் போறாங்க. நாளைக்கு உங்க



வைஃபை அவங்க மேலதிகாரி பிடிச்சு வைச்சுக்கப் போறார்'' என்றதும்,

முரளி வாய்விட்டு நகைத்தான்.

''சுந்தர், நித்யா என்ன சாபம் கொடுப்பாங்கன்னும் எனக்குத் தெரியாது. அது பலிக்குமா பலிக்காதான்னும் எனக்குத் தெரியாது. ஆனால் உங்களுக்கு கரி நாக்கா? நீங்க சொன்னது மட்டும் உடனே பலிச்சிடுச்சு'' என்றான்.

''என்ன முரளி சொல்லுறீங்க. புரியலை'' என்று அவர் விழிக்க,

''இந்த நிமிஷம் என் வைஃபை அவ சீனியர் பிடிச்சுத் தான் வைச்சிருக்கான்'' என்றதும்,

''உங்க வைஃபா? உங்களுக்கு கல்யாணம் பிக்ஸ் ஆகிடுச்சா? சொல்லவே இல்லை. கங்கிராட்ஸ்'' என்று அவர் வாழ்த்துத் தெரிவிக்க,

அவன் முறுவலித்துக் கொண்டே தனது கைப்பேசியில் இருந்த தங்களின் கல்யாண போட்டோக்களைத் திறந்து அவரிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் பார்த்தவர் நம்ப முடியாத ஆச்சரியத்துடன், ''அடப்பாவி!'' என்றார்.

அவரிடம் தான் அமெரிக்காவில் இருந்து வந்த அன்று திருமணம் முடிந்தது என்று மட்டும் சுருக்கமாக விவரம் கூறினான்.

''நான் பார்த்துக்கிறேன் சுந்தர். நீங்க கிளம்புங்க'' என்று அவரை அனுப்பி வைத்துவிட்டு நித்யாவை நோக்கிச் சென்றான்.

அவளருகே சென்றவன் அவளது தோளில் கை வைக்க அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இத்தனை நேரம் அவளது கண் பார்வையில் முரளி தென்படாததால் அவனும் வீட்டிற்கு சென்று விட்டான் என்று அவள் தப்புக் கணக்கு போட்டுவிட்டாள்.

இப்பொழுது அவனைக் கண்டதும் அடக்கி வைத்திருந்த கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

''ஹேய் ஸ்ரீ! என்னாச்சு? எதுக்கு இப்ப அழறே?'' என்று கேட்டுக் கொண்டே தன் கைக்குட்டையால் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''காலையிலே நான் உங்களை நக்கல் பண்ணியதற்காக என்னைப் பழி வாங்குறீங்களா?'' என்று கேவலுடனே கேட்க,

''ஸ்ரீ, வீட்டு விஷயம் வீட்டோட... இது ஆபிஸ். அதையும் இதையும் குழப்பக் கூடாது. நீயே சொல்லு. நீ செஞ்ச வேலை சரியா? அதை உன் மேலதிகாரியா நான் சுட்டிக் காட்டினேன். அது தப்பா? உன் கணவனா உன்னைத் தனியா விட்டுட்டு வீட்டுக்குப் போகாமல் இங்கே தானே இருக்கேன். அப்புறம் ஏன் என்னைக் குறை சொல்லுறே?'' என்று கேட்டவன்,

''வேலையை முடிச்சியா இல்லையா?'' என்று கேட்க அவள் இல்லை எனும் விதமாய் தலையாட்டவும்,

''தள்ளு. நான் பார்க்கிறேன்'' என்று அவளை நகரச் சொல்லிவிட்டு அவளது கணினி முன் அமர்ந்து அந்த வேலையை அவன் தொடர்ந்தான்.



அவன் வேலையில் மும்முரமாக ஈடுபட, நித்யாவோ கணவனை நோட்டம் விடும் வேலையைச் செவ்வனே செய்தாள். அலுவலகத்தில் ஆட்கள் குறைவாக இருந்தது வேறு அவளுக்கு வசதியாகப் போயிற்று.

வேலைக்கு நடுவே அவளைத் திரும்பிப் பார்த்தவன் அவள் தன்னை இமைக்காது பார்ப்பதைக் கண்டு சந்தோஷித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கிண்டலில் ஈடுபட்டான்.

''ஆபிஸ் வேலையை ஒழுங்கா பார்க்காதே. ஆனால் உன் ஹஸ்பண்டை சைட் அடிக்கிற வேலையை மட்டும் நல்லா பாரு'' என்று நக்கலாகச் சொன்னதும்,

''என் ஹஸ்பண்ட்... என் கண்ணு. நான் பார்க்கிறேன். உங்களுக்கு ஏன் பொறாமை? என்னை நம்ம கம்பெனியே அதைத் தான் செய்யச் சொல்லுது.''

''எதை? என்னை சைட் அடிப்பதையா? கம்பெனி உன்கிட்டே வந்து சொல்லுச்சாக்கும்?''

''இல்லையா பின்னே? வேற பிராஞ்சில் இருந்த என்னை எதுக்கு இங்க மாத்தினாங்கன்னு நினைக்கிறீங்க? நித்யா நீங்க அந்த ஆபிஸிலே உங்க ஹஸ்பண்டுக்கு கீழே போய் வேலை செய்வதா பாவ்லா மட்டும் காட்டுங்க. அவர் ரொம்ப நல்லவர்ர்ர்ர். அவரே உங்க வேலையும் சேர்த்து செய்வார் என்று சொல்லி தான் அனுப்பினாங்க. சும்மா உட்கார்ந்திருப்பதுக்கு பதிலா உங்களை லுக் விட்டுட்டு இருக்கேன். நான் பார்த்தா உங்களுக்கு ஏன் பொத்திக்கிட்டு வருது?''

'பத்திக்கிட்டு வருதா? கோபம் பத்திக்கிட்டு வரலை. மோகம் தான் பத்திக்கிட்டு எரியுதுடி. அதை என்னால சொல்ல முடியலை' என்று மனசுக்குள் புலம்பிக் கொண்டவன் மீண்டும் வேலையில் ஆழ்ந்தான்.

அவளது தலைவலி சற்றே மட்டுப்பட்டு இருந்தாலும் முற்றிலுமாக அகலவில்லை. அவள் தன் தலையைத் தட்டிக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து,

''எதுக்கு தலையைப் போட்டு இந்தத் தட்டு தட்டுறே? உள்ள இருக்கிற கொஞ்சூண்டு மூளையும் கலங்கிடப் போகுது. அப்புறம் யாருடா நீ மானிடான்னு என்னைப் பார்த்து கேட்டாலும் கேட்பே'' என்றதும்,

''உங்க ஜோக் சகிக்கலை'' என்று அவனை வம்பிழுத்தவள், பின் தயங்கிய குரலில், ''காலையில் இருந்தே தலை வலிக்குதுங்க...'' என்று பரிதாபமாக இழுத்தாள்.

செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு அவள் புறம் திரும்பியவன், ''ஏதாச்சும் மாத்திரை போட்டியா?'' என்று கேட்டான்.

இல்லை என்று அவள் உதட்டைப் பிதுக்க... ப்ச் என்று சலித்துக் கொண்டவன்,

''டீ குடிச்சால் சரியா வருமா? இல்ல இப்பவாது மாத்திரை போடுறியா?'' என்று கேட்டான்.

''இல்லை ஏதாச்சும் தைலம்.. ஜண்டு பாம் தேய்ச்சிட்டு தூங்கி எழுந்தால் சரியாப் போயிடும். எப்பவும் அப்படித்தான் செய்வேன்.''



''அப்ப நீ வீட்டுக்கு கிளம்பு. போற வழியிலே சாப்பாட்டை வாங்கிட்டு போ. சாப்பிட்டுத் தூங்கு. என்னிடம் இன்னொரு சாவி இருக்கு. அதனால நானே திறந்துக்குவேன்.''

''இல்லை. நீங்களும் வாங்க...'' என்று அவள் இழுத்ததும்,

''எனக்கு கோபம் வர வைக்காதே. சொன்னதைச் செய். என் சாப்பாட்டை நான் பார்த்துக்கிறேன்'' என்று சொல்லி அவளை அனுப்பினான்.

'பாசத்தைக் கூட மிரட்டலாக் காட்டுறதைப் பாரு. வெவ்வவே' என்று பழித்துக் கொண்டே இடத்தைக் காலி செய்தாள்.

## 13

அவள் வீடு சென்று சேர்ந்ததும் அவனது கைபேசிக்கு அழைத்து, ''என்னங்க, நான் சாப்பிட்டேன். நீங்க கிளம்பிட்டீங்களா? இல்லையா?'' என்று விசாரித்தாள்.

''பத்து நிமிஷத்திலே முடிஞ்சிடும். கிளம்பிடுவேன். நீ தூங்கு ஸ்ரீ'' என்றதும்,

''சாரிங்க'' என்று கம்மியாகிப் போன குரலில் சொல்லவும்,

''எதுக்கும்மா சாரி. இதுக்கு தானே உன்னை கம்பெனியே எனக்கு கீழே வேலைக்கு அனுப்பி வைச்சிருக்கு'' என்று கேலியாகச் சொன்னவன்,

"நீயே இந்த பிராஞ்சுக்கு டிரான்ஸ்பர் வேணும் என்று கேட்டு வாங்கினாயா ஸ்ரீ?'' என்று கேட்டான்.

"சே! சே! அது என்னோட அதிர்ஷ்டம். உங்களோட துரதிர்ஷ்டம். அதுவா நடந்துச்சு. நானும் என் வேலையை உங்க தலையிலே கட்டிட்டு ஹாயா இருக்கேன்'' என்று அவள் சிரித்தாள்.

''எல்லா நாளும் இப்படியே இருக்க மாட்டேன் ஸ்ரீ'' என்று சிரித்துக் கொண்டே எச்சரித்தவன் அழைப்பைத் துண்டித்தான்.

அவள் படுக்கலாம் என்று நினைக்கும் போது சுதாகரன் அழைத்தான்.

''என்ன அண்ணா?''

''என்னடா குட்டி. ரொம்ப அலுப்பா பேசுறே. வேலை ரொம்ப ஜாஸ்தியா?''

''இல்லைண்ணா தலைவலி. அதான்...''

''அப்ப நீ தூங்கு நித்யா.''

''இல்லைன்னா நீ சொல்ல வந்ததைச் சொல்லு.''

''நான் சும்மா தான் போன் பண்ணினேன். ஆபிஸில் ரொம்ப வேலையா? அதான் தலைவலி வந்திடுச்சா?''

''வேலை அதிகம் இல்லை. ஆனால் தலைவலிங்கிறதால என்னால வேலையைச் சரியா செய்ய முடியாமல் போச்சு. தப்புத் தப்பா வேலை செஞ்சு வைச்சேன். என் பாஸ்கிட்டே வசவு வேற வாங்கினேன்.''

''அச்சச்சோ. அப்புறம்... ரொம்ப வஞ்சிட்டாரா?''



''ஆமாம் ரொம்ப வஞ்சார். என்னை எப்படி நீ திட்டப் போச்சுன்னு வஞ்சதுக்கு தண்டனையா என் வேலையை அவர் தலையிலே கட்டிட்டு நான் வீட்டுக்கு வந்திட்டேன்.''

அவனுக்கு அப்பொழுது தான் விஷயம் விளங்க, "நித்யா நீ மாப்பிள்ளையவா பாஸ்ன்னு சொல்லுற?'' என்று கேட்டான்.

''எல்லாம் அந்த நல்லவரைப் பத்தி தான்'' என்று அவள் சிரிக்கவும்,

''அடிப்பாவி! அவரையா நீ என்று என்கிட்டவே சொல்லுறே!'' என்று தங்கையைக் கண்டித்தான்.

''அடப் போங்கண்ணா! நீங்க வேணா உங்க மாப்பிள்ளைக்கு மரியாதை கொடுங்க. என்னால முடியாது'' என்றதும்,

அவன் உடனே தன் தங்கைக்கு ஒரு நீண்ட அறிவுரைப் பட்டியலை வாசிக்க ஆரம்பிக்க...

''அண்ணாஆஆஆ! நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். அதெல்லாம் அவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை சரியாத் தான் கொடுக்கிறேன். நீங்க வேற ரம்பம் போட்டு என் தலைவலியை அதிகப் படுத்தாதீங்க'' என்றதும்,

''ஹேய்! தலை வலிக்குதுன்னு சொன்னே இல்ல. நீ தூங்கு'' என்று அழைப்பை வைத்து விட்டான்.

'தெரியாமல் ஒரு 'நீ' சொன்னதுக்கே இந்த வசவு கிடைக்குது.

அலுவலக விதிப்படி நான் மட்டும் அவர் பேரைச் சொல்லிக் கூப்பிட ஆரம்பிச்சு... அது என் வீட்டு ஆளுங் களுக்கு தெரிஞ்சது.. அவ்வளவுதான். என் குடும்பம் மொத்தமும் சாமியாடி எனக்கு வேப்பிலை அடிக்க ஆரம்பிச்சிடுவாங்க.

பேரைச் சொல்லாமல் 'என்னங்க' என்று கூப்பிட்டால் ஆபிஸ் மக்கள் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.

ஆபிஸில் அவர் பேரைச் சொல்லிக் கூப்பிடவும் முடியாமல், என்னங்கன்னு சொல்லவும் முடியாமல் நான் தவியா தவிக்குறேன்' என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தவள் விரைவிலேயே தூங்கிப் போனாள்.

அங்கே அலுவலகத்தில் மேலும் அரை மணி நேரப் போராட்டத்திற்கு பின் வேலையை முடித்த முரளி அந்த கணினியை அணைத்துவிட்டு எழுந்தான்.

அவன் வீடு வந்து சேர்ந்த போது அவன் வந்தது கூடத் தெரியாமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

''பாரு! மகாராணி தூங்குவதை'' என்று கிண்டலடித்தவன் அவள் அருகே சென்று படுத்துக் கொண்டான்.

'தலைவலித் தைலம் தடவணும் என்று சொன்னாள். தடவினாளா?' என்று அவள் நெற்றியில் கை வைத்துப் பார்க்க... பிசுபிசுப்பாய் எதுவும் தெரியாததால்,

''அதைக் கூட ஒழுங்கா செய்யலையா?'' என்று திட்டிக் கொண்டே எழுந்து போய் ஜண்டு பாம் எடுத்து வந்து தடவிவிட்டான்.



''கொஞ்சமாச்சும் அசையுறாளா பாரு. கும்பகர்ணி'' என்று செல்லமாய் திட்டிக் கொண்டே படுத்தவன்,

'நாளைக்காவது சீக்கிரமா எழுந்துக்கணும். எப்படியும் சமையல் செய்ய நமக்குத் தெரியாது. பாவ்லா தான் பண்ணுறோம். அதைக் கூட இன்னைக்கு காலையிலே செய்யலைன்னு தான் மேடத்துக்கு அம்பூட்டு கோபம். வேலை செய்யலைன்னு கோபமா இல்லை நாம பக்கத்திலே இல்லைன்னு கோபமா?

பக்கத்திலே இல்லைன்னு தானோ? அப்படியாடி ஸ்ரீ குட்டி? உனக்கு உன் முரளி பக்கத்திலேயே இருக் கணுமா?

நீ வேண்டும் என்றே தான் பிரான்ஞ் மாறி வந்தாய் என்று நீ ஆபிஸ்க்கு வந்த முதல் நாளே நான் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். என் டீமுக்கே வந்தது வேண்டு மென்றால் தற்செயலானதா இருக்கலாம். ஆனால் நான் உன்கிட்டே கேட்டால் பொய் சொல்லுறே.

உனக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்ல உன் ஈகோ தடுக்குதா?' என்று மனைவியைக் கொஞ்சிக் கொண்டிருந்தவன் விரைவிலேயே தூங்கிப் போனான்.

நித்யா காலையில் தான் கண்விழித்தாள். அச்சோ அசந்து தூங்கிட்டோமா? எப்ப வந்தார் என்று தெரி யலையே என்று நினைத்துக் கொண்டே குளிய லறைக்குச் சென்று பல் துலக்க ஆரம்பித்தாள்.

நெற்றியில் ஏதோ வெள்ளையாய் ஒட்டிக் கொண் டிருப்பதைப் பார்த்து அது என்னவென்று தொட்டுப் பார்த்தாள்.

அது பிசுபிசுவென்று இருந்தது. மூக்கின் அருகே கொண்டு வந்து முகர்ந்து பார்க்க அது தலைவலித் தைலம் என்பதைப் புரிந்து கொண்டாள்.

'நான் நேத்து தைலம் தடவவே இல்லையே. ஆகா இவர் தான் அந்த வேலையும் செய்தாரா?! ஆனால் அதை ஒழுங்காத் தடவக் கூடத் தெரியலை. ஒரே இடத்திலே அப்பி வைச்சிருக்கிறார்' என்று மனதுக்குள் குறை கூறிக் கொண்டாள்.

வெளியே வந்து தூங்கும் முரளியைப் பார்த்தவளுக்கு முறுவல் பிறந்தது.

அவனருகே சென்றவள், ''தாங்க்ஸ் டா கண்ணா!'' என்று கூறிக் கொண்டே அவனது நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்தவள் அவனது கைப்பேசியில் அவன் வைத்திருந்த அலாரத்தை ரத்து செய்து விட்டு சமையலறைக்கு சென்று சமைக்க ஆரம்பித்தாள்.

அலாரம் அடிக்காததால் அவன் அன்றும் தாமதமாக எழுந்து கொண்டான்.

எழுந்து மணி பார்த்தவன் குழம்பிப் போனான். அவசர அவசரமாக குளியலறைக்குள் சென்று முகம் கழுவி பல் துலக்கிவிட்டு சமையலறைக்குள் சென்று,

''சாரி ஸ்ரீ. அலாரம் அடிக்கலையா... இல்லை தூக்கத்திலே ஆஃப் பண்ணிட்டுத் தூங்கிட்டேனான்னு தெரியலை'' என்றதும்,

''நான் தான் அதை ஆஃப் பண்ணினேன்'' என்றாள்.

''எதுக்கு ஆஃப் பண்ணினே? இன்னைக்கும் காலையிலே ரெண்டு பேரும் சண்டை போட்டுட்டு ஆபிஸ் போய்... தலைவலி வந்து.. உன்னால வேலையை பார்க்க முடியாமல் போய் அந்த வேலையை என் தலையிலே கட்டுறதுக்கா? அப்புறமா உன் சம்பளத்தையும் சேர்த்து நானே வாங்கிக்குவேன் பார்த்துக்கோ'' என்று பொய்யாய் மிரட்ட,



''வாங்குவீங்க் வாங்குவீங்க. நான் வீட்டிலும் வேலை செய்யுறதால நீங்க தான் உங்க சம்பளத்தையும் சேர்த்து என்கிட்டே கொடுக்கணும்'' என்று அவள் சிலுப்பிக் கொள்ள,

''அப்படிங்களா மேடம். நான் தர மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வீங்க?''

''நான் பஞ்சாயத்தைக் கூட்டுவேன்.''

''யார் அந்த விஜயகுமார்? அதான்மா நாட்டாமை.''

''என் மாமனார் தான்'' என்று அவள் வீராப்பாய் சொல்லவும்,

''ஏன்? இல்லை... ஏன் என்று கேட்கிறேன்? உன் புருஷன் உனக்கு முழுசா வேண்டாமா?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

'வேண்டாம் என்று எப்படிச் சொல்ல முடியும்?' என்று எண்ணியவளாய் தனது வேலையைத் தொடர,

''நான் என்ன செய்யணும்? ஏதாச்சும் வேலை பாக்கி இருக்கா?'' என்று முரளி கேட்டதும்,

''மதிய சாப்பாட்டை டிபன் பாக்ஸில் அடைச்சு வைங்க'' என்றாள்.

அவன் அந்த வேலையை பார்த்துக் கொண்டே, "தலைவலி எப்படி இருக்கு ஸ்ரீ?" என்றான்.

"வைஃப் மேல ரொம்ப அக்கறைப்பட்டு தைலம் தடவி விட்டீங்க போல!" என்று போலி வியப்புக் காட்டிக் கேட்கவும்,

"என்னது அக்கறையா?" என்று போலியாக அதிர்ந் தவன்,

"நான் என் ஆபிஸ் ஸ்டாப் நித்யாக்கு இல்ல தைலம் தடவி விட்டேன். அப்புறம் அவங்க இன்னைக்கும் வேலையை செய்ய முடியாமல் இழுத்தடிக்கக் கூடாது இல்ல... அதான். நான் என் வைஃப் ஸ்ரீக்கு தடவினேன் என்று நினைச்சியா?" என்று அவளை வம்புக்கு இழுக்க,

"ஓ! உங்க ஆபிஸ் ஸ்டாப் யாருக்கு தலைவலி வந்தாலும் இப்படித் தான் தைலம் தடவி விடுவீங் களா?"

"ஆமா. அதிலே என்ன தப்பு இருக்கு. யூ நோ சம்திங். மு ரளி ஒரு ஸ்டிரிக்ட் ஆபிசர். எந்தக் காரணத்துக்காகவும் அ வனுக்கு வேலை தடைபடுவது பிடிக்காது" என்றதும் அ வளுக்கு கண்களில் கண்ணீர் நிறைந்தது.

சில நொடிகள் அமைதியாக அவளையே பார்த்துக் கொண்டு நின்றவன் அவள் தன் கன்னத்தில் வடியும் கண்ணீரைத் தனது கையால் துடைக்கவும் தான் அவள் அழுகிறாள் என்று புரிந்து கொண்டவனாய் அவள் அருகே சென்று அவளது தாடையை நிமிர்த்தி,

"நான் இந்த வீட்டுக்கு வந்த உடனே உன்கிட்டே என்ன சொன்னேன். நான் சொல்லுற எல்லாத்தையும்



நம்ப கூடாதுன்னு சொன்னேனா இல்லையா? ஆபி ஸிலே யாராச்சும் தலைவலித் தைலம் தடவிவிட்டு நீ பார்த்து இருக்கியா? ஒரு ஜோக்குக்கு சொன்னால் அதைக் கூடப் புரிஞ்சுக்கத் தெரியாமல் கண்ணைக் கசக்கிக்கிட்டு நிற்கிறே!" என்று சொல்லிக் கொண்டே அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

அப்போதும் அவளது முகம் தெளியாததைக் கண்டு,

"நான் விளையாட்டுக்கு தான் சொன்னேன். நான் ஆபிஸ் ஸ்டாப் என்று சொன்னது நம்ம ரகுவையும் தாமஸையும் மனசிலே நினைச்சித் தான். இவங்க கூட தாம்மா நம்ம ஆபிஸ் ஸ்டாப். நீ ஏன் அனுவை நினைக் கிறே?" என்றதும்,

தான் மனதில் நினைத்ததைக் கணவன் சரியாக கணித்துச் சொல்லிவிட்டதில் வெட்கம் அடைந்தவளாய் அவனது மார்பில் சாய்ந்து கொண்டு செல்லமாக அவனது புஜத்தில் குத்தினாள்.

"இந்த முரளி ஸ்ரீக்கு மட்டும் தான். அதிலே உனக்கு சந்தேகமே வேண்டாம்" என்றவன் அவளை அணைத்துக் கொண்டு நின்றான்.

சில நிமிடங்கள் அவர்கள் அந்த மோன நிலையி லேயே இருக்க...

"சரி கிளம்பு. ஆபிஸ்க்கு டைம் ஆச்சு" என்று சொல்லிக் கொண்டே அவளை விட்டு விலகிச் சென் றான்.

அன்று மூணாறில் அவள் விலக்கியதால் தனக்கு ஏற்பட்ட மனவருத்தம் திரும்பவும் வரக் கூடாது என்று

நினைத்தே அவளாக விலகும் முன் அவளை விலக்கி விட்டு அவன் நகர்ந்து சென்றதே.

தன் மனதில் காயம் ஏற்படக் கூடாது என்று நினைத்தவன் தன் மனைவியின் மனதில் பள்ளத்தை தோண்டுகிறோம் என்று புரிந்து கொள்ளவில்லை.

அன்று அவனது கன்னத்தைக் கடித்த போதும், இன்றும் அவன் தன்னை விட்டு விலகியது அவளுக்கு வருத்தத்தை அளித்தது. இன்னும் தங்களிடையே பேச்சு வார்த்தை முற்றுப் பெறவில்லை என்றபதை அவள் மனம் அறிந்தே இருந்தது.

நான்கைந்து நாள் அவகாசம் கேட்டது அவள் தான் என்கிற விஷயமும் புரிந்து தான் இருந்தது. இருப்பினும்... அவன் விலகும் போதெல்லாம் அவளது மனம் மிகவும் வாடியது.

# 14

அன்று மதியத்துக்கு மேல் முரளியும், பிராஜெக்ட் மேனேஜரும் வேலை விஷயமாக வெளியே கிளம்பிச் சென்றார்கள்.

அன்று தாமஸ் விடுமுறை எடுத்திருந்தான். மாலையில் ரவி கேன்டீன் சென்று டீ குடிக்கலாம் என்று செல்ல,

அங்கே ஒரு அலுவலக நண்பர் ''நம்ம ஆபிஸில் இருந்து கிளம்பின வண்டி அடிபட்டு சேதமடைஞ்சு நடு



ரோட்டிலே நிக்குது. அதிலே போனவங்க என்ன ஆனாங்க என்று தெரியலை'' என்றார்.

'ஹேய் நம்ம முரளி போன வண்டியா இருக்குமோ?!' என்று எண்ணிக் கொண்டே ரவி முரளியின் கைப்பேசிக்கு அழைத்துப் பார்த்தான். பதில் இல்லை என்றதும் பதட்டத்துடன் ரவி அவர்களது இடத்திற்கு வந்தான்.

''அனு, நித்யா, நம்ம முரளிகிட்ட இருந்து போன் ஏதாச்சும் வந்துச்சா?'' என்று பதட்டத்துடன் கேட்க,

''முரளிகிட்ட இருந்தா? ஒண்ணும் வரலையே ரவி. ஏன் கேட்கிறீங்க?'' என்று அனு வினவவும்,

விஷயத்தை எடுத்துச் சொன்னவன் மீண்டும் ஒரு முறை முரளியின் கைபேசிக்கு அழைத்துப் பார்த்தான்.

''ரிங் போகுதா?'' என்று அனு கேட்க,

''ரிங் போகுது அனு. ஆனால் எடுக்கலை'' என்று கவலையுடன் பகிர்ந்தான்.

அப்பொழுது தான் அவர்கள் இருவருமே அருகில் இருந்த நித்யாவைப் பார்வையிட்டனர்.

ஒரே இடத்தை வெறித்துக் கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தவளை விநோதமாக நோக்கிய அனு அவளைப் பிடித்து உலுக்க அவள் அலங்க மலங்க விழித்தாள்.

''என்னாச்சு? போன் எடுத்தாரா? நல்லா இருக்காரா?'' என்று தீனமான குரலில் நித்யா கேட்க,

''இல்லை. ரிங் போகுதாம். எடுக்கலையாம்'' என்று அனு கூறியதும், நித்யா தனது கைப்பேசியில் இருந்து அழைத்துப் பார்த்தாள்.

'முரளி போனை எடுங்க' என்று அவளது மனம் விடாது அரற்றியது.

ஐந்து முறை அவள் தொடர்ந்து முயற்சி செய்ய... அவன் எடுக்கவில்லை என்றதும் அவளது பயம் அதிகரிக்க ஆரம்பித்தது. முகம் பயத்தால் வெளிறியது.

அவளது நிலையைப் பார்த்த அனு அவளைத் தேற்ற முயன்றாள்.

அப்பொழுது அவர்களை நோக்கி வந்த அலுவலக நண்பர் ஒருவர், "விஷயம் தெரியுமா? உங்க பிராஜெக்ட் மேனேஜர் சுந்தருக்கு அடிபட்டு ஹாஸ்பிட்டலில் இருக்கிறாராம்." என்றார்.

"சுந்தருக்கு அடியா? அச்சோ! அப்படின்னா முரளி? முரளிக்கு என்ன ஆச்சு? எந்த ஹாஸ்பிட்டல்?" என்று அனுவும், ரவியும் பதட்டத்துடன் வினவ,

"அது எனக்கு தெரியாது" என்று சொல்லிவிட்டுப் போனார்.

"ஐயோ அப்ப முரளிக்கும் ஏதாச்சும்..." என்று தொடங்கிய நித்யா கண்ணீர் விட ஆரம்பித்தாள். என்ன தடுத்தும் கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் வழிந்தோடியது.

அனுவும், ரவியுமே பதட்டமான மனநிலையில் தான் இருந்தார்கள். ஆனால் நித்யா அளவிற்கு இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு முரளிதரன் ஒரு சக அலுவலகத் தோழன் மட்டுமே.

ஆனால் நித்யாவிற்கோ? முரளிதரன் அவளது கணவன். அவளது வாழ்க்கை. அதனால் அவளது பதட்டம் அதிக அளவில் இருந்தது.



அனுவும், ரவியும் நித்யாவின் நிலையைக் கண்டு தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

"ரொம்ப சென்சிட்டிவ்வா இருக்காள்" என்று அனு சொல்ல,

"ஆமாம். ரொம்ப பயந்த சுபாவம் போல!" என்று ஆமோதித்த ரவி,

"இப்ப என்ன செய்யலாம் அனு. எந்த ஹாஸ்பிட்டல் என்று தெரியாமல் எப்படித் தேடுவது?" என்று கேட்கவும் தான், நித்யாவிற்கு கணவனை வெளியே சென்று தேட வேண்டும் என்ற எண்ணமே வந்தது.

அவள் தனது இடத்தை விட்டு எழ நினைத்தாள். ஆனால் அவளது புலன்கள் அவளது கட்டுப்பாட்டில் இல்லை. அது இயங்க மறுத்தது.

"எதுக்கும் சுந்தர் நம்பருக்கு முயற்சி செய்து பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டே ரவி முயற்சித்தான்.

பலன் ஒன்றும் இல்லை என்றதும் அனு ரவியிடம், "ஊரிலே உள்ள ஒவ்வொரு ஹாஸ்பிட்டலக்கும் போன் பண்ணி கேட்போமா? அவங்க போன ஏரியாவில் இருக்கும் ஹாஸ்பிட்டலில் இருந்து ஆரம்பிப்போம்."

"இது நல்ல ஐடியா. எல்லோ பேஜஸ்'ல பார்த்து ஒண்ணு ஒண்ணா முயற்சிப்போம், அனு" என்று சொல்லிக் கொண்டு வந்த ரவி,

"ஹேய்! அங்க பாருங்க முரளி வந்தாச்சு" என்று சந்தோஷத்தில் கூவியதும்,

நித்யா கண்மூடி கடவுளுக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தாள்.

இவ்வளவு நேரமும் துக்கத்தில் வெளிவந்த கண்ணீர் இப்பொழுது சந்தோஷத்தில், நிம்மதியில் இன்னும் அதிகமாக வெளியேறியது.

அவர்களை நோக்கி வந்த முரளியிடம், ரவியும் அனுவும் விவரம் கேட்டனர்.

"நம்ம சுந்தர்க்கு அடி கொஞ்சம் பலம் தான். ஆனால் சர்ஜரி தேவைப்படும் அளவுக்கு பலமான அடி இல்லை" என்று அவன் விவரித்துக் கொண்டிருந்தான்.

"இப்ப தான்டா விஷயம் தெரிஞ்சது. என்ன பண்ணுறதுன்னு தெரியாமல் முழிச்சுக்கிட்டு இருந்தோம்" என்ற ரவி,

"எங்களை விட நித்யா ரொம்ப பயந்து போயிட்டாங்க" என்றதும்,

முரளிதரன் 'ஐயோ! அவளுக்கு என்ன ஆச்சு?' என்று மனசுக்குள் பதறிக் கொண்டே அவளிடம் விரைந்தான்.

அவனை பார்த்த விழி பார்த்தபடி, கண்களில் வழியும் நீருடன் இருந்தவளைப் பார்த்தவன்,

"எனக்கு ஒண்ணும் இல்லைம்மா. நான் நல்லா தான் இருக்கேன் ஸ்ரீ" என்று சொன்னதும்,

அவள் அவனின் சட்டை காலரைக் கொத்தாகப் பற்றி, "போன்..." என்று மட்டும் சொன்னாள். அதற்கு மேல் அவளுக்கு வார்த்தை வரவில்லை.

அவளது நடவடிக்கையைப் பார்த்த அனு புருவம் உயர்த்தினாள்.

'இவள் ஏன் இத்தனை உரிமை எடுத்துக் கொள்கிறாள்?' என்ற கேள்வி அவளுக்குள் பிறந்தது.



'அதே மாதிரி அவளை நித்யா என்று தானே நாங்கள் எல்லோரும் அழைப்பது. முரளி மட்டும் ஸ்ரீ என்று ஏன் அழைக்க வேண்டும்? இவளோ மணமானவள். அவரோ மணமாகாதவர். என்ன நடக்குது இங்கே?' என்று குழம்பிக் கொண்டிருந்தாள்.

ரவி, அனு அளவிற்கு சிந்திக்கவில்லை.

முரளி தன் மனைவியைப் பார்த்து, "ஏன் போன் பண்ணலைன்னு கேட்கிறியா? ஹாஸ்பிட்டல் போற அவசரத்திலே அதெல்லாம் ஞாபகம் இல்லை" என்று கூறிக் கொண்டே தனது சட்டையைப் பிடித்திருந்த அவளது கைகளை எடுத்துவிட்டான்.

"நாங்க எத்தனை போன் பண்ணினோம். ஏன் எடுக்கலை?" என்று ரவி கேட்டதும்,

"நீங்க பண்ணுனீங்களா?" என்று கேட்டவன் தன் கைபேசியை எடுத்துப் பார்க்க அது சைலன்ட் மோடில் இருந்தது.

"எப்போ எப்படி சைலன்ட் மோடில் போட்டேன் என்று தெரியலையே! நான் ஹாஸ்பிட்டலில் இருந்த போது வேற எந்த சிந்தனையும் இல்லை. சாரி" என்று மன்னிப்புக் கேட்டவன்,

"வாங்க. எல்லோரும் வீட்டுக்கு கிளம்பலாம்" என்று சொல்லி அனைவரையும் கிளப்பினான்.

"நான் போய் என் பேகை எடுத்திட்டு வரேன்" என்று சொல்லிக் கொண்டே ரவி பின் தங்கிவிட இவர்கள் மூவரும் நடந்தனர்.

நித்யாவின் தடுமாறிய நடையைப் பார்த்த முரளி, ''இப்ப நீ உன் ஸ்கூட்டியில் போறது அவ்வளவு நல்லதா படலை. என் வண்டியிலே போயிடலாம்'' என்று அவளைப் பார்த்துச் சொன்னவன்,

''வண்டியிலே உட்கார்ந்து வந்திடுவாயா? இல்ல ஆட்டோ பிடிக்கட்டுமா?'' என்று கேட்டான்.

நித்யா பதில் அளிக்காமல் அமைதியாக இருந்தாள்.

அவள் அருகே சென்ற அனு அவளுக்கு ஆறுதல் அளிக்க எண்ணி அவளது கைகளைப் பிடிக்க, அது மெலிதாக நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, ''நித்யா, ஆர் யூ ஆல்ரைட்? என்ன இப்படி பயப் படுறே?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டவள்,

நித்யாவின் கையில் இருந்த கைப்பேசியை எடுத்துக் கொண்டே முரளிதரனைப் பார்த்து,

''முரளி நாமளா எந்த முடிவுக்கும் வர வேண்டாம். இவளோட வீட்டுக்கு இன்ஃபார்ம் பண்ணிடுவோம். அவங்க சொல்லுறபடி கேட்போம்'' என்று சொல்லிக் கொண்டே நித்யாவின் கைப்பேசியில் இருந்து அவள் பதிந்து வைத்திருந்த மை ஹஸ்பண்ட் (என் கணவன்) என்ற எண்ணிற்கு அழைத்தாள்.

''இந்த சின்ன விஷயத்துக்கு எதுக்கு அனு அவங்க வீட்டுக்கெல்லாம் தெரிவிக்கணும். நானே பார்த்துக்கு வேன்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனது கைப்பேசியில் வெளிச்சம் பரவி அவனுக்கு அழைப்பு வந்ததைத் தெரிவித்தது.



அது தனது மனைவியின் கைப்பேசியில் இருந்து வந்த அழைப்பு என்று தெரிந்து கொண்டவன்,

'எனக்கு தான் போன் போட்டியா அனு? வீட்டுக்கு என்றதும் அவளோட அம்மா அப்பாக்குன்னு நினைச்சிட் டேன்' என்று மனதுக்குள் கூறிக் கொண்டே தனது கைப்பேசியை இயக்கி,

''சொல்லு அனு. என்ன விஷயம்?'' என்று கேட்டதும் அனு திருதிருத்தாள்.

அப்பொழுது ரவி அங்கே வர...

''என்ன அனு இப்படி முழிக்கிறே?'' என்று ரவி அவளைப் பார்த்துக் கேட்டதும்,

''இல்லை ரவி. நித்யா வீட்டுக்கு சொல்லிடலாம் என்று அவ ஹஸ்பண்டுக்கு போன் பண்ணினால் முரளி எடுக்கிறார்'' என்று நம்ப முடியாத ஆச்சரியத்துடன் அவள் சொல்ல,

''உனக்கு போன் பண்ணினால் உன் போனை ஒழுங்கா எடுக்காதே டா. ஆனால் ஊரில் உள்ளவங்க போனை எல்லாம் எடு'' என்று சொல்லிக் கொண்டே வந்த ரவி,

அப்பொழுது தான் அதன் அர்த்தம் விளங்கியவனாய், ''ஹேய்! அது எப்படி?'' என்று கேட்டதும்,

''அடப்பாவிங்களா? அப்ப இத்தனை நாளா சோத் துக்குள்ளே முழு தந்தூரி சிக்கனை மறைச்சு வைச்சீங் களா?'' என்று கேட்டுக் கொண்டே அனு நித்யாவைப் பார்க்க...

அவள் தலையை ஆட்டிக் கொண்டே அனுவைப் பார்த்து சோர்வாகப் புன்னகைத்தாள்.

''ஏன் சொல்லலை?'' என்று அவர்கள் முரளியைக் கேள்விகளால் துளைத்தெடுக்க,

''நாளைக்கு சொல்லுறேன். இப்போதைக்கு இவளை வீட்டுக்கு பத்திரமாக் கூட்டிட்டுப் போகணும்'' என்று சொன்னவன்,

''நான் போய் பைக்கை எடுத்திட்டு வரேன்'' என்று சொல்லி அகன்றான். ரவியும் அவர்களிடம் விடை பெற்று முரளியின் பின்னே சென்றான்.

இத்தனை நாட்களாக நண்பர்களிடம் தனக்கு திருமணமான உண்மையை எப்போ எப்படிச் சொல்வது என்ற முரளியின் குழப்பத்திற்கு இந்த விபத்து ஒரு முடிவு கட்டிவிட்டது.

அவர்கள் அகன்றதும் அனு நித்யாவிடம், ''அடிப் பாவி. ஒரு வார்த்தை என்கிட்டே சொன்னியா! இந்த லதா கூட சொல்லலை பாரு. அதான் முரளியை அவரு சுவருன்னு சொல்லிக்கிட்டு இருந்தியா? அனு இதைக் கூடப் புரிஞ்சுக்காமல் இருந்திட்டியே...'' என்று அவள் அங்கலாய்க்க,

நித்யா அனைத்திற்கும் ஒரு புன்னகையையே பதிலாகத் தந்தாள்.

''மகளே, இப்ப நான் உன்னைச் சும்மா விடுறேன். நாளைக்கு காலையில் வரும் போது வைச்சுக்கிறேன்'' என்று அனு கறுவினாள்.



அனுவிடம் விடைபெற்று அவள் பைக்கில் ஏறியதும் வண்டியைக் கிளப்பிய முரளியிடம், ''நாம கோயிலுக்குப் போவமா?'' என்று கேட்டாள்.

அவனோ, ''ஹாஸ்பிட்டல் போயிட்டு வந்ததால வீட்டுக்கு போய் குளிச்சிட்டு அதுக்கு அப்புறமா வேணும்ன்னா போவோம்'' என்றான்.

சரி என்று சொல்லி அவர்கள் வீட்டிற்கு வந்து அவன் குளித்த பின்பு கோவிலுக்குச் சென்று பின் சாப்பிட்டு முடித்து வரும் போதே நித்யா அதிக சோர்வுடன் காணப் பட்டாள்.

படுக்கையில் வந்து படுத்தவள், ''என்ன நடந்தது?'' என்று மதியம் நடந்த கலவரம் பற்றி விசாரிக்க,

''போற வழியிலே காரை நிறுத்திவிட்டு நான் மட்டும் இறங்கிப் போய் கடையிலே வாட்டர் பாட்டில் வாங்கப் போனேன். நம்ம மானேஜரும், டிரைவரும் வண்டியி லேயே இருந்தாங்க.

திடீர்னு கல்லு வீச்சு, அடிதடின்னு அந்த இடமே களேபரமா ஆகிடுச்சு.

அந்த டிரைவருக்கு சுமாரான அடி. நம்ம மேனஜருக்கு தான் அடி கொஞ்சம் பலமா விழுந்திருச்சு. அங்க அடிப் பட்டவங்க சில பேரை ஹாஸ்பிட்டலில் சேர்க்க ஹெல்ப் பண்ணப் போயிட்டேன். ரத்த தானமும் செஞ்சேன். அங்க உதவி செய்யுறதிலே மும்மரமா இருந்ததிலே தான் உங்க யாருக்கும் தகவல் சொல்லணும் என்று தோணாமல் போச்சு.

அடிதடிக்காரங்க என்ன பிரச்சனை என்றாலும் உடனே பொது சொத்தை சேதப்படுத்த ஆரம்பிச்சுடுறாங்க. அப்படி சேதப்படுத்தும்போது பொது மக்களும் சேர்ந்து தான் அவதிப்படுறாங்கன்னு யோசிக்காமல் போயிடுறாங்க.

கல்லு வீசுறவன் குடும்பத்திலே உள்ளவங்க யாராவது அடிபட்டால் தான் அவனுங்க திருந்துவானுங்களோ?

அதுக்காக அவன் குடும்பத்தைச் சேர்ந்தவங்களுக்கு அடிபடணும் என்று நாம வேண்டிக்கவா முடியும். இப்படி ஒவ்வொருத்தரா திருந்தி இந்த மொத்த சமுதாயமும் எப்போ திருந்துறது?

கொஞ்சமாச்சும் மனிதாபிமானம் இருந்தால் இப்படிப்பட்ட செயலில் ஈடுபடுவாங்களா?

ஹைலி அட்ராசியஸ். சுத்த காட்டு மிராண்டித்தனம்'' என்று சொல்லிக் கொண்டே மனைவியின் புறம் பார்வையைச் செலுத்த, அவள் தூங்கிப் போயிருந்தாள்.

ஒரு படத்தில் 'என்னத்தை' கண்ணையா 'சங்குச் சத்தம் அ...வ்..வ...ள..வு சத்தமாவா கே...ட்..கு...து?' என்று இழுத்துக் கொண்டு கேட்டதைப் போல முரளியும் தன் மனதிற்குள் 'என் பேச்சு அ..வ்...வ...ள...வு கேவலமாவா இ..ரு..ந்..த...து?' என்று கேட்டுக் கொண்டான்.

'என் ஆதங்கம் இவளுக்கு தாலாட்டைப் போல இருக்கா?' என்று நொந்து கொண்டே படுத்துக் கொண்டான்.



# 15

மறுநாள் வெள்ளிக்கிழமை அன்று அவர்கள் வழக்கம் போல் கிளம்பி அலுவலகம் வந்தார்கள். ஒரே ஒரு வித்தியாசமாய் இருவரும் சேர்ந்து ஒரே வண்டியில் வந்தார்கள்.

அவர்கள் இருவரும் வந்ததும் ரவியும், அனுவும் அவர்களைப் பிடித்துக் கொண்டனர்.

''ஒழுங்கா ரெண்டு பேரும் உங்க கல்யாணக் கதையைச் சொல்லுங்க'' என்றதும்,

முரளி தான் முட்டாளான கதையை சற்றே மட்டுப் படுத்திக் கூறினான்.

என்ன இருந்தாலும் அவன் அவர்களுக்கெல்லாம் உயர் அதிகாரி ஆச்சே! அதனால் தன் கம்பீரம் குறையக் கூடாது என்று ஐயாவுக்கு ரொம்பவே ஆசை.

அன்று தாமஸ் வேலைக்கு சற்று தாமதமாக வந்தான். அதனால் அவனுக்கு விஷயம் தெரியாமலே போனது. அனைவரும் தங்களது வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

மதியத்துக்கு மேல் டீ குடிக்கவென நித்யா எழுந்து வெளியே வர தாமஸும் அவளுடன் பேசிக் கொண்டே வெளியே வந்தான்.

பேச்சு சினிமா பக்கம் திரும்பியது. தாமஸ் சினிமா நடிகை ஹன்ஸிகா புராணம் பாட,

''தாமஸ், இது கேரளா இல்லை. சென்னை. சென்னையிலே போட் சர்வீஸ் கிடையாது'' என்று நித்யா நக்கல் பண்ணவும்,

''இப்ப எதுக்கு போட் சர்வீஸ்?'' என்று அவன் புரியாமல் விழிக்க,

'இதே புரியலையா? விளங்கிடும்' என்பது போன்ற பாவனையுடன், ''நீங்க விடுற ஜொள்ளு ஆறுல நீச்சல் அடிச்சா நான் வீட்டுக்குப் போக முடியும்?'' என்று அவள் விளக்கியதும்,

''யூத்துன்னா சைட் அடிக்கத் தாங்க செய்வோம்'' என்றான்.

''அதுக்குன்னு இப்படியா?'' என்று அவள் போலியாக வியக்க,

''இதிலே என்னங்க தப்பு இருக்கு. கல்யாணமான நீங்களே நம்ம டீம் லீடர் முரளியை காலையிலே இருந்து சைட் அடிச்சுக்கிட்டு இருந்தீங்க. நான் ஏதாச்சும் உங்களைக் கேட்டேனா? அழகா இருந்தால் சைட் அடிக்க வேண்டியது தான்'' என்று அவன் அவளுக்கு பாடம் எடுக்க,

அவளோ தனது ஒரு கையை மடக்கி மறு கையால் தலையைப் பிடித்துக் கொண்டு குனிந்தவாறே தன் மனதுக்குள்,

'நித்யா யாரும் பார்க்கலைன்னு நீ உன் வீட்டுக்காரரை ரசிச்சுக்கிட்டு இருந்தே. ஆனால் உன்னை வேவு பார்த்தது போல் சரியா சொல்லுறாரே!' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது,



அவர்கள் அருகே வந்த ஒருவர், ''ஏதாச்சும் பிரச்சனையாம்மா?'' என்று கேட்டார்.

கேட்ட குரலாய் இருக்கே என்று நித்யா நிமிர்ந்து பார்க்க அங்கே விஸ்வநாதன் நின்று கொண்டிருந்தார்.

அந்த இடத்தில் மாமனாரை எதிர்பார்க்காத நித்யா பேந்த பேந்த விழித்துக் கொண்டு நிற்க...

தாமஸ் அவரிடமே, ''நீங்களே சொல்லுங்க சார். என்னை மாதிரி இளைஞர்கள் சினிமா நடிகையை சைட் அடிக்கக் கூடாதுன்னு சொல்லுறாங்க. ஆனால் கல்யாணம் ஆன இவங்க எங்க கூட வேலை செய்யுற முரளியை சைட் அடிக்கிறாங்க. அது நியாயமா? நீங்களே தீர்ப்பு சொல்லுங்க. உங்களையும், உங்க மீசையும் பார்த்தால் நாட்டாமை மாதிரியே இருக்கீங்க'' என்றான்.

'மாமனார் திடீர்ன்னு எதுக்கு சொல்லாமல் வந்திருக்கிறார். போனும் பண்ணலை. அதுவும் ஆபிஸ்க்கு வந்து நிற்கிறார்' என்று அவள் விழித்துக் கொண்டு நிற்கும் போதே, தாமஸ் அனைத்தையும் பேசி முடித்து விட்டான்.

தாமஸின் பேச்சைக் கேட்ட விஸ்வநாதன், 'என்ன இது? உனக்கும் முரளிக்கும் கல்யாணம் ஆனது இங்குள்ளவர்களுக்கு தெரியாதா?' என்பது போல் மருமகளைப் பார்த்து நிற்க,

நித்யா தாமஸிடம், ''நீங்க எப்பவுமே இப்படித் தானா தாமஸ்?'' என்று கோபத்துடன் கேட்டவள்,

''ஒண்ணுமில்லை மாமா'' என்று தன் மாமனாரைப் பார்த்துச் சொன்னாள்.

தாமஸிடம் தன் மாமனாரைக் காட்டி, ''இவர் என் மாமனார்'' என்று அறிமுகப்படுத்தினாள்.

தாமஸ் திருதிருத்தான். அவன் எப்பொழுதுமே எதையும் யோசித்துச் செய்ய மாட்டான். செய்து முடித்த பின் தான் யோசிப்பான்.

ஏற்கனவே அருகில் இருந்த பெரியவரிடம் நியாயம் கேட்ட பின்பே ஏன் அவரிடம் கேட்டோம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

இதில் அவர் தான் நித்யாவின் மாமனார் என்று தெரிந்ததும் அவனுக்கு வியர்க்க ஆரம்பித்தது.

அதற்குள் நித்யா தன் மாமனாரை அந்த இடத்திலிருந்து கூட்டிச் சென்றாள்.

''என்ன மாமா திடீர்னு வந்து இருக்கீங்க? சொல்லவே இல்லை. அவர்கிட்டே சொல்லி இருந்தீங்களா? அவர் என்கிட்டே சொல்ல மறந்திட்டாரா?''

''இல்லைம்மா. ஆபிஸ் வேலையா வந்தேன். நாளைக்கு சனிக்கிழமை. சனி, ஞாயிறு லீவு தானே! அப்படியே உங்களையும் பார்த்துட்டுப் போகலாம் என்று வந்தோம்.''

''வந்தோம் என்று சொல்லுறீங்க. அத்தையும் வந்திருக்காங்களா? அவங்க எங்கே?''

''ஆபிஸ் வேலையா வந்ததால ஆபிஸில் இருந்தே எங்களுக்கு ஹோட்டலில் ரூம் போட்டு கொடுத்திருக்காங்க. அத்தை அங்க இருக்காள். நான் உங்க வீட்டுச் சாவியை வாங்கலாம் என்று வந்தேன்.''



''எதுக்கு மாமா இப்படி அலையுறீங்க? அதை விட நேரா காலையிலேயே வீட்டுக்கு வந்திருக்கலாம் தானே!''

''இல்லைம்மா...'' என்று அவர் இழுக்கவும்,

''வீண் அலைச்சல் தானே மாமா'' என்று அவரது நலனை முன்னிறுத்தி அவள் கூற,

''அப்படி வந்ததிலும் ஒரு நல்லது இருக்கு பாரு. இந்த முரளி பய ஆபிஸிலே என்ன சொல்லி வைச்சிருக்கான்?'' என்று கோபமாகக் கேட்கவும்,

''உண்மையைத் தான் மாமா சொல்லி இருக்கிறார். எந்த பிரச்சனையும் இல்லை மாமா'' என்றாள்.

''பின்னே ஏன் அந்தப் பையன் அப்படிச் சொல்லுறான்?'' என்று கேட்பதற்கும், அனு அவர்கள் அருகே வருவதற்கும் சரியாக இருந்தது.

''நித்தி உன் போன் ரொம்ப நேரமா அடிச்சுக்கிட்டே இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே நித்யாவின் கைப்பையை அவளிடம் கொடுத்தாள்.

நன்றி சொல்லி வாங்கிக் கொண்ட நித்யா, ''அனு, இவர் என் மாமனார்'' என்று அவளிடமும் அறிமுகப் படுத்த,

''முரளி அப்பாவா? எப்படி இருக்கீங்க அங்கிள்?'' என்று நலன் விசாரிக்கும் போது அனுவின்

கைபேசிக்கு அழைப்பு வர, அவள் அவர்களிடம் இருந்து விடை பெற்றாள்:

''பார்த்தீங்களா மாமா. நான் என் மாமனார் என்று சொன்னதும் அவரோட அப்பாவான்னு தானே கேட்டுட்டுப் போறாள்'' என்று நித்யா எடுத்துக் கொடுக்க,

''அப்புறம் அந்த பையன்...'' என்று அவர் திரும்பவும் ஆரம்பிக்க,

''மாமா அவர் கொஞ்சம் லூசு. அப்படித் தான் கிறுக்குத் தனமா உளறுவார். நீங்களே பார்த்தீங்க இல்ல. புதுசா பார்க்கிற உங்களைப் போய் பஞ்சாயத்துப் பண்ணச் சொன்னார்'' என்றதும் அவர் கொஞ்சம் சமாதானம் ஆனார்.

''அவரை வரச் சொல்லவா மாமா. ஆனால் ஏதோ முக்கியமான மீட்டிங் இருக்குன்னு சொல்லிக்கிட்டு இருந்தார். நேத்து எங்க பிராஜெக்ட் மேனேஜருக்கு வேற அடிப்பட்டு ஹாஸ்பிட்டலில் இருக்கிறார். அதனால கொஞ்சம் வேலை அதிகமா இருக்கு.''

''பரவாயில்லைம்மா. எப்படியும் வீட்டுக்கு தானே வரப் போறீங்க. நீ சாவியை மட்டும் கொடு'' என்றதும்,

அனு தந்துவிட்டுச் சென்ற கைப்பையில் இருந்த சாவியை எடுத்துக் கொடுத்தவள் அவருடன் கொஞ்ச தூரம் நடந்து சென்றாள்.

''நான் போயிடுவேன். நீ போய் வேலையை பாரும்மா. உனக்கு மேலதிகாரி அவன் தானே. அவன் சரியான கோபக்காரன். அப்புறம் வேலை செய்யலைன்னு திட்டப் போறான்.''



'மாமனார் தன் மகனைச் சரியாகத் தான் கணித்து வைத்திருக்கிறார்' என்று மனதில் பாராட்டிக் கொண்டவள்,

''அதெல்லாம் திட்ட மாட்டார் மாமா. நேத்து கூட எனக்கு தலைவலி. என்னால வேலையை முடிக்க முடியலை. என்னை வீட்டுக்கு அனுப்பி வைச்சிட்டு அவர் ஆபிஸில் இருந்து வேலையை முடிச்சிட்டு வந்தார் தெரியுமா?'' என்று தன் கணவனின் புகழ் பாட,

விஸ்வநாதன் நிம்மதியுடனே கிளம்பிச் சென்றார்.

அலுவலகத்தின் உள்ளே சென்ற தாமஸ் எதிர்ப்பட்ட முரளியிடம், ''ஒரு சின்ன தப்பு நடந்து போச்சுடா!'' என்றான்.

''என்னடா செஞ்சே?''

''நானும் நித்யாவும் பேசிக்கிட்டு இருந்தோம். நித்யா என்கிட்டே நடிகைகளைப் பார்த்து ஓவரா ஜொள்ளு விடாதீங்க தாமஸ்ன்னு சொன்னாங்க.''

''சரியாத் தானேடா சொல்லி இருக்காள்'' என்று முரளி தன் மனைவிக்கு ஆதரவு தெரிவித்தான்.

முரளி நித்யாவை ஒருமையில் குறிப்பிட்டதை கவனிக்கும் நிலையில் தாமஸ் இல்லை. அவன் ஒரு வித பீதியில் இருந்தான்.

''அதுக்கு நான் நித்யாகிட்டே நீங்க கூட தான் காலையில் இருந்து நம்ம முரளியை சைட் அடிச்சீங்க. நான் ஏதாச்சும் சொன்னேனா?'' என்று கேட்டேன்.

''அப்படியா?! இன்டிரஸ்டிங்'' என்று முறுவலுடனே முரளி சொன்னதும்,

''ஏன்டா, ஒரு கல்யாணமான பொண்ணு உன்னை சைட் அடிச்சால் அது உனக்கு இன்டிரஸ்டிங்கா?'' என்று தாமஸ் எகிற,

'இவன் ஒருத்தன்' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே, ''மேலே சொல்லு. என்ன பிரச்சனை?'' என்றதும், தாமஸ் தொடர்ந்து தன் கதையைக் கூறினான்.

''பார்க்கிறதுக்கு நாட்டாமை மாதிரி இருக்காரேன்னு அங்கே வந்த ஒரு பெரியவரிடம் பஞ்சாயத்துப் பண்ணச் சொல்ல... அது கடைசியிலே நித்யாவோட மாமனாராம்'' என்று தாமஸ் நொந்து கொண்டே சொல்ல,

''என்னது அப்பாவா?'' என்று முரளி அதிர,

''உனக்கு காது டமாரமா போச்சா? அப்பா இல்லைடா. மாமனார். நாளைக்கு நித்யாவோட ஹஸ்பண்டு வந்து என் முதுகிலே டின்னு கட்டுவானோன்னு பயமா இருக்குடா'' என்றதும்,

''டின்னு தானே கட்டிட்டாப் போச்சு'' என்று சொல்லிக் கொண்டே தாமஸின் முதுகுப் பிரதேசமே அதிருமாறு ஒரு அடியைக் கொடுத்த முரளி மனைவியைத் தேடி வெளியே சென்றான்.

''அடப்பாவி! நீ எதுக்குடா என்னை இப்படி அடிச்சே! சே!'' என்று புலம்பிக் கொண்டே தனது இருக்கைக்கு சென்று அமர்ந்தவன், ரவியிடமும் அனுவிடமும் சொல்லிப் புலம்ப,

நித்யாவின் கணவன் முரளி தான் என்று அவர்கள் இருவரும் தாமஸுக்கு விளக்கினர்.



'அடக்கடவுளே!' என்று அவன் திகைக்க... நித்யாவும் முரளியும் அவன் அருகே வந்தனர்.

''ஏன்டா, நீங்க சொல்லாமல் உண்மையை மறைச்சுட்டு என்னை அடிக்க வேற செய்யுறீங்களா?'' என்று தாமஸ் எகிறவும்,

''விடுடா. நமக்குள்ள என்னடா!'' என்று அவனை முரளி சமாளித்தான்.

''உங்க மாமாவை எப்படி நித்தி சமாளிச்சே?'' என்று அனு கேட்கவும்,

தாமஸின் மீது பார்வையை பதித்துக் கொண்டே, ''அவர் கொஞ்சம் லூசுன்னு சொல்லித் தான் சமாளிச்சேன்'' என்று மெதுவான குரலில் நித்யா இழுக்க,

அனைவரும் சிரிக்க, தாமஸ் எகிற, என்று அந்த இடமே கலகலப்பாய் மாறியது.

முரளி அவனின் தாடையைப் பிடித்துக் கொஞ்சியும், நித்யா சில, பல சாரி கேட்டும் தாமஸை சமாளித்தனர்.

''சரி வேலையைப் பாருங்க. எனக்கு மீட்டிங் இருக்கு'' என்று சிரித்த முகத்துடன் சென்ற முரளி மீட்டிங் முடிந்தவுடன் அதற்கு நேர்மாறான முகபாவனையோடு வந்தான்.

''என்னாச்சு முரளி?'' என்று அவனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டு கேட்க,

முரளி நித்யாவைப் பார்த்தான். அவன் பார்வையைக் கண்டதுமே நித்யாவிற்கு கிலி பிடித்தது.

அவள் மீதிருந்த பார்வையை அகற்றாமல், ''நான் திரும்பவும் அமெரிக்கா போக வேண்டி இருக்கு'' என்றான்.

நித்யா தன் கண்களை மூடிக் கொண்டு அமைதி காக்க,

''எப்போ போகணும்?'' என்று ரவி கேட்டான்.

''ரெண்டு நாளில். ஞாயிற்றுக் கிழமை நைட்'' என்றான்.

அனைவரும் அவனது வேலையைப் பற்றி மேலும் பல கேள்விகளை எழுப்ப அவன் அதற்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

நித்யா மட்டும் ஒன்றும் சொல்லாமல் தன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள்.

அலுவலகத்தில் வைத்து என்ன சமாதானம் சொல்ல முடியும் என்று நினைத்து முரளியும் அமைதி காத்தான்.

அவர்கள் இருவரும் தத்தம் வண்டியில் வீடு சென்றனர். வண்டி நிறுத்தும் இடத்தில் முரளி மனைவிக்காகக் காத்திருந்தான். இருவரும் சேர்ந்து ஒன்றாக வீட்டிற்குள் நுழையலாம் என்பதற்காக அவன் காத்திருந்தான்.

அதே போல் இருவரும் ஒன்றாக சோர்ந்த முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தனர்.

## 16

வீட்டிற்குள் நுழைந்தவள் மாமியாரைப் பார்த்து, ''வாங்க அத்தை'' என்று உற்சாகம் இல்லாமல் வரவேற்று விட்டு தங்களது அறைக்குள் சென்றாள்.



முரளி அதை விட உற்சாகம் குறைந்தவனாய், ''வாங்க'' என்று மட்டும் பொதுப்படையாய் வரவேற்றான்.

''என்னாடா முரளி எதுவும் பிரச்சனையா?'' என்று காமாட்சி மகனைப் பார்த்துக் கேட்டார்.

''இல்லை''

''நல்லாத் தானே இருக்கே? உடம்புக்கு ஏதாச்சும்...'' என்று காமாட்சி அவனது நலன் குறித்து மேலும் கேள்வி எழுப்ப,

''இருக்கேன்'' என்று சொன்னவன் தங்கள் அறைக்குள் சென்று மறையவும்,

காமாட்சி தன் கணவரிடம், ''என்னங்க ஆபிசிலே போய் பார்த்திட்டு வந்து என்கிட்ட என்ன சொன்னீங்க?'' என்று கேட்டார்.

''என்ன சொன்னேன்?'' என்று அவர் திருப்பிக் கேட்க,

''மகனும் மருமகளும் விக்ரமன் பட ஜோடிகளா ஒத்துமையா இருக்காங்க. லா லா லா அப்படின்னு பின்னாடி பாட்டுச் சத்தம் கேட்டுச்சுன்னு சொன்னீங்க தானே?!''

'நான் உன்கிட்டே அப்படியா சொன்னேன்?' என்பது போல் விஸ்வநாதன் முறைக்க... அதைக் கண்டு கொள்ளாமல் காமாட்சி தன் பேச்சினைத் தொடர்ந்தார்.

''ஆனா இவங்க என்னடான்னா முகத்தைத் தொங்கப் போட்டுட்டு வராங்க. கேள்வி கேட்டால் உங்க பிள்ளை மணிரத்னம் பட பாணியிலே ஒத்த வார்த்தையிலே பதில் சொல்லுறான்'' என்று அங்கலாய்த்தார்.

'இவ ஒருத்தி நேரங்கெட்ட நேரத்திலே சினிமாவைப் பத்தி பேசிக்கிட்டு இருக்காள். என்ன பிரச்சனையா இருக்கும்?' என்று விஸ்வநாதன் யோசிக்க ஆரம்பித்தார்.

அறைக்குள் சென்ற முரளி, ''என்ன செய்யுறது ஸ்ரீ. என்னிடம் தான் ஏ1 விசா இருக்கு. எனக்கும் உன்னைத் தனியா விட்டுட்டுப் போக மனசில்லை தான். ஆனால்...'' என்று சமாதானம் சொல்ல முற்பட,

''நான் சமையல் ஏதாச்சும் செய்யணுமான்னு பார்க்கணும். அத்தையும், மாமாவும் வெளியே இருக்க, நாம இங்கே கதவைச் சாத்திட்டு பேசிக்கிட்டு இருந்தால் நல்லா இருக்காது. சாப்பிட்டதுக்கு அப்புறமா பேசிக் கலாம்'' என்று சொன்னவள் முகம், கை, கால் கழுவி விட்டு சமையலறைக்கு சென்றாள்.

''நான் வேலையை முடிச்சிட்டேன்ம்மா. சாப்பிடு வோமா?'' என்று மாமியார் கேட்டதும் அனைவரும் சாப்பிட அமர்ந்தனர்.

சாப்பிட்டுக் கொண்டே முரளி தன் அமெரிக்கப் பயணத்தைப் பற்றி எடுத்துரைத்தான்.

'ஓ! இது தானா விஷயம்' என்று பெரியவர்கள் இருவரும் ஆசுவாசம் அடைந்தனர் என்றே சொல்ல லாம்.

முரளி முதலில் கல்யாணத்திற்கு மறுத்ததால் விஸ்வ நாதனும், காமாட்சியும் கொஞ்சம் பயந்து கொண்டே தான் இருந்தனர். திருமணத்திற்கு பின் இன்று தான் அவர்களை முதன் முதலில் பார்க்கிறார்கள்.



அதனால் சிறியவர்கள் இருவரின் சோர்ந்த முகமும் அவர்களுக்கு ஒரு வித பயத்தையே விளைவித்தது. ஆனால் அவர்களுக்கிடையே பிரச்சனை எதுவும் இல்லை என்பதை அறிந்ததும் நிம்மதி அடைந்தனர்.

தற்காலிகப் பிரிவை எண்ணி வருந்துகிறார்கள் என்றால் அவர்கள் இருவரும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துகிறார்கள் என்று தானே அர்த்தம் என்று எண்ணிப் பார்த்த போது அவர்களது மனம் அமைதியடைந்தது.

அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் கருப்பசாமி தன் மகளை அவளது கைப்பேசியில் அழைத்தார்.

நித்யா அவரிடம் விஷயம் சொன்னதும், ''திரும்பவும் ஊருக்குப் போறாரா? அப்ப மறுவீட்டு விருந்துக்கு எப்பம்மா வருவீங்க. ஊரிலே ஏதாச்சும் பேசுவாங் களேம்மா. ஒரு மாசத்துக்குள்ளே வரதா சொன்னீங்களே!'' என்று அவர் வருத்தப்பட்டார்.

விஸ்வநாதன் தன் மகனுடன் பேசிக் கொண்டிருந்த குரல் கருப்பசாமியின் காதுகளில் விழ,

''விஸ்வநாதன் வந்திருக்கானா?'' என்று கேட்டார்.

''ஆமாப்பா. அத்தையும் மாமாவும் வந்திருக்காங்க.''

''நீ போனை அவன்கிட்டே கொடு'' என்றதும்,

''மாமா, எங்கப்பா பேசணுமாம்'' என்று கைப்பேசியை நீட்டினாள்.

விஸ்வநாதன் அதை வாங்கி, ''ஹலோ!'' என்று சொன்னதும்,

''விஸ்வநாதா, மாப்பிள்ளை ஞாயித்துக் கிழமை அமெரிக்கா போறாராமே. எல்லாரும் ஒரே இடத்திலே தானே இருக்கீங்க. பேசாமல் கிளம்பி வரீங்களா. நாளைக்கே மறுவீட்டு விருந்தை வைச்சுக்கலாம்'' என்றதும்,

''நாளைக்கா?'' என்று விஸ்வநாதன் தயங்க,

''ஏற்கனவே கல்யாணத்திலே கடைசியில் தான் மாப்பிள்ளையைக் காட்டினேன். விருந்துக்கும் வரலைன்னால் நாலு பேர் என்னைக் கேவலமாகப் பேசுவாங்கடா'' என்றதும்,

''சரி. நான் வீட்டிலே கலந்து பேசிட்டு அஞ்சு நிமிஷத்திலே கூப்பிடுறேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

விஷயத்தை அவர் தன் மகன் முரளிதரனிடம் பகிர்ந்ததும் அவனது முகத்தில மறுப்புத் தெரிந்தது.

நித்யா அறைக்குள் சென்று விட, முரளி பதிலொன்றும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

உள்ளே நுழைந்தவனிடம், ''எங்க வீட்டுக்கு வர மாட்டீங்களா? அங்கேயும் இங்க மாதிரி எல்லா வசதியும் இருக்கும்'' என்று வருத்தத்துடன் அவள் கூறவும்,

''ஐயோ ஸ்ரீ! நான் இந்த ரெண்டு நாள் உன் கூட இருக்கலாம் என்று பார்த்தேன். அவ்வளவுதான். ஊருக்கு போறது தான் உன் விருப்பம் என்றால் நாம போகலாம். நீ துணியை பெட்டியில் எடுத்து வை. நான் அப்பா கிட்டே பேசிட்ட வரேன்'' என்று வெளியே சென்று தந்தையிடம் தன் முடிவைத் தெரிவிக்க, அனைவரும் ஊருக்குச் செல்லத் தயாராகினர்.



நித்யா தன் மாமனார், மாமியாரிடம் சென்று, ''சாரி மாமா. சாரி அத்தை. நீங்க இங்க தங்கலாம் என்று வந்தீங்க. உடனே கிளம்புற மாதிரி ஆகிடுச்சு'' என்று வருத்தம் தெரிவித்தாள்.

விஸ்வநாதன், ''அதனால என்னம்மா. எப்படின்னாலும் மறுவீட்டு விருந்துக்கு போய் தானே ஆகணும்'' என்றார்.

காமாட்சி, ''நாங்க இந்த வீட்டிலே இருக்கணும் என்று நினைச்சா வந்தோம்? உங்க கூட இருக்கணும் என்று நினைச்சுத் தானேம்மா வந்தோம். இப்பவும் உங்க கூட தானே இருக்கப் போறோம். இன்னும் நாப்பது நாளிலே மாமா ரிடையர் ஆகிடுவார். அதுக்கு அப்புறம் நாங்க வந்து தங்கிட்டாப் போச்சு'' என்றதும் நித்யா சமாதானம் ஆனாள்.

# 17

மறுநாள் அங்கு அவர்கள் சென்று இறங்கிய போது கிட்டத்தட்ட ஒரு நூறு பேர் குழுமி இருக்க முரளிதரன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

ஆரத்தி எடுப்பதற்காக அவர்கள் இருவரையும் வாசலிலேயே நிறுத்தி வைத்தனர்.

''விருந்துக்கு இத்தனை பேரா? உங்க அப்பா எனக்கு மட்டும் தான் விருந்து கொடுக்கப் போறார்ன்னு

நினைச்சேன். என்னைச் சாக்கு வைச்சு ஒரு ஊரே விருந்து சாப்பிடப் போகுதா?

எங்கே இந்த விருந்து மிஸ் ஆகிடும் என்று பயந்து போய் தான் உங்க ஊர்காரங்க என் மாமனாரைத் திட்டி இருப்பாங்களோ?'' என்று அவன் தன் மனைவியின் காதில் ரகசியம் பேச, அவள் அவனை முறைத்தாள்.

கூட்டத்தில் இருந்த ஒரு வயதான மூதாட்டி, ''சொர்ணம், உன் பேத்தி அவ புருஷனை முந்தானையில் முடிஞ்சுக்கிட்டா. ஊருக்கு மத்தியிலேயே இந்த முற முறச்சான்னா... தனியா என்னவெல்லாம் செய்வாள்?'' என்று விமர்சிக்க, நித்யாவிற்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

போதாத குறைக்கு முரளி வேறு அவரிடம், ''சரியா சொன்னீங்க பாட்டி. ஒரே அடிதடி தான். அடி வாங்கி வாங்கி என் உடம்பே சிவந்து போச்சு. அதான் கல்யாணத்தை விட இப்ப இன்னும் சிவந்து போயிட்டேன் பாருங்க'' என்றதும்,

நித்யா அவன் புஜத்தில் குத்த...

''நான் சொன்னேன் இல்ல...'' என்று முரளி தன் பேச்சிற்கு ஆதாரம் காட்ட அனைவரும் நகைத்தனர்.

பெண்ணைப் பெற்றவர்களும், வளர்த்தவர்களும் மனம் குளிர்ந்தனர்.

அனைவரிடமும் அவன் இயல்பாகப் பேசிப் பழக விஸ்வநாதன் பெருமையாக உணர்ந்தார் என்றால் கருப்பசாமி நிம்மதியாக உணர்ந்தார்.



சுதாகரன் முரளிதரனுடனே இருந்தான். சம வயது என்பதால் இருவரும் இயல்பாய் பேசிச் சிரித்தனர்.

முரளிக்கு தன் மனைவியிடம் தனியாகப் பேசும் வாய்ப்பு தான் கிடைக்காமல் போனது.

'சரி இரவே கிளம்பிடலாம். நாளை சென்னை சென்று விடுவோம். அவளுடன் தனிமையில் கழிக்க ஒரு முழு நாள் இருக்கிறது' என்று அவன் எண்ண....

ஒரு இரவு தங்கித் தான் செல்ல வேண்டும் என்று பெண் வீட்டினர் சொல்லிவிட்டதால் முரளி மறுநாள் சென்னை செல்ல விமான டிக்கெட்டை தன் மடிகணினி மூலம் எடுத்தான்.

'கல்யாணம் ஆனதில் இருந்து ஓவரா ஃபிளைட்டிலேயே போறியே! பார்த்துச் செலவு செய்டா முரளி!' என்று மனசாட்சி அறிவுரை கூறியது.

'என்ன செய்யுறது நாளைக்கு நைட் ஃபிளைட்டில் நான் அமெரிக்கா கிளம்பி ஆகணுமே!' என்று சமாதானம் சொல்லிக் கொண்டான்.

அவன் போதாத வேளை சென்னை செல்லும் காலை விமானத்தில் டிக்கெட் கிடைக்கவில்லை. மதியம் தான் கிடைத்தது. வேறு வழி இல்லாமல் அதையே முன்பதிவு செய்தான்.

அன்று மாலையே வந்திருந்த முக்கால்வாசி உறவினர்கள் கலைந்து சென்றனர். சில வெளியூர் உறவினர்களும், சுதாகரன் குடும்பம், நித்யாவின் குடும்பம் மற்றும் முரளிதரன் குடும்பம் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

புது மணமக்களுக்கு ஒரு அறையை ஒதுக்கிவிட்டு யார் யார் எங்கே படுப்பது என்று அவர்கள் ஆராய்ச்சியில் இறங்க... நித்யா தங்களுக்கு தனி அறை தேவை இல்லை என்று உறுதியாக மறுத்துவிட்டாள்.

அதனால் அன்று இரவு ஆண்கள் அனைவரும் ஓர் இடத்திலும், பெண்கள் அனைவரும் ஓரிடத்திலும் படுத்துக் கொண்டார்கள்.

விஸ்வநாதனும் காமாட்சியும் காலைச் சாப்பாடு முடிந்ததும் கோவைக்கு கிளம்பிச் சென்றார்கள். முரளியும், நித்யாவும் விமானம் பிடித்து சென்னை வந்து சேர்ந்த போது மாலை ஆனது.

உள்ளே நுழைந்ததும் பெட்டி அடுக்கும் வேலையை செய்தார்கள். அனைத்தையும் அடுக்கி முடித்த பின்பே இருவரும் ஓய்வாக அமர்ந்தனர்.

முரளி தன் கால்களை நீட்டிக் கொண்டு படுக்கையில் அமர்ந்தான். நித்யா அவன் தோள் மேல் சாய்ந்து அமர்ந்து கண்மூடிக் கொண்டாள். அவனும் அவளது தோள் மீது கைப்போட்டு தன்னோடு அணைத்துக் கொண்டான்.

சில நிமிடங்கள் அமைதியில் கழிய...

''தனியா இருந்துடுவியா ஸ்ரீ? பயப்பட மாட்டியே?'' என்று கேள்வி எழுப்பினாள்.

''இவ்வளவு நாளும் ஹாஸ்டலில் தனியா தானே இருந்தேன்.''

''ஹாஸ்டலில் நிறைய பேர் இருப்பாங்கம்மா. இது வீடு. யாரும் இல்லாமல் இருந்துடுவியா?''



''ம்ம்ம் சமாளிச்சிடுவேன். எனக்கு பயமெல்லாம் கிடையாது. ஆனா நீங்க இல்லாம எப்படியோ இருக்கும்.''

தனது அணைப்பை இறுக்கியவன், ''கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. வேற வழி இல்லை. நேரம் பறந்திடும்'' என்றதும், அவனிடம் இருந்து விலகி எழுந்து போனாள்.

''ஹேய் ஸ்ரீ! எங்கே போறே?''

''இதோ வரேன்'' என்று சொல்லிக் கொண்டே தனது அலமாரியைத் திறந்து எதையோ எடுத்து வந்தாள்.

வண்ணக் காகிதம் சுற்றப்பட்ட பரிசு ஒன்றை அவனிடம் நீட்டியதும், ''எனக்கா? எப்ப வாங்கினே?'' என்று கேட்டான்.

''நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி?''

''அப்ப ஏன் இத்தனை நாளா கொடுக்கலை?''

''நீங்க தான் என்னைப் பட்டிக்காடுன்னு முடிவு பண்ணிட்டீங்களே. அப்புறம் நான் எங்கே இருந்து இதை நீட்டுவது. போடுற வேஷத்தைப் பொருத்தமா போட வேண்டாமா?'' என்று கண்ணடித்துக் கேட்டவளை,

''என்னை முட்டாளாக்கணும் என்ற முடிவோட தான் வேலை பார்த்திருக்கேன்னு சொல்லு'' என்று சிரித்துக் கொண்டே அவன் அந்தப் பரிசினைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தான்.

''கண்டிப்பா. நம்ம கல்யாணத்துக்கு மறுநாள் கிளம்புற அவசரத்திலும் கூட எங்க அம்மாவோட டப்பா செல்போனை மறக்காமல் வாங்கி என் சிம் கார்டை

அதிலே மாத்தினேன் தெரியுமா? எங்க அம்மா கூட உனக்கு எதுக்கு என் போன்? நீ தான் பெருசா வைச்சிருக்கியேன்னு கேட்டாங்க. உங்க மாப்பிள்ளை கேட்டாரும்மான்னு சொன்னேன். கேள்வியே கேட்காமல் குடுத்துட்டாங்க.''

''அடிப்பாவி! உங்க மாப்பிள்ளையை ஏமாத்தத் தான் என்று சொல்லி இருந்தா என் மாமியார் தந்தே இருக்க மாட்டாங்க'' என்றதும்,

''அது தெரிஞ்சதினால தானே நான் உண்மையைச் சொல்லலை'' என்றாள்.

அந்த சிறிய பெட்டிக்குள் ஒரு அழகிய கைக்கடிகாரம் இருந்தது.

''சூப்பரா இருக்கு ஸ்ரீ!'' என்று சொன்னவன் தனது கடிகாரத்தை கழட்டிவிட்டு தன் கையை அவள் முன் நீட்ட,

அவள் அந்தப் புதுக் கடிகாரத்தை அவன் கையில் மாட்டிவிட்டாள்.

''இதைப் பார்க்கும் போதெல்லாம் என் ஞாபகம் வரும் தானே?'' என்று கேட்டதும்,

அவன் வேகமாக அதைக் கழட்டி அவளிடமே கொடுத்தான்.

''உயிரில்லாத இந்த ஜடப் பொருள் ஒண்ணும் என் பொண்டாட்டியை எனக்கு ஞாபகப்படுத்தணும் என்று எந்த அவசியமும் இல்லை. அவளை மறக்கும் அளவுக்கு நான் மோசமானவன் கிடையாது'' என்றான்.



'மூக்குக்கு மேல கோபத்தைப் பாரு!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே மீண்டும் அவன் கைகளில் அதை அணிவித்துவிட்டாள்.

அவனது கைபேசி சிணுங்க எடுத்துப் பார்த்தான். அவர்களது பிராஜெக்ட் மானேஜர் சுந்தரிடம் இருந்து அழைப்பு வந்திருந்தது.

''சொல்லுங்க சுந்தர். நல்லா இருக்கீங்களா? சாரி நான் மறுவீட்டு விருந்துன்னு ஊருக்கு போயிட்டேன். அதான் என்னால உங்களைத் திரும்ப வந்து பார்க்க முடியலை'' என்றான்.

அவர்கள் அலுவலக விஷயமாகப் பேச ஆரம்பித்தனர். பேசி முடித்து வந்தவன்,

''நாளைக்கு நம்ம டீம்மேட்ஸ் எல்லோரும் போய் சுந்தரைப் பார்த்துட்டு வந்திடுங்க'' என்றான்.

சரி என்னும் விதமாய் தலையாட்டினாள்,

கிளம்பும் நேரமும் வந்தது. விமான நிலையம் செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்த வாடகைக் கார் வந்து வெளியே நின்றது.

''பத்திரம் ஸ்ரீ. வேளா வேளைக்கு கரெக்ட்டா சாப்பிடு. ஒரு ஆளுக்கு ஒருக்க சமைக்கப் பிடிக்கலைன்னால் கான்டீனில் சாப்பிடு'' என்று அவன் சொல்லும் அனைத்துக்குமே அவள் தன் தலையை ஆட்டினாள்.

''உன் தலை என்ன கிரைண்டர் குழவியா? இந்த ஆட்டு ஆட்டுறே?'' என்று கேட்டு அவள் தலையை அசைக்க விடாமல் தன் கையால் அமுக்கிப் பிடிக்க,

அவள் ஒன்றுமே சொல்லாமல் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

அவனும் அவளை அணைத்துக் கொண்டு, ''சீக்கிரமா வந்திடுவேன் ஸ்ரீ'' என்றான்.

''எனக்கு என்னமோ பயமா இருக்கு'' என்றாள்.

''எதுக்கு பயம்?''

''தெரியலை. என்னமோ ரொம்பக் கலக்கமா இருக்குங்க.''

''ப்ச்சு. கிளம்பும் போது எதையாச்சும் சொல்லி பீதியைக் கிளப்பாதே. உன் ஞாபகார்த்தமா எனக்கு அழுத்தி ஒரு முத்தம் கொடுத்தனுப்புறதை விட்டுட்டு...'' என்று அவன் சொல்லவும்,

''யாரோ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உயிரற்ற பொருள் ஒண்ணும் மனுஷங்களை ஞாபகப்படுத்த வேண்டாம் என்று சொன்னாங்க...'' என்று அவள் இழுக்கவும்,

மனைவி இயல்பு நிலைக்கு திரும்பி விட்டாள் என்பதை புரிந்து கொண்டவன் அவளை மேலும் வம்புக்கு இழுக்கும் வண்ணம்,

''நீ கொடுக்கப் போற கிஸ்க்கு உயிர் இல்லைன்னு யார் சொன்னா?'' என்று சொல்லிக் கண்ணடித்தவன் அவளது உதடுகளில் அழுந்தத் தன் முத்திரையைப் பதித்தான்.

''இந்த முரளியை மறக்காமல் இரு. சீக்கிரமா வந்திடுறேன்'' என்று சொல்லி விலகினான். மனசே இல்லாமல் முரளிதரன் கிளம்பிச் சென்றான்.



அவன் சென்றதும் கதவை மூடித் தாளிட்டு விட்டுப் படுக்கையில் வந்து விழுந்தவளுக்கு மனம் முழுவதும் கணவனைப் பற்றிய எண்ணங்களும், அவனது பிரிவுமே நிறைந்திருக்க... தூங்காமல் விழித்திருந்தாள்.

## 18

மறுநாள் அவளுக்கு வேலைக்குச் செல்லப் பிடிக்கவில்லை. வீட்டில் இருந்தால் சுத்தமாகப் பொழுது போகாது என்று அறிந்தவள் சோம்பலுடனே வேலைக்குக் கிளம்பினாள்.

நான்கு நாட்கள் எந்தச் சிக்கலுமின்றி வேலைக்கு சென்று வந்தாள்.

முரளி ஊருக்கு சென்றதினால் தினமும் முரளியின் பெற்றோர், நித்யாவின் பெற்றோர், சுதாகரன், சுதாகரனின் பெற்றோர் என்று அனைவரும் வரிசை கட்டிக் கொண்டு அவளை அழைத்துப் பேசிவிடுவார்கள்.

நான்காம் நாள் இரவு நித்யா கணவனிடம், ''எப்பங்க வருவீங்க?'' என்று கேட்டாள்.

''ஸ்ரீ குட்டி முரளியை ரொம்ப மிஸ் பண்ணுறாங்களா?'' என்று அவன் உல்லாசமாகக் கேட்க,

''நீங்க வேற... நம்ம வீட்டு ஆளுங்க போனிலே கொடுக்கிற தொல்லை தாங்க முடியலை'' என்று அவள் விளக்கவும்,

''அடிப்பாவி. நான் கூட என்னை நினைச்சு ஏங்கிப் போய் தான் கேட்கிறே என்று பார்த்தேன். அவங்க பேச்சால காது வீங்கிப் போய் தான் நீ என்னைத் தேடுறியா?!'' என்று அவன் பெருமூச்சு விட,

''பேசினால் பரவாயில்லைங்க. அட்வைஸ் மழையாப் பொழியுறாங்களே. நேரத்துக்குச் சாப்பிடு. சீக்கிரமா வீடு வந்திடு. தனியா எங்கேயும் போகாதே. யாரும் பெல் அடிச்சா யாருன்னு தெரிஞ்சுக்காமல் கதவைத் திறக்காதே! இப்படி இரு. அப்படி இரு... அம்மாடி என்னால முடியலை. யாராவது ஒருத்தராச்சும் சாதாரணமாப் பேசுறாங்களா!'' என்று அவள் சலித்துக் கொள்ளவும்,

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''என் பொழப்பு சிரிப்பா சிரிக்குதுன்னு சொல்லுறேன். அதைக் கேட்டு நீங்களும் சிரிக்குறீங்களா?'' என்று அவள் சிணுங்கவும்,

''சரிம்மா சிரிக்கலை'' என்று பணிந்தவன்,''ஆனால் நிஜமாகவே நீ என்னை மிஸ் பண்ணலையா?'' என்று ஆழ்ந்த குரலில் கிசுகிசுப்பாகக் கேட்டான்.

அவளுக்கு முரளி அவள் அருகே நின்று கொண்டு அவளது காதோரம் கேட்பது போலவே இருந்தது. மேனியெல்லாம் சிலிர்த்தது.

அவள் அப்படியே கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டு அவனுக்குப் பதில் சொல்லாமல் அமைதி காக்க...



மனைவியின் பதிலை எதிர்பாராதவனாய், ''நான் உன்னை ரொம்ப மிஸ் பண்ணுறேன் ஸ்ரீ. அப்படியே உன்கிட்டே பறந்து வந்திடலாம் போல இருக்கு. ஐ லவ் யு ஸ்ரீ'' என்று சொன்ன போது உணர்ச்சி வசத்தால் அவனது குரல் கரகரப்பாக மாறி இருந்தது.

கணவனின் காதலுக்கு பதில் சொல்ல முடியாதவளாய் வெறும் 'ம்ம்ம்' என்று மட்டுமே இழுத்தாள். அந்த ஒற்றை எழுத்தே அவனை சிதறச் செய்தது.

''ஸ்ரீ...'' என்று அவன் தாபத்துடன் இழுக்க,

''எப்ப வருவீங்க?'' என்று குரல் குழையக் கேட்டாள்.

இம்முறை அவள் குரலில் தொனித்த உணர்ச்சியில் கணவன் அருகில் இல்லாமல் எந்த அளவிற்கு அவள் தவிக்கிறாள் என்பது முரளிக்கு புரிந்தது.

''சீக்கிரமா டா'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் யாரோ அழைப்பு மணி அடிக்கும் சத்தம் கேட்டது.

அந்தப் பக்கத்தில் இருந்த முரளிதரனுக்கும் அந்த ஒலி கேட்டதால், ''ஸ்ரீ, பீப் ஹோல் வழியாப் பார்த்திட்டு கதவைத் திற!'' என்று உத்தரவிட்டான்.

''நீங்களுமா?'' என்று அலுத்துக் கொண்டே கதவருகே சென்று அவன் சொன்னபடியே செய்தாள்.

''நம்ம ஃபிளாட் செக்யூரிட்டி'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறக்க,

''தபால் வந்துச்சும்மா'' என்று அவர் ஒரு உறையை கொடுத்துவிட்டுச் சென்றார்.

அவன், ''சரி ஸ்ரீ. நான் ஆபிஸ் கிளம்புறேன். நீ தூங்கு. தூங்கி எழுந்ததும் பேசலாம்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

ஆனால் மறுநாள் காலை படுக்கையில் இருந்து எழுந்து கொள்ளக் கூட முடியாத அளவுக்கு அவளது உடல் அனலாகக் கொதித்தது.

'நேத்து ஆபிசில் வேலை பார்க்கும் போதே சோர்வா இருந்துச்சு. அவர் பக்கத்தில் இல்லாததால் தான் சோர்வா இருக்கோம் என்று நினைச்சது தப்பு போல! காய்ச்சல் வருவதற்கான அறிகுறி தான் அந்தச் சோர்வுன்னு தெரியாமல் போச்சே! இப்ப என்ன செய்யலாம். பேசாமல் இன்னைக்கு லீவு சொல்லிடலாம். நாளைக்கு சனிக்கிழமை. தொடர்ந்து மூன்று நாட்கள் வீட்டில் இருந்தால் சரியாகிவிடும்' என நினைத்துக் கொண்டவள்,

தனது உடல்நிலை குறித்து தோழியின் அலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அவள் குளியலறைக்குள் செல்ல முரளிதரன் சரியாக அந்த நேரம் அழைத்தான். இரு முறை அழைத்தும் அவள் எடுக்கவில்லை என்றதும் கொஞ்சம் பதறினான். பின்பு அவனே 'பாத்ரூமில் இருப்பாள்' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

படுக்கையில் வந்து விழுந்தவள் முரளிதரன் அழைப்பைப் பார்க்காமல் மீண்டும் தூங்க ஆரம்பித்தாள்.

முரளி சற்று இடைவெளிவிட்டு மீண்டும் அழைக்க இம்முறையும் எடுக்கவில்லை என்றதும் பதட்டமடைய ஆரம்பித்தான்.



அவளுக்கு அவனுடைய அழைப்பு மணி எங்கோ தூரத்தில் கேட்பது போல் இருந்தது.

அவன் மீண்டும் ஒரு முறை அழைக்க... இம்முறை அவளது தூக்கம் கலைக்கப்பட்டு கைபேசியைத் துழாவி எடுத்து இயக்கிக் காதில் வைத்து,

''ம்ம் சொல்லுங்க...'' என்று சோர்வுடன் முனங்கினாள்.

''ஸ்ரீ, என்னாச்சு? இன்னமும் எழுந்துக்கலையா? உடம்பு எதுவும் சரி இல்லையா?'' என்று அவன் அந்தப் புறம் பரிதவிக்க,

''லேசா காய்ச்சல் அடிக்குதுங்க. ஆபிஸ் போகலை. தூங்கப் போறேன்'' என்றாள்.

''காய்ச்சலா? நீ ஆபிஸ் போக வேண்டாம். ரெஸ்ட் எடு. ஆனால் சாப்பாடு... சாப்பாட்டுக்கு என்ன செய்வே?''

''செக்யூரிட்டிகிட்ட சொல்லி சாப்பாடு வாங்கித் தரச் சொல்லுறேன்.''

''செக்யூரிடியா? அவர் கேட்டை விட்டு அசைய மாட்டாரே.''

''அப்படின்னா சரவண பவன்'ல டயல் பண்ணி இட்லி வாங்கிக்கிறேன். நான் பார்த்துக்குவேன்.''

''சரி சாப்பிட்டுவிட்டுத் தூங்கு. நான் ஒரு மணி நேரம் கழிச்சு உன்னைக் கூப்பிடுறேன்.''

''நீங்க தூங்குங்க. நானும் தூங்குறேன். தூங்குற என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க.''

''ஸ்ரீ, ஒண்ணும் பிரச்சனை இல்லையே.''

''ஐயோ! பயப்பட ஒண்ணுமில்லைங்க'' என்று அவனைச் சமாளித்து போனை வைத்தவள் சாப்பாடு பற்றிய சிந்தனை இன்றித் தூங்கிப் போனாள்.

கணவனை அழைக்கக் கூடாது என்று கட்டளை இட்டவளால் உள்நாட்டில் இருக்கும் சொந்தங்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. அரை மணி நேரம் தூங்கும் முன்பே சுதாகரன் அழைத்துவிட்டான்.

''அ..ண்..ணே'' என்று சோர்வாக அவள் முனங்க,

''குட்டி என்னடா? இன்னமும் தூங்குறியா? இல்லைன்னா உடம்பு சரி இல்லையா?''

''காய்ச்சல் அடிக்குது.''

''காய்ச்சலா? எப்போல இருந்து? ஏதாச்சும் சாப்பிட்டியா?'' என்று அவன் பரிதவித்துக் கொண்டே கேள்விக்கு மேல் கேள்வியாக கேட்க,

''நான் அப்புறம் பேசுறேன்'' என்று சொல்லி அவள் போனை வைத்ததும்,

சுதாகரன் தன் தாய் விசாலத்தைத் தேடிப் போனான்.

''அம்மா, நம்ம குட்டிக்கு போன் பண்ணினேன். காய்ச்சல் அடிக்குதுன்னு சொல்லி போனை வைச்சிட்டாள். அவளால பேசக் கூட முடியலை'' என்று அவன் சொன்னதும்,

''சாப்பிட்டாளான்னு கேட்டியா?'' என்று வினவினார்.

''கேட்டேன் மா. ஒண்ணும் சொல்லலை. அவளால பேசக் கூட முடியலை.''



''ஹாஸ்டலில் இருந்தாலாவது சாப்பாடு பிரச்சனை இல்லை. நிறைய பேர் இருப்பாங்க. ஆஸ்பத்திரிக்கு போகணுமின்னா துணைக்கு போவாங்க. வீட்டிலே மாப்பிள்ளையும் இல்லாமல் இவ தனியா என்ன பண்ணுவாள்?'' என்று கவலைப்பட்டார்.

''அதான் மா எனக்கும் ஒரே யோசனையா இருக்கு.''

செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு எழுந்தவர், ''துணிமணியை எடுத்து வைச்சு பத்து நிமிஷத்திலே தான் தயாராகிடுவேன். நீயும் அப்பாகிட்டே சொல்லிப்புட்டு கிளம்பு. ஒரு எட்டு பார்த்திட்டு வந்திடுவோம்'' என்றார்.

இது தான் பாசம். நீ செல்கிறாயா என்று பெண்ணைப் பெற்றவர்களிடம் விசாரிக்காது வீட்டின் பெரிய மருமகளாய், நித்யாவை வளர்த்த அன்னையாய் விசாலம் முடிவெடுத்தார்.

சுதாகரன் நித்யாவின் வீட்டிற்கு அழைத்தான். வேலம்மாள் தான் போனை எடுத்தார்.

''சித்தி, சுதாகரன் பேசுறேன். நம்ம நித்யா குட்டிக்கு காய்ச்சலாம்.''

''என்னது காய்ச்சலா?'' என்று அவர் வாய் பிளக்க,

''நானும், அம்மாவும் ஊருக்கு கிளம்பிட்டோம் சித்தி. போய் பார்த்திட்டு உங்களுக்கு தகவல் சொல்லுறேன். ஒண்ணு நாங்க அங்க ரெண்டு நாளைக்கு இருப்போம். இல்லைன்னா அவளைக் காரிலே கூட்டிட்டு வந்துடுறோம்'' என்று சொன்னதும்,

"சரிப்பா. பத்திரமா போயிட்டு வாங்க. எங்களுக்கு போன் பண்ணுங்க" என்று சொல்லிவிட்டு வைத்தவர் நேரே சாமி படத்தின் முன்பு சென்று நின்று மகளின் ஆரோக்கியத்திற்காக வேண்ட ஆரம்பித்தார்.

'என் பெண்ணை பார்க்க நான் போகமாட்டேனா? நீங்க என்ன போவது?' என்று கேட்காமல் வேலம்மாள் விட்டுக் கொடுத்தார்.

அந்த வீட்டின் இளைய மருமகளான வேலம்மாளின் பணிவும், ஓரகத்திகளுக்கு இடையே உள்ள பாசப் பிணைப்பும் அவரை ஒதுங்கி நிற்க வைத்தது.

விஷயம் முரளியின் பெற்றவர்களுக்கும் பகிரப் பட்டது. அவர்களும் மருமகளுக்காக கவலைப்பட்டனர். கடவுளை வேண்டிக் கொண்டனர்.

விசாலமும், சுதாகரனும் விரைவாகக் கிளம்பியதால் மாலையே சென்னையில் உள்ள நித்யாவின் வீட்டை அடைந்தனர்.

வெகு நேரம் தட்டிய பின்பே அவள் மெல்ல எழுந்து வந்து கதவு திறந்தாள்.

"அம்மா..." என்று கூப்பிட்டுக் கொண்டே அவர் மீதே சாய்ந்தாள்.

அவர்கள் இருவரும் அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போய் படுக்கையில் படுக்க வைத்தனர்.

"காலையில் இருந்து ஏதாச்சும் சாப்பிட்டியா கண்ணு?" என்று கேட்ட விசாலத்திடம் இல்லை எனும்



விதமாய் அவள் தலை அசைத்து மறுத்ததும் விசாலம் சமையலறையில் புகுந்து கஞ்சி காய்ச்ச ஆரம்பித்தார்.

அப்பொழுது நித்யாவின் கைபேசியில் அழைப்பு வரவும்.. எடுத்துப் பார்த்த சுதாகரன் அழைப்பு வெளி நாட்டில் இருந்து வந்துள்ளது என்பதை அறிந்ததும் முரளியாகத் தான் இருக்கும் என்று அனுமானித்துக் கொண்டே கைபேசியை இயக்கி காதில் வைத்துப் பேச ஆரம்பித்தான்.

"சொல்லுங்க மாப்பிள்ளை" என்று இந்தப் பக்கம் சுதாகரனும்,

"ஸ்ரீ, எப்படிம்மா இருக்கே?" என்று அந்தப் பக்கம் முரளியும் ஒரு சேரக் கூற,

"மச்சான். நீங்க சென்னைக்கு வந்து இருக்கீங்களா? வேலை விஷயமா வந்தீங்களா? இல்லைன்னா ஸ்ரீக்காக வந்தீங்களா?" என்று முரளி விசாரித்தான்.

"நித்யாக்காக தான் வந்தோம் மாப்பிள்ளை. நானும் எங்க அம்மாவும் வந்து இருக்கோம்."

"அப்படியா? எப்படி இருக்கா? ஏதாச்சும் சாப்பிட் டாளா?"

"ஒண்ணும் சாப்பிடலையாம். அம்மா கஞ்சி காய்ச்சு றாங்க. நாங்க பார்த்துக்குவோம். நீங்க கவலைப் படாதீங்க" என்று முரளிக்கு தேறுதல் சொன்னான்.

"ரொம்ப தாங்க்ஸ் மச்சான். ராத்திரி முழுசும் தூக்கமே இல்லை. ஒரே கவலையா இருந்துச்சு. நான் ஆபிஸ் கிளம்புறேன். அப்புறமா போன் பண்ணுறேன்" என்று சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

சுதாகரன் தன் சித்தப்பாவிற்கும், தனது தந்தைக்கும் அழைத்து நித்யாவின் உடல் நலம் பற்றிக் கூறினான்.

விசாலம், ''சுதாகரா நீ போய் பக்கத்திலே ஆசுபத்திரி எங்கன இருக்குன்னு கேட்டுட்டு வாய்யா'' என்று மகனை அனுப்பினார்.

அவளை எழுப்பி அந்தக் கஞ்சியைப் புகட்டி வேறு உடை அணிய வைத்து ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்ததும் விசாலம் தன் மகனிடம், ''ரொம்ப அனலடிக்குதே. பேசாமல் நம்ம வீட்டுக்கே கூட்டிட்டு போயிடுவோமா? ஆனா புள்ள சோர்ந்துடுமேன்னு பாக்குறேன்'' என்று கூறவும்,

''இல்லம்மா இங்கேயே சமாளிக்கலாம். புது ஊருன்னு பயப்படாதீங்க. நான் தான் துணைக்கு இருக்கேனே'' என்று கூறித் தன் அன்னையை சமாளித்தான்.

இரவு கழிந்து காலை விடிந்தும் கூட அவளது காய்ச்சல் குறையவில்லை.

''என்னம்மா இன்னமும் காய்ச்சல் குறைய மாட் டேங்குது. திரும்பவும் அதே டாக்டர்கிட்டே போவமா? இல்லை வேற யார்கிட்டவாவது காட்டுவோமா?'' என்று அவன் விசாரிக்க,

வேண்டாம் என்று தன் தலையாட்டி மறுத்த விசாலம், ''சுதா நீ போய் கார் பிடிச்சுட்டு வா. நாம ஊருக்கு போவோம்'' என்றார்.



''எதுக்கும்மா அவளை அலைகழிக்கணும்?''

''எனக்கு என்னமோ நம்ம குட்டிக்கு அம்மை போடப் போகுதுன்னு சந்தேகமா இருக்கு டா. முத்து மாதிரி தான் தெரியுது'' என்றதும்,

''அம்மையா?!'' என்று சுதாகரன் அதிர்ந்தான்.

''சரிம்மா நான் போய் கார் ஏற்பாடு பண்ணிட்டு வரேன்'' என்று சொன்னான்.

அப்பொழுது முரளி அழைக்க... விஷயம் என்ன வென்று சரி வரத் தெரியாமல் கடல் தாண்டித் தனியே இருப்பவனை கலவரப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்தவன் தங்கை நலமாக இருப்பதாகவும், தூங்கு வதாகவும் தெரிவித்தான்.

அவர்கள் வாடகைக் காரில் ஏறி வத்தலக்குண்டு வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு விசாலம் அங்கேயே தங்கிவிட்டார்.

மறுநாள் முரளியின் பெற்றோர் வந்து பார்த்த போது அம்மை தான் என்று உறுதியாக்கும் வண்ணம் சில முத்துக்கள் நித்யாவின் உடலில் தோன்றி இருந்தது.

## 19

அன்று நித்யாவின் கைப்பேசிக்கு அழைத்த முரளியின் அழைப்பை கருப்பசாமி எடுத்துப் பேசினார்.

''மாமா, நீங்களும் சென்னைக்கு வந்து இருக்கீங்களா?'' என்று அவன் கேட்டதும்,

''இல்ல மாப்பிள்ளை. என் மகள இங்க கூட்டிட்டு வந்திட்டோம்.''

''ஏன் மாமா எதுவும் பிரச்சனையா? காய்ச்சல் இன்னும் சரியாகலையா?''

''அது மாப்பிள்ளை... புள்ளைக்கு அம்மை போட்டு இருக்கு.''

''அம்மையா?'' என்று அதிர்ந்தவனிடம்,

''நாங்க பார்த்துக்கிடுதோம். நீங்க பயப்படாதீங்க'' என்று தேறுதல் மொழி கூறினார்.

''அவகிட்டே போனை கொடுங்க மாமா. நான் பேசுறேன்'' என்றதும்,

''இல்ல மாப்பிள்ளை. காய்ச்சல் இன்னமும் இறங்கலை. ரொம்ப சோர்ந்து போய் இருக்காள். இப்ப கொண்டு போய் போனைக் கொடுக்க முடியாது. நீங்க ஒரு வாரம் கழிச்சுப் பேசுங்க'' என்றார்.

'ஒரு வாரமா?' என்று மனதுக்குள் அதிர்ந்தவன் மாமனாரிடம் ஒன்றும் சொல்ல முடியாமல் அவரது பேச்சைக் கேட்டு அழைப்பைத் துண்டித்தான்.

ஆறு நாட்கள் கழித்தே நித்யாவும் தன் அண்ணனிடம், ''அவர் போன் பண்ணினாரா?'' என்று கேட்டாள்.

''பண்ணினாராவா? ஒரு நாளைக்கு எத்தனை தடவைன்னு கேளு. உன்கிட்டே பேசணும் என்று அவ



தவிக்கிறார். நம்ம வீட்டுப் பெருசுங்க தான் உன்னிடம் போன் கொடுக்காமல் அவரை அலைக்கழிக்குறாங்க.''

''அவர் எப்ப வருவார்?''

''அது தெரியலைடா குட்டி. வேலை முடியலைன்னு சொன்னார். இன்னைக்கு பேசும் போது கேட்டுச் சொல்லுறேன்.''

''இல்லை நானே கேட்கிறேன்.''

''இல்லைடா போனை இந்த ரூம் பக்கமே கொண்டு வர விட மாட்டாங்க. உன் கையை பாரு. உன் உள்ளங் கையிலே மட்டும் எத்தனை முத்து? முதல்ல உன்னால போனை பிடிக்கவாது முடியுமா? முதல் தண்ணி ஊத் தட்டும். அப்புறமா அண்ணன் உன்னைப் பேச வைக்கிறேன்'' என்று சமாதானம் கூறினான்.

அதன்படி பெரியவர்களிடம் அனுமதி வாங்கி முதல் தண்ணீர் ஊற்றிய அன்று மாலை முரளி அழைத்ததும் சுதாகரன் கைப்பேசியை தங்கையிடம் கொண்டு வந்து நீட்டினான்.

அவள், ''ஹலோ...'' என்றதும்,

''ஸ்ரீ...எப்படிம்மா இருக்கே?'' என்று கரகரப்பான குரலில் கேட்டான்.

கணவனது குரலைக் கேட்டவளுக்கு வார்த்தை வரவில்லை. அழுகை தான் வந்தது.

அவள் ஏதேனும் கூறுவாள் என்று சில நொடிகள் அவன் மௌனம் காக்க... அவள் அமைதியாய் இருக்கவும் தானே பேச ஆரம்பித்தான்.

''இன்னைக்கு முதல் தண்ணி ஊத்தினதா சுதா மச்சான் சொன்னார். அப்ப இனிமேல் சரி ஆகிடும் தானே? ரொம்ப கஷ்டமா இருந்துச்சா?''

அவனது கேள்விகளைப் புறம் தள்ளிவிட்டு, ''எப்ப வருவீங்க?'' என்று அவள் கேள்வி எழுப்பினாள்.

''சீக்கிரமா வரேன்'' என்றதும்,

இதையே தான் அன்றிலிருந்து கணவன் சொல்லிக் கொண்டு இருக்கிறான் என்று கோபப்பட்டாள்.

அவளுக்கும் அவளது அலுவலக வேலை எப் படிப்பட்டது என்று தெரிந்திருந்தும் கூட கணவனைப் புரிந்து கொள்ள மறுத்தாள்.

அவன் அவளது உடல் நிலையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். எந்த பதிலும் சொல்லாமல் அமைதி யாகச் செவிமடுத்தவள் இறுதியில் ''வைச்சிடுறேன்'' என்று சொல்லிக் கைபேசியை அணைத்தும் விட்டாள்.

அவன் திரும்ப அழைத்த போது அவனது அழைப்பை ஏற்றுப் பேசிய சுதாகரன் அவனைச் சமாதானப்படுத் தினான்.

மூன்று தண்ணீர் ஊற்றியதற்கு பின்பு தானே தலையை வாரிக் கொள்ளலாம் என்று நினைத்த நித்யா கண்ணாடியைத் தேடிப் பார்த்தாள். அந்த அறையில் எங்கும் அது தென்படவில்லை என்றதும் தன் தந்தையை அழைத்து,

''அப்பா ஒரு கண்ணாடி கொண்டு வாங்கப்பா. தலை சீவணும்'' என்றாள்.



''அம்மாவை வரச் சொல்லவாம்மா?'' என்று கருப்ப சாமி கேட்டவுடன்,

''இல்லைப்பா. நானே சீவிக்குவேன். அதான் சரி ஆகி டுச்சே'' என்று சொன்னதும் கருப்பசாமி கண்ணாடியைக் கொண்டு வந்து நீட்டினார்.

அதில் தெரிந்த தன் முகத்தைப் பார்த்து பெரிதாக அதிர்ந்தாள்.

முகம் முழுவதும் அம்மைத் தழும்புகளாக காட்சி அளிக்க... இதுவா என் முகம்? என்று பயந்து போனாள். ஓவென்று அழ ஆரம்பித்தாள்.

''இப்ப யாரு உன் கையிலே கண்ணாடியைக் கொடுத்தது?''

''தழும்பு கொஞ்ச கொஞ்சமாத்தேன் மறையும்.''

''ஒரு மாசம் கழிச்சு பாரு. உன் மொகம் எப்படி இருக்குன்னு...''

என்று ஆளுக்கொரு வசனமாய் கூறி அவள் வீட்டினர் அனைவரும் அவளைச் சமாதானப்படுத்தினார்கள்.

ஆனால் அவள் மனம் சமாதானம் அடைய மறுத்தது. அதற்கு காரணம் முரளிதரன். கல்யாண சமயத்தில் முரளி நடந்து கொண்ட விதம்.

'என் போட்டோவைப் பார்த்து வெறுத்துப் போய் என்னுடன் குடும்பம் நடத்த முடியாது என்று சொன்னவர் தானே! இப்போ இந்த முகத்தைப் பார்த்து மட்டும் எப்படி என்னை ஏற்றுக் கொள்ளுவார்? நீ வேண்டாம் போ என்று சொல்லிவிடுவாரோ?' என்ற கேள்வி பிறந்ததும் விதிர்விதிர்த்துப் போனாள்.

'அவர் சென்னையில் இருந்த போது... நான் அவருக்கு சகல விதத்திலும் பொருத்தமானவள் என்று தெரிந்தும் கூட அவர் என்னிடம் நெருங்க முற்பட வில்லை. இப்போ இப்படி ஆன பின்னால்...' என நினைத்துக் கலங்கினாள்.

அன்று இரவு அவளை அழைத்த முரளியும் வழக்கம் போல் அவள் உடல் நலனைப் பற்றி மட்டுமே கேள்விகள் கேட்டான்.

உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை என்றோ, 'ஐ லவ் யூ' என்றோ அவன் கூறவில்லை.

அவன் மீது என்ன தவறு இருக்கிறது. மனைவிக்கு உடல் நிலை சரியில்லாத போது ஒரு மனிதன் எப்படி அது போல் பேசுவான்.

அந்த நியாயம் சாதாரண நித்யாவிற்கு புரிந்து இருக்கும். ஆனால் இப்பொழுது இருப்பவளோ... எதை எதையோ நினைத்து மனதைக் குழப்பிக் கொண்டிருக் கிறாளே!

அதனால் அந்த நியாயம் அவளுக்குப் புரியாமல் போக... அவனை மனதளவில் விலக்கி வைத்தாள். எந்நேரமும் இது பற்றியே சிந்தித்து மனதைக் குழப்பிக் கொண்டதால் முன்னிலும் அதிகச் சோர்வுடன் காணப் பட்டாள்.

நோயின் தாக்கத்தால் தான் அவள் சோர்வாக இருக்கிறாள் என்று வீட்டினர் நினைத்துக் கொண்டனர். ஆனால் சுதாகரன் மட்டும் தங்கையை இனம் கண்டு கொண்டான்.



அவன் அவளிடம் தனியாக விசாரிக்க முதலில் ஒன்று மில்லை என்று மறுத்தவள் அவன் அழுத்தி அழுத்திப் பல முறை விசாரித்ததும் தன் பயத்தையும், கணவனின் அன்றைய விலகலையும் கோடி காட்டினாள்.

"அதுவும் இதுவும் எப்படிடா ஒன்றாக முடியும்? நீ இப்போ அவரோட பொண்டாட்டி தானே!" என்று சுதாகரன் தங்கையை சமாதானப்படுத்த முயன்றான்.

ஆனால் நித்யாவோ இன்னமும் நான் அவருக்கு மனைவியாக வாழ ஆரம்பிக்கவில்லை என்பதை வெளியில் சொல்ல முடியாமல் மனதுக்குள் வைத்துக் கொண்டு மறுகினாள்.

அதனால் அண்ணனின் சமாதானத்தை அவள் மனம் ஏற்கவில்லை.

தங்கையின் நிலையைக் கண்ட சுதாகரனுமே முரளி தரனின் வரவை ஆவலாக எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டான்.

## 20

இரண்டு வாரத்தில் அமெரிக்காவில் இருந்து திரும்ப வேண்டிய முரளி வேலை இழுத்துக் கொண்டே போன தில் ஒரு மாதத்திற்கு பின்பே அங்கிருந்து கிளம்பினான்.

அவன் சென்னையில் இறங்கியதும் வீட்டிற்கு கூடச் செல்லாமல் அடுத்த விமானம் பிடித்து மதுரை வந் தடைந்தான்.

அங்கிருந்து வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு மனைவியைக் காண அவள் வீட்டிற்கு சென்றான்.

அவளது வீட்டின் முன்பு கார் நிற்கவும் வீட்டில் இருந்து சுதாகரன் வெளியே வரவும் சரியாக இருந்தது.

''வாங்க மாப்பிள்ளை!'' என்று வரவேற்றுக் கொண்டே அவனை நெருங்கியவன்,

''நீங்க உள்ளே போங்க மாப்பிள்ளை. நான் பணம் கொடுத்து அனுப்பிட்டு பெட்டியை எடுத்துட்டு வரேன்'' என்று சொன்னதும்,

அவனைப் பார்த்து முறுவலித்த முரளி, ''தாங்க்ஸ்'' என்று சொல்லிக் கொண்டே பரபரப்புடன் மனைவியைக் காண ஆவலாக வீட்டிற்குள் நுழைந்தான்.

பொதுவாக அவர்கள் வீட்டில் இவனுக்காக எந்த செலவும் செய்யக் கூடாது என்று எதிர்பார்க்கும் முரளிதரன் இன்று அதைக் கண்டு கொள்ளும் மனநிலையில் இல்லை.

அவன் அதை மட்டுமா கண்டு கொள்ளவில்லை. தனக்காக தனது மச்சான் தன் பெட்டியைத் தூக்கி வருகிறேன் என்று சொன்னதையும் தான் கண்டு கொள்ளவில்லை.

அப்படி ஆவலாக வீட்டிற்குள் நுழைந்தவனை வழியில் சொர்ணத்தம்மாள் மடக்கினார்.

அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு, ''வந்துட்டியா அய்யா! நல்லா இருக்கியா?'' என்று நலன் விசாரிக்க ஆரம்பித்தார்.



''நான் நல்லா இருக்கேன் பாட்டி. நீங்க எப்படி இருக்கீங்க?''

''எனக்கு என்னய்யா குறைச்சல். உன்னை இந்தத் தடவையும் அந்த வெள்ளைக்காரனுங்க பிடிச்சு வைச்சுக்கிட்டாங்களாமே! நம்ம வேலம்மாளோட தம்பி சம்சாரத்தோட ஒண்ணு விட்ட அண்ணனுக்கு கவுன்சிலர்கிட்ட நல்ல பழக்கம் இருக்காம். அவர்கிட்ட சொல்லி இதை என்னான்னு பார்க்கச் சொல்லுவமா? எப்பப் பார்த்தாலும் அவனுங்க உன்னைப் பிடிச்சு வைச்சுக்கிறானுங்க. நாமளும் சும்மா விடக் கூடாது அய்யா. நாம யாருன்னு காட்ட வேணாமா?'' என்று கேட்டார்.

அவர் சொன்ன உறவு முறையில் ஒரு முறை அவனது தலை கிறுகிறுத்தது என்றால்.. அவர் சொல்லிய கருத்து இன்னொரு முறை அவனுக்கு தலை சுற்றலை உண்டு பண்ணியது.

அயல்நாட்டில் இருக்கும் அவனது உயர் அதிகாரிகளை இங்கிருக்கும் கவுன்சிலரைக் கொண்டு அடக்குவது பற்றி அவர் பாடம் எடுத்துக் கொண்டிருந்தார்.

முரளிதரனுக்கோ அவரது பேச்சைக் கேட்கும் அளவிற்கு பொறுமை இல்லை. அவன் தன் மனைவியை எப்போது காணலாம் என்று துடித்துக் கொண்டிருந்தான்.

அவன் தன் கண்களாலேயே வீட்டைத் துழாவினான். ஒருவரும் அகப்படவில்லை.

'வீட்டில் யாரும் இல்லையோ? ஆனால் எப்படியும் ஸ்ரீ வீட்டில் தானே இருப்பாள்' என்று நினைத்தவன் மீண்டும் கண்களாலேயே தேட... அவள் அகப்பட வில்லை.

'தூங்குறாளோ? இல்லைன்னா என் குரல் கேட்டு வெளியே வந்து பார்த்திருப்பாளே!' என்று அவன் நினைத்துக் கொண்டு இருக்க சொர்ணத்தம்மாள் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

வீட்டிற்கு உள்ளே நுழைந்த சுதாகரன் நிலைமையை நொடியில் கணக்கெடுத்தான்.

'இந்த அப்பத்தாக்கு வேற வேலையே இல்லை. யாருடா சிக்குவான்னு காத்திருக்க வேண்டியது' என்று நினைத்தவன்,

''அப்பத்தா பக்கத்து வீட்டு பேச்சி அத்தை உன்னைக் கூப்பிடுறாங்க'' என்று சொல்லி முரளிதரனை அவரிட மிருந்து விடுவித்தான்.

அத்தோடு நில்லாமல், ''மாப்பிள்ளை, நித்யா அந்த ரூமிலே இருக்காள்'' என்று அவளது அறையைச் சுட்டிக் காட்டவும் செய்தான்.

திரும்பவும் ஒரு முறை சுதாகரனுக்கு நன்றி உரைத்து விட்டு அவன் அந்த அறையை நோக்கிச் சென்றான். அறைக் கதவு திறந்தே இருந்தது.

உள்ளே நுழைந்தவன் அங்கே கட்டிலில் உட்கார்ந்து அறை வாசலையே பார்த்துக் கொண்டிருந்த மனை வியை விநோதமாகப் பார்த்தான்.



'நான் வந்தது தெரிந்தும் இவள் ஏன் வெளியே வரவில்லை?' என்று நினைத்தான். ஆனால் அடுத்த நொடி அவளது மேனியில் தெரிந்த அம்மைத் தழும்பு களை கண்டு திடுக்கிட்டான்.

நித்யாவோ அவனது திடுக்கிடலைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தாள்.

''இவ்வளவு சீரியஸாவா இருந்துச்சு?'' என்று கேட்டுக் கொண்டே அவளது அருகில் விரைந்தான்.

''ஏன் நீங்க எல்லோரும் என்கிட்டே லேசா தான் அம்மை போட்டு இருக்கு என்று பொய் சொன்னீங்க?'' என்று கேட்டவன், அவளது பதிலை எதிர்பார்க்காதவ னாய்,

''உண்மையைச் சொல்லி இருந்தால் மட்டும் ஓடி வந்து என்னால பார்த்திருக்க முடியாது தானே!'' என்று வருத்தம் தெரிவித்தான்.

அவனுக்கு அவளை மெல்ல அணைத்து, உடல் வருடி அவளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவளைத் தொட்டால் அவளுக்கு வலிக்குமோ என்று தொட பயந்தான்.

இதை அவன் வாய்விட்டு வெளியே சொல்லியிருக் கலாம். சொல்லாமல் விட்டது தப்பாயிற்று.

''ரொம்ப வலிச்சதா? அம்மை வந்தால் எரிச்சல் தானே அதிகம் இருக்கும்? இல்லை வலிக்கவும் செய்யுமா?'' என்று சந்தேகம் கேட்டான்.

அந்த அறைக்குள் நுழைந்ததில் இருந்து அவன் மட்டும் தான் பேசிக் கொண்டு இருந்தான். அவனது

மனைவி வாயைத் திறக்கவே இல்லை என்பதைத் தாமதமாகத் தான் உணர்ந்தான்.

''என்னாச்சு ஸ்ரீ? ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேங்கிறே? நான் இத்தனை நாளா உன்னைப் பார்க்க வராமல் அமெரிக்காவிலே இருந்துட்டேன் என்று என் மேல கோபமா இருக்கியா?'' என்று கேட்டான்.

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை.

''என்னம்மா? என்ன விஷயம்? இந்த தழும்பெல்லாம் எப்ப மறையும்?'' என்று அவன் பேச்சை திசை மாற்றக் கேட்ட கேள்வியில், அவளது உதடுகள் அழுகையில் பிதுங்கின.

'வந்ததில் இருந்து இவருக்கு என்னைத் தொடக் கூடப் பிடிக்கவில்லை. என் நோய் பற்றி மட்டுமே விசாரிக்கிறார். இந்தத் தழும்பு எப்ப மறையும் என்று வேறு கேட்டுக்கிட்டு இருக்கார்' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

நோய் வந்திருப்பது அவளுக்கு தானே! அப்படி என்றால் அது குறித்த விசாரணை அவளைப் பற்றி தானே என்பதை சிந்தித்துப் பார்க்கத் தவறினாள்.

இந்தியா வந்ததுமே அவளைக் காணத் தானே ஓடி வந்திருக்கிறான் என்பதெல்லாம் அவள் கருத்தில் பதியவில்லை.

அறைக்குள் நுழைந்தவுடன் அவன் காட்டிய அதிர்ச்சியும், அவன் அவளைத் தொடாமல் விலகி நிற்பதும் குற்றமாக அவள் கண்ணுக்குப் பட்டது.



தப்பும் தவறுமாக சிந்தித்து மனதின் பாரத்தை அதிகமாக்கியதில் அழுகை கூடியது.

''இப்ப எதுக்கு அழுகிறே?'' என்று பதறியவன்,

அவள் தன்னுடைய எந்தக் கேள்விக்கும் பதிலொன்றும் சொல்லவில்லை என்றதும் தனக்குத் தோன்றிய சந்தேகங்களைக் கேட்க ஆரம்பித்தான்.

''உன்னை யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்களா? உங்க அம்மா இல்லைன்னா உங்க அப்பா?''

அவள் இல்லை என்னும் விதமாய் தலையை ஆட்டினாள்.

வாய் திறந்து பதில் சொல்லாது போனாலும் வெகு நேரத்திற்கு பின் அவள் சைகை மூலமாகவாது பதில் சொல்ல ஆரம்பித்தாளே என்று சந்தோஷமே அடைந்தான்.

''இல்ல எங்க வீட்டில் யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்களா?''

அதற்கும் இல்லை என்ற தலை உருட்டல் பதிலாகக் கிடைத்தது.

''அப்படின்னா ஆபிஸில் மேனேஜர்... ஆனால் அவர் கிட்டே நான் உன் நிலைமையை விளக்கி இருந்தேனே. அதனால அவர் கண்டிப்பா கிடையாது'' என்று தான் கேட்ட கேள்விக்கு தானே பதில் சொல்லிக் கொண்டவன்,

''என்னை ரொம்ப மிஸ் பண்ணினாயா?'' என்று கேட்டான்.

அதற்கும் அவள் இல்லை என்று தலையாட்டியதும்,

''அடிப்பாவி! என்னை மிஸ் பண்ணலையா? அப்ப நான் அவசர அவசரமா இங்க ஓடி வந்து இருக்க வேண்டியதில்லையோ? பேசாமல் ஆற அமர ஒரு வாரம் கழிச்சு வந்து இருக்கலாமோ?'' என்று அவன் நக்கல் பண்ணியவுடன், அவளது அழுகை அதிகரித்தது.

கணவனின் கேலியையும் தவறாகத் தான் புரிந்து கொண்டாள்.

'தழும்போடு என்னைப் பார்த்ததும் என்னைப் பார்க்க மெதுவா வந்திருக்கலாம் என்று நினைக்கிறார்' என்று எடுத்துக் கொண்டாள்.

அவனுடைய சிறு செய்கை... சாதாரணப் பேச்சு என்று அனைத்திற்குமே தப்பு வர்ணம் பூசினாள்.

அவன் மீதான அளவு கடந்த உரிமையும், எதிர்பார்ப்புமே அவளை அது போல் சிந்திக்க வைக்கிறது என்பது அவளுக்கு நன்றாக புரிந்து தான் இருந்தது.

அதே அளவு உரிமையும் பாசமும் கணவன் தன்னிடம் கொள்ளவில்லையோ என்ற பயமே அவளை தப்புத் தப்பாய் யோசிக்க வைத்தது.

அவனும் விதவிதமாய் கேட்டுப் பார்த்தும் அவள் வாய் திறந்து காரணத்தையும் சொல்லவில்லை. அவனிடம் பேசவும் இல்லை.

'இவளுக்கு என்ன ஆச்சு? எது இவளது மனதைக் குடைகிறது?' என்று நினைத்தவன், ''ஸ்ரீ...'' என்று அழுத்தமாகக் கூறி அவளது கவனத்தை தன் புறமாகத் திருப்ப முயன்றான்.



அவளோ கட்டிலில் இருந்து எழுந்து அறையை விட்டு வெளியேறினாள். முரளி முகத்தில் அறை வாங்கியது போல் உணர்ந்தான்.

உடல் நிலை சரி இல்லாத தன்னைக் கணவன் வந்து பார்க்கவில்லை என்பதால் அவள் கோபமுற்றிருக்கிறாள். அதனால் இது வரைக்கும் அவள் பேசாது அமைதியாக இருந்ததைக் கூட கோபத்தின் வெளிப்பாடு என்று இலகுவாக எடுத்துக் கொண்டவனால் அவளது இந்தச் செயலை அவமதிப்பாகத் தான் கருத முடிந்தது.

கண்மூடி சில கணங்கள் அமைதியாக அதே அறையில் இருந்தான். அவளது அவமதிப்பால் தனக்கு ஏற்பட்ட கோபத்தை அடக்க முயற்சி செய்தான்.

பின் இருக்கும் இடத்தையும், மனைவியின் உடல் நலத்தையும் கருத்தில் கொண்டு தனது கோபத்தைக் கைவிட்டவனாய் மனைவியை நாடிச் சென்றான்.

அவள் சோபாவில் அமர்ந்திருந்தாள். முரளிதரன் அவள் அருகே சென்று அமர்ந்து ''ஸ்ரீ...'' என்று அழைக்க அவள் விருட்டென்று எழுந்து அவ்விடம் விட்டு நகர்ந்து அடுக்களைக்குள் சென்று மறைந்தாள்.

அடக்கி வைத்திருந்த கோபம் முரளிக்கு பீறிட்டு எழ... அவன் எழுந்து விறுவிறுவென வெளியேறினான்.

## 21

மற்றொரு அறை வாயிலில் நின்று நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுதாகரன் தங்கையை மனதில் திட்ட ஆரம்பித்தான்.

முதலில் மாப்பிள்ளையைச் சமாதானம் செய்வோம் என்று வீட்டிற்கு தலை மகனாய் முடிவு எடுத்து, முரளிதரன் பின்னே சென்று தெருவை எட்டிப் பார்க்க... அங்கே அவனைக் காணவில்லை என்றதும் வீட்டிற்கு முன் இருக்கும் மாடிப் படிகளில் ஏறி மொட்டை மாடிக்குச் சென்றான்.

அங்கே ஒரு மூலையில் மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு கண்மூடி நின்ற முரளிதரனைக் கண்டு சுதாகரன் பெருமூச்சு விட்டான்.

முரளிதரன் கொண்டு வந்திருந்த பெட்டிகளைப் பார்க்கும் போதே அவன் சென்னையில் உள்ள அவன் வீட்டிற்கு கூடச் செல்லாமல் நேரடியாக இங்கே வருகிறான் என்பது சுதாகரனுக்கு புரிந்தது.

அப்படி ஓடி வந்திருப்பவனை தங்கை தவிர்க்கிறாள். அவள் தன் கணவனைத் தவிர்ப்பதற்கான காரணம் அவனுக்கு தெரிந்ததினால் அவர்கள் இருவருக்கும் இடையே சமரசம் செய்து வைப்பது தன் கடமை என்று எண்ணியவனாய் முரளிதரனின் அருகே சென்று நின்றான்.

சில பல நொடிகள் கடந்தும் முரளி அமைதியாக இருக்கவும் தனது வரவை தெரிவிக்கும் விதமாய், ''மாப்பிள்ளை'' என்று மெல்ல அழைத்தான்.

கண் விழித்தவன் அருகே இருந்தவனைக் கண்டு புன்முறுவல் புரிந்தான். அதோடு நில்லாமல் வேறு பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம் பித்தான்.



முரளி தன்னிடம் தனது மனைவியைப் பற்றி புகார் படிக்க விரும்பவில்லை என்பது சுதாகரனுக்குத் தெளி வாகப் புரிந்தது. ஒரு அண்ணனாய் அவனுக்கு அது சந்தோஷத்தைத் தந்தது.

இருப்பினும் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்பதால் தானே அந்த விஷயத்தைப் பேசி ஆக வேண் டிய கட்டாயத்தில் இருந்த சுதாகரன், ''மாப்பிள்ளை, நித்யா உங்ககிட்டே ஏதாச்சும் சொன்னாளா?'' என்று தங்கையைப் பற்றிய விஷயத்தைத் துவங்கி வைத்தான்.

'அவள் வாயைத் திறந்து என்னத்தைச் சொன்னாள்' என்று மனதுக்குள் கடுப்பாகத் திட்டிக் கொண்ட முரளி,

''ஒண்ணும் சொல்லலையே! நீங்க எதைப் பத்திக் கேட்கிறீங்கன்னு எனக்குப் புரியலை'' என்று உண்மை யான பதிலையே சொன்னான்.

நெடிய மூச்சை வெளியேற்றிய சுதாகரன் மெதுவான குரலில், ''நித்யாக்கு அம்மை போட்டதுக்கு அப்புறம் அவ ரொம்ப வருத்தமா இருந்தாள். வீட்டிலே உள்ள வங்க அவ அம்மை நோய் தாக்கியதால் தான் அமைதியா இருக்கிறதா நினைச்சாங்க. ஆனால் எனக்கு அப்படி இல் லைன்னு தோணுச்சு. தனியா அவளை விசாரித்த போது...'' என்றவன் சில நொடிகள் தயங்கி நிறுத்தி விட்டு முரளிதரனை சங்கடத்துடன் நோக்கினான்.

அவனது பார்வைக்கான அர்த்தம் முரளிதரனுக்கு சரியாக புரியாத போதும், ''சொல்ல வந்ததைச் சொல் லுங்க மச்சான். நான் ஒண்ணும் நினைச்சுக்க மாட்டேன்'' என்று ஊக்கம் கொடுத்தான்.

''உங்க கல்யாணத்தப்போ நடந்த குளறுபடிகளை என்கிட்டே சொன்னாள்'' என்று சுதாகரன் சொல்லி நிறுத்த... அங்கே அமைதி நிலவியது.

'நடந்து முடிந்த விஷயங்களை இப்போ எதுக்கு அவ தன் அண்ணன்கிட்டே சொல்லி இருக்காள்? அதுக்கான அவசியம் என்ன? எவ்வளவு தூரம் விஷயம் சொல்லி இருக்காள் என்று தெரியலை. திருமணத்தின் போது நடந்த தப்புக்கு இனிமேல் என்ன விளக்கம் கொடுப்பது. அதுவும் மனைவியின் அண்ணனிடம் ஏன் விளக்க வேண்டும்?' என்று கூட அவனுக்குத் தோன்றியது.

அதனால் முரளிதரன் அமைதி காத்தான்.

சுதாகரனுக்கோ மாப்பிள்ளையைப் பற்றித் தன் தங்கை தன்னிடம் கூறியவற்றை வெளியே தெரிவிக்க வேண்டி இருக்கிறதே என்று சங்கடமாக இருந்தது. அதனால் அவனும் அமைதி காத்தான்.

ஆனால் அமைதி காப்பதினால் என்ன பிரயோஜனம்? சொல்ல வந்த விஷயத்தை இன்னமும் சொல்லி முடிக்கவில்லையே என்று எண்ணியவனாய்,

''மாப்பிள்ளை அவ என்ன சொல்லுறாள் என்றால்... அன்னைக்கு நீங்க அவ அழகா இல்லைன்னு தான் அவளைப் பிடிக்கலைன்னு சொன்னீங்களாம். இன்னைக்கு அம்மை போட்டு அவ முகத்திலே அம்மை மறையாமல் புள்ளி புள்ளியா தழும்பு வந்து முகம் அசிங்கமா ஆகிடுமோன்னு பயப்படுறாள். அதனால...'' என்று அவன் திரும்பவும் தயங்கி நிறுத்த,

என்னவென்பது போல் முரளிதரன் அவனையே பார்த்துக் கொண்டிருக்க...



''அதனால நீங்க அவளை விலக்கி வைச்சிடுவீங்களோன்னு...'' என்று சுதாகரன் தொடங்கவும்,

''லூசா அவள்? அவளுக்கு கிறுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று காட்டமாக முரளிதரன் பொரிய ஆரம்பித்தான்.

பின் சற்று நிதானித்து, ''சாரி'' என்று சுதாகரனிடம் அவனது தங்கையை திட்டுவதற்காக முரளி மன்னிப்புக் கேட்க...

''இல்லை மாப்பிள்ளை. நீங்க திட்டுங்க. அவ கிறுக்குத்தனமாத்தானே யோசிக்குறாள்'' என்றதும்,

''அன்னைக்கு அழகா இல்லைன்னு சொல்லி இவ கழுத்திலே நான் தாலி கட்டாமலா போனேன்?'' என்று வேகமாக ஆரம்பித்தவன்,

''சரி மச்சான். நான் இதெல்லாம் அவகிட்டேயே பேசித் தீர்த்துக்கிறேன். எனக்கு நாளைக்கு வேலைக்குப் போயே ஆகணும். இவளைப் பார்த்திட்டு நைட் கிளம்பிடலாம் என்று நினைச்சுத் தான் வந்தேன். அவளுக்கு இன்னும் உடல் நிலை சரியில்லை. அதனால அவளை இங்கேயே விட்டுட்டுப் போகலாம் என்று நினைச்சேன். ஆனால் இதைக் கேட்ட பிறகு உங்க வீட்டில் இனிமேல் அவளை விட்டு வைக்க என்னால முடியாது. ஆனால் எனக்கு பத்திய சாப்பாடு... ம்ஹூம் சமைக்கவே தெரியாது...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன் சில நொடிகள் நிறுத்திவிட்டு,

''நான் எங்க அம்மாவை சென்னைக்கு வராங்களான்னு கேட்டுப் பார்க்கிறேன்'' என்று சொல்லித் தனது தாயின் கைபேசிக்கு அழைத்தான்.

''என்னடா முரளி?'' என்று அவர் கேட்டதும்,

''அம்மா இன்னைக்கே உங்களால சென்னைக்குக் கிளம்ப முடியுமா?'' என்று கேட்டான்.

''சென்னைக்கா? இன்னைக்கா? எதுக்குடா?''

''இல்லைம்மா நான் ஸ்ரீயை சென்னைக்குக் கூட்டிட்டுப் போகலாம் என்று பார்க்கிறேன். ஆனால் அவளுக்கு இன்னும் கொஞ்ச நாள் பத்திய சாப்பாடு சாப்பிட வேண்டி இருக்குமே... அதான் கேட்கிறேன்.''

''ஏன்டா முரளி, என் பொண்டாட்டி ஊருக்குப் போயிட்டாள் அப்படின்னு ஜனகராஜ் மாதிரி கத்திகிட்டு ஜாலியா வாழ்க்கையை அனுபவிப்பதை விட்டுட்டு இப்படி 'இதய கமலம்' கே.ஆர்.விஜயா மாதிரி.

**உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல**

**உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல**

**நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல**

**நீ இல்லாமல் நானும் நானல்ல!**

அப்படின்னு பாடிக்கிட்டு இருக்கே!'' என்று கேலி பேசவும்,

'இவங்க வேற விஷயம் புரியாமல் நம்மைக் கடுப்பேத்திகிட்டு இருக்காங்க!' என்று நொந்து கொண்ட முரளி,

''ரொம்ப நல்லா பாடுறீங்கம்மா. இப்ப தான் வயசானவங்களைக் கூட விஜய் டி.வி. சூப்பர் சிங்கரில் சேர்த்துக்கிறாங்களே. பேசாமல் நீங்களும் அதிலே போய் கலந்துக்கோங்க. இப்ப நான் கேட்ட கேள்விக்கு



கொஞ்சம் சீரியஸா பதில் சொல்லுங்க'' என்று கடித்த பற்களுக்கு இடையே வார்த்தைகளை வெளியேற்றினான்.

மகனது குரலில் தென்பட்ட கடினத் தன்மையில் தனது கேலியைக் கைவிட்ட காமாட்சி, ''அப்பா இந்த வாரத்தோட ரிடயர்ட் ஆகுறார் இல்ல... அதனால இந்த வாரம் என்னால வர முடியாது முரளி. அடுத்த வாரத்தில் இருந்து நாங்க சும்மா தான் இருப்போம். அப்ப சென்னைக்கு வரோம். நானும் என் பொண்டாட்டியும் தனியா இருக்க விரும்புறோம் என்று சொல்லி நீயா எங்களை கழுத்தைப் பிடிச்சு தள்ளினால் தான் போவோம்'' என்று சொன்னதும்,

''சரிம்மா. நான் போனை வச்சிடுறேன்'' என்று முரளி சொன்னவுடன், ஒரு தாயாய் காமாட்சி அவனது குரலில் இருந்த வருத்தத்தை நொடியில் உணர்ந்து கொண்டார்.

''முரளி எதுவும் பிரச்சனையாடா? அப்பாக்குப் பிரிவு உபச்சார விழா நடத்தப் போறாங்க. அதிலே குடும்பத்தாரும் கலந்துக்கலாம் போல! உன்னால வேலைக்கு நடுவிலே வர முடியாது என்பதால் அப்பா என்னை வரச் சொன்னார். அதான் போகலாம் என்று பார்த்தேன்...'' என்று அவர் தயங்கவும்,

''ஒண்ணும் பிரச்சனை இல்லைம்மா. நீங்களும் அப்பாவும் அடுத்த வாரம் வாங்க. என்னால அந்த விழாவுக்கு வர முடியாது. நீங்களும் போகலைன்னால் நல்லா இருக்காது'' என்று தன் தாயை சமாதானப் படுத்திவிட்டு வைத்தான்.

சுதாகரனிடம் திரும்பி விஷயத்தை விளக்கியவன், "உங்க சித்தி... ஸ்ரீயோட அம்மா எங்க கூட சென்னைக்கு வருவாங்களா?" என்று கேட்டான்.

"கேட்டுப் பார்க்கணும் மாப்பிள்ளை. சித்தப்பா சாப்பாட்டுக்கு கஷ்டப்படுவார் என்று சொல்லி வர மறுக்கலாம். பேசிப் பார்க்கிறேன்" என்று சொல்லி நகரப் போனவனை,

"இன்னைக்கே என் கூடவே கூட்டிட்டுப் போற மாதிரி பார்த்துக்கோங்க. ப்ளீஸ்..." என்றதும்,

எனக்குப் புரிகிறது என்னும் விதமாய் சுதாகரன் தலை அசைத்துவிட்டு படி இறங்கிச் சென்றான். முரளிதரன் அங்கேயே நின்று கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

கீழே சென்ற சுதாகரன் தங்கை எங்கே இருக்கிறாள் என்று நோட்டம் விட்டான். அவள் தனது அறைக்குள் சென்று அடைந்து கொண்டாள் என்று தெரிந்ததும் அடுக்களைக்குள் சென்று தனது சித்தி வேலம்மாளுடன் பேச ஆரம்பித்தான்.

"மாப்பிள்ளை வந்துட்டாராமே, எங்கேடா?" என்று வேலம்மாள் விசாரித்தார்.

"மாடியிலே இருக்கார் சித்தி. மாப்பிள்ளை நம்ம நித்யாவை சென்னைக்குக் கூட்டிட்டுப் போகணும் என்று நினைக்கிறார்..." என்று அவன் தொடங்கியதுமே,

"அதுக்குள்ளவா? அங்க போய் அவளால என்ன வேலை செய்ய முடியும்? ஆபீஸுக்கும் போக முடியாது தானே?!" என்று வேகமாக மறுத்தார்.



"அவர் ஆபீஸ் போறதைப் பத்தியெல்லாம் ஒண்ணும் சொல்லலை. ஆனால் அவளை அங்க கூட்டிட்டுப் போகணும் என்று ஆசைப்படுறார். அவளைப் பார்த்துக்க உங்களை வரச் சொல்லுறார்."

"நானா? நான் எப்படிப் போக முடியும்? இங்க உங்க சித்தப்பா கடையை மூடினால் தான் என்னால எங்கேயும் நகர முடியும்."

"ஒரு வாரத்துக்கு தான் சித்தி கூப்பிடுறார். அடுத்த வாரம் அவங்க அம்மா வந்துடுறேன் என்று சொல்லி இருக்காங்க. சித்தப்பா ஒரு வாரத்துக்கு கடையிலே சாப்பிட்டுக்கட்டும். இல்லைன்னா ஒரு வாரம் எங்க வீட்டில் இருந்து வத்தல குண்டுக்கு வந்து போகட்டும்" என்று யோசனை சொன்னான்.

"ஒரு வாரத்துக்கா? சித்தப்பா என்ன சொல்லுவார்ன்னு தெரியலையே!" என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே கருப்பசாமி அங்கே வந்தார்.

"என்னங்க நம்ம மாப்பிள்ளை வந்திட்டார்."

"தெரியும் வேலம்மா. நம்ம சுதா போன் பண்ணிச் சொன்னான். அதான் கடையிலே இருந்து வந்திருக்கேன்" என்று மனைவிக்கு பதிலளித்தவர்,

"எங்கேடா மாப்பிள்ளை?" என்று சுதாகரனைப் பார்த்துக் கேட்டார்.

நடந்த உண்மையைச் சொல்ல முடியாத சுதாகரன், "அவருக்கு ஆபிஸில் இருந்து போன் வந்துச்சு சித்தப்பா. இங்கே போன் சரியா கேட்கலைன்னு மொட்டை மாடியில நின்னு பேசுறார்" என்று கூறிச் சமாளித்தான்.

சுதாகரன் அவரிடமும் முரளி நித்யாவை அழைத்துச் செல்ல விரும்புவது பற்றிக் கூறினான்.

''இப்பவே எதுக்குடா அவளைக் கூட்டிட்டுப் போகணும்? ஒரு வாரம் கழிச்சுக் கூட்டிட்டுப் போனால் ஆகாதா?'' என்று அவர் கேட்டவுடன்,

''இதென்ன சித்தப்பா வம்பா போச்சு. அவர் பொண்டாட்டி. அவர் கூட்டிட்டுப் போக நினைக்கிறார். உடம்பு முடியாமல் அவஸ்தைப்படுறது நம்ம பொண்ணு. அதனால நம்மகிட்டே உதவி கேட்கிறார். அதுவும் ஒரு வாரத்துக்கு தான். அது கூட நாம செய்யலைன்னால் எப்படி?'' என்று சுதாகரன் எடுத்துச் சொன்னதும்,

கருப்பசாமி மனைவியை சென்னைக்கு அனுப்ப சம்மதித்தார்.

''வேலம்மா, நீ சென்னைக்குக் கிளம்பு. நம்ம சுதாகரன் சொன்ன மாதிரி ஒண்ணு நான் கடையிலே சாப்பிடுறேன். இல்லைன்னா அண்ணன் வீட்டிலே இருந்துக்கிறேன்'' என்றதும் அவர் சென்னைக்குக் கிளம்ப ஆயத்தமானார்.

சுதாகரன் முரளிதரனிடம் விஷயத்தைச் சொல்ல மாடி ஏறி வந்தான்.

''சித்தி உங்ககூட சென்னை வரச் சம்மதிச்சுட்டாங்க. நித்யா ஆபிஸ்க்கு எப்போ போக வேண்டி இருக்கும்?''

''எப்படியும் இன்னமும் ஒரு ரெண்டு வாரம் ரெஸ்ட் எடுத்தால் நல்லது. வீட்டில் இருந்து வேலை பார்க்க முடியுமான்னு பார்ப்போம். இல்லைன்னா லீவு போட்டுக்கலாம். நான் எங்க மேனேஜர்கிட்டே பேசி



கிறேன். அப்புறம் மச்சான் அவளுக்கு அம்மை தழும்பு பார்த்த உடனே தெரியுறதால ஃபிளைட்டிலே ஏத்து வாங்களான்னு தெரியலை.

ஏன்னா அம்மை தொத்து நோய். அதனால சக பிரயாணிகளுக்கு தொத்திக்குமோன்னு பயப்படுவாங்க. ஃபிளைட்டில் ஒரு வேளை ஏத்த சம்மதிச்சா கூட பயணிகள் எல்லோரும் பயந்து போய் இவளைப் பார்த்தால் இவள் தாங்க மாட்டாள். மனசு வெறுத்துப் போயிடுவாள். அதனால் நாங்க சென்னைக்குப் போக கார் ஒண்ணு ஏற்பாடு பண்ணுங்க'' என்று சொன்னவுடன் சுதாகரன் நகர ஆரம்பிக்கவும்,

''கார் வந்ததும் என்கிட்டே வந்து சொல்லுங்க'' என்றான்.

இப்போதைக்கு கீழே வரும் நோக்கம் எனக்கு சிறிதும் இல்லை என்று சொல்லாமல் சொன்னான்.

சுதாகரன் வாடகைக் காரை ஏற்பாடு செய்யக் கிளம்பினான்.

வேலம்மாள் மகளிடம் வந்து, ''குட்டி, நீ எல்லாத்தையும் எடுத்து வைச்சிடுவியா? இல்லை அம்மா செய்யட்டுமா?'' என்று கேட்டார்.

''எதைம்மா எடுத்து வைக்கணும்?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்ட நித்யாவின் ஆச்சரியத்தைக் கவனிக்காத வேலம்மாள்,

''சென்னைக்குப் போகப் போறோம் இல்ல... அதான் உன் துணியை நீயே எடுத்து வைச்சுக்கிறியான்னு கேட்கிறேன்'' என்று சொன்னதும்,

'சென்னைக்கா? அவர் ஊரில் இருந்து வந்த உடனே என்னை சென்னைக்கு அனுப்பி வைக்கப் பார்க்கிறாங் களா? ஆனா அவர் வான்னு கூப்பிடலையே! இவங் களே கூட்டிட்டுப் போங்கன்னு சொல்லி இருப்பாங் களோ? வேற வழி இல்லாமல் மண்டையை ஆட்டி இருப்பாரோ? அழையா விருந்தாளியா ஒரு வீட்டுக்குப் போகணுமா?'' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

யார் விருந்தாளி? யார் வீட்டுக்காரி என்றுகூட அவளுக்கு மறந்து போனதோ?!

தாயிடம் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்துவிட்டாள். அதனால் வேலம்மாளே அவளுடைய பெட்டியை அடுக்க ஆரம்பித்தார்.

நித்யாவிற்கு கணவனைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆர்வம் முன்பைவிட அவனைக் கண்டதில் இருந்து அதிகரிக்கவே செய்தது. அவன் மீது சாய்ந்து கொண்டு அவன் இல்லாதபோது தான் பட்ட கஷ்டங்களைச் சொல்ல வேண்டும் என்று ஏக்கமாகக் கூட இருந்தது.

ஆனால் 'கணவன் தன் பொலிவிழந்த முகத்தைப் பார்த்து தன்னை வெறுத்து விடுவான்' என்று மனதிற்குள் சமீப காலமாக உதித்த பைத்தியக்கார எண்ணம் அவனிடம் நெருங்க விடாமல் அவளைத் தடை செய்தது.

''அண்ணன் எங்கேம்மா?''

''வெளியே போனான். உனக்கு ஏதாச்சும் வேணுமா?'' என்று வேலம்மாள் கேட்டதும்,



''ஆமாம்மா. அண்ணனை கொஞ்சம் என் ரூமுக்கு வரச் சொல்லுங்க'' என்றாள்.

சரி என்று சொல்லி வேலம்மாள் வெளியேறிய சில நிமிடங்களில் சுதாகரன் அறைக்குள் நுழைந்தான்.

''கூப்பிட்டியாடா குட்டி?'' என்று அவன் கேட்டதும்,

சுற்றி வளைக்காமல் நேரடியாக நித்யா விஷயத்திற்கு வந்தாள். ''அண்ணா நான் சென்னைக்குப் போக மாட்டேன்.''

''அதை ஏன் என்கிட்ட சொல்லுறே? நான் ஒண்ணும் உன்னை சென்னைக்கு போகச் சொல்லலையே!'' என்று அவன் இடக்காக பதில் அளித்தான்.

'அம்மாவும் அப்பாவும் தானே போகச் சொல்லுறாங்க. நீ அவங்ககிட்டேயே சொல்லிக்கோ என்று சொல் கிறான்' என்று நினைத்துக் கொண்டாள்.

சென்னைப் பயணம் முரளியின் வற்புறுத்தலின் பேரில் நடந்திருக்கும் என்று அவள் கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்கவில்லை. அவள் கண்ணுக்குத் தான் அவன் வில்லனாகத் தெரிகிறானே!

'அப்பா அம்மாகிட்டே சென்னைக்குப் போக முடி யாதுன்னு சொல்ல முடியாது இப்ப என்ன செய்யலாம். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுந்திடுவோமா? பேசாமல் அவரிடமே சொல்லிவிடுவோம்' என்று முடிவு செய்தாள்.

'விஷயத்தை நாமளே அவரிடம் நேரா சொல்லு வோமா? இல்லை அண்ணன் மூலமா சொல்வோமா?

அண்ணனிடமே சொல்லி அனுப்புவோம்' என்று தீர்மானித்தவள்,

"நித்யா சென்னைக்கு வரமாட்டாள் என்று நீங்க போய் அவர்கிட்டே சொல்லுங்க'' என்றாள்.

"நான் ஏன் சொல்லணும்? உனக்குப் போகப் பிடிக்கலை என்றால் உன் வீட்டுக்காரர்கிட்டே நீ போய் சொல்லு'' என்று அவன் பிடிவாதமாக மறுக்கவும்,

"சரி நானே சொல்லிக்கிறேன். எங்க இருக்கார்?'' என்று கேட்டாள்.

"வேற எங்கே இருப்பார்? தெருவிலே தான்'' என்றதும்,

அவள் குழப்பத்துடன் தன் அண்ணன் முகத்தைப் பார்க்க...

"பெட்டியைக் கொண்டு போய் சென்னை வீட்டிலே கூட வைக்காமல் பொண்டாட்டியைப் பார்க்க ஆசையா ஓடி வந்த மனுஷன்கிட்ட பேச மாட்டேன் என்று அந்த பொண்டாட்டி விலகிப் போனால்... ஒரு மனுஷன் தெருவிலே தானே நிக்கணும். அவனுக்கு மான ரோஷம் இல்லையா என்ன?'' என்று பொதுவாகக் கேட்பது போல் கேள்வி கேட்டு தங்கையின் செயலுக்கு அவளைக் கண்டிக்கும் அண்ணனாய் ஒரு குட்டு வைத்துவிட்டு,

"நான் போய் சொல்லுறேன். அவர் வந்தால் அவர் கிட்டே சொல்லிக் கொள்'' என்று சொல்லிவிட்டு அந்த இடம் விட்டு நகர்ந்தான்.



'ரொம்ப ஓவராத்தான் பண்ணுறோமா?' என்று உள்ளிருந்து கேட்ட குரலை அடக்கியவள் தன்னுடைய தீர்மானத்தை கணவனிடம் தெரிவிக்கக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

## 22

சுதாகரன் முரளியிடம் சென்று, "வண்டிக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். ஆனால் உங்க பொண்டாட்டி தான் சண்டித்தனம் செய்யுறாள்'' என்றான்.

"என்னவாம்... என்ன சொல்லுறாள்? நான் சென்னைக்குப் போக மாட்டேன் என்றா?''

"ம்ம்ம் அதே பல்லவியைத் தான் பாடுறாள். உங்ககிட்டே பேசணுமாம். கீழே வரச் சொன்னாள்.''

"இவ வான்னு சொன்னதும் நான் வரணும். போன்னு சொன்னதும் போகணுமா என்ன?'' என்று சொன்னவன் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

சுதாகரனும் அவனைக் கீழே போகும்படி வற்புறுத்த வில்லை. ஐந்து நிமிடங்கள் கடந்த நிலையில் முரளி தரனின் கைபேசி கிணுகிணுத்தது.

எடுத்துப் பார்த்தவன் சுதாகரனிடம் திரும்பி, "அவ தான் கூப்பிடுறாள். இருக்கிற கோபத்தில் ஏதாச்சும் கத்திடுவேனோ என்று பயந்து தான் கீழே போகாமல் இருக்கேன். விடமாட்டாள் போல!'' என்று சொன்னவன் அவளது அழைப்பை எடுக்காது விட்டான்.

சுதாகரன் நாகரீகம் கருதி அந்த இடம்விட்டு அகன்றான். அவள் மறுபடியும் அழைக்கவும் முரளி அதை எடுத்து இயக்கி காதில் வைத்தான்.

"ஹலோ எங்கே இருக்கீங்க?" என்று அவள் கேட்டதும்,

"ம்ம்ம் உன் மனசிலே இல்லை" என்று நெத்தியடியாய் மனைவியின் விலகலைக் குத்திக் காட்டினான்.

'நீ என் மனசிலே இல்லையா?! என் மனசு பூராவும் நீதான்டா இருக்கே. அதான் நான் படாதபாடுபடுகிறேன். அது உனக்குப் புரியலையா?' என்று வருந்தியவள் பதில் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

அவளுக்குத் தேவை என்றால் அவளே கேள்வி கேட்கட்டும் என்ற தினுசில் அவனும் அந்த அமைதியை கடைபிடித்தான்.

"நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உன்னை பேசச் சொல்லி தானே நானும் கெஞ்சினேன். நீ தான் முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போனே!" என்று முரளி பதில் சொன்னதும்,

"என் ரூமுக்கு வாங்க" என்று சொன்னவள், இம்முறை அவனுக்குப் பதில் சொல்ல வாய்ப்பு தராமல் அழைப்பைத் துண்டித்தாள்.

சுதாகரன் அவளது கிறுக்கத்தனமான யோசனையைச் சொன்னதால் தான் கணவன் ஏனோ தானோவென்று பதில் சொல்கிறான் என்ற விஷயம் தெரியாததால்



அவன் தன்னை வேண்டாம் என்று நினைக்க ஆரம்பித்து விட்டான். அதனால் தான் கோபமாக இருக்கிறான் என்று தீர்மானித்து விட்டாள்.

தனது அறைக்குள் நுழைந்ததும் தனது முகத்தைப் பார்த்து முரளி காட்டிய அதிகபட்ச அதிர்ச்சியும் அவளது எண்ணத்திற்கு வலு சேர்த்தது.

சற்று முன்பு கணவனிடம் தான் காட்டிய அலட்சியம் அவள் நினைவிற்கு வரவில்லை. இவ்வளவு ஏன் அம்மைத் தழும்பினால் முகம் பொலிவிழந்து விடுமோ என்று இத்தனை நாளாக அவள் பயந்து கொண்டிருந்த விஷயமும் அவள் நினைவிற்கு எட்டவில்லை.

அம்மை தழும்பென்ன நிரந்தரமானதா? நாளாக நாளாக மறைஞ்சு தானே போகப் போகுது. இதுக்குப் போய் யாராச்சும் முகம் திருப்புவாங்களா? இதுக்கே முகம் திருப்பினார் என்றால் எப்படி? என்று கணவனை குற்றவாளி ஆக்கிப் பார்த்தாள்.

இத்தனை நாளாக அவள் வருந்திக் கொண்டிருந்ததே தழும்பு மறையாமல் போய்விடுமோ என்று தான். ஆனால் இன்றோ அவளது கருத்து அப்படியே தலை கீழாக மாறிப் போனது.

மனம் ஒரு குரங்கு என்று பெரியவர்கள் சரியாகத் தான் சொன்னார்கள். அது எப்போது வேண்டுமானாலும் தன் கருத்தில் இருந்து வேறொரு கருத்திற்கு தாவும்.

கணவனைக் காணும் வரைக்கும் தன்னைப் பற்றித் தாழ்வாக நினைத்துக் கொண்டிருந்தவள் அவனைக் கண்டதும் எனக்கு என்ன குறை? நான் நன்றாகத் தானே

இருக்கிறேன். அவர் என்ன என்னை ஒதுக்கி வைப்பது என்ற மனப்பான்மைக்கு வந்தாள்.

சம்மந்தப்பட்டவனோ இதுவரை அவளிடம் ஒரு வார்த்தையும் தப்பாய் பிரயோகிக்காத போதே இந்த நிலைமை.

உடல் பலவீனம் மனிதனின் மூளையைக் கலங்கடிக்கும். எதையும் நல்ல முறையில் சிந்திக்க விடாது, நித்யாவும் அந்த நிலையில் தான் இருந்தாள்.

அவளது படிப்பு, நியாய புத்தி என்ற எதுவும் அவளது சிந்தனைக்கு துணை புரியவில்லை. அவளது பலவீனமே அவளை வழி நடத்திச் சென்றது.

அதனால் தப்புத் தப்பாய் யோசித்தாள். அதன் விளைவாய் தப்பான முடிவுகளை எடுத்தாள்.

முரளி மாடியில் இருந்து கீழே இறங்கி வீட்டிற்குள் நுழைந்தான்.

''வாங்க மாப்பிள்ளை. ஆபிஸ் ஆளுங்க யார்கிட்டவோ போனில் பேசிக்கிட்டு இருக்கிறதா சுதா சொன்னான். இல்லைன்னா நான் அப்பவே மாடிக்கு வந்து உங்களைப் பார்த்திருப்பேன்'' என்று மாப்பிள்ளைக்கு விளக்கம் அளித்த கருப்பசாமி அவனைப் பற்றியும், அவனது வேலை குறித்தும் விசாரிக்க ஆரம்பித்தார்.

அவர் கேட்ட கேள்விகளுக்கு பொறுமையாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அறையில் இருந்து நித்யா வெளியே எட்டிப் பார்க்கவும் முரளிதரன் தன் மாமனாரிடம், ''ஸ்ரீ கூப்பிடுறாள்.



என்னன்னு கேட்டுட்டு வரேன்'' என்று சொல்லிச் சென்றான்.

ஆனால் அறைக்குள் நுழைந்தவன் அவளிடம் ஒன்றும் பேசாது அங்கிருந்த நாற்காலியில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

''நான் உங்ககிட்டே பேசணும்'' என்று அவளே பேச்சைத் தொடங்கி வைத்தாள்.

''பேசு'' என்று மட்டும் சொன்னான்.

''நான் உங்க கூட சென்னைக்கு வரப் போறதில்லை'' என்று வெடுக்கென்று சொன்னாள்.

'நான் வெறுத்து விடுவேனோ என்று இவள் பயந்து கொண்டிருப்பதாகத் தானே இவள் அண்ணன் சொன்னார். இவள் பேசும் தோரணையைப் பார்த்தால் விஷயம் வேற மாதிரி இருக்கிறதே! எவ்வளவு தூரம் தான் போகிறாள் என்று பார்ப்போம்' என்று நினைத்தவன்,

''சரி'' என்று மட்டும் சொன்னான்.

இவ்வளவு தானா உங்க பதில் என்பதுபோல் விழித்தாள். சில நொடிகளில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவளாய்,

''நான் இங்கேயே தான் இருக்கப் போறேன்'' என்று அடுத்ததாய் அறிவித்தாள்.

''சரி'' என்று ஒற்றை வார்த்தையே இம்முறையும் பதிலாகக் கிடைக்க... 'என்ன நினைச்சுக்கிட்டு இருக்கார் இவர்?' என்று கொதித்துப் போனாள்.

பேசுவது என்னவோ அவள் தான். ஆனால் மனதுக்குள் திட்டுக் கிடைத்ததென்னவோ முரளிக்கு.

அவனது பார்வையிலோ, முகத்திலோ, அமர்ந்திருந்த தோரணையிலோ எந்த ஒரு சின்ன மாற்றமும் இல்லை என்றதும்,

'யாரு எப்படிப் போனால் எனக்கென்ன என்று உட்கார்ந்திருக்கிறார். இதை நான் அலட்சியம் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா? இல்லை சற்று முன் நான் வெளியேறியதால் கோபத்தைக் காட்ட இதுபோல் நடந்து கொள்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா? இல்லை என்னை இந்த நிலையில் பார்த்ததும் பிடிக்காமல் போயிடுச்சா?' என்று நினைத்தாள்.

''கொஞ்ச நாள் கழிச்சு வேலையிலே சேரும் போது தான் சென்னைக்கு வருவேன்.''

''ம்ம்ம்.''

சரி என்ற வார்த்தை சுருங்கி ம் என்ற எழுத்து மட்டும் தான் பதிலாய் வந்தது.

'கால் மேல் கால் போட்டு உட்கார்ந்துகிட்டு என்ன தெனாவட்டா பதில் சொல்லுறார் பாரு!' என்று மனதுக்குள் அவள் திட்டிக் கொண்டிருக்க...

''அப்படி நான் வேலைக்கு வரும்போது ஹாஸ்டலில் போய் தங்கிக்குவேன்.''

இப்போது ''ஓஹோ!'' என்ற பதில் கிடைத்தது.

நான் உங்களை விட்டு விலகுவேன் என்று சொல்வது எந்த வகையிலும் அவரை பாதிக்கவில்லையா?



ஒருவேளை என்னைப் பார்த்ததும் அவரே அந்த முடிவிற்கு வந்து விட்டாரா? அப்படின்னா அவர் என்னை விலக்கி வைக்கப் போகிறேன் என்று சொல்லும் முன் நானே முந்திக் கொண்டு அதைச் சொல்லி விடுகிறேன் என்று தீர்மானித்தாள்.

ஷண நேர கோபத்தில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கக் கூடாது என்பது அந்த இருபத்தி மூன்று வயது பெண்ணிற்குத் தெரியவில்லை. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுத்ததோடு நில்லாமல் அதை வெளியிட வேறு முடிவு செய்தாள்.

அவள் தன் தீர்மானத்தை அவனிடம் சொல்லிவிடும் உத்தேசத்துடன், ''நான் உங்களை விவாகரத்து பண்ணிடலாம் என்று இருக்கிறேன்'' என்றாள்.

''ஹைய் சூப்பர்! உனக்கு மாப்பிள்ளை பார்க்க நான் ஏதாச்சும் ஹெல்ப் பண்ணட்டுமா?'' என்று கேட்டான்.

அந்த அறைக்குள் வந்ததிலிருந்து ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக் கொண்டிருந்தவன் விவாகரத்து செய்வேன் என்று சொன்னதிற்காவது அதிர்ச்சி அடைவான். இல்லையென்றால் கோபப்படுவான் என்று அவள் காத்திருக்க...

அவனோ சூப்பர் என்றும், உனக்கு மாப்பிள்ளை பார்க்கட்டுமா என்றும் அடுத்த கல்யாணத்திற்கு அடிக்கல் நாட்டவும்,

'இவரை வைச்சுக்கிட்டு என்ன செய்வது?' என்று புரியாமல் அவனைப் பார்த்து முறைத்தாள்.

அவள் முறைப்பதைப் பார்த்தவன், ''ஓ! நீயே பார்த்துக்கிறேன் என்று சொல்லுறியா? அப்படின்னா

எனக்கு பொண்ணு பார்த்துத் தருவியா?'' என்று கேட்டதும், அவள் முன்பை விட அதிகமாக அவனை முறைத்துக் கொண்டு நின்றாள்.

''நான் ஏன் கேட்கிறேன் என்றால் என்னை விட எனக்கு மனைவி எப்படி அமையணும் என்று உனக்கு தான் நல்லாத் தெரியும் போலவே! அதான் உன்னைப் பார்த்துத் தரச் சொல்லுறேன்'' என்றான்.

நித்யாவிற்கு கணவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாததால் விழித்தாள்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் உங்க அண்ணன் வந்து உன்னுடைய இந்த அதிபுத்திசாலித் தனமான நினைப்பைப் பத்தி சொன்னார். இனிமேல் எனக்கு உன்னைப் பிடிக்காதாமே! அதனால் என் வாழ்க் கையில் இருந்து நான் உன்னை விலக்கி வைச்சிடு வேனாம். அப்ப என்னை விட உனக்கு தானே என் மனைவி என்பவள் எப்படி இருக்கணும் என்று நல்லாத் தெரியும். அதான்... உன்னையே எனக்கு பொண்ணு பார்க்கச் சொல்லிக் கேட்கிறேன்'' என்று அவன் விளக் கியதும்,

'சுதா அண்ணா சொல்லிட்டாரா?! அதான் ஐயா எந்த அதிர்ச்சியும் காட்டாமல் தெனாவட்டா இருக்கிறாரா? விஷயம் முதலிலேயே தெரிஞ்சதினால் தான் அதிராமல் இருக்காரா? இல்லை.. நல்லதா போச்சு. விட்டது சனி என்று நம்மை நினைக்கிறாரா?' என்று நினைத்துக் குழம்பியவள்,

''இந்த விஷயத்தை உங்க வீட்டுக்கு நீங்க சொல்லிடுங்க. என் வீட்டில்... எங்க அப்பா அம்மாகிட்ட



போய் நான் சொல்லிடுறேன்'' என்று சொன்னதோடு நில்லாமல் அறை வாயிலை நோக்கி நடக்க ஆரம்பித் தாள்.

முரளிதரனுக்கு பொறுமை பறந்தது.

''லூசாடி நீ?!'' என்று குரலெடுத்துக் கத்தினான்.

அவனது அதட்டலில் அவளது மேனி சிலிர்த்து அடங்கியது.

அறைக்கு வெளியே கருப்பசாமி தன் அண்ணன் மகன் சுதாகரனிடம், ''என்னடா சுதா பிரச்சனை? மாப்பிள்ளை இந்தக் கத்து கத்துறார். அதுவும் உடம்பு சரி இல்லாத பொண்ணுகிட்ட போய்... நம்ம வீட்டிலே இருக்கும்போதே இப்படிக் கத்தினார் என்றால் இதுவே அவர் வீடா இருந்தால்... அடிச்சிருப்பாரோ? ஏன்டா இவரை நம்பி உடம்பு சரியில்லாத பொண்ணை அனுப்பலாமா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

''சித்தப்பா, மாப்பிள்ளை சரியாத் தான் நடந்துக்கிறார். இவ பண்ணின காரியத்துக்கு யாருக்கா இருந்தாலும் அப்படித் தான் கோபம் வரும். அவர் கத்துறதைப் பார்க்காதீங்க... அவர் கத்தினதுக்கு அப்புறம் நம்ம பொண்ணு முகத்திலே தெளிவு வருதா இல்லையான்னு மட்டும் பாருங்க'' என்று சொன்னான்.

நல்ல வேளையாக வீட்டுப் பெண்கள் யாரும் வீட்டில் இல்லை. வேலம்மாள் பக்கத்துக் கடைக்குச் சென்றிருந் தார். சொர்ணத்தம்மாள் பக்கத்து வீட்டில் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்தார்.

அறைக்கு உள்ளே... நித்யா அதிர்ந்து போய் நின்றது சில நொடிகளே! அதன் பின் தன் பயத்தில் இருந்து மீண்டவளாய்,

''இப்ப எதுக்குக் கத்துறீங்க? வெளியிலே எங்க அம்மாவும், அப்பாவும் இருக்காங்க'' என்றாள்.

''இருந்துட்டுப் போகட்டும். அதனால எனக்கு என்ன வந்துச்சு?''

''உங்களுக்கு ஒண்ணுமில்லை. ஆனா அவங்க வருத்தப்படுறதைப் பார்க்க என்னால முடியாது.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ உளறினதைக் கேட்டால் மட்டும் ரொம்ப சந்தோஷப்படுவாங்களோ?'' என்று எகத்தாளமாகக் கேட்டவன்,

''அது போகட்டும்... என் வாழ்க்கையை முடிவு பண்ண நீ யாரு?'' என்று கேட்டான்.

'இதற்கு என்ன பதில் சொல்வது? நான் உங்க பொண்டாட்டி என்று சொன்னால் அப்ப ஏன் விவாக ரத்தைப் பற்றிப் பேசுறே என்பார். மூன்றாம் மனுஷி என்று சொன்னால்... அப்படின்னா உன் வேலையைப் பார்த்துகிட்டு போ என்பார். ரெண்டு பதிலையும் சொல்ல முடியாதே' என்று அவள் திரு திரு என்று விழிக்கவும், அவனுக்கு சிரிப்பு வந்தது.

அவன் சிரிப்பதைப் பார்த்ததும் அவளுக்குக் கோபம் வந்தது. இங்க ஒருத்தி கொஞ்ச நாளாவே மனசு சரி இல்லாமல் துக்கத்தில் இருக்காள். இவருக்கு சிரிப்பு கேட்குதோ என்று தோன்றவும்,



''நீங்க தானே கல்யாணத்தப்போ நான் அழகா இல்லைன்னு சொன்னீங்க!'' என்றாள்.

''தான் கட்டிக்கப் போற பொண்ணு அழகா இருக்கணும் என்று ஒரு மனுஷன் நினைக்கிறது தப்பா? என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிறியே... கல்யாணத்துக்கு முன்னாடி உனக்கு வரப் போற மாப்பிள்ளை எப்படி இருக்கணும் என்று நீ உனக்குள்ளே கற்பனையை வளர்த்துக்கலையா? என் போட்டோ பார்க்காமலா என்னைக் கல்யாணம் பண்ண சம்மதிச்சே?

ஆனால் நான் நீ அழகா இல்லைன்னு தெரிஞ்சும் உன்னைக் கட்டிக்க சம்மதிச்சேன். எங்கப்பா இவ தான்டா நீ கட்டிக்கப் போற பொண்ணு என்று சொன்னபோது எனக்கு ஆத்திரம் வந்துச்சு தான்.

ஆனால் அமைதியா யோசித்துப் பார்த்த பின்னாலே வாழ்க்கைக்கு அழகும், படிப்பும் முக்கியமான விஷயம் இல்லைன்னு தோணுச்சு. அது இருந்தால் சந்தோஷம். இல்லைன்னாலும் ஒண்ணும் குடி முழுகிடாதுன்னு தோணுச்சு.

எனக்கு எல்லாத்தையும் பார்த்துப் பார்த்து செஞ்ச எங்கப்பா இப்படி சுமாரான, படிக்காத பொண்ணை எனக்குக் கட்டி வைக்கிறார் என்றால்... உன்னிடம் ஏதோ ஒரு நல்ல விஷயம் இருக்கு என்று தானே அர்த்தம். அந்த நல்ல விஷயம் உன் குணமாகத் தான் இருக்கணும் என்று என் மனசுக்கு பட்டுச்சு.

ஒரு மணவாழ்க்கை நல்லபடியா நீடிச்சி நிலைக்கணும் என்றால் அது குணத்தால் மட்டுமே சாத்தியம்.

அதனால குணசாலியான உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம் என்று நான் முடிவு செஞ்சேன்.

ஆனால் உன்னைக் கொஞ்சமாச்சும் எனக்கு ஏத்த மனைவியா நான் மாத்த நினைச்சேன். அது ஒரு தப்பா?

கல்யாணத்தப்போ என்னன்னவோ மந்திரங்கள் சொல்லுறோம். அதுக்கெல்லாம் அர்த்தம் எனக்குத் தெரியாது. ஆனால் நான் உன் கழுத்திலே மூணு முடிச்சுப் போடும்போது 'கடவுளே என் ஆயுளுக்கும் இவள் தான் என் மனைவி. இன்ப துன்பம் எதுவா இருந்தாலும் நாங்க சேர்ந்தே இருக்கணும்' அப்படின்னு வேண்டிக்கிட்டு தான் கட்டினேன்.

உனக்கே நல்லாத் தெரியும். நம்மளோட கல்யாணத்தப்போ என்னைப் பொறுத்தவரை நீ அழகில்லாதவள். படிக்காதவள். நீ குணவதின்னு மட்டும் தான் உன்னைப் பத்தின என்னோட எண்ணமா இருந்தது. அந்த நிலையிலே தான் நான் கடவுளிடம் அப்படி ஒரு பிரார்த்தனை வைத்தேன். இப்பவும் உன்னிடம் அந்தக் குணம் இருக்கு தானே? அது ஒண்ணும் மாறிடலையே?

ஒரு வேளை உன் அம்மை தழும்பு மறையலை என்றால் நான் உன்னை விட்டுட்டுப் போயிடுவேன் என்று எப்படி முடிவு செஞ்சே? அவ்வளவு தானா இந்த முரளியோட குணம்?! அவ்வளவு மோசமானவனாவா நீ என்னை நினைக்கிறே?

என்னைப் பத்தி எதுவுமே விசாரிக்காமலா உங்க அப்பா என்னை உனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சார்?! மாசத்துக்கு ஒரு பொண்டாட்டியை மாத்த



நினைக்கிற ஒருத்தனுக்கா உன்னைக் கட்டிக் கொடுத்தாங்க? அப்படிப்பட்ட ஒருத்தனைக் கல்யாணம் பண்ணவா நீ சம்மதிச்சே?

நீங்க என்னைப் பத்தி விசாரிக்க எடுத்துக் கொண்ட ஒரு வாரத்தில் என்னைப் பத்தி... என் குணத்தைப் பத்தி முழுசா தெரிஞ்சுக்க முடியாது. நான் ஒத்துக்கிறேன். ஆனால் என் கூட இத்தனை நாளா இருக்கே தானே... அப்படியும் உனக்கு என் குணம் புரிபடலையா?

என்னை நீ அந்த அளவுக்கு கேவலமானவனா நினைச்சிருக்கே... இல்லை அப்படி நீ நினைக்கும்படி நான் நடந்துக்கிட்டு இருக்கேன் என்று நினைக்கும் போது மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு'' என்று குரல் தழுதழுக்கச் சொல்லிக் கொண்டு வந்தவன் கண்மூடி சில நொடிகள் அமைதியாக இருந்தான்.

அவனது கேள்விகள் அவளைக் காயப்படுத்தியது என்றால் அவனின் துக்கம் அந்தக் காயத்தில் கத்தி வைத்துத் திருகியது போல் மேலும் வலிக்கச் செய்தது.

என்ன சொல்லி அவனது வலியைப் போக்குவது என்று அவள் சிந்தித்துக் கொண்டு இருக்க... அவன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

''நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி நீ என் மனசுக்குள்ள நுழைய எனக்கு உன் அழகு தேவைப்பட்டுச்சு. நான் ஒத்துக்கிறேன். ஆனால் அப்போ நீ யாரு? கருப்பசாமியின் மகள்.

கருப்பசாமிங்கிறவர் எனக்கு சொந்தமா பந்தமா? கிடையாது. அப்படின்னால் என்னைப் பொறுத்தவரை

தமிழ் நாட்டோட கோடி ஜனத் தொகையிலே நீயும் ஒருத்தி. அவ்வளவு தான்.

ஆனால் இன்னைக்கு நீ யாரு? என் மனைவி. நீ என் மனசுக்குள் புகுந்து ரொம்ப நாள் ஆச்சு. இனிமேல் நீ அழகா இருந்தால் என்ன இல்லாட்டிப் போனால் என்ன?

இந்த சிம்பிள் லாஜிக் கூடத் தெரியாமல் எப்படி இருக்க? அப்படின்னா நான் கல்யாணத்துக்கு முன்னாடி நினைச்ச மாதிரி நீ மக்கு தான் போல!'' என்று சொன்னதும்,

''நான் ஒண்ணும் மக்கு இல்ல...'' என்று ரோஷத்துடன் அவள் சொல்ல...

''நீ மக்கோ புத்திசாலியோ... எப்படி வேணாலும் இருந்துட்டுப் போ. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். இதுக்கு மேல முடிவெடுக்க வேண்டியது நீ தான். நீ எடுக்கிற முடிவை நீயே ரெண்டு வீட்டுக்கும் சொல்லிடு'' என்று சொல்லி அங்கிருந்து இரண்டு அடி நகன்றவன் நின்று திரும்பி,

''என் மனசெல்லாம் நீ தான் இருக்கேன்னு ஏன் உனக்குப் புரியாமல் போச்சு?! மனசு வலிக்குதுடி'' என்று தழுதழுப்பாய் கூறிவிட்டு விறுவிறுவென அறையை விட்டு வெளியேறினான்.

அறைக்கு வெளியே வந்தவன் வரவேற்பறையில் அமர்ந்திருந்த மாமனாரையும், மச்சானையும் லட்சியம் செய்யாமல் அவர்களைத் தாண்டிச் சென்றான்.

அவனைப் பார்த்ததும் எழுந்து நின்ற சுதாகரன் அவனைப் பின் தொடர்வதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு நிற்க...



பக்கத்து வீட்டாரோடு பேசி முடித்துவிட்டு திண்ணையில் அமர்ந்து கொண்டு அடுத்ததாக தன்னுடன் பேசுவதற்கு யார் மாட்டுவார் என்று காத்திருந்த சொர்ணத்தம்மாளை நோக்கி நடந்தான்.

கடைக்குச் சென்றிருந்த வேலம்மாள் அப்பொழுது வீடு திரும்பினார். அவரும் மாப்பிள்ளையை நலன் விசாரித்தார்.

''வீட்டுக்குள்ளே வாங்க மாப்பிள்ளை'' என்று வேலம்மாள் உள்ளே அழைக்க,

''நீங்க போங்க அத்தை. நான் பாட்டிகிட்ட பேசிக்கிட்டு இருக்கேன்'' என்று கூறி அவரை உள்ளே அனுப்பி வைத்தான்.

முரளிதரன் திண்ணையில் அமர்ந்திருந்த பாட்டியிடம் சென்று பேச ஆரம்பித்ததும் சுதாகரன் அவனைத் தொடராது அங்கேயே அமர்ந்து விட்டான். ஆனால் அவனது பார்வை முரளியை விட்டு நகரவில்லை.

கருப்பசாமிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏதோ பிரச்சனை என்று மட்டும் புரிகிறது. தப்பு பண்ணியது நம்ம வீட்டுப் பெண் என்று சொல்லும் அண்ணன் மகனோ பிரச்சனை என்னவென்று சொல்ல மறுக்கிறான்.

'மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு போகிறாரா இல்லை சும்மா தான் பாட்டியிடம் பேசுவோம் என்று சென்றாரா என்றும் தெரியவில்லை. ஆனால் கோபம் இல்லை என்றால் என்னையோ சுதாகரனையோ ஏன் பார்க்காத மாதிரி போக வேண்டும்?' என்று குழம்பிக் கொண்டு இருந்தார்.

அறைக்குள் இருந்த அவர் மகளோ சில நாட்களுக்குப் பின் தெளிவான மனநிலையில் இருந்தாள். கணவனின் பேச்சைக் கேட்ட பிறகு இதுநாள் வரை கண்டதையும் எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த அவளது மனம் நிம்மதி அடையப் பெற்றது.

அவன் கூறிய அனைத்து நல்ல விஷயங்களும் அவளது மூளையைச் சென்று அடைந்ததோ இல்லையோ... அவன் கடைசியாகச் சொன்ன 'என் மனம் பூராவும் நீ தான் நிறைஞ்சு இருக்கே!' என்பது மட்டும் நன்றாகப் பதிந்து போனது. அது அவளை நேர் வழியில் சிந்திக்க வைத்தது.

இத்தனை நாளாக அவளைப் பீடித்திருந்த வருத்தமும், சந்தேகமும் மறைந்ததினால் அவளது சிந்தனை நேரானது.

'சே! அவர் சொன்னது போல நான் மக்கு தான். எப்படி இப்படி ஒரு சிந்தனை எனக்குள்ளே உதித்தது? ஒரு வேளை உடல் பலவீனம் மனதையும் பலமிழக்க வைத்து விட்டதோ?

நல்ல வேளை இதுவே எனக்கு அடிபட்டு கை, கால் போயிருந்தால் என்னை விட்டுவிட்டு நீ போயிருப்பாயா? என்று என்னைப் பார்த்துக் கேடகாமல் போனார்' என்று நினைத்துக் கொண்டாள்.

உண்மை என்னவென்றால் முரளி அந்தக் கேள்வியை தன் மனைவியை பார்த்துக் கேட்கத் தான் எண்ணினான். ஆனால் அவளது உடல் சுகவீனத்தை முன்னிறுத்தியே கேட்காமல் விட்டான்.



தகப்பனும், மகளும் முரளிதரனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க...

அவர்களது எண்ணத்தின் நாயகனோ எதைப் பற்றியும் கண்டு கொள்ளாமல் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''அப்புறம் சொல்லுங்க பாட்டி...'' என்று பேச்சைத் தொடங்கியவனைப் பார்த்து,

''உன் பொண்டாட்டியைப் பார்த்தியா அய்யா? இந்த இருபது நாளா புள்ள ரொம்ப சிரமப்பட்டுடுச்சுய்யா. காய்ச்சல் கொதிச்சது. ஆத்தாவும் உக்கிரமா இறங்கிட்டாள். உள்ளங்கையிலும் விரலிலும் மட்டுமே பத்து முத்துக்கு மேல இருந்துச்சுன்னா பார்த்துக்கோ. சாப்பாட்டை அள்ளி சாப்பிடக் கூட முடியாமல் என் பேத்தி பட்ட பாட்டைக் கண்ணு கொண்டு பாக்க முடியலைய்யா'' என்று சொல்லிக் கொண்டே கண்களில் துளிர்த்த நீரைத் தன் புடவை முந்தானையால் துடைத்துக் கொண்டார்.

கேட்டுக் கொண்டிருந்த முரளிதரனுக்குமே கண்கள் கலங்கியது. மனம் மிகவும் வாடியது. இது மாதிரி சமயத்தில் நாம் அருகே இருந்து ஆறுதல் அளிக்க முடியவில்லை என்றாலும் அவள் மனது சஞ்சலப் பட காரணமாகிவிட்டோமே என்று வருந்தினான்.

''அவ கண்ணுல இருந்து முகம் பார்க்குற கண்ணாடியை நான் மறைச்சு வைச்சிருந்தேன். நான் இல்லாதப்ப அவங்கப்பன் கிட்ட கேட்டு வாங்கிப் பார்த்திட்டு ஒரே அழுகை. முகத்திலே போட்ட முத்து மறையாமல் போயிடுமோன்னு. அதான் கல்யாணம்

தான் ஆகிடுச்சே. இனிமேல் என்னடின்னு நான் தான் வஞ்சேன். கிறுக்கு பய மக..'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்க,

'படிக்காத உங்களுக்கு புரிஞ்ச விஷயம் படிச்ச உங்க பேத்திக்குத் தெரியாமல் போச்சே! அனுபவம் ஆயிரம் பாடப் புத்தகத்துக்கு மேல்' என்று நினைத்தவன் பாட்டியைக் கிண்டல் செய்யும் நோக்குடன்,

''கிறுக்குத்தனமா உளறுவது உங்க பேத்தி. திட்டு எங்க மாமனாருக்கா பாட்டி?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''அது அப்படியே வஞ்சு பழக்கப்படுச்சுய்யா'' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே சொன்னவர்,

''பெரிய பெட்டி எடுத்தாந்திருக்கியே. அது பூராவும் சரக்கா வாங்கியாந்திருக்க?'' என்று கேட்டு முரளி தரனைத் திகைக்க வைத்தார்.

'ஆகா பாட்டி என்ன இப்படி வில்லங்கமா கேள்வி கேட்குறாங்க? பாரின் சரக்கு பற்றியா கேட்கிறாங்க? தண்ணி அடிப்பது பற்றி எப்படி இவ்வளவு சாதாரணமா அவங்க கேட்பாங்க?' என்று அவன் குழம்பிக் கொண் டிருக்க...

அவனது குழப்பத்தைத் தீர்க்கும் வண்ணம், ''என் பெரிய மகன் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு பய வெளி நாட்டிலே இருக்கான்ய்யா. அவந்தேன் சொன்னான். அங்க சரக்கு நல்லா இருக்குமாமில்ல... சல்லிசா கிடைக் குமோ? நீ வாங்கிட்டு வந்து இருக்கிறதைப் பார்த்தால் ஒரு அஞ்சாறு மாசத்துக்கு பலசரக்கு கடைக்குப் போக வேண்டியது இருக்காது போல?!'' என்றார்.



அப்பொழுது தான் அவனுக்கு அவனது பெரிய மாமனாரின் பக்கத்து வீட்டு மனிதன் சாராயத்தை சரக்கு என்று குறிப்பிட்டதை பாட்டி தவறாக பலசரக்கு என்று புரிந்து கொண்டிருக்கிறார் என்கிற விஷயம் புரிபட்டது. (சரக்கு அல்லது பலசரக்கு என்றால் மளிகை பொருட்கள் என்று அர்த்தம்).

''நான் அதெல்லாம் வாங்கிட்டு வரலை பாட்டி. என் பெட்டி முழுசும் வெறும் துணிமணி தான் இருக்கு.''

''இம்புட்டு பெரிய பெட்டியிலே துணி மட்டும் தானா இருக்கு? அப்படின்னா காசைக் கொண்டு போய் துணி யிலே போடுவியோ? சிக்கனமா செலவு பண்ணனும் அய்யா. நாளைக்கு புள்ளை குட்டின்னு குடும்பம் பெருகும் போது சங்கடமாகிடக் கூடாதில்ல'' என்று அறிவுரை வேறு வழங்கினார்.

''பாட்டி அந்த ஊரிலே குளிர் அதிகம் இருக்குமில்ல... அதான் அதுக்குரிய உடுப்பு எடுத்துட்டுப் போனேன். என் ஜாக்கெட்டே பாதி பெட்டியை அடைச்சிடுமே!'' என்று அவன் விளக்க,

''என்னது சாக்கெட்டா? பொம்பள கணக்கா அந்த ஊரிலே சாக்கெட்டு போட்டியா நீ?'' என்று அவர் தன் தாடையில் கை வைத்து வியக்க...

'உனக்கு இதெல்லாம் தேவையாடா முரளி?' என்று மனசுக்குள் இருந்து ஒரு குரல் கேட்க, ''ஐயோ பாட்டி! ஜாக்கெட்ன்னா குளிருக்குப் போடுற ஒரு உடுப்பு... ஸ்வெட்டர் மாதிரி இருக்கும். அதுக்கு பேர் தான் ஜாக்கெட்'' என்று அவன் விளக்கிச் சொல்ல,

''இந்த வெள்ளைக்காரனுங்க முட்டாப் பயலுக. நம்ம ஊருக்கு வந்தது தான் வந்தானுங்க... எதுக்கு பேரு சாக்கெட்டுன்னு கத்துக்கிட்டுப் போயிருக்கலாமில்ல. அத விட்டுட்டு ஆம்பிளைங்க போடுற துணிக்குப் போய்... சாக்கெட்டுன்னு பொம்பள போடுற துணிப் பேரை வைச்சிருக்கானுங்க. நம்ம பாப்பையா இவனுங் களுக்கு தமிழ் சொல்லித் தராம போயிட்டாரே!'' என்று நொடித்துக் கொண்டார்.

''பாப்பையாவாஆஆ?'' என்று அவன் அதிரவும்,

''பாப்பையா தெரியாதா? டிவி பொட்டியிலே சிரிக்க சிரிக்க பேசுவாரேய்யா... நீ கேட்டதில்லையா? இந்தக் காலத்துப் புள்ளைக அம்பூட்டு பேரும் அந்த கம்ப்யூட்டர் பொட்டியிலே தான் கவுந்தடிச்சுக் கிடக்கீக. அப்படி அதுல என்னதான் இருக்கோ?'' என்று அவர் நொடித்துக் கொள்ளவும்,

''பாட்டி, எனக்கு பாப்பையாவை தெரியும். பாப்பையா பாடம் எடுக்கணுமான்னு யோசிச்சேன். பாப்பையா அப்போ பாப்பாவா இருந்திருப்பார்'' என்று சொன்னான்.

'பாப்பையா என்பவர் தமிழ் அறிஞர் என்கிற அளவுக்கு பாட்டி தெரிஞ்சு வைச்சிருக்காங்களே!' என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும்போதே சுதாகரனின் பெற்றோர் வந்தனர்.

''வாங்க மாப்பிள்ளை. நீங்க வந்திருக்கிறதா சுதா சொன்னான்'' என்று சொல்லிக் கொண்டே அவனது நலத்தை விசாரித்தவர்கள் அவனையும் அழைத்துக் கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்தனர்.



''அக்கா வாங்க. எப்படிடா தனியா எல்லாத்தையும் மூட்டை கட்டப் போறேனோ என்று நினைச்சுக்கிட்டு இருந்தேன். நல்ல சமயத்திலே வந்துட்டீங்க'' என்று வேலம்மாள் தன் ஓரகத்தியை வரவேற்றார்.

''வேலம்மா, நான் இப்பத்தான் இட்லிக்கு மாவு ஆட்டினேன். அதை எடுத்தாந்திருக்கேன். நீ அதை எடுத்துட்டுப் போ. இன்னமும் கொஞ்ச நாளைக்கு எதுக்காகவும் வெளிச் சாப்பாடு பிள்ளைக்கு கொடுக்க வேண்டாம். அப்படியே கொஞ்சம் காய்கறி கூட எடுத்திட்டுப் போயிடு. வண்டியிலேதானே போறீங்க...'' என்றதும்,

''சரி அக்கா. நல்ல யோசனை'' என்று வேலம்மாள் ஆமோதித்தார்.

''நித்யா குட்டி எங்க ஆளைக் காணோம்? இன்னைக்கு எப்படி இருக்கா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்த பொழுது அறைக்குள் இருந்து நித்யா வெளியே வந்தாள்.

கருப்பசாமி தன் மகள் முகத்தையே பயத்துடன் பார்வையிட... அவளது சோர்வையும் மீறி அவள் முகத்தில் தெரிந்த தெளிவைக் கண்டதும் நிம்மதியானார்.

'சுதாகரன் சொன்னது சரியாத்தான் போச்சு. இந்த புள்ள மனசிலே என்னத்தையோ வச்சு மறுகிக்கிட்டு தான் கிடந்து இருக்கும் போல! மாப்பிள்ளை வந்து ரெண்டு அதட்டுப் போட்டதும் சரி ஆகிட்டாள் போல' என்று எண்ணிக் கொண்டார்.

நித்யா தன் பெரியம்மாவிடமோ, தாயிடமோ பேசிக் கொண்டிருந்தாலும் அவளது பார்வை கணவனையே

சுற்றிச் சுற்றி வந்தது. அவனுடன் தனியாகப் பேச வேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால் அனைத்து உறவுகளும் அருகில் இருக்கும் சூழலில் அது முடியாது என்று தெரிந்ததினால் ஏக்கத்துடன் பார்வையிட மட்டும் செய்தாள்.

முரளிதரனும் தன் மனைவியின் ஏக்கப் பார்வையைக் கவனிக்கவே செய்தான். ஆனால் இப்போது இளகக் கூடாது என்று பிடிவாதமாய் அவள் புறம் திரும்பாமல் இருந்தான்.

'நம்முடைய கோபத்தை அழுத்தமாகக் காட்டினால் தான் வருங்காலத்தில் இது போல் முட்டாள்தனமாக யோசிக்காமல் இருப்பாள்' என்று நினைத்தே அவன் விறைப்பாக இருந்தான்.

அவர்கள் சாப்பிட்டு முடித்து அந்த வாடகைக் கார் ஏறும் வரைக்கும் கூட அவனுடன் ஒரு வார்த்தை கூட அவளால் பேச முடியாது போயிற்று.

காரில் பின் பக்கம் அவளும் அவளது தாயாரும் ஏறிக் கொண்டனர்.

சுதாகரன் முரளிதரனைத் தனியாக அழைத்துச் சென்று, ''ரொம்ப தாங்க்ஸ் மாப்பிள்ளை'' என்றதும்,

''மச்சான், அவ என் வைஃப். அவளை என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறதுக்கு எதுக்கு தாங்க்ஸ் சொல்லுறீங்க? நானே உடம்பு சரி இல்லாத பொண்ணை நம்ம பிடிவாதத்துக்காக அலைகழிக்கிறோமோ என்று வருத்தப்பட்டுகிட்டு இருக்கேன்'' என்று வருத்தத்துடன் மொழியவும்,



''பிரயாணத்தால அவளுக்கு உடல் சோர்வு இருக்கும் தான் மாப்பிள்ளை. ஆனால் நீங்க அவளை இங்கேயே விட்டுட்டு போயிருந்தீங்கன்னா மனச் சோர்வு அதிகமா இருக்கும். நீங்க அவளுக்கு இந்நேரம் அவ பயத்தைப் போக்கி இருப்பீங்க. நீங்க அவளை விலக்கி வைக்க மாட்டீங்கன்னு அவளுக்குப் புரிஞ்சு போயிருக்கும். ஆனாலும் அந்த பயம் முழுசா மறையாமல் ஒரு ஓரத்திலே இருந்துக்கிட்டே இருக்கும்.

நாளைக்கே நீங்க வேலையில பிஸியா இருந்து அவளுக்கு போன் பண்ணாமல் இருந்தீங்கன்னு வச்சுக் கோங்க... இவர் வேணுமின்னே நம்மளைத் தவிக்கிறார் என்று நினைச்சு திரும்பவும் மனசைப் போட்டுக் குழப்பிக்குவாள். அதனால் அவளை நீங்க கூட்டிட்டுப் போறது தான் நல்லது'' என்றதும் முரளியின் மனம் தெளிந்தது.

''தாங்க்ஸ் மச்சான். ரொம்ப தெளிவா இருக்கீங்க. உங்க கல்யாணத்துக்கு அப்புறம் உங்க வைஃபை சூப்பரா சமாளிச்சிடுவீங்க போல!'' என்று சுதாகரனை முரளி கிண்டல் பண்ணவும்,

''அது அப்படி இல்லை மாப்பிள்ளை. இவ நாங்க வளர்த்த பொண்ணு. எதை எப்படி யோசிப்பாள் என்று என்னால கணிக்க முடியும். ஆனால் எனக்கு வரப் போற மனைவியை அப்படிச் சொல்லிவிட முடியாதில்லை...'' என்று கேட்டுப் புன்னகைத்தான்.

''நீங்க சொல்லுறதும் சரிதான்'' என்று ஒத்துக் கொண்டவன் அவனிடம் விடைபெற்று காரில் முன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டான்.

அனைவரிடமும் விடைபெற்று அவர்கள் மூவரும் சென்னை நோக்கிப் பயணப்பட்டனர்.

## 23

அவர்கள் சென்னையில் உள்ள முரளியின் வீட்டிற்குச் சென்று இறங்கி அவன் குளித்து முடித்து தயாராவதற்குள் வேலம்மாள் இட்லியும் சட்னியும் தயார் செய்திருந்தார்.

அவன் அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு, ''எதுவும் தேவையா அத்தை? நான் ஆபீஸ்க்கு போகும் முன்னாடி வாங்கித் தந்திட்டுப் போறேன்'' என்று கேட்டான்.

''சமையலுக்கு தேவையானது எல்லாமே இருக்கு மாப்பிள்ளை. நான் பார்த்துக்கிறேன். நீங்க ஆபீசுக்குக் கிளம்புங்க'' என்று கூறிவிட்டார்.

அவன் சரி என்று கூறிக் கொண்டே மனைவியின் புறம் திரும்பி ஒரு தலையாட்டலுடன் விடைபெற்றான்.

அவன் தன்னிடம் தனியாகப் பேசவில்லையே என்று அவளால் நினைக்க முடியவில்லை. அதற்கான நேரம் இருக்கவில்லை என்ற காரணத்தால் அவன் அலுவலகம் சென்று வந்த பின் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்து அமைதியுடனும், தெளிந்த மனத்துடனும் விடை கொடுத்தாள்.



மாலை எப்பொழுது வரும் என்று காலையில் இருந்தே காத்திருக்க ஆரம்பித்தாள்.

கிட்டத்தட்ட ஒரு மாதமாகப் பூட்டி இருந்த வீடு என்பதால் தூசியாக இருந்தது. வேலம்மாள் இரண்டாவது படுக்கை அறையை முதலில் சுத்தம் செய்தார்.

''அம்மாடி சாப்பிட்ட இல்ல... கொஞ்ச நேரம் படுத்திருக்கியா? பிரயாணம் பண்ணிட்டு வந்தது உனக்கு களைப்பா இருக்குமில்ல...'' என்று வேலம்மாள் கேட்டதும்,

''சரிம்மா...'' என்று சொல்லி படுக்கை அறையில் இருந்த கட்டிலை நோக்கிச் செல்ல,

''நித்யா, இன்னமும் கொஞ்சம் நாளைக்கு பஞ்சு மெத்தையிலே படுக்காதே. கெட்ட சூடு. அம்மா உனக்கு பாய் விரிச்சு அதுக்கு மேல பருத்தி புடவை விரிச்சுத் தரேன்'' என்று சொன்னவர் அதன்படி அவளுக்குப் படுக்கை தயாரித்து கொடுத்தார்.

ஆனால் இரண்டாவது அறையில் தான் அவளுக்குப் படுக்கையைத் தயார் செய்தார்.

''நீங்க என்னம்மா செய்யப் போறீங்க? நீங்களும் கொஞ்ச நேரம் வந்து படுங்க'' என்றதும்,

''மாப்பிள்ளை அறையைச் சுத்தப்படுத்தணும். நீ தூங்கு'' என்றார்.

''தனி ஆளா எவ்வளவு வேலைம்மா செய்வீங்க?'' என்று கவலையுடன் கேட்ட மகளிடம்,

''அதுக்கு என்னம்மா பண்ண முடியும்? நம்ம வீட்டிலே அம்மா இதை விட அதிகமாவே வேலை செஞ்சு இருக்கேன்'' என்று விளக்கமளித்தார்.

"இன்னைக்கு தானேம்மா நீங்களும் காரிலே வந்து இறங்கினீங்க. உங்களுக்கு அலுப்பா இல்லையா?" என்று கேட்டவள்,

"பக்கத்து வீட்டுக்கு வேலை செய்யும் வேலைக்கார அம்மாவை ஒரு நாளுக்கு மட்டும் வேலைக்குக் கூப்பிட்டுப் பார்ப்போம்" என்று சொன்னாள்.

"இல்லைம்மா வேண்டாம்..." என்று வேலம்மாள் மறுத்துக் கொண்டிருக்க...

தாயின் பேச்சைக் காதில் வாங்காமல் வீட்டை விட்டு வெளியேறி பக்கத்து வீட்டு அழைப்பு மணியை அழுத்தினாள்.

இவளைப் பார்த்தவுடன் சிரித்துக் கொண்டே சிநேக பாவத்துடன் கதவைத் திறந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி நித்யாவின் முகத்தில் இருந்த புள்ளிகளைப் பார்த்ததும் முகம் மாறியவளாய் பின்னே சென்றாள்.

நித்யா விஷயத்தை அந்தப் பெண்மணியிடம் விளக்கியதும்,

"வேலைக்கார அம்மா வந்ததும் சொல்லுறேன்" என்று சொன்னவள் கதவை அடைத்துக் கொண்டு சென்று விட்டாள்.

நித்யாவை விட அருகில் இருந்த வேலம்மாளுக்கு தான் அதிக வருத்தமாக இருந்தது.

மகளை வீட்டுக்குள் இழுத்து கதவைத் தாளிட்ட வேலம்மாள், "இதுக்கு தான் உன்னை பக்கத்து வீட்டுக்கெல்லாம் போக வேண்டாம் என்று சொன்னேன்" என்று வருத்தத்துடன் மொழிந்தார்.



"எனக்கு ஒண்ணும் வருத்தமா இல்லைம்மா. அவங்க வீட்டிலே ஸ்கூலுக்குப் போற சின்னப் பிள்ளைங்க இருக்காங்க. எங்கே அம்மை தன் பிள்ளைங்களுக்கு வந்திடுமோன்னு பயப்படுறாங்க. அவ்வளவுதான். அதிலே என்னம்மா தப்பு இருக்கு?

வெளிநாட்டிலே எல்லாம் இது மாதிரி பரவக் கூடிய நோய் வந்தால் தனியா தான் வைச்சிருப்பாங்க. நம்ம ஊரில் தான் அன்பு, பாசம், பந்தம் என்று சொல்லி நம்ம கூடவே வைச்சுக்குவோம். அதுக்காக வெளிநாட்டுக் காரங்க கிட்டே அதெல்லாம் இல்லைன்னு சொல்லிட முடியாதில்லையா?

நீங்க உங்க பொண்ணுக்காக வருத்தப்படுறீங்க. அவங்க தன்னோட பிள்ளைங்களுக்காக என் பக்கத்திலே வர பயப்படுறாங்க" என்று தெளிவாக விளக்கினாள்.

ஆனால் மதியம் பக்கத்து வீட்டுக்கு வரும் அந்த வேலைக்காரியின் கூற்றைக் கேட்டு கவலைப்படவே செய்தாள்.

"உன் வூட்டிலே வேல பாக்குறதிலே எனக்கொண்ணும் இல்ல கண்ணு. ஆனா உன் வூட்டிலே வேல பார்த்தா அந்தம்மா வூட்டுக்கு வேலைக்கு வர வேணாமின்னு சொல்லுதே கண்ணு. ஒரு நாள் வேலைக்காக என்னால நிதம் செஞ்ச வேலையை விட முடியாதில்ல?" என்று சொல்லிச் சென்றதும் மனதின் ஓரத்தில் வலிக்கவே செய்தது.

நேற்று கணவன் தன்னிடம் பேசிய பிறகு ஏற்பட்ட தெளிவு இன்று சிறிது கலங்கவே செய்தது.

நிராகரிப்பு... அது மனிதனின் மனதை வலு இழக்கச் செய்யும் ஆயுதம். உன்னை எனக்குப் பிடிக்கவில்லை என்று வார்த்தைகளால் அல்லாது செய்கையால் உணர்த்தும் செயல்.

பக்கத்து வீட்டுப் பெண்மணியின் நிராகரிப்பு தந்த வலி அவள் நேற்று கணவனிடம் காட்டிய பாராமுகத்தை நினைவுபடுத்தியது.

நேற்று அவருக்கும் இப்படித் தானே இருந்திருக்கும். ஆசையாய் பார்க்க வந்தவரை பேசாமல் வதைத்தேனே! பாவம் என்று கணவனுக்காக மனம் பரிதாபப்பட்டது. அவனிடம் பேச வேண்டும் போல் தோன்றியது.

சரியாக அந்த நேரம் முரளிதரனும் மனைவியை அழைத்தான்.

வேலைக்கு நடுவே அவனால் பேச முடியவில்லை. அதனால் மதிய உணவு இடைவேளையின் போது அவன் அழைக்க...

நேற்றைய சண்டைக்குப் பின் அவர்கள் இருவரும் ஏதும் பேசிக் கொள்ளாத நிலையில் நித்யாவிற்கு கணவனிடம் பேசத் தயக்கமாக இருந்தது. ஆவல் ஒரு புறமும், தயக்கம் ஒரு புறமும் அவளை அலைக்கழிக்க...

கணவனது அழைப்பை ஏற்று காதில் வைத்து, ''ஹலோ!'' என்றாள்.

''என்னம்மா பண்ணுறே? சாப்பிட்டியா? கொஞ்ச நேரமாச்சும் தூங்கினாயா?'' என்று எதுவுமே நடவாது போல் அவன் விசாரிக்க சற்று முன் ஏற்பட்ட நிரா கரிப்பும், கணவனின் கரிசனமும் சேர்ந்து அவளுக்கு கண்ணோரம் நீர் துளிர்க்க வைத்தது.



''ம்ம்ம்... சாப்பிட்டேன்'' என்று அவளது இழுவையில்.

''ஸ்ரீ, ஏதாச்சும் பிரச்சனையா? உடம்புக்கு முடிய லையா? டிராவல் பண்ணி வந்ததினால் டயர்டா இருக் கியா?'' என்று அவன் கேள்விகளை அடுக்க,

அவனுடைய எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் அவனிடம் அவளுமே ஒரு கேள்வியை எழுப்பினாள்.

''எப்ப வீட்டுக்கு வருவீங்க?'' என்று அவள் தழு தழுப்பாய் வினவ,

''என்னாச்சும்மா? சொன்னால் தானே தெரியும். ஏதாவது பிரச்சனையா?'' என்று அவன் பரிதவிக்கவும்,

''இல்ல... நீங்க வாங்க'' என்று மட்டும் சொன்னாள்.

''எதையாச்சும் நினைச்சு மனசைக் குழப்பிக்காமல் ரெஸ்ட் எடு. நான் சீக்கிரமா வரப் பார்க்கிறேன்'' என்றான்.

''ம்ம்ம்...'' என்று சொல்லி வைத்தாள்.

மாலையில் அனு அவளைப் பார்க்க வந்திருந்தாள்.

''ஹேய் எதுக்கு நீ வந்தாய்? கொஞ்ச நாள் கழிச்சு நானே ஆபீஸ் வந்திருப்பேனே!'' என்று நித்யா சொன் னதும்,

''ஏன் நான் பார்க்க வரக்கூடாதா? எனக்கு ஒட்டிக்கு மோன்னு சொல்ல வருகிறாயா? எனக்கு சின்ன வய சிலே அம்மை வந்திடுச்சு. அதனால திரும்பவும் வராது. அதனால நீ கவலைப்படாதே'' என்றதும் தோழியை அவளது தாய்க்கு அறிமுகப்படுத்தினாள்.

அவர்கள் இருவரும் பரஸ்பரம் அடுத்தவர் நலனை விசாரித்து அறிந்து கொண்டார்கள்.

தோழிகள் இருவரும் தனியாகச் சென்று அமர்ந்தனர். அனு, ''சொல்லு நித்தி. எப்படி இருக்கே? ரொம்ப கஷ்டப் பட்டியாமே? காலையிலே முரளி வந்து எங்ககிட்டே சொல்லும் போதே அவர் கண் கலங்கிடுச்சு'' என்று வருத்தத்துடன் மொழிந்தாள்.

தோழியின் கேள்விக்கு பதில் அளிக்காமல் சில, பல நொடிகள் கணவனைப் பற்றிய நினைவில் மூழ்கினாள்.

அதன் பின்பே, ''கொஞ்சம் கஷ்டப்பட்டேன் அனு. இப்ப பரவாயில்லை. இதெல்லாம் மறையுமான்னு தான்...'' என்று தயக்கத்துடன் கூறவும்,

''மறையாமல் எங்கே போகும்? சில புள்ளி உடனே மறையும். சிலது கொஞ்ச நாளாகும். அது பத்தி நீ ஏன் யோசிக்கிறே?'' என்று தேறுதல் கூறினாள்.

''சரி இதை விடு. ஆபிஸ் எப்படி இருக்கு?'' என்று அலுவலகம் பற்றி நித்யா விசாரிக்கவும்,

''நீங்க ரெண்டு பேரும் இல்லை. நீ இல்லாதது எனக்கு சுத்த போர். முரளி இல்லாதது தாமஸ்க்கு போர். எப்படியோ பொழுதை ஒப்பேத்துறோம்'' என்றாள்.

''அவர் ஏன் இன்னும் வரலை?'' என்று தன் கணவனைப் பற்றி நித்யா விசாரிச்சதும்,

''உன் சுவர் இன்னைக்கு தானே வேலைக்கு வந்தார். அதனால எல்லாத்தையும் முடிச்சிட்டு ஆபிஸை பூட்டிட்டு வந்து சேருவார்'' என்று அவள் நக்கல் பண்ணவும், நித்யா முறைத்தாள்.

''இப்ப எதுக்கு அவரை சுவருன்னு நக்கல் பண்ணுறே?'' என்று கோபத்துடன் நித்யா கேட்கவும்,



''நித்தி, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உன் சுவர்... இல்ல இல்ல அவர் இருக்காரில்ல... உங்க கல்யாணத்துக்கு முன்னாடி பொண்ணுங்களைப் பார்த்து வழியாமல், கண்டுக்காமல் போவாரா... அப்பவே எனக்கு இவர் மனுஷனா இல்லை கல்லா என்று தோணும். உங்க கல்யாணத்துக்குப் பின்னாடி நீ அவர் சுவர்ன்னு சொன்னதுக்கு அப்புறம் அந்த பேர் தான் அவருக்கு சரின்னு நான் முடிவு பண்ணிட்டேன்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

வேலம்மாள் கையில் காபியுடன் உள்ளே நுழைந்தவர், ''வீட்டில் யாருக்காச்சும் அம்மை போட்டு இருந்தால் எண்ணெயில் செய்த பலகாரம் எதுவும் செய்ய மாட்டோம். அதான் என்னால வடையோ, கேசரியோ சட்டுன்னு செய்ய முடியலை. மன்னிச்சுக்கம்மா'' என்று கூறியதும்,

''அச்சோ என்ன ஆன்ட்டி பெரிய வார்த்தை எல்லாம் சொல்லுறீங்க. நான் இங்கே போகப் போறேன் என்று சொன்னதுமே உங்க மாப்பிள்ளை கடையில் இருந்து ஸ்வீட்டும், காரமும் வாங்கிட்டு வந்து கொடுத்து உங்க கிட்டே கொடுக்கச் சொன்னார். நான் தான் நித்தியைப் பார்க்க வைச்சுக்கிட்டு சாப்பிட்டால் நல்லா இருக்காதுன்னு சொல்லிட்டேன்'' என்று சமாதானம் சொன்னாள்.

''சரிம்மா'' என்ற சொல்லுடன் வேலம்மாள் அகன்றதும்,

''ஆனா நித்தி, நான் ஸ்வீட்டையும் காரத்தையும் ஹாஸ்டலில் போய் சாப்பிட்டுக்கிறேன் என்று

சொல்லி வாங்கிட்டு வந்துட்டேன்'' என்று கண்ணடித்துக் கொண்டே சொல்லவும்,

''நீ யாரு? ஓசியிலே கிடைச்சால் தக்காளி சாஸையே குடிக்கிறவளாச்சே!'' என்று நித்யா தோழியைக் கிண்டல் பண்ணவும்,

''ஹேய்! நிறுத்து நிறுத்து! அந்த ஜோக் ஓசியிலே கொடுத்தால் பினாயிலையே குடிக்கிற ஆள் என்று தானே வரும்'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''ஆமா. எவ்வளவு நாளைக்கு நாம பழசையே சொல்லிக்கிட்டு இருக்கிறது. அதான் புதுசா டிரை பண்ணலாமேன்னு பார்த்தேன்'' என்று சொல்லி நித்யா சிரித்தாள்.

அவளது சிரிப்பு சத்தம் கேட்டு வேலம்மாள் சந்தோஷம் அடைந்தார்.

'இத்தனை நாளும் மருந்துக்குக் கூட புன்னகைக்காமல் இருந்தாள். இப்பத் தான் சிரிக்கிறாள். நோயோட தொந்தரவையும் மீறி ஏதோ அவ மனசை அழுத்திக்கிட்டு இருந்து இருக்கு. அதான் அவ முகம் கொஞ்சம் கூட குளிர்ச்சியாவே இல்ல. ஒருவேளை மாப்பிள்ளையைப் பார்க்காமல் தவிச்சுப் போய் இருந்தாளோ என்னவோ?! மாப்பிள்ளை வம்படியா இங்க கூட்டிட்டு வந்ததும் நல்லதுக்கு தான் போல!' என்று வேலம்மாள் நினைத்துக் கொண்டார்.

தான் நினைத்ததை அன்றிரவு நித்யாவின் தந்தை கைபேசியில் அழைத்தபோது அவரிடம் பகிரவும் மறக்கவில்லை.



அனு கிளம்பும் முன், ''தாமஸும், ரவியும் கூட உன்னைப் பார்க்க வரதா சொன்னாங்க. முரளி தான் கொஞ்ச நாள் கழிச்சு வாங்கன்னு சொல்லிட்டார். நீ சங்கடப்படுவேன்னு நினைச்சிருப்பார்'' என்று சொல்லிச் சென்றாள்.

நித்யாவிற்கு கணவனை நினைத்ததும் முறுவல் பிறந்தது.

## 24

அன்றிரவு ஒன்பது மணியை நெருங்கும் போது தான் அவன் வீட்டிற்கு வந்தான்.

''ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவனிடம்,

''நான் சாப்பிட்டேங்க. அம்மா தான் உங்களுக்காக காத்திருக்காங்க'' என்று நித்யா சொன்னாள்.

''ஏன் அத்தை எனக்காக காத்துக்கிட்டு இருக்கீங்க? சாப்பிட வேண்டியது தானே!''

''நல்லா சொன்னீங்க மாப்பிள்ளை. நீங்க வரட்டும் என்று உடம்பு சரி இல்லாத இவளே சொல்லிக்கிட்டு இருந்தாள். நீங்க வராமல் நான் சாப்பிடுறதாவது!'' என்று ஏதோ தெய்வக் குற்றம் வந்து சேரக் கூடிய செயலைச் செய்யச் சொன்னது போல் கூறவும்,

'இந்த அம்மாக்களையும், மாமியார்களையும் திருத்த முடியாது' என்று மனதில் நினைத்துக் கொண்ட முரளி

அவரைப் பார்த்து முறுவலித்து விட்டு தனது அறைக்குள் நுழைந்து கொண்டான்.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வேலம்மாள் தன் மகளைப் பார்த்து, ''நீ போய் தூங் கும்மா. நான் பாயை உதறி விரிச்சுட்டேன்'' என்று இரண்டாவது படுக்கை அறையை நோக்கிக் கை காட்டினார்.

'அங்கே போய் தூங்கச் சென்று விடுவாளா? அப்போ எப்ப இவ கிட்டே பேசுறது?' என்று எண்ணிக் கொண்டே மனைவியை அவன் பார்க்க... அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தனது தாயிடம், ''கொஞ்ச நேரம் கழிச்சு தூங்கப் போறேன்'' என்று சொன்ன நித்யா, முரளி சாப்பிட்டு முடிப்பதற்காகக் காத்திருந்தாள்.

அவன் சாப்பிட்டு முடித்து அறைக்குள் சென்றதும் அவன் பின்னே செல்லத் தொடங்கிய மகளிடம்,

''ரொம்ப நேரம் கண்ணு முழிக்காமல் சீக்கிரமா படுக்க வந்திடு'' என்று சொல்லி அனுப்பினார்.

சரி என்ற தலையாட்டலுடன் தங்களது அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.

முரளி அலமாரியில் எதையோ தேடிக் கொண்டிருந் தான்.

''வாங்க மேடம்'' என்று போலி மரியாதை கொடுத்து வரவேற்றவன்,



''அப்புறம் உங்க ஹஸ்பெண்ட் மேல உள்ள சந் தேகமெல்லாம் மறைஞ்சு போய் அவன் மேல நம் பிக்கை வந்திடுச்சா?'' என்று முறுவலுடனே கேட் டான்.

அவள் பதிலொன்றும் சொல்லாமல் அமைதியாக நடந்து வந்து அவர்களது படுக்கையில் அமர்ந்தாள்.

''ஏன் ஸ்ரீ நேத்து லூசு மாதிரி என்னென்னவோ பேசினே?'' என்று வருத்தத்துடன் அவன் கேட்க,

''நீங்க நேத்து என்னைப் பார்த்ததும் பயங்கர ஷாக் ஆனீங்க. என்னைத் தொடக் கூட இல்லை. நான் வேற என்ன நினைக்கிறதாம்?'' என்றாள்.

''அடிப்பாவி! நான் உன் உடம்பு வலிக்குமோன்னு தொடாமல் பேசினேன். ஆனால் உன் மனசை வலிக்க வைச்சிட்டேனா?'' என்று கேட்டுக் கொண்டே படுக் கையில் அமர்ந்தவன்,

அவளது கை பிடித்து எழுப்பி அவளை தன் மடியில் அமர வைத்துக் கொண்டான். அவளது தோளில் இருந்து ஆரம்பித்து அவளது கைகளை மென்மையாக வருடிக் கொடுத்தான்.

சில நிமிடங்களுக்கு அவனது வருடலும் ஒரு முடிவிற்கு வரவில்லை. அங்கே நிலவிய மௌனமும் ஒரு முடிவிற்கு வரவில்லை.

அந்த மௌனத்தைக் கலைக்கும் விதமாய், முரளி முதல் நாள் நித்யாவிடம் கேட்ட கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

"ரொம்ப வலிச்சதாடா ஸ்ரீ?" என்று மெல்லிய குரலில் அவன் வினவ,

அதைவிட மெல்லிய குரலில் அவள், "ரொம்ப..." என்றாள்.

"நான் இல்லாதது வேற உனக்கு கஷ்டமா இருந்துச்சா?" என்று கேட்க,

திரும்பி அவன் மார்பில் சாய்ந்து கொண்டே, "ரொம்ப ரொம்ப..." என்று அழுத்தத்துடன் சொன்னாள்.

அவளது தலையை வருட ஆரம்பித்தவன் அதற்கு மேல் அவளுக்கு என்ன விதமாய் சமாதானம் சொல்வது என்று தெரியாமல் அமைதியானான்.

"மதியம் போனிலே ஏன்டா ஒரு மாதிரி பேசினே?" என்று அது பற்றி விசாரித்தான்.

அவள் காலையில் பக்கத்து வீட்டுப் பெண்மணி நடந்து கொண்ட விதத்தையும், மதியம் வேலைக்காரி வந்து சொன்னதையும் சொல்லவும்,

"இதுக்கெல்லாம் மனசு வருத்தப்படக்கூடாது. நீ முதல்ல அத்தைகிட்டே தெளிவா விளக்கம் சொல்லி இருக்கே தானே. அப்புறம் என்ன குழப்பம்? அவங்க இடத்திலே நாம இருந்திருந்தாலும் இதே மாதிரி தான் பயந்து இருப்போம். என்ன ஒண்ணு நாம முகத்திலே காமிச்சுக்காமல் இருந்திருப்போம். அவ்வளவு தான் வித்தியாசம்.

வேலைக்காரங்களை வர வேண்டாம் என்று சொன்னது கொஞ்சம் டூ மச் தான். ம்ம்ம்... அவங்க



நமக்கு ரொம்ப பிரண்டும் கிடையாது. அவங்ககிட்டே இருந்து நாம அதிகமா எதிர்பார்க்கவும் கூடாது.

கொஞ்ச நாள் பொறுத்துக்கோடா ஸ்ரீ. அதுக்கு அப்புறம் எல்லாமே சரியாகிடும். இந்தத் தழும்பு மறையும் வரைக்கும் யார் என்ன சொன்னாலும் கண்டுக்காமல் இருக்கப் பழகிக்கணும்டா ஸ்ரீ. இப்படி மனசைப் போட்டு அலட்டிக்கக் கூடாது. நீ மனசை தைரியமா வைச்சுக்கணும்" என்று அறிவுரை வழங்கவும்,

"ம்ம்ம்..." என்று மட்டும் சொல்லி ஆமோதித்தாள்.

மெதுவாக தலையை நிமிர்த்தி கணவனின் முகம் பார்த்தவள், "நான் உங்களை ஒண்ணு கேட்கட்டுமா?" என்று கேட்டாள்.

"கேளுடா? என்ன வேண்டுமானாலும் கேளு. அதுக்குப் போய் எதுக்கு அனுமதி கேட்கிறே? நான் உன் முரளிடா."

"நேத்து எங்க வீட்டிலே வைச்சு நீங்க பேசும்போது, மாமா என்னை மணப்பெண்ணா தேர்ந்தெடுத்ததினால ஏதோ என்னிடம் ஸ்பெஷலா இருக்குன்னு நினைச்சு தான் கல்யாணத்துக்கு சம்மதிச்சதா சொன்னீங்க இல்ல. அப்புறம் ஏன் உங்க ஃபிரண்ட்ஸ் யாரையுமே கல்யாணத்துக்கு கூப்பிடலை? நேத்து என்னைச் சமாளிக்கிறதுக்காக பொய் சொன்னீங்களா?"

அவளது கேள்வியில் அவனுக்கு முறுவல் பிறந்தது.

அவளுக்கு வலிக்குமோ என்று பயந்தவனாய் தனது கரங்களால் மென்மையாக அவளது கன்னம் தாங்கியவன்,

அவளது உச்சியில் முத்தமிட்டு அவளது கண்களை உற்று நோக்கியவாறு,

''நான் நேத்து பொய் சொல்லலைடா. ஆனால் நான் ஏன் அன்னைக்கு என் பிரண்ட்ஸை நம்ம கல்யாணத் துக்குக் கூப்பிடலைன்னா... நான் நேத்து உன்கிட்டே என்ன சொன்னேன்? உன்னோட குணம் பிடிச்சுப் போய் தானே அப்பா உன்னை எனக்குக் கட்டி வைக்க ஏற்பாடு செய்திருப்பார் என்று சொன்னேன் தானே?!

உன்னோட பழகி உன் குணம் எனக்குப் பிடிச்சுப் போய்... என் மனசிலே நீ இடம் பிடிச்ச பிறகு உன்னை என் ஃபிரண்ட்ஸ்க்கு அறிமுகப் படுத்தணும் என்று நினைச்சேன்.

எனக்கே உன்னை அவ்வளவா பிடிக்காத நிலையில் என் ஃபிரண்ட்ஸ் யாராவது உன்னை குறைச்சலா பேசினால்... அது என்னையும் பாதிக்கும். சம்பந்தப்பட்ட உன்னையும் பாதிக்கும்.

ஆனால் அதுவே நாம வாழ ஆரம்பிச்சு உன் குணம் என்னை ஈர்த்து என் மனசுக்குள் நீ குடிவந்த பின்னால் என் நண்பர்களைச் சந்திச்சோம் என்று வைச்சுக்கோ... நான் தெளிவாவும், பெருமையாவும் உன்னை என் ஃபிரண்ட்ஸ்ங்க முன்னால அறிமுகப்படுத்த முடியும் என்று நினைச்சேன். என் தெளிவே அவங்களை உன்னைப் பற்றி விமர்சிக்க விடாமல் செய்யும் தானே?

அதனால முதல்ல நான் தெளிவாகிக்கலாம் என்று நினைத்தேன். நான் சொல்ல வருவது புரியுதா?''



''ஆனாலும் நீங்க என்னிடம் பேச முயற்சிக்கலை தானே?''

''என்னை உனக்குப் பிடிச்சது தானே?! நீ இந்தக் காலத்துப் பொண்ணு தானே! அதுவும் சாஃப்ட்வேர் இஞ்சினியர் வேற... நீ ஏன் எனக்கு மெயில் கூட அனுப்பலை?''

''எங்க அப்பத்தா...'' என்று தொடங்கியவளை இடைமறித்தவன்,

''அதே அப்பத்தா தான் எங்கப்பாகிட்டேயும் கண்டிஷன் போட்டாங்களாம். இன்னும் ஏதாச்சும் இந்த மண்டைக்குள்ளே இருந்து குடையுதா?'' என்று கேட்டதும்,

''இல்லை'' என்று சொன்னவள் மீண்டும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்டா ஸ்ரீ. அதை மட்டும் மனசிலே பதிய வைச்சுக்கோ. சரியா? உடம்பு சரியான பிறகு எவ்வளவு பிடிக்கும் என்று காட்டுறேன். இப்ப போய் தூங்கு'' என்று சொன்னதும்,

''இப்ப எதுக்கு என்னை விரட்டுறீங்க? நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்க தான் இருப்பேன்'' என்று சொல்லி தனது கைகளை கணவன் முதுகோடு பிணைத்துக் கொண்டாள்.

''இங்கேயே இருங்க மேடம். நீங்க இப்படியே என் மேலே சாஞ்சுக்கிட்டு இருந்தாலும் சரி. இல்ல இப் படியே தூங்கினாலும் சரி. நான் ஒண்ணும் சொல்லப் போறதில்லை'' என்றவன்,

''எதுக்கும் நான் தாலாட்டுப் பாடவா?'' என்று கேட்டதும்,

''இந்நேரத்துக்கு வத்தலகுண்டுக்கு பஸ் கூட கிடையாது'' என்று நக்கல் பண்ணினாள்.

''என் பாட்டைக் கேட்டு வத்தலகுண்டுக்கு பஸ் பிடிக்கப் போவது யாரு? நீயா இல்லை உங்க அம்மாவா?'' என்று அவன் கிண்டல் பண்ணவும்,

''ரெண்டு பேரும் தான்'' என்றாள்.

''யாரோ இந்த என் குரலைக் கேட்காமல் ரொம்பக் கஷ்டப்பட்டதா சொன்னாங்க. அது நீ இல்லையோ?'' என்று இழுக்கவும்,

''உங்க குரலைக் கேட்க என்று தான் சொல்லி இருப்பேன். உங்க பாட்டைக் கேட்காமல் என்னால இருக்க முடியலை என்றா சொன்னேன்?!'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் அவனிடம் இருந்து விலகி நிமிர்ந்து அமர்ந்தாள்.

தனது கைகளால் அவனது முகம் தாங்கி அவன் கண்களைப் பார்த்து, ''இந்த முகத்தைப் பார்க்காமல் தான் என்னால இருக்க முடியலை'' என்றாள்.

தனது இடது கையால் அவளது இடையை வளைத்துப் பிடித்தவன் தனது வலது கையால் அவளது முகத்தை வருடிக் கொண்டே மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தான்.

கண்ணோடும் நெஞ்சோடும்

உயிரால் உன்னை மூடிக் கொண்டேனே



கனவோடும் நினைவோடும்

நீங்காமல் உன்னருகில் வாழ்ந்தேனே

மதி பறிக்கும் மதி முகமே

உன் ஒளி அலை தன்னில் நான் இருப்பேன்

எங்கே நீ சென்றாலும்

அங்கே நான் வருவேனே

மனசெல்லாம் நீதான் நீதானே!

நீ தூங்கும் நேரத்தில் என் கண்கள் தூங்காது

கண்மணியே ஓ கண்மணியே

கண்ணுக்குள் கண்ணாக என்றென்றும்

நீ வேண்டும் என்னுயிரே ஓ என் உயிரே!

கணவன் இந்தளவிற்குப் பாடுவான் என்று எதிர்பார்க்காததால் முதலில் வியப்படைந்தவள் பின் அவன் பாடிய பாடல் வரிகளில் தன்னைத் தொலைத்தாள்.

'இப்படி ஆளை உருக்குகிற மாதிரி வார்த்தைகள் உள்ள பாட்டைப் பாடினால் எப்படித் தூங்குவதாம்?!' என்று அவள் நினைத்ததிற்கு மாறாக தூக்கம் அவளது கண்களைத் தழுவியது.

அவனது பாட்டில்... அதில் சொல்லப்பட்ட சேதியில் மனமெல்லாம் நிம்மதி உணர்வு பரவியதாலும், உடல் சுகவீனத்தாலும் அவன் மார்பு மீது சாய்ந்து கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

குழந்தையாய் மாறி தூங்கிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து முறுவலித்தவன் ஐந்து நிமிடங்கள் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டு அமைதி காத்தான்.

தொடர் பயணத்தினாலும், அலுவலகத்தில் வேலை செய்த களைப்பினாலும் அவனது கண்கள் தூக்கத்தின் பிடிக்குள் செல்ல ஆரம்பித்ததும் அவளைத் தூக்கிக் கொண்டு அடுத்த அறை நோக்கிச் சென்றான்.

மகளைத் தூக்கிக் கொண்டு மாப்பிள்ளை உள்ளே வந்ததும், ''என்னாச்சு மாப்பிள்ளை?'' என்று வேலம்மாள் பதற... அவன் எழுப்பிய ஷ் என்ற சப்தம் அவரை அமைதி கொள்ளச் செய்தது.

''தூங்கிட்டாளா?'' என்று நிம்மதி மேலிட்ட குரலில் கேட்டார்.

அவன் அவளைக் கீழே அவளது பாயில் கிடத்தியவன் அவள் மீது அந்த மெல்லிய துணியைப் போர்த்தி விட்டான்.

அங்கிருந்து செல்லலாம் என அவன் நினைக்கும் போது, தூங்கிக் கொண்டிருந்தவள் ''ஐ லவ் யூ'' என்றாள்.

'எந்த நேரம் வந்து என்ன சொல்கிறாள் பாரு! இவ்வளவு நேரம் ரூமில் இருக்கும்போது... முழிச்சிருக்கும் போது சொல்லுறதை விட்டுட்டுத் தூங்கும் போது சொல்லுறாள்' என்று மனதிற்குள் மனைவியைத் திட்டினான்.

'மாமியார் என்ன நினைத்துக் கொண்டாரோ?' என்று வெட்கம் அடைந்தவன் அவர் புறம் பார்வையைத்



திருப்ப... அவர் அந்த அறையிலேயே இல்லை என்றதும்,

குனிந்து தன் மனைவியின் நெற்றியில் அழுத்தமாய் முத்தம் பதித்தவன், ''லவ் யூ டூ ஸ்ரீ'' ஊஎன்று சொன்னான்.

மாமியார் எந்த நேரம் வேண்டுமானாலும் அறைக்குள் நுழையும் அபாயம் இருந்ததால் அவன் சரேலென அங்கிருந்து வெளியேறினான்.

# 25

**✱ ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ✱**

அந்தத் தனியார் தொலைக்காட்சி நடத்திய போட்டியில் 'திருமதி சென்னை' பட்டத்தை வெல்லப் போகும் அந்த அதிர்ஷ்டசாலியை அறிவிக்கப் போகும் தருணம்...

''மிசஸ் சென்னை டைட்டிலை வின் பண்ணியது யாருன்னு தெரிஞ்சுக்கணுமா? அது யாருன்னா...'' என்று ஆரம்பித்த அறிவிப்பாளர்,

''நாம கவுண்ட் டவுன் சொல்லுவோம். 5, 4...'' என்று சொல்லி பார்வையாளர்களின் எதிர்பார்ப்பை எகிற வைத்துக் கொண்டிருந்தார்.

''மிசஸ் சென்னை பட்டத்தை வென்ற அந்த அதிர்ஷ்டசாலி திருமதி. நித்யஸ்ரீ முரளிதரன்'' என்று அறிவித்தார்.

பார்வையாளர்களின் வரிசையில் தன் மூன்று வயது மகன் விஷ்வாவுடன் அமர்ந்திருந்த முரளிதரன் தன் மனைவியைப் பெருமை பொங்கப் பார்த்துக் கொண்டிருந் தான்.

தன் சிரம் தாழ்த்தி, இதழில் முறுவலுடன் அந்த வெற்றியை ஏற்றுக் கொண்ட நித்யாவின் மீது வண்ணக் காகிதங்கள் தூவப்பட்டது.

அந்த அறிவிப்பாளர், ''வாழ்த்துக்கள் நித்யஸ்ரீ. எப்படி ஃபீல் பண்ணுறீங்க?'' என்று கேட்டார்.

''தாங்க் யூ. சந்தோஷமா இருக்கு.''

''நீங்க ஏதாவது சொல்ல விரும்புறீங்களா?''

''கண்டிப்பா. இன்னும் சொல்லப் போனால் நான் இந்தப் போட்டியிலே கலந்துக்கிட்டு ஜெயிக்கணும் என்று நினைச்சதுக்குக் காரணமே மைக் பிடிச்சுப் பேசணுங்கிறதுக்காகத் தான்.

குறிப்பா ஏன் இந்தப் போட்டி என்றால் நான் சொல்லப் போற விஷயம் அழகு சம்பந்தப்பட்டது.

இன்னைக்கு மிசஸ் சென்னையா நான் தேர்ந் தெடுக்கப்பட்டு இருக்கேன். ஆனால் அஞ்சு வருஷத் துக்கு முன்னால எனக்கு அம்மை போட்டு முகமெல் லாம் அம்மை தழும்பா இருந்தது. அதெல்லாம் எங்கே மறையாமல் என் முகத்திலேயே தங்கிடுமோன்னு நினைச்சேன்.

அப்ப எனக்குக் கல்யாணம் ஆகி வெறும் மூணு வாரம் தான் ஆகி இருந்தது. என் கணவர் என்னை



வெறுத்திடுவாரோன்னு கூட நினைச்சேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் பார்வையாளர்களின் வரிசையில் இருந்த கணவனின் மீது பார்வையைச் செலுத்த,

எந்தக் கேமராவும் பார்வையாளர்களின் பக்கம் திரும்பவில்லை என்பதை கவனித்ததினால் முரளி தனது உதடுகளைக் குவித்துக் காட்ட... அதில் வெட்கம் அடைந்தவளாய் ஒரு முறுவலுடனே தன் பேச்சினைத் தொடர்ந்தாள்.

''என்னோட ஊர் வத்தலகுண்டு. எங்க ஊரிலே யாரும் அம்மையை நோயா பார்க்க மாட்டாங்க. அதை மாரியம்மனோட சம்பந்தப்படுத்தி தான் பார்ப்பாங்க. அம்மை போட்டு இருக்கான்னு கேட்கும் போதே கன்னத்திலே தட்டி அம்மனை வேண்ட ஆரம்பிச் சிடுவாங்க. நான் அப்படிப்பட்ட ஊரில் இருந்து வந்தவள்.

ஆனால் இங்கே சென்னையிலே... அம்மைங்கிறது ஒரு கான்டேஜியஸ் டிசீஸ். தொத்து வியாதி. அது உண்மையும் கூட.

ஆனால் அதுக்காக அந்தத் தழும்பெல்லாம் மறையும் வரைக்கும் என்னைப் பார்த்து முகம் சுழித்திருக்க வேண்டாமே? அப்படி அவங்க வித்தியாசமாய் பார்க்கும் போதெல்லாம் நான் மனசு சுருங்கிப் போனேன்.

அப்ப என் கணவர் தான் அழகு பத்தி எனக்கு விளக்கம் சொல்லி எனக்கு நம்பிக்கை கொடுத்து என்னோட மனப்பான்மையை மாற்றி இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்கார்.

இந்த அஞ்சு வருஷத்திலே என் தழும்பு கொஞ்சம் கொஞ்சமா மறைஞ்சு இன்னைக்கு என் முகம் பழைய நிலைக்கு வந்திடுச்சு.

நான் எல்லோர்கிட்டேயும் என்ன சொல்லணும் என்று நினைக்கிறேன்னா...

அழகுங்கிறது நம்மோட புறத் தோற்றத்திலே இல்லை. அது பார்க்கிறவங்களோட மனசைப் பொறுத்த விஷயம். இன்னைக்கு நான் இந்தப் போட்டியிலே ஜெயிச்சு இருக்கேன். ஆனால் நான் ஒண்ணும் முழு மதிப்பெண் வாங்கலையே!

அப்படின்னா இங்கே உள்ள எல்லா நடுவர்கள் கண்ணுக்கும் நான் அழகாத் தெரியலைன்னு தானே அர்த்தம். அதனால தான் சொல்லுறேன் பார்வைகள் மாறுபடும். அதே மாதிரி இந்த அழகிப் போட்டியிலே வெறும் புறத் தோற்றத்தை மட்டும் வைச்சு தீர்ப்பு சொல்லலை. எங்களோட அறிவாற்றல், சமயோஜித புத்தி இதெல்லாம் கூட சோதிக்கப்பட்டது.

அப்படின்னா என்ன அர்த்தம்?

அழகு நம்மோட தோற்றத்திலே இல்லை. நம்மோட அறிவிலே, ஆற்றலிலே, நல்ல நடத்தையிலே, நாம காட்டுற பாசத்திலே... எல்லாத்துக்கும் மேலோ நம் மோட குணத்திலே நிறைஞ்சு இருக்கு.

நல்ல குணம் படைச்ச எல்லோருமே அழகிகள் தான்'' என்று தன் உரையை முடித்துக் கொண்டதும் அனை வரும் தங்கள் கைகளைத் தட்டி அவளது உரைக்கானப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



பரிசை வாங்கிக் கொண்டு வீடு திரும்பியவர்களை இரு வீட்டினரும் ஆவலோடும், மகிழ்வோடும் வர வேற்றனர்.

''நான் பாட்டி கூடத் தூங்கப் போகிறேன்'' என்று சொல்லி விஷ்வா சென்று விட படுக்கையறையில் முரளியும் நித்யாவும் மட்டும் தனித்திருந்தனர்.

முரளி படுக்கையில் படுத்து கண் மூடிக் கொண்டான்.

ஸ்ரீ அவனிடம் ஆசையாக தான் வென்ற கதையை... அந்த நேரத்து உணர்வுகளைச் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

மனைவி கூறிய அனைத்திற்கும் 'ம்' கொட்டிக் கொண்டு இருந்தான்.

''ஜெயிச்ச பிறகு நான் பேசினது சரி தானேங்க?'' என்று அவள் சந்தேகமாகக் கேட்க,

''ம்ம்..'' என்றான்.

''இல்ல நான் பேசினது தப்பா?'' என்று அவள் கேட்ட எதிர்மறைக் கேள்விக்கும் அவன் ம்ம் என்று சொல்லி ஆமோதிக்கவும் அவள் கடுப்பானாள்.

''நீங்க லூசு தானேங்க?'' என்று அவள் கேட்க அவன் அதற்கும் ம்ம் கொட்டினான்.

''நல்லா தூங்குறாரா? அப்படின்னா நான் லூசு மாதிரி தனியாவா பேசிக்கிட்டு இருக்கேன்?!'' என்று வாய் விட்டுப் புலம்பிக் கொண்டே அங்கிருந்த தலை யணையை எடுத்து அவனை மொத்த ஆரம்பித்தாள்.

''ஹேய் ஸ்ரீ! இப்ப எதுக்கு என்னை அடிக்கிறே? நீ பேசுறதைக் கேட்டுக்கிட்டு தானே இருக்கேன்'' என்று அவளது கைகளைப் பிடித்துத் தடுத்துக் கொண்டே எழுந்து அமர்ந்தான்.

''கேட்டுக்கிட்டு இருந்தீங்களா? நல்லாத் தூங்கிக் கிட்டு இருந்தேன் என்று சொல்லுங்க'' என்று சொல்லிக் கொண்டே அவனை முறைத்தாள்.

அவளது இடுப்பை வளைத்து தன்னோடு அணைத்துக் கொண்டவன், ''நீ முதல்ல என்ன கேட்டே? நான் பேசியது சரியான்னு தானே?'' என்று கேட்டான்.

தன் நாடியை கணவனின் மார்பு மீது பதித்து அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள் ஆம் என்பது போல் நாடியை அழுத்திக் கொண்டே தலையை ஆட்ட,

''ஹேய் ஸ்ரீ! கூசுது'' என்று அவளது நாடியை அங்கிருந்து அகற்றி அவளது முகத்தைக் கைகளால் தாங்கியவன்,

''நீ பேசின கருத்து சரிதான். அதான் உன்னோட முதல் கேள்விக்கு ம்ம்னு சொன்னேன்.

ஆனால் ஜெயிச்ச உடனே அந்த மேடையை பிரச்சார மேடையா மாத்தி பிரசங்கம் பண்ணினே இல்லையா... அதான் நீ பேசியது தப்பு... அதாவது அதிகப்படியா பேசினதா சொன்னேன்'' என்று விளக்கினான்.

''அதெல்லாம் சரி. நான் மூணாவது கேட்ட கேள் விக்கு எதுக்கு ஆமாம் என்று சொன்னீங்க?''



''உன்னைக் கல்யாணம் பண்ணி இருக்கேன் இல்ல... அப்ப நான் லூசு இல்லாமல் யாரு சொல்லு பார்ப் போம்!'' என்றதும் அவள் காளி அவதாரம் எடுத்தாள்.

''ஸ்ரீ, அந்த நடுவர்களெல்லாம் உன் முகத்தைப் போய் சாந்தமான முகம் என்று தப்பா சொல்லிட்டாங்க. என்கிட்டே கேட்டிருந்தால் நான் சொல்லி இருப்பேன் உன்னோட உக்கிரமான முகத்தைப் பத்தி'' என்று சொல்லி சில பல அடிகளை வாங்கிக் கொண்டான்.

அடியைக் கொடுத்து விட்டு வருத்தத்தோடு அவனது பிடியில் இருந்து கழண்டு கொள்ள அவள் முயற்சிக்க,

''ஸ்ரீ! உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். நான் விளையாட்டுக்குச் சொன்னதை எல்லாம் நம்பக் கூடாதுன்னு'' என்று சொல்லிக் கொண்டே அவளை விலக விடாமல் இழுத்துப் பிடித்தான்.

அவள் தன் கணவனையே இமைக்காமல் பார்க்க,

''என்னங்க மேடம். அஞ்சு வருஷமா பார்த்த முகம் தானே? ஏதாச்சும் மாற்றம் இருக்கா? அன்னைக்குப் பார்த்த மாதிரியே இன்னைக்கும் முரளி அழகா இருக்கான் இல்ல?'' என்று கண் சிமிட்டிக் கேட்டதும்,

''நிச்சயமா'' என்று அவன் கூற்றை ஆமோதித்தவள்,

''உங்க அழகுக்கு முன்னாடி நான் ரொம்ப சாதா ரணமானவள் என்று நான் நினைச்சேன்'' என்றதும்,

''அப்போ ஊருக்கு தான் உபதேசமா? உனக்கு இல் லையா? அழகு பத்தி அப்படி லெக்சர் கொடுத்தே...'' என்றவனை இடையிட்டு,

''நான் அப்படி நினைச்சது நம்ம கல்யாண சமயத்திலே. உங்க கூட சேர்ந்த பின்னாடி தான் என் எண்ணமெல்லாம் மாறிப் போச்சே. வாழ்க்கைக்கு அழகு முக்கியமே இல்லைன்னு நான் நல்லா புரிஞ்சுக்கிட்டேன்'' என்றாள்.

''அதை புரிஞ்சுக்கிறது இருக்கட்டும். உன் ஹஸ்பண்டுக்கு என்ன வேணும் என்று புரிஞ்சுக்கிட்டியா?'' என்று அவன் குறும்புடன் கேட்க,

''ஓ! எனக்கு நல்லா தெரியுமே!'' என்று அவள் பெருமையும், உறுதியும் நிறைந்த குரலில் சொல்ல,

''அப்படியா? எங்கே சொல்லு பார்ப்போம். முரளிக்கு என்ன வேணும்?'' என்று அவன் கேட்டதும்,

''நான். நான் மட்டும் தான். இப்பவும்... எப்பவும்'' என்று சொல்லி அவனை இறுக அணைத்து முத்தம் கொடுக்க ஆரம்பித்தவளுக்கு, அவனும் பதில் முத்தங்களை அள்ளி வழங்கினான்.